1993 1994

# வணிக ஜோதி

## 16வது

யா/கனகரத்தினம்
மத்திய மகா
வித்தியாலயம்

"வணிகஜோதி"

புதுப் பொலிவுடன் மிளிர வாழ்த்துக்கள்

சிறந்த முறையில் வீடியோப் படம் பிடித்திடவும்

தகரப்பந்தல் — கதிரைகள் — டம்ளர்கள் — சமையல் பாத்திரங்கள்
மணவறை — பெண்களுக்கான தலைச் சோடனை —
சாப்பாட்டுக்கோப்பைகள் — ஊறப்பாழ்கள் மற்றும்
வெளிநாட்டு, உள்நாட்டு சோடனை வகைகள் என்பவற்றுடன்

★ பழைய புதிய திரைப்பட கசற்றுக்களையும்
★ T. V. டெக் என்பவற்றையும்
ஒரே இடத்தில் வாடகைக்குப் பெற்றுக் கொள்ள

# றீகல் வீடியோ

(வெளிநாட்டுப் பின்னணிக் காட்சிகளைப் புகுத்தி சிறந்த முறையில் வீடியோப் படம் பிடித்துக் கொடுக்கப்படும்)

நீங்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

தலைமை அலுவலகம்
கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

கிளை
இல. 65 ஸ்ரான்லிக் கல்லூரி முன் ஒழுங்கை,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

வீடியோ படிப்பிடிப்பாளர் கவனத்திற்கு:-

நீங்கள் எடுக்கும் வீடியோப் படங்களுக்கு உரியசிறந்த மிக்ஸர் (Digital Production Mixer WJ - MX - 10) மூலம் எம்மால் சிறந்த காட்சிகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

குறிப்பு:- மேற்குறிப்பிட்ட முகவரிகளைத்தவிர எமது ஸ்தாபனத்திற்கு வேறுகிளைகள் இல்லை.

உரிமையாளர் - சி. கனகசபை

K. Shanthinathan B.B.A (Hons)

வர்த்தக மாணவ மன்றம்,
யாழ்.
கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயம்.

# வணிக ஜோதி

பதினாறாவது மலர்

## 1993 - 1994

இதழாசிரியர்கள்:-

செல்வன். க சுதாகரன்
செல்வன். எஸ். ஜீவபாலன்

COMMERCE STUDENTS
ASSOCIATION
J/CANAGARATNAM M. M. V.
JAFFNA.

# VANIKA JOTHY

Vol: XVI

# கல்லூரிக் கீதம்



ஜய ஜய கனக ரத்தினம் வித்தியாலயம்
ஜகந்தனில் ஓங்குகவே!
ஜகந்தனில் ஓங்குகவே!

திருவார் கனக ரத்தினம் பெரோரா
தேசுறு கன்னங்கரா
உருவாக்கிய கழகம்
உருவாக்கிய கழகம் (ஜய ஜய)

செம்மையும் மஞ்சளும் நீலமும் சேர்ந்த
சீரார் கொடி எடுப்போம்
சேர்ந்தே அடி நடப்போம்
சேர்ந்தே அடி நடப்போம் (ஜய ஜய)

வீரம் வாய்மை அறமெனு மூன்றும்
விளங்கும் குணமாகி
வெற்றி வாழ்வுறுவோம்
வெற்றி வாழ்வுறுவோம் (ஜய ஜய)

காவியம் ஓவியம் ஆம்கலை பலவும்
திவ்விய இசை நலனும்
காண்டகு குருகுலமாய்
ஆண்டுகள் வாழியவே (ஜய ஜய)

வணிகஜோதியே வருக, வாழ்க!

மாணவர்களே!
உங்கள் தேவைகளுக்கு

ஆனந்த்ஸ்

★ புத்தக நிலையம் ★

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்

21/B, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

★ இலங்கையில் 1992 - 2001 ஆம் ஆண்டு வரை ஏற்றுமதி தசாப்தம் என்று அழைக்கப்படும்

"வணிக ஜோதி" 16வது மலருக்கு
எமது வாழ்த்துக்கள்

JEYA ART FOTO
Chavakacheri.

ஜெயா ஆட் போட்டோ
சாவகச்சேரி.

★ இலங்கையில் விமானப் போக்குவரத்தின் அபிவிருத்தி கருதி மேலதிகமாக மத்திய மலை நாட்டில் பேதுருதாலகால மலையில் புதிய "ராடர்" பொருத்தப்பட்டுள்ளது.

வணிக ஜோதியே
வருக, வருக.

தங்க - வைர நகைகள் விற்பனையாளர்கள்

கே. பி. ஆபரணத் தொழிற்சாலை

உரிமை: கோ. புவனேந்திரன்

58, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

☆ 1994ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் தனியார் துறையில் வேலை செய்வோரிற்கு 89 500ரூபா வரையிலான சம்பளத்திற்கு வருட வருமான வரி விலக்குண்டு


வணிகக்கலை வளர
"வணிகஜோதியே"
வருக! வருக!!

ஆரிய பவான்

★ சைவ உணவகம் ★

கண்டி வீதி, கைதடிச் சந்தி,
கைதடி.

★ சொக்கல முதலீட்டு ஊக்குவிப்பு வலையத்தில் தொழில் ஆரம்பிக்கும் முதலீட்டாளர்க்கு 10 வருட வரி விடுமுறையும் மேலும் 15வருட வரிச்சலுகையும் உண்டு



**மண்மீட்பிற்காக மரணித்த மாவீரர்களுக்கும்,**
**பொதுமக்களுக்கும் இந்நூலை அர்ப்பணிக்கின்றோம்**

*யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய*
*வணிக மாணவர் மன்றம்.*

# நான்முகம்

பக்கம்

## வர்த்தகமும் நிதியியலும்

1. இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவும் அதன் செயற்பாடுகளும் — திரு. க. கனகரத்தினம் 1
2. விநியோகத் திட்டமிடல் — திரு. தே. ஜெயராமன் 7
3. திறைசேரி உண்டியலின் விற்பனை தொடர்பான புதிய முறை — நெ. சுரேஷ்குமார். 11
4. தொடர்பாடலில் தொலைபேசியும் இலங்கையில் அதன் அபிவிருத்தியும் — க. சுதாகரன். 15
5. நுகர்வோர் பாதுகாப்பும் இலங்கையில் அதன் நடைமுறைகள் பற்றிய தொகுப்பு ரீதியான கண்ணோட்டமும் — அ. அலஸ்ரீன்குமார். 19

## பொருளியல்

6. இலங்கையின் பாதுகாப்புச் செலவினமும் பொருளாதாரத் தாக்கமும் — திரு. இ. நந்தகுமாரன். 25
7. அண்மைக் காலத்தில் இலங்கையின் வரி அமைப்பில் நீக்கப்பட்ட வரிகளும் - அறி முகப்படுத்தப்பட்ட வரிகளும் அவற்றிற்கான காரணங்களும் — சி. திலீபா 37

8. வெளிநாட்டு உதவியும் அதன் வகைகளும் - பே. மதிதரன் 41

9. வறுமையை ஒழிப்பதற்கு இலங்கையில் ஏற்படுத்திய திட்டங்களின் பரிணாம வளர்ச்சி - கு. க. கௌரீசன். 47

10 இலங்கையின் உல்லாசப் பிரயாணத்துறை - க. சுரேஸ்கரன் 51

**கணக்கியல்**

11. கணக்கீட்டு நியமம் 08 இல் பெறுமானத் தேய்வு ஒரு கண்ணோட்டம் - திரு. டபிள்யு. யே. துசைரத்தினம். 55

12. கணக்கீட்டின் இயல்புகள் - திரு. வ செந்தில்ராஜா. 65

13. ஒப்படைக் கணக்கு - செ. ராஜ்குமார். 73

**அளவையியல்**

14 நியாயத்தொடை அனுமானத்தில் உருவும் - பிரகாரமும் - திரு. வே யுகபாலசிங்கம். 79

15. விஞ்ஞானக் கொள்கைகள் பற்றிய காள் பொப்பரின் பொய்ப்பித்தற் கோட்பாடு - தி. திருவருட்செல்வன். 83

16. அளவையியலின் விஞ்ஞான முறைகள் - செ. சுபாஜினி 87

17. விஞ்ஞானத் தரவுகளைச் சேகரிக்கும் முறைகள் - ஐ உதயசந்திரிகை. 91

18. பரணிப் பிரபந்த வழியில் நாம் - ஜொ. மோகன்ராஜ். 95

19. தமிழ் நாடகக் கலை - கோ. பிரதீபன். 96

20 திருவள்ளுவர் குறளில் கணிதமும் கணக்கியலும் - த குந்தவி 103

# நிர்வாக கட்டமைப்பு 1993 - 1994

| | |
|---|---|
| காப்பாளர்:- | திரு. மு. இராமலிங்கம் (அதிபர்)<br>திரு. பொ. நடராசா (உப-அதிபர்) |
| துணைக் காப்பாளர்:- | திரு. V. கருணாகரன்.<br>திரு. A. உபயசேகரம்.<br>திரு. V. செந்தில்ராஜன்<br>திரு. A. ரவீந்திரன்.<br>திருமதி. P. இரட்ணவேல்.<br>திருமதி. P. கனகரட்ணம்<br>செல்வி. S. மகாதேவி<br>செல்வி. G. கில்டா<br>செல்வி. யே. யூலிஆன் |
| மன்றப் பொறுப்பாசிரியர் | திரு. V. கருணாகரன் |
| தலைவர் | செல்வன். அ. அலஸ்ரீன்குமார். |
| உப-தலைவர் | செல்வன். அ. அன்றூகிறேசியன் |
| செயலர் | செல்வி. ஐ. உதயசந்திரிகை. |
| துணை செயலர் | செல்வி. சோ. லோகேஸ் |
| பொருளாளர் | செல்வன். செ. மெனெசெஸ் |
| பத்திராதிபர்கள் | செல்வன். க. சுதாகரன்<br>செல்வன். S. ஜீவபாலன் |
| விளம்பர பொறுப்பாளர் | செல்வன். க. சுரேஸ்கரன் |
| கணக்காய்வாளர் | திருமதி. P. கனகரட்ணம்.<br>செல்வன். செ. ராஜ்குமார் |
| வணிக நூலகர் | செல்வன். கோ. பிரதீபன் |
| வியாபார முகாமையாளர் | செல்வன். சி. மணிவண்ணன் |
| உதவீ செயற்குழு | செல்வன். நெ. சுரேஸ்குமார்<br>செல்வன். க. யூட்சதீஸ்குமார்<br>செல்வன். தி. திருவருட்செல்வன்<br>செல்வன். சி. பற்குலேந்திரன். |

''வணிக ஜோதி'' வளம் பெற
எமது நல்லாசிகள்

உங்களுக்குத் தேவையான:-

★ உணவுப் பொருட்கள்
★ சோப் வகைகள்
★ பால்மா வகைகள்

என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்.

**ஸ்ரீ விக்னேஸ்வரா**
**களஞ்சியம்**

148, கண்டி வீதி, சாவகச்சேரி.

★ இலங்கையில் முதலாவது ஏற்றுமதி உற்பத்தி கிராமமாக ''தம்ப தென்னிய'' கிராமம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

''வணிக ஜோதியே''
வருக! வளர்க!!

★ பெயின்ற் வகைகள்
★ கட்டிடப் பொருட்கள்
★ காட்வெயர் பொருட்கள்
★ வாணிஸ், பொலிஸ் வகைகள்

என்பவற்றைப் பெற்றுக் கொள்ள:-

**ஷமி காட்வெயர்**

242/A, அர்ச்சுணா வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரான்லி வீதி)

★ லங்கா சீமெந்து லிமிட்டெட்டின் அங்கிகரிக்கப்பட்ட மூலதனம் 300 மில்லியன் ஆகும்.

''வணிக ஜோதிக்கு''
எமது நல்லாசிகள்.

அழகுக்கு அழகூட்டும்
உடலுக்கு மெருகூட்டும்

22 கரட்டிலான தங்க நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்.

**★ ★ வரன் ★ ★**
**நகை மாளிகை**

★ உரிமையாளர்:- த. நடேஸ்வரன்.

22, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

நாற்றிசையும் ''ஜோதியின்'' புகழ் பரவ வாழ்த்துக்கள்

★ புதிய, பழைய திரைப்பட பிரதிகளையும்
★ ரீவி, டெக், ஜெனரேற்றர் போன்றவற்றையும் மற்றும்
★ வெளிநாட்டு சோடனை வகைகளை வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும்,
★ சிறந்த முறையில் திரைப்பட பாடல்களை ஒலிப்பதிவு செய்து கொள்ளவும்,

நீங்கள் நாடவேண்டிய இடம்

**வீடியோ எக்கனோமி**

இல. 302, பலாலி வீதி, ஆலடிச்சந்தி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

# எம் இதய அலைகளின் உணர்வுகளை - உங்களுடன் சில நிமிடங்கள்...

இயற்கையும், செயற்கையும் எமை ஒருங்கே நெருக்கும் இந்த வேளையிலே ஜோதியின் 16 வது கதிரை தங்கள் கரங்களில் தவழவிடுவேதில் வணிகத்துக்கு அணி செய்யும் கல்லூரித்தாயின் சேய்களாகிய நாம் பேருவகையடைகின்றோம்.

புத்தமத ரத்த வெறியர்கள் எமைச் சூழ்ந்துள்ள இந்த வேளையில், நாம் இந்த மலரை வெளியிட முனைந்தபோது என்றுமில்லாதவாறு பாரிய நெருக்கடிகள் எமை அச்சுறுத்தின. எனினும் இம்மலரானது சிறுகச் சிறுகக் கருக்கட்டி உருப்பெற்று இன்று பிரசவிக்கின்றது என்றால், அதற்குக் காரணம் எமது மன்றத்தினரதும், மாணவர்களினதும், தளராத முயற்சியும், உறுதிப்போக்குமே யென்றால் அது மிகையாகாது.

கல்லூரியின் கண்மணியாம் அதிபர் பேருதவிபுரிந்து நின்றார். மன்றபொறுப்பாசிரியரும், காப்பாளரும் உடனின்று பல உதவிகள் புரிந்தனர். நல்லாசிரியப் பெருந்தகைகள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உற்றதுணை நல்கி, இம்மலர் நறுமணமும், உறுபயனும் மிக்கதாய் வெளிவர உடனின்று உழைத்தனர்.

அறிஞர்கள் தமது ஆக்கங்களை விரைந்தே வரைந்துதவினர். மாணவர்கள் தேடித் தேடி சேர்த்து அறிவாற்றலை எழுத்தாற்றலுடன் வெளிக்காட்டினர். விளம்பரதாரர்கள், பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்கத்தினர், நலன்விரும்பிகள் இன்முகத்துடன் நிதியுதவியினை தந்தேயுதவினர் அத்துடன் புகைப்படங்களை எடுத்துதவிய ஞானம்ஸ் ஸ்ருடியோவினருக்கும், அழகன் புளொக் தயாரிப்பாளர்களுக்கும், எத்தனையோ நெருக்கடிகள் வந்தபோதும் அவற்றையெல்லாம் எமக்காகத் தாங்கி இம்மலரை அழகுற அச்சேற்றித் தந்த ''மாறன்'' பதிப்பகத்தினருக்கும் எம் இதய அலைகளில் இருந்து எழுகின்ற நன்றியினைச் சமர்ப்பிக்கின்றோம்.

''உங்கள் பலமே எங்கள் பலம்''

நன்றி.

26. 01. 1994.

இதழாசிரியர்கள்


# அதிபரின் இதயத்திலிருந்து...

எமது கல்லூரியின் வர்த்தக மாணவ மன்றம் வெளியிடும் வணிகஜோதியின் பதினாறாவது மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்.

1970 இல் ஆரம்பமான இம்மலர் வெளியீடு, தொடர்ந்து வெளியாகி வருவது மாணவரினதும் ஆசிரியர்களதும் அயராத முயற்சிக்கும், ஊக்கத்துக்கும், ஆர்வத்துக்கும், பாடசாலைச் சமுகத்தின் ஒத்துழைப்புக்கும் எடுத்துக் காட்டாகும். வர்த்தக கலைத்துறை மாணவர்கள் எழுபது விழுக்காடு பரீட்சைப் பெறுபேறுகள் பெறுவது அவர்கள் கல்வியை கருத்தோடும் கரிசனையோடும் கற்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. இம் மாணவர்களது முயற்சி மேன்மேலும் வளர்ந்து, வணிகஜோதி வருடம் தோறும் மலர, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**திரு. மு. இராமலிங்கம்**
அதிபர்

# OUR PRINCIPAL



***M. Ramalingam.*** B. Sc. Dip - in - Ed.

# தன்னம்பிக்கை மிக்கவர்களை உருவாக்க...

யாழ்ப்பாணம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வர்த்தக மாணவர் மன்றம் அதன் ஆண்டிதழாகிய வணிக ஜோதியின் பதினாறாவது மலரை இவ்வாண்டு வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

உயர் கல்வித் துறையில் மருத்துவம், பொறியியல் என்பனவற்றையே மாணவர்கள் பெரிதும் விரும்பினர். மாணவர்களின் சிந்தனையிலும், விருப்பிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டு, அண்மைக் காலமாக திறமை மிக்க மாணவர்கள் வர்த்தகத்துறையை விரும்பிக் கற்கின்றனர். இம்மாற்றம் வரவேற்க வேண்டியதாகும்.

துரிதமாக வளர்ந்து வரும் வர்த்தகத்துறை மாணாக்கர்களுக்கு மிகவும் இன்றியமையாத புதிய தகவல்கள், தரவுகள் என்பனவற்றைக் கொண்ட இம்மலர் வர்த்தக மாணவர்களின் தேவையை செவ்வனே நிறைவு செய்யுமெனக் கருதுகின்றேன்.

இன்றைய மாணவர் சமுதாயத்தினரிடையே ஒரு பெரும் குறையை அவதானித்துள்ளேன். கல்விக்குத் தேவையான பல வசதிகள் மறுக்கப்பட்டுள்ள இக்கட்டான இக்கால கட்டத்திலும் மாணாக்கர் ஊக்கமுடன் கற்று, பரீட்சையில் நன்கு தேறி, பல்கலைக்கழகம் சென்று பட்டதாரிகளாக வெளிவருகின்றனர். பட்டம் பெற்று வெளியேறியதும் அவர்கள் தொழில் பெறுவதற்கு தனியார் மற்றும் வங்கித் துறைகளை நாடாது, அரசதுறையையே குறிப்பாக ஆசிரியர் சேவையையே நாடி நிற்கின்றனர். தாம் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகத்திலும் பெற்ற கல்வியறிவின் துணை கொண்டு, தனியார் துறைகளில் தம்மால் நிமிர்ந்து நிற்க முடியுமென்ற தன்னம்பிக்கையற்றவர்களாக விளங்குகின்றனர். பரீட்சைகளிற் சித்தி பெறுவதையும், அரச துறைகளில் உத்தியோகம் பெறுவதையும் குறிக்கோளாகக் கொண்டே கல்வி பயில்கின்றர். மாணவர்களின் இச்சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டு அவர்கள்

தன்னம்பிக்கை மிக்கவர்களாக விளங்கினாலே எமது நாடும் இனமும் பலதுறைகளிலும் முன்னேற முடியும்.

மாணவர்களின் வளர்ச்சிக்கு மிக வேண்டிய ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் அதிபர்மாரும், ஆசிரியர்மாரும் எத்தொழிலையும் விரும்பிச் செய்து முன்னேற முடியும் என்ற தன்னம்பிக்கை கொண்ட மாணவர் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இம்மலரை சிறப்பாக வெளிக்கொணர்ந்த வர்த்தக மாணவர் மன்றம், அவர்களுக்கு வேண்டிய வழிகாட்டலை வழங்கிய அதிபர், ஆசிரியர் அனைவரையும் மனமார வாழ்த்துகின்றேன். இப்பணி மென்மேலும் தொடர வேண்டுமென அவாவுகின்றேன்.

செல்வி. தி. பெரியதம்பி
*கல்விப் பணிப்பாளர்*
*யாழ்ப்பாணம்.*

*கல்வித் திணைக்களம்,*
*யாழ்ப்பாணம்.*
*1993.12.10*

# வணிகஜோதி
# தொடர்ந்து சுடர் விட்டு பிரகாசிக்க...

யாழ் / கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் வர்த்தக மன்றத்தினர் தமது பதினாறாவது ஆண்டு வணிக ஜோதியை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இக்கால கட்டத்தில் தொடர்ச்சியான இதழ் வெளிவருவது பெரும் சாதனை என்றே நினைக்கின்றேன்.

உலகளாவிய ரீதியில் கற்பித்தலில் புதிய புதிய கருவிகள் மூலம் கற்றல் நடைபெறுகின்ற போதிலும் அதன் பயனைப் பெற்று நாம் எம்மை விருத்தி செய்ய போதிய வளங்களின்றி இருக்கும் போது இவ்வாறான வாசித்தலுக்குரிய துணை நூல்கள் கல்லூரி களிலிருந்து வெளிவருவது மிக இன்றியமையாதனவாகும். இவ் வெண்ணக்கருவைக் கவனத்திற் கொண்டு வர்த்தக மாணவர்களி னதும், ஆசிரியர்களினதும், அதிபரினதும் முயற்சியால் இச்சஞ்சிகை வெளிவருவது பாடசாலைச் சமூகத்திற்கு மாத்திரமல்ல எம் எல்லோருக்கும் பெரும் உதவியாக அமையும் என்பது எனது கருத் தாகும்.

எனவே இச்சஞ்சிகை வெளிக்கொணர்வதற்குச் சகல துறை களிலும் ஒத்துழைப்பும் ஆதரவும் நல்கிய அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு 'வணிகஜோதி' தொடர்ந்தும் சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

சி. புலந்திரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
நல்லூர் கல்விக் கோட்டம்

யாழ் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
93.12.10

With Compliments of

# GREEN CHEERS
## TAILORING

**11, Grand Bazaar,**
**JAFFNA**

**கிறீன் சியர்ஸ்**
ரெயிலரிங்

*11, பெரிய கடை,*
*யாழ்ப்பாணம்.*

*உரிமையாளர்: சி. சூரியகுமார்*

---

**With Best Compliments**
**From**

LUXINTENEBRIS

# JAFFNA ENGLISH
## ACADEMY

27, Rakka Lane, Chundikuli.
JAFFNA.

---

வணிகக் கலைக்கு வளமூட்டும்
"ஜோதி"யே வருக வாழ்க

# வி. எம். கே.
## ★ ஜுவல்லர்ஸ் ★

**தங்க, வைர நகை வியாபாரம்**
**கண்டி வீதி, சாவகச்சேரி.**

---

❋ *ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு* (E. T. F) *தொழில் கொள்வோர் 3% நிதி பங்களிப்பு செய்கின்றனர்.*

---

"வணிகஜோதி"யே
வருடா வருடம்
சுடர் விட்டுப் பிரகாசிக்குக

# *KAITHADY*
## *SPORT'S CLUB*

**Prop: Ra anthiran**

*Kaithady junction,*
*KAITHADY.*

---

❋ *இலங்கையில் 8 மில்லியனுக்கு குறைவான மூலதனத்தை கொண்டவையே சிறிய நடுத்தர கைத்தொழில்கள் ஆகும்.*

# வணிகஜோதி

ஈழத் தமிழ் நாட்டில் நானொரு
ஜோதி ஒன்று கண்டேன்
ஈரெண் ஆண்டு கழித்தே இன்று
இளமையுடன் தோன்றும்
யாழ்ப்பாணத்தில் கனகரத்தினமாம் பெயரில்
நல்ல மகாவித்தியாலயத்தில் மிளிரும்
வணிகச் செல்வருடனே கலையின் செல்வர்கூடி
வண்ணமலர் வணிக ஜோதி தனை (மூட்டி) ஏற்றி
தெள்ளமுதின் தேறல் இன்று திறமைமிக்க கணக்கு
வாணிபத்தின் வண்மை ஓங்கும் கணக்கியலின் நுண்மை
எண்ண எண்ண இனிக்கும் இனிய கலை உடனே
ஆண்டு தோறும் தோன்றும் வணிக ஜோதி மலரே
அறிவு தடுமாறும் அன்னவர்க்கு உதவும்
தெளிந்த ரவி தன்னில் தெரியும் பல உண்மை
வணிக மன்றமீந்த வனப்பு மலரிதனால்
மாணாக்கரும் மாண்பு ஆசிரியர் குலமும்
மனமகிழ்ந்தே வாழ்த்தி வழங்கிடுவார் நிதியம்
வணிக ஜோதி வளர்ந்தே வளம்பெறுமே நாளும்
வணிகம் பொருளியலும் பெருகிடுமே நாட்டில்
வண்டு பூக்கள் தேடி குவிவது போல நாளும்
நல்லகல்வி தேடி மாணவர்கள் வருவர்
எங்கள் கூடம் நிறையும் என்றும் புகழோங்கும்
வணிகஜோதி பாட சாலைப்பெயர் பூக்கும்
வண்ண மிகு குரவர் நாமம் மிகக் காக்கும்
வணிக ஜோதி வாழ்க என்றுமனம் வாழ்த்தும்
நெஞ்சிருக்கும் வரைக்கும் நினைவு நிலைத்திருக்கும்
வணிகஜோதி வாழும் மானிலமும் வாழும்
மாணவரும் வாழ்வர் மன்றுமென்றும் வாழும்.

ஆக்கம் செல்வன். கோ. பிரதீபன்
94 ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு

''வணிக ஜோதி''யின் 16 வது மலரிற்கு எமது நல்லாசிகள்.

அன்னக்கிளி உன்னைத்தேடுதே......

சுவைமிகுந்த சிற்றுண்டி வகைகளையும் மற்றும் சகலவித சுவிற்ட்ஸ் வகைகளையும் உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும்,

சுவைமிகுந்த சிற்றுண்டி வகைகள், சகலவித சுவிற்ட்ஸ் வகைகளையும் ஓடர் செய்து குறித்த நேரத்தில் பெற்றுக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய முகவரி:-

## ஹோட்டல் அன்னக்கிளி

இல. 128, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

---

''வணிக ஜோதி'' புதுப் பொலிவுடன் மிளிர எமது வாழ்த்துக்கள்

சகல விதமான கொப்பி வகைகளையும், பாடசாலை உபகரணங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்பவர்களும் உற்பத்தி செய்பவர்களும்.

இன்றே நாடுங்கள்

## ''போஸ்கோ''

3, நவீன சந்தை,
மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

---

★ ''சம்பத் வங்கி'' நடைமுறை வைப்பிற்கு வட்டி வழங்குவதை நிறுத்தியுள்ளது.

''வணிகஜோதி''க்கு
எமது மனமார்ந்த நல்லாசிகள்

உங்களுக்குத் தேவையான

- பால்மா வகைகள்
- பிஸ்கட் வகைகள்
- சோப் வகைகள்

என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

## சுகன்யா ரேடர்ஸ்

பலாலி வீதி, திருநெல்வேலி.

---

★ இலங்கைக்கு 192054 உல்லாசப் பயணிகள் மேற்கு ஐரோப்பாவில் இருந்து வருகை தருகின்றனர் (1991ஆம் ஆண்டு தரவின்படி)

---

**With the Best Compliments**
**From**

# Kannan Lodge

**6, University Junction,**
**Thirunelvely,**
**JAFFNA.**

---

☆ கடை அலுவலகர் சட்டத்திற்கு அமைய ஊழியர்கள் வாரம் ஒன்றிற்கு சேவையாற்ற வேண்டிய மணித்தியாலங்கள் 45 மணித்தியாலங்கள் ஆகும்

# மன்றப் பொறுப்பாசிரியரின்

# ஆசிச் செய்தி



ஈழத்திருநாட்டில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் வர்த்தகக் கல்வித்துறையில் புகழ்பெற்று விளங்குகிறது. அது மட்டுமன்றித் தமிழீழத்தில் பாடசாலை, வர்த்தகக்கல்வி வெளியீடுகளில் அதிக இதழ்களை வெளியிட்ட பெருமையை எமது மன்றம் பெற்றுள்ளது. இத்தகைய பெருமையைப் பெறுவதற்கு அரும்பணியாற்றிய அனைவரையும் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றேன்.

இன்னல்கள் சூழ்ந்த இந்த வேளையில் எதையும் சவாலாக எடுத்துப் போராடும் என் மாணவச் செல்வங்களின் முயற்சியைப் பாராட்டுகிறேன். அதேவேளை இம் மலர் வெளியீட்டுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எமது அதிபரிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் ஆசிச்செய்தி வழங்கிய பெரியார்கள், ஜோதிக்கு ஒளியூட்டிய கட்டுரையாளர்கள், நிதியுதவியளித்தோர், அழகுற அச்சிட்டு உதவிய "மாறன்" பதிப்பகத்தினர் ஆகியோரைப் பாராட்டுவதோடு நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் வணிக ஜோதிக்கு அறிவொளியூட்டியோர் வாழ்வும் அனைவர் வாழ்வும் நலம்பெறச் செய்திட வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

தமிழீழத் தாய்நாட்டின் தனிப்பெரும் ஜோதியாக, வணிக ஜோதியே! வளமுடன் வளர்க.

வே. கருணாகரன். (B. A. Hons.)

''வணிக ஜோதி''
புதுப்பொலிவுடன் மிளிர எமது நல்லாசிகள்.

ஓடர் நகைகளை குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கும் ஒரே ஸ்தாபனம்.

## ச. கணேசமூர்த்தி

**நகை வியாபாரம்**

55, கன்னாதிட்டி,
(இக்பால் ஒடை)
யாழ்ப்பாணம்.

★ கூலிபரிபாலன சபை கூடாதவேளையில் கூலியின் அளவைத் தீர்மானிக்க அதிகாரமுடையவர் ''தொழில் ஆணையாளர்'' ஆவார்.

---

வணிகக் கலைக்கு வளமூட்டும்
''வணிக ஜோதிக்கு''
எமது நல்வாசிகள்

## யூனியன்

## பேக்கரி

கண்டி வீதி,
சாவகச்சேரி.

★ 1993 இல் கூட்டிய பெறுமதி வரியை அறிமுகப்படுத்துவதால் சிக்கலின்றி தனியார் துறையிடம் இருந்து வரியை அறவிடலாம் எனக்கருதப்படுகிறது

---

''வணிக ஜோதிக்கு''
நல்லாசிகள்.

அஷ்டலக்ஷ்மி
**தினத்தாள் கலண்டர்**

## சிவா அச்சகம்

கண்டி வீதி,
கைதடி.

★ சிறீலங்கா எக்ஸ்போ 92 வின் இலட்சிய வாசகம் ''உமக்கும் தேசத்துக்கும் செழிப்பு ஏற்படுத்தும்'' என்பதாகும்.

---

**Best Wishes**
**For "VANIKAJOTHY"**

*Photographers*
*Picture Framers*

## BHARAT STUDIO

**82/1, Kasthuriyar Road,**
**JAFFNA.**

☆ முறைசாராத செய்தித் தொடர்பு ''கிறேப் வைன்'' என அழைக்கப்படும்.




**இருப்பவர்கள்:-** (இ→வ) திரு. ஏ. ரவீந்திரன், திரு. ஏ. உபயசேகரம் (பகுதித்தலைவர்), திரு. எம். இராமலிங்கம் (அதிபர்), செல்வன். ஏ. அலஸ்ரீன்குமார் (தலைவர்), திரு. வி. கருணாகரன் (மன்றப் பொறுப்பாசிரியர்), திரு. என். நடராஜா (பிரதி - அதிபர்), திரு. வி. செந்தில்ராஜா.

**முன்வரிசையில் நிற்பவர்கள்:-** (இ→வ). செல்வி. எம். சுப்பிரமணியம், செல்வி. கே. ஞானப் பிரகாசம், செல்வன். ஏ. அன்றூகிறேசியன் (உப - தலைவர்), செல்வன். கே. சுரேஸ்கரன் (விளம்பர பொறுப்பாளர்), செல்வன். கே. ஜீவபாலன் (உப - இதழாசிரியர்), செல்வன். எஸ். மணிவண்ணன் (வியாபார முகாமையாளர்), செல்வி. ஏ. உதயசந்திரிகை (செயலாளர்), திருமதி. பி. கனகரத்தினம் (கணக்காய்வாளர்), செல்வி. யே. யூலிஆன்.

**பின்வரிசையில் நிற்பவர்கள்:-** (இ→வ). செல்வன். என். சுரேஸ்குமார், செல்வன். ரி. திருவருட்செல்வன், செல்வன் கே. சுதாகரன் (இதழாசிரியர்), செல்வன். ஜீ. பிரதீபன் (நூலகர்), செல்வன். எஸ். ராஜ்குமார் (கணக்காய்வாளர்), செல்வன். எஸ். பற்குலேந்திரன். செல்வன். எஸ். மெனெசஸ் (பொருளாளர்), செல்வன். கே. யூட்சதீஸ்குமார்.

**சமுகமளிக்காதோர்:-** திருமதி. பி. ரட்ணவேல், செல்வி. எஸ். லோகேஸ் (உப - செயலாளர்).



# பல்கலைக்கழக அனுமதி பெற்றோர் ஆகஸ்ட் - 1991

(விசேட)

முகாமையியற்றுறை



செல்வன். பி. பகீரதன்



செல்வி. எஸ். உதயசந்திரிகா

வர்த்தகத்துறை



செல்வன். எஸ். கௌரீசன்



செல்வி. தே. தேவகி

# 1993ஆம் ஆண்டு க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் பல்கலைக்கழக அடிப்படையில் புள்ளி பெற்றோர்

N. உதயகுமார்
S. சுரேஸ்
T. அனுசீயாதேவி
S. பாலேஸ்வரி
L. சுகன்ஜா
R. சியாமலதா
U. விலாஜினி
A. யசோதா
A. பிறேமிளா
B. பத்மராணி
P. பிறேமா
P. சபாணா
K குகறூபனா
S. வேல்கிருஸ்ணா
T. ஆனந்தநாயகி
N. கோசலா
B ஜெஜித்தரா

S. கலாவதி
C. கமலினி
P. கீதாஞ்சலி
T. நாகநந்தினி
P. நிரஞ்சினி
K. அமுதமகிழ்நங்கை
R. ரூபினி
G. ராமராணி
P. சைலயா
K. துசியந்தினி
S வசிகலா
K. விஜிவா
K. துஸ்காசீஸ்வரன்
K. இந்திரராஜா
E மரிய ஜெயசீலன்
E. அன்ரன் றெஜினோல்ட்
K. செல்வராஜா

T. விஜயசேகரன்
K. நாதன்
K. கிருஸ்ணரூபன்
S பாஸ்கரன்
P. ஜெனார்த்தன்
K குருக்கள் கைலாசவாசன்
K. குகேந்திரன்
B. நாகேஸ்வரபாலா
E. அனெஷ்சன் நிக்சன்

S. நிஷாகரன்
M. போல்
S. ராஜேந்திரன்
T. ரமணன்
P. சசிதரன்
U. யூடாசதீஸ்குமார்
V. சுந்தரராஜன்
S சுரேந்திரா
R. சுதர்சன்


பதினாறாவது அகவை காணும் "வணிக ஜோதி" யை வாழ்த்துகின்றோம்.

# "மிக் கைத்தொழில் நிறுவனம்"

★ மாணவ மணிகளின் சகல விதமான அப்பியாசக் கொப்பி வகைகள்,

★ அச்சக, அலுவலக காகிதாதிகள்,

★ பாடசாலை, அலுவலக உபகரணங்கள்

போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

"மற்றும் பல்பொருள் மொத்த வியாபாரிகள்"

★ ★ ★ **MIK INDUSTRIES** ★ ★ ★

நடராசா கட்டடம்,
26, 26/1, சிவன் புது வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,

26, 26/1, NADARAJAH COMPOUND,
THIRUNELVELY NEW ROAD,
JAFFNA.

★ நெற் சந்தைப்படுத்தும் திணைக்களத்தின் தந்தி விலாசம் "வீமா" என்பதாகும்.

# இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுவும் அதன் செயற்பாடுகளும்

*Securities and Exchange Commission of Sri Lanka and its Functions*


க. கனகரத்தினம்

B. Com (Spl.); Dip-in Accy; MAAT (SL); AMI Mat. M (U.K)

*சிரேஷ்ட உதவி நிதியாளர்*

*யாழ். பல்கலைக்கழகம்.*

*(கல்லூரி பழைய மாணவன்)*


*ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முதலீடுகள் அவசியமாகும். கம்பனி அமைப்புகள் முதலீடுகளைத் திரட்டுவதில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இலங்கையில் !982ஆம் ஆண்டின் !7ஆம் இலக்க புதிய கம்பனிகள் சட்டம் 1982.07.02 இலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. மேலும் திறந்த பொருளாதாரக்கொள்கை, தனியார் துறைக்கு ஊக்குவிப்பு அளித்தல், வெளிநாட்டு முதலீட்டினை ஊக்குவித்தல் ஆகியவை காரணமாக கம்பனிகளின் தோற்றம், வளர்ச்சி அதிகரித்தன. பிரதானமாக பல்தேசிய கம்பனிகள் இலங்கையில் செயற்பட ஆரம்பித்தமை, பொதுக் கம்பனியின் உருவாக்கம் அதிகரித்தமை, அரசின் தனியார்மயப்படுத்தல் நடவடிக்கைகள் ஆகியவை பங்குகளில் முதலிடுவோரது எண்ணிக்கையை அதிகரித்ததுடன், பங்குச்சந்தைச் செயற்பாடுகளும் அதிகரிக்கலாயின. எனவே பங்குகளிலும் மற்றும் பொறுப்பாவணங்களிலும் முதலிடுவோரின் நலன்களையும் பேணவேண்டிய அவசியம் அரசிற்கு ஏற்பட்டது. பங்குகளில் முதலிடுவோரின் நலன்களைப் பேணும் நடவடிக்கைகளில் ஒன்றாகப் பங்குச்சந்தை அமைப்புகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தும் நோக்குடன் செயற்பட்டுவருவதே, இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுவாகும். இதன் தோற்றம், அமைப்பு, நோக்கம், செயற்பாடுகள், முதலீட்டாளர்கள் பாதுகாக்கப்படும் முறை ஆகியவை பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.*

இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பிணையங்கள் மன்றம் அல்லது ஆவணச் சபை (Securities Council) என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆவணச்சபை ஒன்றை உருவாக்குவதற்கான சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு பாராளுமன்றத்தில் 1987 03.06 நிதித் திட்டமிடல் அமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பின்னர் 1987.08 27இல் 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்கச் சட்டமாக இது நிறைவேற்றப்பட்டது 1991 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க பிணையங்கள் பேரவை (திருத்த) சட்டத்தின்மூலம் இதன் பெயர், "இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு" என மாற்றியமைக்கப்பட்டது. இச்சட்டத்திருத்தத்திற்கான பிரதான காரணம் இலங்கையில் கூறுநம்பிக்கைப் பொறுப்பு அமைப்புகளின் ஆரம்பமும் அவற்றையும் ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டமையும் ஆகும். எனவே இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது பாராளுமன்றச் சட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்ட ஓர் நியதிச் சட்டசபையாகும்.

இவ் ஆணைக்குழு பத்து உறுப்பினர்களைக்கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஏழு உறுப்பினர்களை நிதி அமைச்சர் நியமிப்பார் அவர்கள் பின்வருமாறு :-

(1) மத்திய வங்கியின் ஆளுநரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மத்தியவங்கியின் பிரதி ஆளுனர்.

(2) சட்டம், நிதி, தொழில் அல்லது நிர்வாக விடயங்களில் பரந்த அனுபவத்தையும் திறமையையும் கொண்டவர்களென அமைச்சரால் கருதப்படும் ஆறு பேர்.

மேற்கூறப்பட்டவர்களை விட பின்வரும் 3 ஆட்களும் தாம் வகிக்கும் பதவி காரணமாக இவ் ஆணைக்குழுவில் இடம் பெறுவர்.

இவர்கள் பதவிவழி உறுப்பினர்கள் என அழைக்கப்படுவர்

(1) திறைசேரியின் பிரதிச் செயலாளர்.
(2) கம்பனிப் பதிவாளர்
(3) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத் தலைவர்.

இப்பத்து உறுப்பினர்களில் ஒருவரை அமைச்சர் இவ் ஆணைக்குழுவின் தலைவராக நியமிப்பார்.

## நோக்கங்கள்

பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நோக்கங்கள் அதன் சட்டத்தில் பின்வருமாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

(1) நீதியான, ஒழுங்கான முறையில் பிணையங்களை வழங்கக்கூடிய விற்பனை செய்யக்கூடிய சந்தை ஒன்றினை உருவாக்குவதும் அதனைப் பராமரித்தலும். இதன்மூலம் மோசடிகளைத் தவிர்த்து முதலீட்டாளர்களுக்குப் பாதுகாப்பை அளிக்க முடியும்

(2) முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல். அதாவது பங்குகளை வாங்குதல் விற்றல் மூலமாக முதலீட்டாளர்கள் நிதி மோசடிக்கு உட்படுவதைக் கட்டுப்படுத்தலாம்.

(3) அனுமதிப்பத்திரம் பெற்ற பங்குதாரர்கள், பங்கு வியாபாரி ஆகியோர் அவர்களது ஒப்பந்தக்கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுவதால் ஏற்படக்கூடிய நிதி இழப்புக்களை முதலீட்டாளர்கட்கு ஈடு செய்யக்கூடிய முறையில் நட்டஈட்டு நிதியமொன்றை ஏற்படுத்திச் செயற்படுத்தல்.

(4) பிணையங்கள் சந்தையை ஒழுங்குபடுத்துவதுடன் அத்தகைய சந்தையில் தொழில் திறன் பேணப்படுதலை உறுதிப்படுத்தல்.

## செயற்பாடுகள்

பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது தனது நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு, அதன் சட்டத்தின்மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### (1) அனுமதிப்பத்திரம் வழங்குதல்

இவ் ஆணைக்குழு ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் பங்குகள் மற்றும் பொதுப்பாவனைகளின் பரிவர்த்தனைகளில் ஈடுபடுவோர் எவ்வித அனுமதிப்பத்திரமும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கவில்லை. ஆனால் இவ்வாணைக்குழு செயற்படத்தொடங்கியதிலிருந்து (முன்னர் இது ஆவணச்சபையாக இருக்கும் போதும்)

பங்குகள் மற்றும் ஆவணங்கள் தொழிலில் ஈடுபடும் அமைப்புக்கள் கட்டாயமாக இதனிடம் அனுமதிப்பத்திரம் பெற்றே தொழிலில் ஈடுபட வேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதன்படி பங்குச்சந்தை நிறுவனமான கொழும்பு பங்குமுதல் மாற்றுக்கம்பனி (Colombo Stock Exchange) பங்குத்தரகர்கள், பங்கு வியாபாரிகள் மற்றும் அலகுப்பொறுப்பாட்சி முகாமைக் கம்பனி ஆகியவை இதனிடம் அனுமதிப்பத்திரம் பெற்றே தொழில் புரியவேண்டும்.

**(2) பணநட்டத்தினை ஈடுசெய்தல்**

இவ்வாணைக்குழுவின் அனுமதிபெற்று தொழிலில் ஈடுபடும் பங்குத்தரகர், பங்குவியாபாரி ஆகியோர் தாம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி நடக்கத் தவறுவதால் முதலீட்டாளர்கட்கு பண நட்டம் ஏற்படுமாயின் அதனை ஈடுசெய்தல், இதற்கான நட்டஈடு நிதியம் ஒன்றும் பேணப்பட்டு வருகிறது.

**(3) அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குதல்**

இலங்கையில் மூலதனச்சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக, அரசாங்கத்துக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதலும் இதன் செயற்பாடுகளில் ஒன்றாகும்.

**(4) பட்டியல்படுத்தலை அல்லது பட்டியல்படுத்தப்பட்ட பிணையங்களின் வியாபாரத்தை இடை நிறுத்தல்**

முதலீட்டாளர்களின் நலன்கருதி புதிய ஆவணங்கள் பங்குச்சந்தை நிறுவனமான கொழும்பு பங்குமுதல் பரிமாற்றில் பட்டியலிடப்படுவதை (கூறுவிலை பெறப்படுவதை) இடைநிறுத்தல் அல்லது முற்றாகத் தடுத்தல் அல்லது ஏற்கெனவே பட்டியல்படுத்தப்பட்ட ஆவணங்களின் வியாபாரத்தை இடைநிறுத்துதல் அல்லது முற்றாக இல்லாமல் செய்தல் அல்லது பட்டியல்படுத்தப்பட்ட எல்லாப் பிணையங்களினதும் வியாபாரத்தை ஒரு தடவையில் மூன்று நாட்களுக்கு மேற்படாமல் இடைநிறுத்தி வைத்தல்.

**(5) விசாரணை செய்தல்**

பங்கு பரிமாற்றுத் தொழிலில் ஈடுபடும் அமைப்பொன்றினையோ அல்லது பங்குத்தரகர்களின் அல்லது பங்கு வியாபாரிகளின் அல்லது கூறு நம்பிக்கைப் பொறுப்பினை அல்லது கொழும்பு பங்குமுதல் பரிமாற்றுக் கம்பனியில் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக் கம்பனிகளின் தொழில்பாடுகளை விசாரணை செய்யலாம்.

**(6) பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்துதல்**

இவ்வாணைக் குழுவின் அனுமதி பெற்ற பங்குத்தரகர், பங்குவியாபாரி அல்லது கூறுநம்பிக்கைப் பொறுப்பினது நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது முகாமைக்கம்பனி அல்லது பங்குமுதல் பரிமாற்றில் நிரற்படுத்தப்பட்ட பகிரங்கக்கம்பனி எவையாவது சட்டங்களை மீறிநடக்கும் சந்தர்ப்பத்தில் அவைபற்றி பொதுமக்களுக்குப் பகிரங்கமாக அறிவித்தல்.

**(7) அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் செயற்படுத்துதல்**

ஆவணங்கள் சந்தை தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் செயற்படுத்துதல்.

**(8) பொதுக்கம்பனியாக மாற்றுமாறு கோருதல்**

பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனிக்கம்பனியை பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக மாற்றியமைக்குமாறு கம்பகளினின் பதிவாளரைக் கோரலாம்.

## பிணையங்கள் பரிவர்த்தனையில் ஈடுபடுவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல் தொடர்பான நிபந்தனைகள்

தற்பொழுது இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு எனச் செயற்பட்டு வருகின்ற பிணையங்கள் பேரவை உருவாக்கப்படமுன்னர் பங்குமுதல் பரிமாற்றில் ஈடுபடும் நிறுவனமோ அல்லது பங்குதாரர்களோ அல்லது பங்குமுதல் வியாபாரிகளோ

அனுமதிப்பத்திரம் பெற்றுத்தான் தமது தொழிலில் ஈடுபடவேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கவில்லை. ஆனால் தற்பொழுது இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரம் பெறாமல் பங்குமுதல் பரிமாற்றுத் தொழிலையோ அல்லது பங்குமுதல் வியாபாரத்திலோ ஈடுபடமுடியாது. அத்துடன் திருத்தச்சட்டப்படி அலகுப்பொறுப்பாட்சி முகாமைக்கம்பனிகூட இக்குழுவின் அனுமதிப்பத்திரம் பெற்றே செயற்படமுடியும். எனவே இங்கு முதலில் பங்குமுதல் பரிமாற்றுத் தொழிலில் (Stock Exchange) ஈடுபடுவதற்குரிய அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பான நிபந்தனைகளைப் பார்ப்போம்.

(1) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியாக அல்லது இச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்ட சங்கமாக இருக்க வேண்டும்.

(2) பங்குமுதல் பரிமாற்றுத்தொழிலையே முழுமையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பங்குமுதல் பரிமாற்றுத் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பிக்கும் கம்பனிகள், ஆகக்குறைந்து தரகுத்தொழிலில் ஈடுபடுவதற்கு ஆறு உறுப்பினர்களாவது இருக்க வேண்டும் என்பதுடன், இதில் நான்கு உறுப்பினர்கள் ஆகக் குறைந்து தரகுத் தொழிலில் ஐந்து ஆண்டுகள் அனுபவம் உடையவர்களாக இருக்கவேண்டும்.

(4) பங்கு பரிமாற்றத் தொழில்மூலம் கிடைக்கக்கூடிய லாபங்களை அதன் உறுப்பினர்கட்கு பகிர்ந்தளித்தலாகாது.

(5) நிருவாக சபையும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களும் தொழில் ரீதியாக நற்பெயர் கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

(6) விண்ணப்பிக்கும் கம்பனியின் நிதிநிலைமை திருப்திகரமானதாக இருக்கவேண்டும்.

(7) முதலீட்டாளர்களைப் பாதுகாக்கக்கூடிய முறையிலும் ஒழுங்கான முறையில் தொழிலாற்றக் கூடியதாகவும் ஏற்ற சட்டதிட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய உரிய படிவத்தில் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஐந்து வருடங்களுக்கு வலுவானதாகும். மேலும் இதனை ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை புதுப்பித்துக் கொள்ளலாம்.

## பங்குத்தொகுதித் தரகராக அல்லது வியாபாரியாக செயற்படுவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பான நிபந்தனைகள்

பங்குத்தரகர்களும் பங்குவியாபாரிகளும் கூட இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரம் பெற்றே தொழில் செய்ய முடியும். இங்கு பங்குதரகர் என்போர் முதலீட்டாளர்கள் சார்பாகப் பிணையங்களை வாங்கும் அல்லது விற்கும் தொழிலில் ஈடுபடுவோரைக் குறிக்கும். பங்கு வியாபாரி எனப்படுவோர் பிணையங்கள் வாங்குதலையும் விற்றலையும் தொழிலாகக் கொண்டுள்ளவர்களைக் குறிக்கும். தரகர்கள், வியாபாரிகள் தனிப்பட்ட ஆட்களாகவோ அல்லது கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளாகவோ இருக்கலாம். பங்குத்தரகர்களும் பங்கு வியாபாரிகளும் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளாக இருந்தால் அனுமதிப்பத்திரம் பெறுவது தொடர்பாகப் பின்வரும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

(1) அனுமதிப்பத்திரம் பெற்ற பங்குமுதல் பரிமாற்று அமைப்பில் ஓர் உறுப்பினராக இருக்க வேண்டும். எனவே இலங்கையைப் பொறுத்தவரை கொழும்பு பங்குமுதல் பரிமாற்று அமைப்பில் உறுப்பினராக இருக்க வேண்டும்

(2) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனியாக இருக்க வேண்டும்.

(3) பணிப்பாளர்களில் ஒருவரும் கம்பனியின் உத்தியோகத்தரில் ஒருவரும் பங்குமுதல் பரிவர்த்தனை தொழிலில் போதியளவு அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்.

தனிப்பட்ட ஒருவர் பங்குத்தரகராக அல்லது பங்கு வியாபாரியாகச் செயற்பட விரும்பி அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமாயின் அவர்.

(1) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(2) நிதி வசதி உடையவராக இருக்க வேண்டும்.

(3) அனுமதிப்பத்திரம் பெற்ற பங்குமுதல் பரிமாற்றின் உறுப்பினராக இருக்க வேண்டும்.

(4) அனுமதிப்பத்திரம் பெற்ற பங்குமுதல் பரிமாற்றின் உறுப்பினராக இருந்து வெளியேற்றப்பட்டவராக இருத்தலாகாது.

இவ்வாறு பங்குத்தரகுத் தொழிலும் பங்குவியாபாரத்திலும் ஈடுபடுவதற்குக் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்திற்கு வலுவுடையதாக இருக்கும். அதனைப்புதுப்பித்துக் கொள்வதற்கு அனுமதிப்பத்திரம் முடிவுறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

## கூறுநம்பிக்கைப் பொறுப்புக்கான (Unit Trust) அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான நிபந்தனைகள்

கூறுநம்பிக்கைப் பொறுப்பு அல்லது அலகுப் பொறுப்பாட்சி என்பது, நமது நாட்டில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஓர் மூலதனச் சந்தை அமைப்பாகும். இத்தகைய அலகுப் பொறுப்பாட்சி முகாமைக் கம்பனிகளால் நிருவகிக்கப்படுகிறது. இத்தகைய முகாமைக்கம்பனிகள் கூறுநம்பிக்கைப் பொறுப்பிணை நடாத்துவதற்கு இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெறல்வேண்டும். இது தொடர்பான பிரதான நிபந்தனைகள் பின்வருமாறு :-

(1) கூறுநம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளரும் முகாமைக்கம்பனியும் வேறானதாக இருக்கவேண்டும்.

(2) நம்பிக்கைப் பொறுப்பாளர் முகாமைசெய்யும் கம்பனிக்குத் தொடர்புடைய ஓர் ஆளாக இருக்கக் கூடாது.

(3) நம்பிக்கை உறுதி (Trust Deed) யில் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கும் முகாமைக் கம்பனிக்கும் இடையில் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவேண்டும்.

பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது, பங்குச் சந்தையை மேற்பார்வை செய்யும் அதிகாரத்தையும் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, அபிவிருத்தி செய்யும் நோக்கத்தையும் கொண்டு செயற்பட்டு வருகிறது. இவ்வமைப்பு உருவாக்கப்பட்டதன்மூலம் பங்குகளிலும் மற்றும் பொறுப்பாவணங்களிலும் முதலீடு செய்வோர் பல்வேறு வழிகளிலும் பாதுகாக்கப்படுகின்றனர்.

பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அனுமதி பெறாமல் எந்த ஒரு அமைப்பும் பங்குகள் மற்றும் பொறுப்பாவணங்களின் பரிமாற்றத்தில் ஈடுபட முடியாது. அத்துடன் பங்குத்தரகர்களும் அனுமதிப்பத்திரம் பெற்றே செயற்படமுடியும். இதனால் தகுதியற்ற அமைப்புக்கள் பங்குச் சந்தையில் ஈடுபடுவதன்மூலம் முதலீட்டாளர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு தவிர்க்கப்படுகிறது.

அனுமதிபெற்று செயற்படும் பங்குப்பரிமாற்று அமைப்பு, பங்குத்தரகர்கள் ஆகியவற்றின் பிழையான செயற்பாடுகள் மூலம் முதலீட்டாளர்கட்கு நிதியிழப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதனை ஈடுசெய்வதற்காக நட்டஈடு நிதியமும் பேணப்படுவதால் முதலீட்டாளர்கள் தமக்கு ஏற்படும் நட்டத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. கூறுவிலைபெறப்பட்ட கம்பனிகள் முதலீட்டாளர்கட்குப்பாதிப்பு எனப்படக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாயின், அவற்றின் பங்குகள் பரிமாற்றம் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ இடைநிறுத்தப்படுவதால் முதலீட்டாளர்கட்கு ஏற்படக்கூடிய பாதிப்பு நிவர்த்தி செய்யப்படுகிறது.

அனுமதிப்பத்திரம் பெற்றுச் செயற்படும் பங்குபரிமாற்று அமைப்பு, பங்குத்தரகர் ஆகியோரின் முறையற்ற செயல்களைப் பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படுவதால் பாதிப்பு ஏற்படக்கூடிய அமைப்புக்களுடன், தரகர்களுடன் முதலீட்டாளர்கள் தொடர்பு கொள்ளாமல் பாதுகாக்கப்படுகின்றனர்.

பங்குகள் மற்றும் பொறுப்பாவணங்களில் மட்டுமன்றி அலகுப்பத்திரங்களில் முதலிடுவோரும் பாதுகாக்கப்படுகின்றனர். இலங்கையில் அலகுப்பொறுப்பாட்சி நிறுவனங்கள் செயற்பட ஆரம்பித்தமையால் அவற்றையும் முதலீட்டாளர்கட்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டுப்படுத்தக்கூடிய முறையில் 1991 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

இலங்கையில் சுமார் 100 ஆண்டுகளாகப் பங்குச் சந்தைச் செயற்பாடுகள் நடைபெற்றுவந்த பொழுதிலும் அவற்றைக் கண்காணிக்கவோ அல்லது மேற்பார்வை செய்யவோ எந்தவிதமான அமைப்பும் ஏற்படுத்தப்படவில்லை. இக்குறைபாடு இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டதால் நிவர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், முதலீட்டாளர்களும் பாதுகாக்கப்படக்கூடிய முறையில் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் பங்குச் சந்தையின் வளர்ச்சிக்கு இவ் ஆணைக்குழு அரசிற்கும் ஆலோசனை வழங்குவதன்மூலம் இலங்கையில் ஒரு ஒழுங்கான பங்குச்சந்தை செயற்பாடுகள் ஏற்படவும். பங்குச்சந்தை அபிவிருத்தி அடையவும் வாய்ப்புக்கள் ஏற்படுமென எதிர்பார்க்கலாம். □

**பேசும் கடிகாரம்:-** குறித்த இலக்கத்தை தொலைபேசியில் சுழற்றி சரியான நேரத்தைத்தெரிவித்துக் கொள்ளும் முறையே இதுவாகும்.

**இன்மார்செட் (Inmarsat):-** செய்மதிகளின் உதவியுடன் கடலில் கப்பலில் பயணம் செய்வோருடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளும் முறையே இதுவாகும்.

"ஜோதி" யே ஈழமதில் உன்புகழ் ஜொலிக்கட்டும்

முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு

★ பெயர் பெற்ற ஸ்தாபனம் ★

**காவேரி சில்க்ஸ்**

48, பெரிய கடை, () யாழ்ப்பாணம்.

☆ 1992ஆம் ஆண்டிற்கான சிறந்த பொதிகட்டலுக்கான "லங்கா ஸ்டார்" விருது யூனிவேர்சல் பைக்கச்சிற் (Pvt) லிமிட். நிறுவனம் பெற்றுக்கொண்டது.

# விநியோக திட்டமிடல்
# (Distribution Planning)

*தேவராஜன் ஜெயராமன்*
B. Com (Hons), MBA (Delhi), AMIPM (S. L.)

*விரிவுரையாளர்.*
வணிக முகாமைத்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

## 1 0 அறிமுகம்

*உற்பத்தியாளர் பொருட்களை உற்பத்தி செய்வதுடன், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை நுகர்வோரிடம் எடுத்துச் செல்ல வேண்டிய கருமத்தினையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது. உற்பத்தியில் கவனத்தினைச் செலுத்துவது போல் விநியோகத்திலும் கவனத்தினைச் செலுத்த வேண்டியுள்ளது. அந்த வகையில் சந்தைப்படுத்தலில் முக்கியமான கருமங்களில் ஒன்றாக விநியோகம் காணப்படுகின்றது. சந்தைப் படுத்தல் தொடர்பான கருமங்களைத் திட்டமிட வேண்டிய தேவை காணப்படுவதனால் விநியோகத்தினையும் திட்டமிடவேண்டியுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளை உற்பத்தியாளரிடம் இருந்து நுகர்வோருக்கு எடுத்துச் செல்லல் தொடர்பாக ஒழுங்கான முறையில் தீர்மானித்துக் கொள்வதனை விநியோக திட்டமிடல் என அழைக்கலாம். பொருட்கள், சேவைகள் தொடர்பான விநியோகச் செயற்பாடுகள் விநியோக வழி மூலம் மேற்கொள்ளப்படும். விநியோக செய்முறையில் பங்கு பற்றுபவர்களை விநியோக வழி அங்கத்தவர்கள் என்ற பொதுவான பெயர்கொண்டு அழைக்கலாம்.*

## 1. 1 விநியோக வழி முறை


*ஒரு நிறுவனம் பொருட்கள், சேவைகள் விநியோகம் தொடர்பாக இரண்டு பிரதான முறைகளைப் பின்பற்ற முடியும்.*

*(அ) நேர் விநியோக வழி முறை* (Direct channel)

*(ஆ) நேரில் விநியோக வழி முறை* (Indirect channel)
*உற்பத்தியாளர் நேரடியாகப் பொருட்களை நுகர்வோருக்கு விநியோகிக்கமுடியும். இது "நேர் விநியோக முறை" என அழைக்கப்படும்.*




*உற்பத்தியாளர் பொருட்கள் சேவைகளை இடைநிலையாளர் ஊடாக நுகர்வோருக்கு விநியோகிப்பதும் உண்டு. இடைநிலையாளர் என்னும்போது மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகளைக்குறிக்கின்றது. இவ்வாறு இடைநிலையாளர் ஊடாக விநியோகிப்பதனை "நேரில் விநியோக" முறை என அழைப்பர். நேரில் விநியோக முறையில் மூன்று முறைகளில் விநியோகத்தினை மேற்கொள்ள முடியும்.*




*ஒரு நிறுவனம் தனது பொருட்கள் சேவைகளை விநியோகிப்பது தொடர்பான விநியோக முறையினைத் தீர்மானிக்கும்போது விநியோகம் தொடர்பான பரப்பளவினைத் தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும். அந்த வகையில் மூன்று வகையான விநியோக முறைகள் அல்லது பங்கீட்டு முறைகள் காணப்படுகின்றன.*

*(அ) தனி உரிமைத் தன்மையுடைய விநியோக முறை அல்லது பங்கீடு* (Exclusive Distribution)

*(ஆ) தேர்வுப் பங்கீடு* (Selective Distribution) *அல்லது விநியோக முறை.*


*(இ) செறிந்த பங்கீடு* (Intensive Distribution) *அல்லது விநியோக முறை*

*தனி உரிமைத்தன்மை உடைய விநியோக முறை எனப்படுவது, ஒரு நிறுவனம் குறிப்பிட்ட பிரதேசத்தில் பொருட்கள், சேவைகளை விநியோகிக்கும் பொருட்டு பயன்படுத்தப்படும் இடை நிலையாளர்களின் எண்ணிக்கையை மிகக் கடுமையாக வரையறுத்துக் கொள்வதனை குறிக்கின்றது. பொதுவாக இவ் விநியோக முறையில் ஒன்று அல்லது இரண்டு இடைநிலையாளர்கள் மட்டும் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் ஊடாக விநியோகம் மேற்கொள்ளப்படும்.*

தேர்வுப்பங்கீடு அல்லது விநியோக முறையில் ஒரு நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட ஒரு சில இடைநிலையாளர்களால் மட்டும் விநியோகத்தினை மேற்கொள்வதனைக் குறிக்கின்றது அதாவது இம் முறையில் நிறுவனம் தனது பொருட்கள், சேவைகளை தெரிவு செய்யப்பட்ட ஒரு சில விநியோகஸ்தர்கள். ஊடாக விநியோகிக்கின்றது.

செறிந்த பங்கீடு அல்லது விநியோக முறையில் நிறுவனம் பெருமளவு எண்ணிக்கையிலான இடைநிலையாளர் மூலப் பொருட்கள் சேவைகளை விநியோகிப்பதனைக் குறிக்கின்றது. அதாவது இம் முறையில் உற்பத்தியாளர் பெருமளவிலான விநியோகஸ்தர்கள் மூலம் தமது பொருட்களை விநியோகிக்கின்றனர். இம் மூன்று முறையிலான விநியோகத்தினை கீழ் கொடுக்கப்பட்ட விளக்கப்படம் மூலம் எடுத்துக் காட்ட முடியும்.

வியாபாரப் பிரதேசம்



தனியுரிமை தன்மை உடைய விநியோகம் | தேர்வு விநியோகம் | செறிந்த விநியோகம்

† இடை நிலையாளர்

## 1.2 இரட்டை விநியோக வழி (Dual channel of Distribution)

ஒரு நிறுவனம் தமது உற்பத்திப் பொருட்கள் சேவைகளை, ஒரு விநியோக வழியினை மட்டும் பயன்படுத்தி விநியோகிக்கவேண்டும் என்ற அவசியமில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட விநியோக வழிமுறைகளையும் பயன்படுத்தலாம். ஒரு நிறுவனம் தான் உற்பத்தி செய்கின்ற வெவ்வேறு வகையான பொருட்களுக்கு வெவ்வேறு வகையான விநியோக முறைகளைப் பயன்படுத்தலாம். அல்லது ஒரு பொருளுக்கே ஒன்றுக்கு மேற்பட்ட விநியோக முறைகளைப் பயன்படுத்தலாம். அல்லது வெவ்வேறு சந்தைத் துண்டங்களிற்கு வெவ்வேறு விநியோக முறைகளைப் பயன்படுத்தி பொருட்களை விநியோகிக்கலாம். இவ்வாறு ஒரு நிறுவனம் ஒன்றுக்கு மேற்பட்ட விநியோக முறைகளைப் பயன்படுத்துவதனை ''இரட்டை விநியோக வழி முறை'' எனப் பெயர் கொண்டு அழைப்பர்.

ஒரு எளிய உதாரணம் மூலம் இதனை எடுத்துக் காட்டலாம். அலுவலக உபகரணங்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று அவற்றினை நேரடியாகக் காரியாலயத்திற்கு விநியோகிக்கின்றது. இறுதிப்பாவனையாளர்களுக்கு சில்லறை வியாபாரிகள் மூலம் விற்பனை செய்கின்றது. இங்கு நிறுவனம் நேர் விநியோக வழிமுறை, நேரில் விநியோக வழி முறை ஆகிய இரு விநியோக முறைகளைப் பின்பற்றுகின்றது. எனவே இது இரட்டை விநியோக வழி முறையாகும்.

## 1.3 விநியோக வழிமுறையினைத் தெரிவு செய்தல் Selecting a Channel of Distribution

ஒரு நிறுவனம் விநியோக வழிமுறையினைத் தெரிவு செய்யும்போது பல காரணிகளைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். அவற்றில் முக்கியமாகப் பின்வருவனவற்றினைக் குறிப்பிட முடியும்.

**(அ) நுகர்வோர் (Consumer):-**

குறிப்பிட்ட பொருட்களைக் கொள்வனவு செய்யும் நுகர்வோர், அவர்களின் எண்ணிக்கை, கொள்வனவு அளவு, கொள்வனவு நடத்தை என்பனவற்றினைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

**(ஆ) நிறுவனம் (Company):-**

குறிப்பிட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் நோக்கம், விற்பனை, லாப அளவு, காணப்படும் வளங்கள் விநியோகமுறையில் காணப்படும் அனுபவம் என்பன கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

**(இ) பொருள் (Product):-**

பொருளின் தன்மை, அதாவது பழுதடையக் கூடிய பொருளா அல்லது தொழில்நுட்பத்தன்மை கொண்ட பொருளா என்பன பற்றி கருத்தில் கொள்ள வேண்டும். அத்துடன் அதன் அலகு விலை, நிறை என்பன பற்றியும் கருத்தில் கொள்ளவேண்டும்.

(ஈ) போட்டி (Competition):-
குறிப்பிட்ட பொருளிற்கு நிலவும் போட்டி, போட்டியாளரின் விநியோக முறை என்பன பற்றியும் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

(உ) விநியோக வழிமுறைகள் (Distribution Channels):-
குறிப்பிட்ட நிறுவனத்திற்கு காணப்படும் விநியோக முறைகள், மாற்றுவழிகள், ஒவ்வொரு விநியோக வழி முறையூடாகவும் நிறைவேற்றக்கூடிய தொழிற்பாடுகள் என்பனவற்றினையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

(ஊ) சட்ட முறைமைகள் (Legalities):-
விநியோகம் தொடர்பாகக் காணப்படும் சட்ட விதிகளையும் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட காரணிகளைக் கருத்தில் கொண்டு விநியோகவழிமுறையைத் தீர்மானிக்கவேண்டும்.

## 1. 4 கைத்தொழில் பொருட்களுக்கான விநியோக முறை:-

கைத்தொழில் பொருட்களுக்கான விநியோக முறையானது நுகர்வுப் பொருட்களுக்கான விநியோக முறையில் இருந்து வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. பின்வரும் அம்சங்களைப் பொறுத்து கைத்தொழில் பொருட்களுக்கான விநியோகம் நுகர்வுப் பொருட்களின் விநியோக முறையில் இருந்து வேறுபடுவதனை அவதானிக்க முடிகின்றது.

(i) கைத்தொழில் பொருட்களுக்கான விநியோக முறையில் வழமையாக சில்லறை வியாபாரிகள் பயன்படுத்தப்படுவதில்லை.

(ii) பொதுவாக கைத்தொழில் பொருட்கள் நேர் விநியோக முறையில் விநியோகிக்கப்படுகின்றது.

(iii) கைத்தொழில் பொருட்களுக்கான விநியோக முறையில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை குறைவாகவும் கட்டளைத் தொகை பெரியதாகவும் காணப்படும்.

(vi) கைத்தொழில் பொருட்கள் விநியோகத்தில் தொகுதியாக விற்பனை செய்தல் (Team Selling) முக்கியத்துவமானதாகக் காணப்படுகின்றது.

(v) விநியோகத்தில் ஈடுபடுபவர்களுக்குத் தொழில்நுட்ப அறிவு வேண்டப்படுகின்றது.

### முடிவுரை:-

நிறுவனம் ஒன்று விற்பனை, லாபம் என்பவற்றினை அதிகரிப்பதற்கும் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கும் சரியான விநியோக முறை வழி அவசியம். விநியோக முறை ஒன்றினைத் தெரிவு செய்யும்போது பொருத்தமான காரணிகளைக் கருத்தில் கொண்டு விநியோக வழி முறையினைத் திட்டமிடுதல் வேண்டும். நிறுவனத்தின் வெற்றிக்கு விநியோகத் திட்டமிடுதல் மிக அவசியமானதாகும்.

### உசாத்துணை நூல்கள்:-

1 Darid w. Cravens
Strategic Marketing

2 தேவராஜன் ஜெயராமன்
வர்த்தகமும் நிதியும் - அலகு (I)

3 Neelamegham. s
Marketing Management and the Indian Economy

92ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கைப்படி ஏற்றுமதிகளின் சதவீதம்.

| | |
|---|---|
| விவசாய ஏற்றுமதிகள் | - 24.0 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | - 68.9 |
| கனிப்பொருள் ஏற்றுமதிகள் | - 2.5 |
| வகைப்படுத்தற்குட்படாதவை | - 4.6 |

# திறைசேரி உண்டியலின் விற்பனை தொடர்பான புதியமுறை

நெ. சுரேஷ்குமார்
94ம் ஆண்டு வர்த்தகப் பிரிவு
(ஆண்டு 13B)

அரசு தனக்குத் தற்காலிகமாக தேவைப்படும் நிதியைத் திரட்ட திறைசேரி உண்டியலினை ஓர் கருவியாகப் பயன்படுத்துகிறது குறிப்பாக பாதீடுகளினால் ஏற்படும் பற்றாக் குறைகளுக்கு நிதியீட்ட திறைசேரி உண்டியல்களின் வெளியீடு முக்கியத்துவம் பெற்றுள்ளது. திறைசேரி உண்டியல் என்றால் என்ன என்பதற்கு பின்வருமாறு விளக்கம் அளிக்கலாம் அரசாங்கம் தனது தேவையான நிதியை திரட்டுகின்ற வேளையில் அக்குறிப்பிட்ட தொகை மீளத்தரப்படும் என அரசு வழங்கும் வாக்குறுதி திறைசேரி உண்டியல் ஆகும்.

திறைசேரி உண்டியலை முதலாவதாக வால்டர் பெகெட் (Walter Begehot) என்பவரின் ஆலோசனைக்கு அமைய 1877 இல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது. இலங்கை குடியேற்ற நாடாக இருந்த காலத்திலேயே திறைசேரி உண்டியல்கள் வெளியிடப்பட்டது. நிதியைப் பெற இவ்வுண்டியல்களின் வெளியீடு தொடர்பாக திறைசேரி உண்டியல்ச் சட்டம் இடம் அளித்தது. 1923 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க திறைசேரி உண்டியல்ச் சட்டம், 1954 ஆம் ஆண்டு 51 ஆம் இலக்கச் சட்டம் என்பவற்றின்படி முடிக்குரிய முகவர்களினால் இவை இங்கிலாந்தில் வெளியிடப்பட்டன. இதன் பின் உள்ளூர் திறைசேரி உண்டியல் சட்டத்துக்கமைய இலங்கையில் திறைசேரி உண்டியல்கள் வெளியிடப்பட்டன.

நெ. சுரேஷ்குமார்

திறைசேரி உண்டியல்கள் அரசின் சார்பில், மத்திய வங்கி 3, 6, 12 மாத கால முதிர்ச்சி கொண்ட கடன் பத்திரங்களாகப் பணச்சந்தையில் ஒவ்வொரு கிழமையும் விற்பனை செய்யப்பட்டன. ஆரம்பத்தில் இவ் உண்டியல்களை மத்திய வங்கி விளம்பரங்களைச் செய்து விண்ணப்பங்களைப் பெற்று கேள்விப்பத்திர அடிப்படையில் விற்பனை செய்தது. இது தனியார் வங்கிகள், ஏனைய நிதிஸ்தாபனங்கள், முகவர்கள் போன்ற அனைவருக்கும் வழங்கப்பட்டன. இதனைக் கொள்வனவு செய்வதற்கான கழிவுத்தொகை 1000/- ரூபா. இதற்கு மேல் தொகையான ரூபா 1000/- இன் மடங்குகளாக கொள்வனவு செய்யலாம். எனினும் தற்போது (1992 ஆம் ஆண்டில் இருந்து) மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களின் விற்பனவில் புதிய முறையைக் கடைப்பிடிக்கிறது. இதன்படி மத்திய வங்கியிடம் திறைசேரி உண்டியல்களை ஒப்புதல் பெற்ற முதனிலை வணிகர் மட்டும் கொள்வனவு செய்யலாம் பின் அவர் அத்திறைசேரி உண்டியல்களை ஏனையோர்க்கு விற்பனை செய்வர்.

இவ் ஒப்புதல் பெற்ற முதனிலை வணிகரின் நியமனம் திறைசேரி உண்டியற்கான இரண்டாந்தரச் சந்தை வளர்க்கும் ஓர் நடவடிக்கையாகக் காணப்படுகிறது. இங்கு நாம் முதலில் திறைசேரி உண்டியற்கான முதலாம்தரச் சந்தையை, இரண்டாந்தரச் சந்தை என்பவற்றைப் பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

திறைசேரி உண்டியல்கள் அரசின் சார்பில் திறைசேரியால் வெளியிடப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. திறைசேரி இவ்வுண்டியல்களை வெளியிட்டு முழுமையாக மத்திய வங்கிக்கு விற்பனை செய்யும். இவ்வாறே திறைசேரி உண்டியல் பத்திரங்களை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யும்போது ஏற்படுவது மத்திய வங்கிக்கான முதலாம்தரச் சந்தை ஆகும்.

ஆரம்ப காலத்தில் திறைசேரி உண்டியல்களை மத்திய வங்கியிடம் இருந்து கொள்வனவு செய்ய பொதுமக்களும், வர்த்தக வங்கிகளும் அதிகளவு அக்கறை செலுத்தவில்லை. இதனால் மத்திய வங்கி முழு திறைசேரி உண்டியல்களையும் கொள்வனவு செய்து அரசுக்கு நிதிஉதவி அளித்தது இவ்வேளையில் திறைசேரி உண்டியலைக் கொள்வனவு செய்வதற்கு பொது மக்களையும் வர்த்தக வங்கிகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு திறைசேரி உண்டியல்களை இரண்டாம் தரச் சந்தையை அறிமுகம் செய்தது. மத்திய வங்கி தாம் திறைசேரியிடம் இருந்து கொள்வனவு செய்த திறைசேரி உண்டியல்களை மறுகழிவு செய்து பொதுமக்கள், வர்த்தக வங்கிகள் என்பவற்றுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கையே திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாம்தரச் சந்தை ஆகும். இவ் திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாந்தரச் சந்தையை வளர்ப்பதற்காக மத்திய வங்கி ஒப்புதல் பெற்ற முதலாம்தர வணிகரை 1992 இல் இருந்து நியமித்துள்ளது.

ஒப்புதல் பெற்ற முதலாம்தர வணிகர் என்பதற்கு பின்வருமாறு விளக்கம் அளிக்கலாம் "மத்திய வங்கியிடம் இருந்து திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதற்கு என மத்திய வங்கியால் அனுமதிக்கப்படுவோர் ஒப்புதல் பெற்ற முதலாம்தர வணிகர் (Accredited Primary Dealers) இவர்கள் தாம் கொள்வனவு செய்த திறைசேரி உண்டியல்களை மறு கழிவு செய்து ஏனையோர்க்கு விற்பனை செய்வர்.

1992 ஆம் ஆண்டு அறிக்கைப்படி 18 அங்கீகரிக்கப்பட்ட முதலாம்தர வணிகர்களை மத்திய வங்கி நியமித்தது. இதனுள் இலங்கைவங்கி, மக்கள்வங்கி என்பனவையும் அடங்கும். முதலாம்தர வணிகர்கள் பெரும்பாலும் அனுபவம் பெற்ற நிதி நிறுவனங்களாக காணப்படும். இவர்கள் மட்டுமே திறைசேரி உண்டியல்களை, கேள்விப் பத்திரங்களை மத்திய வங்கியிடம் சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் தாம் கொள்வனவு செய்யும் திறைசேரி உண்டியல்களை சாட்டுதல் செய்து பொது மக்களுக்கு விற்பனை செய்வர். இவர்கள் ஆகக் குறைந்தது 5 லட்சம் குறிப்பீட்டு விலைக்கு கேள்விப் பத்திரங்களைக் கோரலாம். அதன் பின் 10 லட்சத்தின் பெருக்கங்களைக் கொண்ட ஒவ்வொரு குறியீட்டு விலை தொடர்பாகவும் வேறுபட்ட ஒப்படைப்புப் பத்திரங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் விண்ணப்பங்கள் யாவும் மத்திய வங்கியின் பொதுபடு கடன் பிரிவுக்கு அனுப்புதல் வேண்டும். இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை முதலாம்தர வணிகர்கள் 10000, 20000, 50000, 100000, 200000, 500000, 100 0000, 200 0000, 50 00000, 1 கோடி, 2கோடி ஆகிய பெறுமதிகளில் விற்பனை செய்வார்கள். இவ் வணிகர்கள் திறைசேரி உண்டியல்களை மத்திய வங்கியிடம் இருந்து கொள்வனவு செய்த பெறுமதிக்கும் அவற்றைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் அவர்களின் வருமானமாக அமையும். இவ் உண்டியல்கள் கைமாற்ற வல்லவை. உண்டியல்களை முதிர்வுத் திகதியில் யார் அதை உடைமையாக வைத்திருக்கின்றாரோ அவரிற்கு மத்திய வங்கி முதிர்ச்சித் தொகையை வழங்கும்; எனினும் உண்டியலை கொள்வனவு செய்த நபர் முதிர்வுத் திகதிக்குமுன் நிதி தேவைப்படின் அதை முதனிலை வணிகருக்கு விற்பனை செய்ய முடியும்.

முதலாம்தர வணிகர்களை அரசு அமைத்ததற் கான காரணங்கள்:

- திறைசேரி உண்டியலுக்கான இரண்டாம் தர சந்தையின் வளர்ச்சிக்கு ஊக்குவித்தல்.
- வர்த்தக வங்கிகளும், ஒரு சில நிறுவனங்க ளும் இரண்டாம் தர சந்தையில் அனுபவித்து வந்த உரிமைகளை பரவலாக்கல்.
- பொது மக்களுக்கு திறைசேரி உண்டியலின் கொள்வனவு ஊடாக அதிக முதலீட்டு வாய்ப்பு அளித்தல்.

திறைசேரி உண்டியலுக்கான இரண்டாம்தர சந் தையில் ஒப்புதல் அளிக்கப்பெற்ற முதலாம்தர வணி கர்கள் நியமிக்கப்பட்டதால் திறைசேரி உண்டியலில் முதலிடுசெய்யும் பொதுமக்களுக்கு பல நன்மைகள் ஏற்படுகின்றன.

★ முதலாம்தர வணிகர்களிடம் இருந்து சுலபமாக திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்ய லாம்.

★ பல வணிகர்கள் போட்டியிட்டு விற்பனை செய் வதால் முதலீட்டாளர்கள் அல்லது முதலிடு செய் யும் பொதுமக்கள் குறைந்த விலையில் அவ் உண் டியல்களை கொள்வனவு செய்யலாம்.

★ கொள்வனவு செய்தவருக்கு நிதித்தேவை ஏற்படின் முதிர்ச்சிக் காலத்துக்கு முன்னதாக, முதலாம்தர தரகருக்கு விற்று நிதியைப்பெறலாம்:

★ பல பெறுமதிகளில் இவ் உண்டியல்கள் விற் பனை செய்யப்படுவதால் தமது வருமான நிலைக்கு ஏற்ப கொள்வனவு செய்யலாம்.

★ இவ் வணிகர்களின் பரவலான செயற்பாட்டால் கிராமிய மக்களும் திறைசேரி உண்டியல்மூலம் முதலீட்டைப் பெற வாய்ப்பு உண்டாகின்றது.

★ மிகக் குறைந்த கால முதிர்ச்சி உடைய உண்டியல் களையும் இவ் வணிகர்கள் ஊடாக கொள்வனவு செய்யலாம்.

★ முதலீடு செய்யும் பொது மக்கள் தமது வருமதி யான வட்டியைப் பற்றியும் தாம் வைத்திருக்கும் உண்டியல்களின் பெறுமதிபற்றியும் அறிந்து கொள்ள வாய்ப்புண்டு.

இம் முதலாம்தர வணிகர்களை நியமித்ததனால் பொருளாதாரத்துக்கும் பல நன்மைகள் ஏற்படுகின்றது. அவையாவன:

★ திறைசேரி உண்டியலின் திரவத்தன்மையை அதி கரிக்க இவ் வணிகர்கள் உதவுவதால் அதற்கான சந்தை வாய்ப்பும் அதிகரிக்கும்.

★ இவ் வணிகர்களினால் பெருமளவு திறைசேரி உண்டியல்கள் பொதுமக்களுக்கு விற்பனை செய் யப்படுகிறது இதனால் திறைசேரி உண்டியல் தொடர்பான மத்திய வங்கி நிதிப்பொறுப்பை குறைக்கலாம்.

★ அதிகரித்த கொள்வனவு, விற்பனவு நடவடிக்கை களால் திறைசேரி உண்டியலுக்கான சந்தையை விஸ்தரிக்கலாம்.

★ திறைசேரி உண்டியலின் வளங்கீடு அதிகரிப்பதால் பண நிரம்பலை குறைக்க உதவும்,

★ கிராமப் புறங்களிலும் இவ் உண்டியல்கள் விற் பனை செய்யப்படுவதால் கிராமிய மக்களிடம் இருந்து பெருமளவு சேமிப்புக்களை திரட்டலாம்.

★ கிராமிய மக்களுக்கு பெருமளவு முதலீட்டு வாய்ப்பை ஏற்படுத்த உதவும்.

1977 இன் பின் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு அமைய மாற்றத்தை ஏற்படுத்திய துறைகள் பல இவ் வகை யில் திறைசேரி உண்டியலுக்கான சந்தை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தியில் 1992 ஆம் ஆண் டைப் பொறுத்த வரையில் ஒப்புதல் அளிக்கப் பெற்ற முதல் நிலை வணிகர்களை அமைத்து மிக முக்கிய மானதாக உள்ளது அத்துடன் இதே ஆண்டின் ஒக்ரோ பரில் ஈராண்டு முதிர்ச்சிகொண்ட திறைசேரி உண் டியல்களை வழங்கத் தொடங்கியுள்ளது. எனவே தொடரும் காலங்களிலும் இச் சந்தை, நன்மை பயக் கும் வகையில் வளர்ச்சி அடையும் என்பதில் ஐய மில்லை.

உசாவியவை

1. மத்திய வங்கி அறிக்கை - 1981, 1990, 1991, 1992.

2. வணிகமும் நிதியும் அலகு II லங்கா துறை

3. Central Bank News Survey 1991.

மத்திய வங்கி அரசின் சார்பில் வெளியிடும் திறைசேரி உண்டியல்களில் பொதுமக்கள், வணிகவங்கிகள் நிதி நிறுவனங்களால் கொள்வனவு செய்யப்படாதவற்றை,மத்திய வங்கி தானே கொள்வனவு செய்யும்போது (அரசுக்கு நிதியைப் பெற்றுக்கொடுக்க) அவற்றிற்கு சமனான புதிய நாணயங்களை வெளியீடு செய்வதால் நாட்டின் பண நிரம்பல் அதிகரிக்கும்.

வணிகக் கலைக்கு வளமூட்டும்
''வணிக ஜோதி''யே வருக, வருக.

கல்யாணி கிறீம் ஹவுஸ்

※ யாழ்நகரில் தரமானதும் சுவையானதுமான தயாரிப்புகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள் ※

★ ஐஸ் கிறீம் வகைகள்
★ ஐஸ் கோப்பி
★ ஐஸ் ஜெலி
★ ஸ்ரோபறி கிறீம்
★ குளிர்பான வகைகள்
★ சிற்றுண்டி வகைகள்
★ சொக்லட் கிறிப்ஸ்

மற்றும் பிறந்த தினம், திருமணம், களியாட்ட வைபவங்களுக்கான
கேக் வகைகளை
குறித்த நேரத்தில் ஓடர் செய்து பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்,

கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி,   யாழ்ப்பாணம்.

# தொடர்பாடலில் தொலைபேசியும் இலங்கையில் அதன் அபிவிருத்தியும்

க. சுதாகரன்
94ம் ஆண்டு வர்த்தகப் பிரிவு
[ஆண்டு 13B]

பல நவீன வசதிகள் பெருகிவிட்ட இன்றைய உலகில், தொடர்பு சாதனங்களின் பணி, மிக மிக இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. பல்வேறு வித மான தொடர்பு சாதனங்கள் காணப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்த வரையில் தொலைபேசிப் பாவனை குறிப்பிடத்தக்க அளவு பயன்படுத்தப்படுவதுடன் அதன் பாவனையில் அபிவிருத்தியும் ஏற்பட்டு வருகின்றது. இவ்வேளையில் நாம் தொலைபேசி என்றால் என்ன? அது இன்றைய இலங்கையில் என்ன பங்கினை வகிக்கின்றது என்பதனை அறிந்திருக்கவேண்டியது அவசியமாகும்

தூரத்தில் இருப்பவர்களுடன் பேச்சுமூலம் கலந்துரையாடவல்ல ஓர் சாதனம் தொலைபேசி ஆகும். இது ஆரம்பத்தில் கம்பித் தொடர்பு வசதியில் இடம் பெற்றது. தற்போது இதில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியினால் கம்பித் தொடர்பு இன்றியும் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தொலைபேசியானது கிரஹாம்பெல் என்பவரினால் கண்டு பிடிக்கப்பட்டது. இவர் மனிதக் குரல்களை அனுப்பமுடியும் எனும் கருது கோளுக்கு அமைய ஆய்வுகளை மேற்கொண்டு, 1875 ஆம் ஆண்டு யூன் மாதம்

இரண்டாம் திகதி இதில் வெற்றியும் அடைந்தார். பின் இதில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்நாட்டில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியாக இத் தொலைபேசி பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது.

தொலைபேசி முறையிலான தொடர்பு கொள்ளலில் இரண்டு வகையுண்டு. அவையாவன:

★ நேரடித் தொலைபேசி

★ மாற்றுவழித் தொலைபேசி

நேரடித் தொலைபேசி எனப்படுவது, தொலைபேசிப் பாவனையாளர்கள் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துடன் தொடர்புகொள்ளாது நேரடியாக தொலைபேசி இலக்கங்களைச்சுழற்றி தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலை குறிக்கும். தற்போது இலங்கையில் நேரடித் தொலைபேசி வசதிகள், இலங்கையில் பிரதான நகரங்களுக்கு இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு பல நேரடித் தொலைபேசி வசதிகளைக் கொண்ட பரிவர்த்தனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கும் பல நாடுகளுக்கும் இடையிலும் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது நேரடித்தொலைபேசி முறையைப் பயன்படுத்தும்போது தொலைபேசிப் பாவனையாளர் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய இடத்திற்கு உரிய குறியீட்டு எண்ணினையும் [Code Number] தொலைபேசி எண்ணினையும் சுழற்றுவதன் மூலமாக தொலைபேசி அழைப்பினை பெற்றுக் கொள்ள முடியும்.

சர்வதேச ரீதியான நேரடித் தொலைபேசி முறையில் (International Subscriber Trunk Dialling) தொடர்பு கொள்ளப்படும் நாட்டுக்கு உரிய குறியீட்டு இலக்கம் (Country Code Number), இடத்திற்கு உரிய குறியீட்டு இலக்கம் தொலைபேசி இலக்கம் என்பவற்றைச் சுழற்றி, தொலைபேசி அழைப்பைப் பெற்றுக் கொள்ளலாம.

மாற்றுவழித் தொலைபேசியானது பரிவர்த்தனை நிலையத்துடன் தொடர்புகொண்டு பின் உரிய நபருடன் தொலைபேசி அழைப்பினை பெற்றுக்கொள்ளும் முறையாகும். இம் முறையில் உடனுக்குடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வது கடினமாகும்; காலதாமதத்தினையும் ஏற்படுத்தக் கூடியது இதனால் தற்போது மாற்றுவழித் தொலைபேசி முறைக்குப் பதிலாக நேரடித் தொலைபேசி முறையே அதிகம் ஏற்படுத்தப்படுகின்றது.

சர்வதேச ரீதியாகத் தொலைபேசிப் பாவனையில் பல நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்டு பல சேவைகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன குறிப்பாக விடையளிக்கவல்ல இயந்திரங்கள் (Answering Machine) பொருத்தப்படுவதன்மூலம் தொலைபேசிப் பாவனையாளர் குறிப்பிட்ட நபர் தம்முடன் எங்கு எப்பொழுது தொடர்பு கொள்ளலாம் என்பதனை தெரியப்படுத்துகின்றார். இதேபோல் பதிலை பதிவு செய்யும் இயந்திரங்களும் (Answering Recording Machine) பொருத்தப்படுகின்றன. இதன்மூலம் தொலைபேசிப் பாவனையாளர் இல்லாதபோதும் பதிலை பதிவு செய்து மீளக் கேட்டறிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு சர்வதேசத் தொலைபேசி பாவனையானது, நவீன மயப்படுத்தப்பட்டுக்கொண்டு செல்கின்றபோது இலங்கையினது தொலைபேசி வசதிகளின் அபிவிருத்திகளை நோக்கும்போது இலங்கைத் தொலைதொடர்பு திணைக்களத்தினது செயற்பாடுகளை சிறீலங்கா ரெலிகொம் நிறுவனம் கையேற்றதில் இருந்து 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஓர் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது எனலாம். அதாவது விரிவாக்கல், தரமுயர்த்தல், ஏற்கெனவேயுள்ள தொலைத்தொடர்பு அமைப்பினை புத்தாக்கம் செய்தல் என்பனவற்றினை குறிக்கோளாகக் கொண்டு பல பாரிய செயற் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் முக்கியமானவையாக கரைகடந்த தொலை தொடர்புப் பணி, தென்கிழக்காசிய மத்திய கிழக்கு மேற்கு ஐரோப்பிய கடற்கீழ் கம்பி செயற்திட்டம், மாத்தறை மாவட்ட தொலைதொடர்பு அமைப்பு அபிவிருத்தி, பன்னாட்டு தொலைபேசி தொடர்பு நிலையம் மற்றும் தரைநிலைய நெடுந்தூர கடத்தி வலையமைப்பு என்பனவற்றைக் கொண்ட தொலைத் தொடர்பு செயற்திட்டங்கள் என்பன குறிப்பிடத்தக்கனவாகும் இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த முதன்மை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக உடனடிக் கேள்வியை எதிர்கொள்வதற்காகவும், பணிகளினது தரத்தினை உயர்த்துவதற்காகவும் பல இடைக்கால செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு, விரைவுபடுத்தப்பட்ட அடிப்படையொன்றில் திட்டமிடப்பட்டுள்ளன இதன் பிரகாரம் 8000 மேலதிகத் தொடர்புகளைக் கொண்ட புதிய எண் அடிப்படையிலான கூறு பரிவர்த்தனை நிலையம் ஒன்று நுகேகொட என்னுமிடத்தில் நிறுவப்படுகின்றது. அத்துடன் கொழும்பு துரித நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் கல்லொக்ஸவுண், கோட்டை, இரத்மலானை மற்றும்

மொறட்டுவை ஆகிய இடங்களில் உள்ள பரிவர்த்தனை நிலையங்களின் இயலளவை மேம்படுத்துவதற்கான வேலைகள் அபிவிருத்தி அடைந்துகொண்டிருக்கின்றன.

இவ்வாறு உடனடிக் கேள்வியை எதிர்கொள்வதற்காக 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கூட, தொடர்பு வசதிகளுக்கான கேள்வி மேலும் அதிகரித்தது. அதாவது தொலைபேசி வசதிகளைப் பெற விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 58% ஆல் அதிகரித்தபோதும் அதாவது 95207ற்கு அதிகரித்த போதும் 1992 ஆம் ஆண்டில் சிறீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் 10607 இணைப்புக்களை மட்டுமே வழங்கக் கூடியதாக இருந்தது ஆயினும் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் 1992 இல் வழங்கப்பட்ட புதிய இணைப்புகளின் எண்ணிக்கை அதிகரித்தே காணப்படுகின்றது. அதாவது 1991 இல் 6579 ஆக காணப்பட்ட தொலைபேசி இணைப்புகளின் எண்ணிக்கை 1992 இல் 4028 இனால் அதிகரித்து 10607 ஆகக் காணப்படுகின்றது இதன்படி நோக்கும்போது பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட தொலைபேசிகளின் மொத்த எண்ணிக்கை 8% இனால் 135398 இற்கு அதிகரித்துள்ளது.

மேலும் இலங்கையைப் பொறுத்த வரையில் முன்பு வசதிபடைத்தவர்களின் வீடுகளிலும், வேலைத்தலங்களிலும் உபயோகிக்கப்பட்டு வந்த தொலைபேசிகளுக்கு பதிலாக பொது தொலைபேசிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை கொடுப்பனவுத் தொலைபேசி என அழைக்கப்படுகின்றன. இவை முழுமையாக கணணிமயப்படுத்தப்பட்ட ஓர் சேவையாகும்.

கொடுப்பனவுத் தொலைபேசி (Pay Phone) என்பதற்கு பின்வருமாறு விளக்கம் அளிக்கலாம்: உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொலைபேசி கொடுப்பனவு அட்டையின் உதவியுடன் தொடர்பு கொள்ளவல்ல ஓர் பொது கணணி மயப்படுத்தப்பட்ட தொலைபேசி. கொடுப்பனவுத் தொலைபேசி ஆகும் இத்தொலைபேசிக் கொடுப்பனவு அட்டையின் (Pay Phone Card) உதவியுடன் மேற்கொள்ளலாம். இவ் அட்டையை வீதி ஓரங்களில் அமைந்துள்ள தொலைபேசி நிலையங்களுக்கு அருகாமையில் உள்ள வியாபார நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம். இவை 100/, 300/, 500/- 800/- ஆகிய பெறுமானங்களில் கிடைக்கக் கூடியனவாக உள்ளன. இவ் அட்டையை தொலைபேசியில் உரிய இடத்தினுள் செலுத்தி இலக்கங்களை அழுத்தி தொடர்பை ஏற்படுத்தலாம்.

இவ் அட்டையில் காந்த இயல்புள்ள பட்டி ஒன்று காணப்படுகின்றது. அதில் இவ் அட்டையின் பெறுமதி சில அலகுகளாகக் குறிக்கப்பட்டுள்ளது. தொலைபேசி உபயோகிக்கும் போது அதற்கான கட்டணம் இவ் அட்டையில் உள்ள காந்தப்பட்டியில் உள்ள அலகு வரிசையில் சிறிய துளைகள் மூலம் அடையாளம் இடப்படுகின்றது. அதே நேரத்தில் அதற்கான சரியான கட்டணத்தை அத் தொலைபேசி கருவியின் திரையில் அவதானிக்கலாம்

தொலைபேசிக்கான கட்டணங்கள் தொடர்பு கொள்ளும் நேரத்துக்கும், தூரத்துக்கும் ஏற்ப வேறுபடுகின்றன ஒரு மாவட்டத்தினுள் தொடர்பு கொள்ள நிமிடத்துக்கு இரண்டு ரூபாவும் வெளிமாவட்டங்களுடன் தொடர்பு கொள்ள நிமிடத்துக்கு நான்கு ரூபாவும் அறவிடப்படுகின்றது. வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளும்போது, நாட்டுக்கு நாடு கட்டணங்களில் வேறுபாடு ஏற்படும்.

பிற்பகல் 6 மணிக்குப் பின், உள்நாட்டு அழைப்புகளுக்கும் பிற்பகல் 10 மணியின் பின் வெளிநாட்டு அழைப்புகளுக்கும் ஏனைய தொலைபேசிகளைப் போன்று சலுகை வழங்கப்பட்டுள்ளன

நாம் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போது அதற்கான கட்டணம் அட்டையின் பெறுமதிக்கும் அதிகமாகி நாம் அதனுள் இட்ட அட்டை நிராகரிக்கப்படும் போது அதற்குப் பதிலாக இன்னொரு அட்டையை செலுத்தி தொடர்பை மேற்கொள்ளலாம். ஒரு அட்டை முடிந்ததும் இன்னொரு அட்டையை செலுத்தும் வரையில் உள்ள இடைநேரத்தில் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்படாமல் இருக்கும் வாய்ப்பு தொழில் நுட்பத்தின் சிறப்பம்சமாகும். இவ்வாறான தொலைபேசி கருவிகள் பிரித்தானியாவில் தயாரிக்கப்பட்டவை ஆகும்.

இத் தொலைபேசிகள் யாவும் இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்புக்களுடன் தொடுக்கப்பட்டுள்ளன ரெலிகொம் நிறுவனத்தின் மூலமே இத் தொலைபேசிகள் வெளிநாட்டு, உள்நாட்டு தொலைபேசிகளுடன் இணைக்கப்படுகின்றன. கொடுப்பனவுத் தொலைபேசி எனப்படும் அட்டை தொலைபேசி

கள் சார்க் நாடுகளில் இலங்கையிலேயே முதன் முத லில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு தொலைபேசி யின் பெறுமதி ஏறக்குறைய 2½ லட்சம் ரூபாவாகக் கணிக்கப்படுகின்றது. இவற்றை இலங்கையில் முதன் முதலில் 03-01-1993 அன்று Lanka Pay Phone's நிறுவனம் அறிமுகப்படுத்தியது. அத்துடன் சிறீலங்கா ரெலிகொம் நிறுவனமும் இவற்றினை அறிமுகம் செய் துள்ளது. இவை சில பிரதான தபாற் கந்தோர்களில் மட்டுமே காணப்படுகின்றன.

ஏனைய வளர்முக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க் கும்போது Lanka Pay Phones நிறுவனம் எமது நாட்டின் தொலைபேசி வசதிகளை வளர்ச்சி அடைந்த நாட்டின் தொலைபேசி வசதிகளுடன் ஒப்பிடக்கூடிய அளவு நிலைக்கு உயர்த்தியுள்ளது.

இக் கொடுப்பனவு தொலைபேசி முறையினால் பின்வரும் நன்மைகள் கிடைக்கக் கூடியதாக உள்ளது.

★ இரவு பகல் தொலைபேசி சேவையைப் பெற் றுக் கொள்ள முடியும்.

★ சர்வதேச தொலைபேசி வசதியினை இலகு வாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

★ குறிப்பிட்ட பல இடங்களில் இத் தொலைபேசி வசதியை பெற்றுக் கொள்ளலாம்.

★ இதற்கு நாணயத்தை எடுத்துச் செல்ல வேண்டிய தில்லை. இதனால் பணத்தைப் பயன்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளும் இல்லை.

★ நெருக்கடியற்ற நேரங்களில் குறைந்த செலவில் இச் சேவையை பெற்று கொள்ளலாம்.

கொடுப்பனவு தொலைபேசி சேவையைவிட செலுலர் தொலைபேசி சேவையும் தற்போது இலங் கையில் நடைமுறையில் உள்ளது. இது ஓர் நடமாடும் தொலைபேசி சேவையாகும். விசேட வலைப்பின்னல் செய்முறைக்கு ஏற்ப கம்பித் தொடர்பு இன்றி வான் அலைகள் மூலம் செய்தி பரிமாற்றத்துக்கு உதவும் ஓர் தொலைபேசி முறை செலுலர் (Cellular) ஆகும்.

இலங்கையில் தற்போது பல நகரங்களுக்கு இடை யில் இச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதை இலங்கையில் முதன் முதல் செல்டல் லங்கா லிமிட். அறிமுகப்படுத்தியது. இப்போது இலங்கையில் பல தனியார் துறையினரால் இச் சேவை நிர்வகிக்கப்படு கின்றது. இதன் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டுத் தொடர் புகளை மேற்கொள்ளலாம்.

இது சாதாரண தொலைபேசியைவிட சில வழி களில் வேறுபட்டுள்ளது. அவையாவன:

★ சாதாரண தொலைபேசியை போன்று கேபிள் தொடர்பு இல்லாது வான் அலைகள் மூலம் தொடர்பு ஏற்படல்

★ எங்கும் எடுத்துச் செல்லக் கூடிய வசதி கொண் டது.

★ சாதாரண தொலைபேசியைவிட விரைவாக செய்தி தொடர்பை கொள்ள முடியும்

★ அழைப்பை பெறுவதற்கும், அழைப்பை ஏற்பதற் கும் கட்டணம் அறவிடப்படுகின்றது. ஆனால் சாதாரண தொலைபேசியில் அழைப்பை ஏற் படுத்தமட்டும் கட்டணம் அறவிடப்படும்.

★ அதிக பணச் செலவை ஏற்படுத்த வல்லது.

★ குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு இடையே மட்டும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள கூடியன.

கிரஹாம் பெல் என்பவரால் தொலைபேசி அறிமுகப் படுத்தப்பட்ட போதிலும் தொழில்நுட்ப மாற்றத்தில் ஏற்பட்ட விளைவுகள் அதனை நவீன விதமான வசதி களுடன் மாற்றி அமைத்து முழு உலகமும் சில நிமி டங்களில் தகவல்களைப் பெற்று வர்த்தக ரீதியான விடயங்களிலும், தனிப்பட்ட விடயங்களிலும், பொது விடயங்களிலும் பல்வேறு நன்மைகளை அடைய உத வுகின்றது. இவ்வாறான நவீன வசதி கொண்ட தொலைபேசிச் சேவைகள் இலங்கை மக்களுக்கும் கிடைக்கின்றது. மேலும் தொடரும் காலங்களில் இதன் பயன் மேலும் அபிவிருத்தி அடையும் என்பதில் ஐய மில்லை.

## உசாத்துணை நூல்கள்

1. Modern Business Administration - Robert Cappleby.

2. வர்த்தகமும் நிதியும் - தே. ஜெயராமன்.

3. மத்திய வங்கி அறிக்கை - 1992.

4. வீரகேசரி - 24-10-93; 7-6-92.

# நுகர்வோர் பாதுகாப்பும் இலங்கையில் அதன் நடைமுறைகள் பற்றிய தொகுப்புரீதியான கண்ணோட்டமும்

அ. அலஸ்ரீன்குமார்

ஆண்டு 13 B (94)

வர்த்தகப் பிரிவு

## 0.1 முகவுரை:-

விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம் போன்ற துறைகளுக்கு இணையாக இன்றைய காலகட்டத்தில் வர்த்தகம் என்னும் துறையும் அறிவியல்சார் துறையில் ஒன்றாக வளர்ச்சியடைந்து வருவது நாம் அறிந்த ஒன்றாகும். இந்த வகையில் எந்தவொரு நாடும் தனது வர்த்தக பொருளாதார நலன்களை கவனத்தில் எடுத்தே தனது அரசியல் நிலைப்பாட்டை தக்க வைத்துக் கொள்கின்றன. இலங்கையிலும் 1977 ஆம் ஆண்டு யூலை அளவில் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியானது தனது தேர்தல் விஞ்ஞாபத்துக்கேற்ப தாராளமாக்கப்பட்ட வர்த்தக சூழ்நிலையை [Liberalisation of Trade[] அமுல்படுத்தத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து தாராள இறக்குமதி, சுதந்திர வர்த்தக வலயம், ஏற்றுமதி ஊக்குவிப்புக்கள், வெளிநாட்டுத் தொடர்புகள், வெளிநாட்டு வங்கி முறைமை எனப் பல புதிய பிறநாடுகளுடனான தொடர்புகளை விஸ்தரித்தது.

இவ்வாறு அரசாங்கம் தனது பொருளாதார நடவடிக்கைகளை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் அதேவேளை நுகர்வோரைப் பாதுகாப்பதற்குத்

தேவையான மட்டத்தினை பேணுதல் என்ற இரட்டைக் குறிக்கோளை அடைவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்தவகையில் நுகர்வோர் பாதுகாப்பு என்பது, உற்பத்தியாளர் வியாபாரிகளுக்கு எதிராகவும் நுகர்வோனுக்கு சார்பாகவும் அரசின் நடவடிக்கைகளைக் குறிக்கும். அதாவது உச்சலாபம் நோக்கம் கொண்ட உற்பத்தியாளர், விற்பனையாளரிடமிருந்து நுகர்வோனை பாதுகாக்க அரசு எடுக்கும் சட்ட ரீதியான மற்றும் பொதுவான செயற்பாடுகள் நுகர்வோன் பாதுகாப்பு எனலாம்.

## 0.2 நுகர்வோன் பாதுகாப்பின் அவசியம்

உலக நாடுகள் பலவும் இன்று முதலாளித்துவத்தை நோக்கி வளர்ந்து வரும் இக்கால கட்டத்தில், நுகர்வோர் பாதுகாப்பு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகிறது. இந்நிலையில் இலங்கை போன்ற திறந்த பொருளாதாரக் கொள்கையுடைய நாடுகளுக்கு நுகர்வோன் பாதுகாப்பு எந்தளவு தூரம் அவசியமானது என்பதற்கு பின்வரும் நியாயங்களைக் கூறலாம்.

★ தாராள இறக்குமதிக் கொள்கை காரணமாக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள், சேவைகளின் விலை, தரம், பயன்பாடு என்பவற்றில் இருந்து நுகர்வோனைப் பாதுகாப்பது அவசியமாகின்றது மேலும் இங்கு நிறுவப்பட்டுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு நிலையங்களில் வெளிநாட்டவர் அதிகம் முதலீடு செய்து உற்பத்தி முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இங்கு உற்பத்தி செய்யும் பொருட்கள், சேவைகள் உள்நாட்டில் விற்பனை செய்யப்படுகிறது.

[கொக்கல முதலீடு ஊக்குவிப்பு வலயத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் 20% உள்நாட்டிலும் விற்பனை செய்யப்படுகின்றன.] அவற்றிலிருந்து நுகர்வோனை பாதுகாத்தல்.

★ இலங்கையில் உற்பத்தி முயற்சியை ஆரம்பிக்க தனியாருக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே அங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விலை, தரம் என்பனவற்றிலிருந்து நுகர்வோனை பாதுகாப்பது அவசியமாகிறது.

★ சட்டவிரோதமாக எடுத்துவரும் பொருட்களின் பாவனையிலிருந்து நுகர்வோன் உடல், உள ரீதியாகப் பாதிப்பு அடைவதனையும் தடுக்க வேண்டியுள்ளது.

★ அண்மைக் காலத்தில் உலக நாடுகளில் பரவிவரும் மக்கள் மயப்படுத்தல், தனியார் மயப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்தும் அவற்றின் பாதிப்பிலிருந்தும் நுகர்வோனைப் பாதுகாப்பது அரசின் கடமைகளில் ஒன்றாகும்.

## 0. 3 நுகர்வோனைப் பாதுகாக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள்:-

இது தொடர்பாக 3 நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

★ நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களை இயற்றுதல், நடைமுறைப்படுத்துதல்

★ நுகர்வோர் நலன் பேணும் அமைப்புக்களை நிறுவுதல்.

★ நுகர்வோர் பாதுகாப்புப் பற்றிய அறிவினையூட்டல்

## 3: 1 சட்டங்களை இயற்றி நுகர்வோனைப் பாதுகாத்தல்.

காலத்துக்கு காலம் நுகர்வோர் ஏமாற்றுப்படுவதை தடுக்க அரசு உள்நாட்டு வர்த்தக திணைக்களத்தினூடாக பல சட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்துகிறது.

## 3: 1: 1 நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் (Consumer' Protection Act)

1979ஆம் ஆண்டு எண் 01 கொண்ட இச்சட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அடங்குகின்றன

★ பொருட்களைப் பதுக்கி வைத்திருத்தல் அல்லது வைத்துக்கொண்டு விற்க மறுத்தல், குற்றம் எனக் கூறப்படுகிறது

★ குழந்தைகளுக்கான பால்மா வகைகளுக்கு விளம்பரம் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

★ பொருட்களை நிபந்தனை அடிப்படையில் விற்றல் அல்லது இன்னொரு பொருளுடன் வற்புறுத்தி விற்றல் தண்டனைக்கு உரியதாக கூறப்பட்டுள்ளது.

உ+ம்:- தனியார் சில்லறைக் கடைகளில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடான வேளையில் அதனுடன் சேர்த்து கைலண்ட் பால்மாவை கட்டாயமாக விற்றல்.

★ விற்கும் பொருளுக்கும் நுகர்வோன் கேட்கும் பட்சத்தில், பற்றுச்சீட்டு வழங்கப்படவேண்டும்.

★ பொருளின் விலை, தரம், பாவனைக்காலம் என்பவற்றில் மாற்றம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

★ நுகர்வோன் நலன் கருதி சில பொருட்களில் நுகர்வோன் பாதுகாப்பு வாசகங்கள் குறிப்பிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

உ+ம்:- சிகரட்டில் அரசாங்க எச்சரிக்கை: "புகைப் பிடித்தல் உடல் நலத்திற்கு கேடாகலாம்" என குறிப்பிடப்பட்டு இருத்தல்.

★ விற்பனைக்கு காட்சிக்கு வைக்கும் பொருளில் அல்லது பொதியில் விலை குறிப்பிடப்படல் வேண்டும்.

★ விற்பனைக்குத் தயாராக உள்ள பொருட்களின் விலை விபரங்களை குறித்து விலைப்பட்டியல் காட்சிக்கு வைக்கப்படல் வேண்டும்.

உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் குறிப்பிட்ட தர நிர்ணயங்களை பேணும் நோக்குடன் சுருளிகளின் துணைப்பாகங்களை தயாரிப்பாளர்களும், அதனை வர்த்தகம் செய்பவர்களும் இலங்கைக் கட்டளைப் பணியகத்தில் விபரக் குறிப்புக்களை பின்பற்றுமாறு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 6 (1) இன் கீழ் பணிப்புரைகள் விடப்பட்டுள்ளன. மேலும் இறக்குமதி செய்யப்பட்ட 12 விடயங்கள் கட்டாய இறக்குமதி பரிசோதனைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட உற்பத்திகளின் உள்நாட்டுப் பதிலீடுகள் இலங்கைக் கட்டளைப் பணியகத்தின் பவிரக் குறிப்புக்களை பின்பற்றப்பட வேண்டும் எனவும் கேட்கப்படுகிறது.

உ+ம்:- தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், செயற்கைப் பழச்சாறு, உடன் பழச்சாறு, திரட்டிய பழச்சாறு, பிழியப்பட்ட பாணியும் பழச்சாறும், கட்டிப்பால், மின்குமிழ், காங்கிகள் சொருகிகள், இணைப்புப் பொருத்திகள், விடுகளுக்கான மின் ஆளிகள் என்பனவாகும்.

### 3. 1: 2 விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் (Price Control Act)

இச் சட்டத்தின் கீழ் நுகர்வோன் நலன்பேணும் நோக்கில் சில பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் உட்பட 60 இறக்குமதியாளரால் இறக்குமதி செய்யப்பட்ட 1500 மருந்தாக்கல் உற்பத்திகளுக்கு விலைக்கட்டுப்பாடுகள் காணப்பட்டுள்ளது. 1992 ஆம் ஆண்டு 10ஆம் மாதம் முதலாந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் பாண், கோதுமை மா என்பவற்றின் மீதான விலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

### 3: 1: 3 நிறுவை, முகத்தலளவை கட்டளைச் சட்டம் (Weight & Measures Act)

நுகர்வோர் நலன் பேணக்கூடிய வகையில் நாட்டின் நிறுவைகள் அளவைகளில் ஒழுங்கைப் பேணுதல், மெற்றிக் முறை அறிமுகப்படுத்தல் என்பன இச்சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

### 3: 1: 4 தரக் கட்டுப்பாட்டுச் சட்டம் (Quality Control Act)

1964ஆம் ஆண்டின் 38ஆம் இலக்கச் சட்டப்படி இலங்கையில் பொருட்களின் தரம் பேணப்படுகிறது. இதனை இலங்கை கட்டளைகள் பணியகம் (Bureau of Ceylon Standards) நடைமுறைப்படுத்துகின்றது.

### 3: 2 ★ அமைப்புக்களூடாக நுகர்வோரை பாதுகாத்தல்

இதன்கீழ் பல்வேறு அமைப்புக்கள் நிறுவப்பட்டு நுகர்வோர் பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### 3: 2: 1 நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம்

உள்நாட்டு வியாபார ஆணையாளரின் அனுமதியுடன் கிராமிய மட்டத்தில் நுகர்வோர் சங்கத்தின் உருவாக்கம் ஊக்குவிக்கப்பட்டன. 1992இன் இறுதியில் அத்தகைய 2565 சங்கங்கள் 539 பள்ளிக்கூட சங்கத்துடன் சேர்ந்து தொழிற்பட்டன. கிராம சேவகர் மட்டத்திலுள்ள குறைந்தது 15 அங்கத்தவர் சேர்ந்து தமக்கிடையே அலுவலகரைத் தெரிவு செய்து இதனை உருவாக்கலாம். இதன் ஆயுட்காலம் ஒரு வருடம் ஆகும். தனியார் கடைகள் கூட்டுறவுக் கடைகள் என்பவற்றின் குறைபாடுகள்பற்றி உரிய அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறல், நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாக ஆலோசனை வழங்கல். நுகர்வோரின் முறைப்பாடுகளை உரிய அதிகாரிக்கு எடுத்துக்கூறல். சுகாதாரக் கேடான அல்லது தீங்கான பொருட்களின் பாவனையில் இருந்தும் நுகர்வோனைப் பாதுகாத்தல். தரமான பொருள், நியாயமான விலையில் கிடைக்கச் செய்தல் மகாபொல வர்த்தக சந்தைகள் (Mahapola Trade Fair) என்பவற்றின் மூலம் நுகர்வோனுக்கு ஆலோசனை வழங்கல் போன்ற தொழிற்பாட்டை ஆற்றுகிறது.

### 3: 2: 2 நுகர்வோர் பாதுகாப்பு நிதியம்

நுகர்வோனுக்கு வேண்டிய தகவல்கள், ஆலோசனைகள் வழங்கும் பொருட்டும் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புக்களை நிர்ணயிக்கும் நோக்குடனும் இது செயற்பட்டு வருகின்றது இதற்கு வேண்டிய நிதியினை பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட நிதிமூலமும், மற்றும் நன்கொடைகள், நீதிமன்றத்தால் அறவிடப்படும் தண்டப்பணம், சட்ட விரோதமாக எடுத்து வரப்பட்டு பறிமுதல் செய்யப்படும் பொருட்களின் 50% பெறுமதி என்பவற்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

### 3: 2: 3 நியாய வியாபார ஆணைக்குழு

தேசிய விலை ஆணைக்குழுவின் குறைபாடுகளை நீக்கும் பொருட்டு 1987 ஒகஸ்ட் 1இல் இது நிறுவப்பட்டது. கைத்தொழில், சட்டம், வர்த்தகம், நிர்வாகம் என்பவற்றில் நிபுணத்துவம் வாய்ந்த 7 பேர் இதில் அங்கம் வகிப்பர். இவர்கள் வர்த்தகக் கப்பல் துறை அமைச்சினால் நியமிக்கப்படுவர். இதன் நடவடிக்கைகளாக போட்டியற்ற நடைமுறைகளைப் புலனாய்வு செய்தல், வியாபார ஒன்றுபடு நிலை (Merger); மற்றும் தனியுரிமைகள் என்பவற்றை கட்டுப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளுக்கே மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இக்குழுவானது தேயிலை விலைகளைப் பாதகமான முறையில் பாதித்த கொழும்பு தேயிலை ஏலங்களில் இடம்பெற்ற மோசடி விலை கோரல் பற்றியும், தேயிலைக் கலப்புப்பத்திரம் தொடர்பாக தனியார் தேயிலைத் தொழிற்சாலை உடைமையாளர்கள் செய்த முறையீடுகள் பற்றியும் புலனாய்வு செய்தது. இதன் விளைவாகத் தேயிலை ஏற்றுமதி நடைமுறைகளை இலகுபடுத்தியமை; தேயிலைப் பைகளின் ஏற்றுமதிக்கான தேவைப்பாடுகளை மட்டுப்படுத்தியமை என்பவை மூலம் தேயிலைச் சபை (Sri Lanka Tea Board) நிவாரண வழிமுறைகளை மேற்கொண்டது.

### 3: 3 ★ நுகர்வோர் பாதுகாப்புப் பற்றிய அறிவினையூட்டல்

நுகர்வோர் நலன் தொடர்பாக நுகர்வோனுக்கு பூரண விளக்கம், தெளிவு இருக்க வேண்டும். இதனை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஒன்றே, நுகர்வோர் கல்வியினூடாக தீவு முழுவதற்குமான நுகர்வோர் அமைப்புக்களை உருவாக்குவதற்கும், மற்றும் கிராமிய மட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பின் அவசியம் பற்றி பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இலங்கைக் கட்டளைகள் பணியகத்தினால் வெளியிடப்படும் ''நுகர்வோன் செய்தி'' என்னும் மும்மாத இதழும் இந்நோக்கத்தை நிறைவு செய்யும் எனலாம்.

### 0. 4 முடிவுரை

உள்நாட்டு வியாபாரத்திலும் சரி, பிறநாட்டு வியாபாரத்திலும் சரி, நுகர்வோன் உளரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சுரண்டப்படுவதில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டியது. மனிதாபிமான ரீதியில் அவசியமாகின்றது. இலங்கையில் அண்மைக் காலங்களில்

நடைபெற்றுவரும் மக்கள் மயப்படுத்தல், தனியார் மயப்படுத்தல் நடவடிக்கைகளாலும் தனியார் துறையினருக்கு அரசு போதிய சலுகைகளை வழங்குவதாலும் ஏனைய துறைகளைவிட தனியார் துறையின் பங்களிப்பு கூடுதலாகவேயுள்ளது. எனவே உச்சலாப நோக்கம் கொண்ட தனியார் மற்றும் அரச கூட்டுறவுத்துறைகளின் வர்த்தக செயற்பாடுகளிலிருந்து நுகர்வோனைப் பாதுகாக்க வேண்டியது இன்றியமையாததாக காணப்படுகின்றது.

உசாத்துணை:-

★ மத்திய வங்கி ஆண்டறிக்கை 1992

★ வர்த்தகமும், நிதியும் - நடைமுறைவிடயம்
தே. ஜெயராமன்

வணிகக் கலையின் வளர்மிகு
''ஜோதியே'' வருக, வருக.

தரமான உணவுவகைப் பொருட்
களை நியாய விலையில்
பெற ஆவலா?!
இன்றே நாடுங்கள்

குகன் களஞ்சியம்

திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

☆ இலங்கையில் முதன் முதல் 1986ஆம் ஆண்டு ஷொங் கொங் அன்ட் ஷாங்காய் வங்கி தன்னியக்க பொறியை அறிமுகம் செய்தது.

''வணிகஜோதி''யே வருக, வாழ்க.

நங்கையர் விரும்பும் நவநாகரிகமான

- புடவைத் தினிசுகள்
- கூறைச் சேலை வகைகள்
- றெடிமேட் ஆடைகள்

போன்றவற்றிற்கு புகழ் பெற்ற
ஸ்தாபனம்

நியூ
சண்முகானந்தா
புடவையகம்

23 (58), பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

"வணிகஜோதி"யே வருக, வாழ்க.

# கீதா ஜுவல் ஹவுஸ்

ஆடர் நகைகள் 22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்.

12, நவீன சந்தை, ★ சாவகச்சேரி.


☆ இலங்கையில் தொலைபேசி விபரக்கொத்து GTE லங்கா விபரக்கொத்து (தனி) கம்பனியால் வெளியிடப்படுகிறது.


"வணிகஜோதி"க்கு
எமது நல்லாசிகள்

மங்கள வைபவங்களுக்கேற்ற கூறைச் சேலைகள், காஞ்சிபுரம், பட்டுவேட்டி, கோவில் பட்டுக்குடைகள், மற்றும் பல பிடவைத்தினுசுகளையும் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய ஏற்றதோர்
★ எழில் கூடம். ★

# ★ அஜந்தாஸ் ★

## பிடவை மாளிகை

54, பெரியகடை, யாழ்ப்பாணம்.



'வணிகஜோதி'' யே
மேன்மேலும் ஜொலிக்க
வாழ்த்துக்கள்.

மோட்டார் சைக்கிள்
உதிரிப்பாக விற்பனையாளர்

***Honda, Yamaha, Suzuki***

# நியூ பாலகிருஷ்ணாஸ்

374/A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்


☆ 1992ல் இலங்கையின் தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி நடைமுறை விலையில் 21641 ரூபா.


''வணிகஜோதி'' வளம் பெற
எமது நல்வாழ்த்துக்கள்.

WESCO

# "வெஸ்கோ"

## மருந்தகம் + அழககம்

470 (250), ஆஸ்பத்திரி வீதி,
(O. P. D. முன்பாக),
யாழ்ப்பாணம்.


☆ 1993ஆம் ஆண்டில் ஆடை உற்பத்தித்துறை சுமார் 10% வளர்ச்சியடைந்துள்ளது.

# இலங்கையின் பாதுகாப்புச் செலவினமும் பொருளாதாரத் தாக்கமும்

## Sri Lanka's Defense Expenditure and Economic Impact


திரு. இ. நந்தகுமாரன்
B. A. (Hons), M. A., M. Sc (SurreyU. K.),
சிரேஸ்ட விரிவுரையாளர்
பொருளியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்.


## அறிமுகம்

ஒரு நாடு தனது அரசியல் சுதந்திரத்தைப் பாது காத்து இறைமையுடைய நாடாக விளங்கவும் நாட்டு மக்களிடையே சட்டம் ஒழுங்கு என்பவற்றைப் பேண வும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும். பாதுகாப்புச் சேவையானது தூய பொதுப் பொருளாக (Pure Public Good) காணப்படுகிறது. இச்சேவையை வழங்கினால் சேவை வழங்கப்படும் இடத்தில் வசிக்கும் அனைவருக்கும் கிடைக்கும் எந்தவொரு நுகர்வோரையும் சேவையை நுகர்வதிலிருந்து விலக்க முடியாது. அதேபோல் நுகர்வோரும் விருப்பமில்லாவிட்டாலும் நுகர்வைத் தவிர்த்துக்கொள்ளவும் முடியாது. இப்பண்பு விலக்க முடியாததும் (Non excludability) தவிர்க்கமுடியாததும் (Non rejectable) எனப்படும். இதேபோன்று பொதுப் பொருட்களை ஒருவர் நுகர்வதுமூலம் மற்றவரது நுகர்விற்குக் கிடைக்கக்கூடிய அளவினைக் குறைத்து விட முடியாது. அதாவது பொதுப் பொருட்கள் நுகர் வில் போட்டியற்றவையாகும் (Non rivalness) பாது காப்புச் சேவையைப் பொறுத்தும் நுகர்வில் போட்டி யின்மையும், விலக்குதல், தவிர்த்துக்கொள்ளுதல் சாத் தியமின்மையாலும் தூய பொதுப் பொருளாகக் கருதப் படுகிறது. இத்தகைய பொருட்கள் சேவைகளைத் தனி யார் பொருட்கள் சேவைகள்போன்று சந்தையினூடாக ஒதுக்கீடு செய்யமுடியாது என்பதனால் அரசாங்கமே

வழங்க வேண்டியுள்ளது. நாம் இங்கு குறிப்பிடுவது தேசிய பாதுகாப்பு என்பதை மனதில் கொள்ளல் வேண்டும். தனியார் வழங்கும் பாதுகாப்புச் சேவையுடன் ஒப்பிட்டு நோக்கக்கூடாது. தனியார் பாதுகாப்புச் சேவை ஒரு சிறிய எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள உடமைகள் சொத்துக்களை பாதுகாக்கும் நோக்குடன் வழங்கப்படுவதாகும். இது தனியார் பொருட்கள் சேவையை ஒத்தது. தேசிய பாதுகாப்புக்கு அரசாங்கங்கள் பாதீட்டின் மூலம் வளங்களை ஒதுக்கீடு செய்கின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில், இது பெருமளவு வளங்களை நுகருகின்ற துறையாக வளர்ந்து வருகின்றது. 1988ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பாதுகாப்புச் செலவினங்கள் 170 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அல்லது இந்நாடுகளின் மொத்தத் தேசிய வருமானத்தில் 4.3 சதவீதமாகக் காணப்பட்டது. 1960இற்கும் 1988இற்குமிடையிலான மூன்று தசாப்தங்களில் நிலையான அமெரிக்க டொலரில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பாதுகாப்புச் செலவினங்கள் ஐந்து மடங்காகவும், இந்நாடுகளின் தலாவருமான அதிகரிப்பைவிட இரண்டு மடங்காகவும் அதிகரித்துள்ளது (Mcnamara 1991).

இந்தக் கட்டுரையானது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பாதுகாப்புச் செலவினங்களைத் தீர்மானிக்கின்ற காரணிகள் எவை என்பதையும், அபிவிருத்தியடைந்துவரும் சிறிய நாடான இலங்கையில் பாதுகாப்புச் செலவினங்கள் கடந்த இரண்டு தசாப்தங்களாக எத்தகைய போக்கினைக் கொண்டிருந்தன, இதற்கான காரணங்கள் என்ன என்பதையும், பாதுகாப்புச் செலவீனத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்குமிடையிலான தொடர்பு என்ன என்பதையும் ஆராய முற்படுகிறது.

## பாதுகாப்புச் செலவினத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

அதாவது பாதுகாப்புச் செலவினத்தை மொத்த தேசிய வருமானத்தினது அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக எடுத்துக் கூறப்படும். பாதுகாப்புச் சுமையானது நாட்டுக்கு நாடு வறுபட்டதாக இருப்பது பல்வேறு ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாகப் பாதுகாப்புச் செலவினமானது அரசியல் அல்லது தந்திரோபாய நடவடிக்கைகளின் தொழிற்பாடாக இருப்பதாகவும் பொருளாதார மாறிகளும் குறிப்பிடத்தக்க பங்கு வகிப்பதாகவும் கருதப்படுகின்றது. உள்நாட்டு ரீதியான, பிராந்திய ரீதியான, சர்வதேசரீதியான ஒன்றில் இருந்துமற்றதைப் பிரிக்கமுடியாத சிக்கலான காரணிகள் இராணுவச் செலவினத்தின் போக்கினைத் தீர்மானிப்பதாகவும் இவற்றின் முக்கியத்துவம் நாட்டுக்கு நாடு வேறுபடுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர் (Maizel and Nissanke 1986). அயல் நாடுகளுடனான போர் அல்லது முறுகல்நிலை பாதுகாப்புச் செலவின் மட்டத்தினை விளக்கும் முழுமையான காரணியல்ல எனவும் உள்நாட்டு அரசியல் சமூகப் பொருளாதார காரணிகளும், சர்வதேச அரசியல் பொருளாதார காரணிகளும் குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பாதுகாப்புச் செலவின மட்டத்தினை தீர்மானிக்கின்றன.

மெய்சல், நிசங்கே என்பவர்களது பகுப்பாய்விற்கமைய அரசியல் காரணிகளை அரசின்தன்மை, பிராந்திய ரீதியான கூட்டுகள், சர்வதேச உறவுகள் (அதிகார பிரிவுகளுடன்) எனவும் இராணுவ செயல்பாடாக உள்நாட்டு யுத்தம், கலகம், இராணுவத்தினரது விரிவாக்க வேட்கை என்பனவும் பிராந்திய யுத்தம், நாடுகளுக்கிடையிலான கெடுபிடிகள் என்பவற்றையும் வெளிநாட்டு இராணுவ உதவிகளையும் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் பொருளாதார ரீதியான காரணிகளாக அபிவிருத்தி மட்டம், மெய்வருமான வளர்ச்சி, பாதீட்டின் அளவு இராணுவ உற்பத்திகளின் அளவு, பிராந்திய பொருளாதார கூட்டுக்கள், அந்நியச் செலாவணிக்கிடைப்பனவு, வெளிநாட்டு மூலதனம், கடன் வழங்குபவர்கள் செல்வாக்குப் போன்ற காரணிகளைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இராணுவச் செலவினங்கள் கண்ணுக்குப் புலப்படாத சிக்கலான அரசியல் காரணிகளில் தங்கியுள்ளது என்று பொதுவாகப் பலரும் நம்புவதுபோல் அல்லாமல், புலப்படக் கூடிய பொருளாதார காரணிகளினாலேயே தீர்மானிக்கப்படுகிறது (Hewitt 1991). இவர் 125 நாடுகளின் 17 வருட புள்ளி விபரங்களை ஆதாரமாகக்கொண்டு ஆராய்ந்ததில் குறைந்த, இடைத்தர வருமான நாடுகளில் மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரிப்புடன் இராணுவச் செலவினம் அதிகரிப்பதையும், உயர் வருமான நாடுகளில் மாறாது இருப்பதையும் அவதானித்துள்ளார். கடன் சுமையினால் கஷ்டப்படும் நாடுகளும் சிறிய பொருளாதாரங்களும் ஏனைய நாடுகளைவிட குறைவாகவே செலவிடுவதாகவும் அரசாங்கத்திற்கு கிடைக்கும் அல்லது அரசினால் உறுதியளிக்கப்பட்ட அந்நியச் செலாவணி உயர்வாக

உள்ள நாடுகளில் இராணுவச் செலவினம் உயர்வாக இருப்பதாகவும் கண்டறிந்தார். மேலும் எதிர்பார்ப்பது போல சர்வதேச அல்லது உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளில் ஏனைய நாடுகளைவிட, இராணுவச் செலவினம் கூடுதலாக இருப்பதும் பலகட்சி ஆட்சி இடம்பெறும் ஜனநாயக நாடுகளில் ஏனைய வகையான ஆட்சி இடம்பெறும் நாடுகளைவிட குறைந்த இராணுவச் செலவினம் இடம் பெறுவதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பரந்த நிலப்பரப்பு, நீண்ட எல்லைகள்; அதுவும் நிலத்தால் சூழ எல்லைகள் கொண்ட நாடுகளில், ஏனைய நாடுகளைவிட இராணுவச் செலவினங்கள் உயர்வாகக் காணப்படுவதும் உய்த்தறியப்பட்டது. இவரது புள்ளிவிபர ரீதியான ஆய்வில் இக்காரணிகள் செலவின அதிகரிப்பில் 55 சத வீதத்தினைமட்டுமே விளக்கக் கூடியதாக இருந்தது. இதனால் ஒவ்வொரு நாடு குறித்தும் தனிப்பட்ட ஆய்வு மேற்கொள்வதன் மூலமே திட்டவட்டமான முடிவினைப் பெறலாம் என்று கூறியுள்ளார்.

1965 - 1986 வரையிலான தரவுகளை உள்ளடக்கி இலங்கையின் இராணுவச் செலவினத்தினை தீர்மானிக்கும் காரணிகளை ஆய்வு செய்தபோது (Piyadasa 1987) பொருளாதார வளர்சியோடு அரசாங்க நுகர்வுச் செலவு அதிகரிப்பதும் இது இராணுவ செலவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டது. அத்துடன் இலங்கையின் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்ட காலப்பகுதிகளில் இராணுவச் செலவின் வளர்ச்சியும் உயர்வாகக் காணப்பட்டது குறிப்பாக 1971 ஆம் ஆண்டு ஏற்பட்ட கிளர்ச்சியின்போதும் 1983 களின் பின்னர் ஏற்பட்ட இனக்கலவரங்களைத் தொடர்ந்தும் இராணுவச் செலவுகள் அதிகரித்து வந்துள்ளது. அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற வெளிநாட்டு உதவிகள், இராணுவச் செலவின அதிகரிப்பிற்கு வழிகோலுகின்றதா? ஏற்றுமதி வருமான அதிகரிப்புத் தாக்கத்தினைக் கொண்டுள்ளதா? உள்நாட்டு சேமிப்பு அதிகரிப்பு அல்லது கடன் பெறும் வாய்ப்பு உயர்வு எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்பது ஆராயப்படல் வேண்டும். ஏனெனில் இலங்கையில் இராணுவ தளபாட உற்பத்தி இல்லாத காரணத்தினால் தளபாட கொள்வனவிற்கு வெளிநாட்டுச் செலாவணியும் ஆட்பலத்தினை அதிகரிக்கின்றபோது அவர்களுக்குச் சம்பளம் வழங்க உள்ளாட்டு நிதி வளமும் அவசியமாகும். அத்துடன் அளவிட முடியாததும் அவதானிக்க இயலாததுமான அரசியல், இராணுவ காரணங்களும் ஆராயப்படல் வேண்டும். இலங்கையில் 1983 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட உள்நாட்டு சூழ்நிலைகளை சமாளிக்க இராணுவத்தின் உதவி அரசுக்கு தேவைப்பட்டது. இதனைக் காரணமாகக் கொண்டு இராணுவ உயர்பீடம் தமது விரிவாக்கத்தினை வேகமாக மேற்கொண்டிருப்பது உணரப்படுகின்றது. உள்நாட்டு நிலைமைக்கு உகந்ததல்லாத ஆயுத தளபாடக் கொள்வனவுகளும்; இக்கொள்வனவுகளில் உயர் பதவிகளில் இருக்கின்றவர்கள் பெற்றுக் கொள்கின்ற பொருளாதார நலன்களும்கூட மேலும் மேலும் இராணுவச் செலவுகளை அதிகரிக்கத் தூண்டுதலாக அமையலாம். இலங்கையின் இராணுவச் செலவுகளைத் தீர்மானிக்கின்ற காரணிகள்பற்றிய ஆழமான ஆய்வு அவசியமாகும். அடுத்து இலங்கையின் இராணுவச் செலவுப் போக்கினை ஆராய்வோம்.

## இராணுவச் செலவினப் போக்கு

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னரும் காலணித்துவ ஆட்சியின் சில எச்சசொச்சங்கள் தொடர்ந்தும் இருந்துவந்தன அவ்வாறான ஒரு மீதியாக பிரிட்டிஷ் படைத்தளங்கள் 1948 இன் பின்னரும் இலங்கையில் இருந்துள்ளது. 1949 இல் இலங்கை இராணுவத்தினைத் தோற்றுவித்தும் 1960 இல் கட்டுநாயக்க, திருக்கோணமலை படைத்தளங்களை விட்டுப் பிரித்தானியர்கள் வெளியேறிய பின்னரே இலங்கைக்கு சுதந்திரமான பாதுகாப்பு அமைப்பு உருவாகியது. 1970 கள் வரை இலங்கையின் பாதுகாப்பு அமைப்பு அமைதிக்கால படையாகவும், தேசிய ரீதியிலான அணிவகுப்புக்கான படையாகவும் மட்டுமே விளங்கியது. குறைந்த எண்ணிக்கையான ஆளணியையும், ஆயுதத் தளபாடங்களையும்கொண்டு விளங்கியது. 1971 ஆம் ஆண்டு சேகுவேரா கிளர்ச்சி இலங்கை இராணுவத்தின் பலவீனத்தை உணர்த்தியது. இக்காலம் முதல் இராணுவம் தன்னைக் கட்டிஎழுப்பத் தொடங்கியது. சேகுவேரா கிளர்ச்சியை குறுகிய காலத்தில் முடிவிற்குக் கொண்டு வந்ததினாலும் அரசாங்கம் பொருளாதார ரீதியாக வளர்வதற்குப் பெரியதொரு அடியெடுத்து வைக்க வேண்டியிருந்ததாலும் இராணுவத்திற்கு அதிகளவு ஒதுக்கீடுகளைச் செய்ய முடியாதிருந்தது. இதனால் வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. ஆனால் எண்பதுகளில் வடக்குக் கிழக்கு நெருக்கடி ஏற்பட்டதும் இருவேறுபட்ட இனங்களுக்கான யுத்தமாகவும் இறைமையைப் பாதுகாக்கின்ற யுத்தமாகவும் கருதி இராணுவ செலவினங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து இராணுவச் செலவினங்கள் அதிவேகமாக வளரலாயிற்று. இராணுவச் செலவினங்

கள் பற்றிய தகவல்கள் வெளிப்படையாகப் பெற்றுக் கொள்வதில் பல சிரமங்கள் காணப்படுகின்றன. எனவே வெளியிடப்பட்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டே ஆய்வு செய்ய முடியும்.

இராணுவச் செலவினம் என்பது காலாள்படை, கடற்படை, விமானப்படை என்பவற்றிற்கான செலவினங்களையே குறிக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்காக துணைப்படைகளையும் பயன்படுத்துவதுண்டு. உதாரணமாக ஊர்காவற்படை, பொலிஸ் அதிரடிப் படை என்பவற்றை குறிப்பிடலாம். இவற்றிற்கான நேரடியான செலவினங்களை இராணுவச் செலவினங்களாகக் காட்டுவதில்லை. பொலிஸ் படைக்கான செலவு பொதுவாக சட்டம், ஒழுங்கு பொதுமக்கள் பாதுகாப்புக் கருதி செய்யப்படுகின்ற செலவாக எடுத்துக்காட்டுவதே வழக்கமாகும். எனவே சிவிலியன்கள் செலவில் ஒரு பகுதி இராணுவ நடவடிக்கைகளுக்காக மறைமுகமாக செலவு செய்யப்படலாம். அதேபோன்று இராணுவச் செலவினங்களது ஒரு பகுதி சிவிலியன்களுக்கும் உதவலாம். எனவே இராணுவச் செலவுகள் பற்றிய ஆய்வில் முழுமையான இராணுவ நடவடிக்கைகளுக்கான செலவுகளை உய்த்தறிவது கடினமாகும் இராணுவச் செலவினமும் ஏனைய செலவுகளைப் போல் மீண்டெழும் செலவுகள், மூலதனச் செலவுகள் இரண்டையும் உள்ளடக்கியுள்ளது. மத்திய வங்கி அறிக்கையில் அரசாங்க செலவினம்பற்றிய தொழிற்பாட்டு ரீதியான வகைப்படுத்தலில் மீண்டு வரும் செலவினங்களை பாதுகாப்பு (Defense), பொது ஒழுங்குப் பாதுகாப்பு (Public order and safety) என்னும் இரு பிரிவாக எடுத்துக் காட்டியுள்ளனர். ஆனால் மூலதனச் செலவினங்களின் கீழ் 1967/68 வரை மட்டுமே பாதுகாப்பு என்ற பிரிவு தனித்துக் காட்டப்பட்டுள்ளது. இதன் பின்னர் சிவில் நிர்வாகம் என்று ஒரு தலைப்பின் கீழும் 1970களின் பிற்பகுதியில் இருந்து சிவில் நிர்வாகம், பொது ஒழுங்குப் பாதுகாப்பு எனவும் பகுக்கப்பட்டிருக்கின்றது. இதனால் மூலதனச் செலவுபற்றி ஆராய்வது சிக்கலாகக் காணப்படுகின்றது. திறைசேரி வரவு செலவு மதிப்பீட்டினை எடுத்துக் கொண்டால் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பொலிஸ், காலாள் படை, கடற்படை, விமானப் படைகள் தவிர்ந்த வேறு சில திணைக்களங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நடைமுறைச் செலவினங்களுக்கு மத்திய வங்கி அறிக்கையில் தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்களை, ஆதாரமாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. மூலதனச் செலவினமான ஆயுதத் தளபாடக் கொள்வனவு, கட்டடங்கள், வாகனங்கள் போன்றவற்றிற்கான செலவுகளை சரியாகப் பெற முடியாமல் இருப்பதால் அது பற்றி ஆராயாமல் விடுவதே உசிதமாகும்.

தெற்காசிய நாடுகளில் இலங்கையின் இராணுவச் செலவினம் மொத்தரீதியாக 1988ஆம் ஆண்டு அமெரிக்க டொலரில் நோக்கும்போது 321 மில்லியன் டொலராக மூன்று பெரிய நாடுகளுக்கு அடுத்தபடியாக நாலாவது இடத்தில் காணப்படுகிறது. ஆனால் மொத்த தேசிய செலவினத்தின் வீதமாகப் பார்க்கும்போது பாகிஸ்தானுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தினை வகிக்கின்றது. மொத்த தேசிய வருமானத்தில் கல்வி சுகாதார செலவினங்களுக்குச் செலவிடும் வீதத்தினை விட சற்றுக் குறைவாகவே இராணுவச் செலவினம் காணப்படுகிறது.

அட்டவணை - 1

**தெற்காசிய நாடுகளில் இராணுவ, சுகாதார, கல்விச் செலவினங்கள் ஒப்பீடு**

| நாடுகள் | 1988 ஆண்டு இராணுவச் செலவினம் 1988டொலரில் (மில்.) | 1988 இராணுவச் செலவினம் மொ. தே. உற்பத்தியின் வீதமாக | சுகாதார செலவினம் மொ தே. உ. வீதமாக 1986 | கல்விக்கான செலவினம் மொ. தே. உ. வீதமாக 1986 |
|---|---|---|---|---|
| 1. பங்களாதேசம் | 342 | 1.8 | 0 6 | 2.2 |
| 2. இந்தியா | 9458 | 3 5 | 0.9 | 3.4 |
| 3 நேபாளம் | 35 | 1.1 | 0.9 | 2.8 |
| 4. பாகிஸ்தான் | 2516 | 6.9 | 0.2 | 2.2 |
| 5. இலங்கை | 321 | 4.6 | 1.3 | 3.6 |

Source - The Post - Cold war World: Implications for Mlitary Expenditure in the Developing Countries. Robert S. Mcnamara in Proceeding of the World Bank. Annual conference on Development Economics, *1991*.

இவ்வாறு ஒப்பிடும்போது நாடுகளின் அளவுகள், சனத்தொகை, எண்ணிக்கை என்பவற்றில் உள்ள வேறுபாடும் நாடுகளுக்கிடையே இராணுவச்செலவினம் என்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணம் தேசியவருமானக் கணிப்பீட்டில் உள்ள வேறுபாடுகளும் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். மிகக்கூடிய சனத்தொகையையும் நீண்ட நில எல்லைகளையும் அனைத்து எல்லைகளிலும் எல்லைத் தகராறும் கொண்ட இந்தியா முதன்மையிடத்தை வகிப்பது ஆச்சரியமில்லை. சனத்தொகையால் இச்செலவினத்தை வகுத்தால் தலா நபருக்கான இராணுவச் செலவினம் பெறப்படும். மேற்குறிப்பிட்ட ஆசிய நாடுகளின் 1988ஆம் ஆண்டிற்குரிய சனத்தொகை, அடிப்படையில் தலா நபருக்கான செலவுகள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. தலா நபருக்கான பாதுகாப்புச்செலவினத்திலும் இலங்கை தென்ஆசியா நாடுகளில் இரண்டாம் இடத்திலேயே காணப்படுகிறது.

அட்டவணை - 2

## தென்னாசிய நாடுகளில் தலா நபருக்கான இராணுவச் செலவு

| | 1988இல் மதிப்பிடப்பட்ட சனத்தொகை (மில்) | இராணுவச் செலவினம் 1988 மில். (டொலர்) | தலா நபருக்கான இராணுவச் செலவினம் (டொலர்) |
|---|---|---|---|
| பங்களாதேசம் | 104 5 | 342 | 3.2 |
| இந்தியா | 796.6 | 9458 | 11.8 |
| நேபாளம் | 17 9 | 35 | 1 9 |
| பாகிஸ்தான் | 105.4 | 2516 | 23 8 |
| இலங்கை | 16.6 | 321 | 19.3 |

❋ சனத்தொகைபற்றிய விபரம் 1990ஆம் ஆண்டு UNESCO Statistical year book இல் இருந்து பெறப்பட்டது.

இலங்கையின் பாதுகாப்புச் செலவினத்தில் மீண்டுவரும் செலவினங்கள் என்பது ஆளணியினருக்கான சம்பளங்கள், மேலதிகப்படிகள், போக்குவரத்துப் படிகள், போக்குவரத்துச் சேவைக்கான செலவினங்கள் என்பவற்றை உள்ளடக்கும். மீண்டுவரும் செலவானது 1970 களில் மொத்தச் செலவினத்தில் 95 சதவீதமாக இருந்தது. இக்காலப்பகுதியில் ஆயுதத் தளபாடக் கொள்வனவுகள் இல்லாத காரணத்தினால் மூலதனச் செலவு குறைவாகவே காணப்பட்டது. ஆனால் உள்நாட்டில் யுத்தம் ஒன்றினைச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதும் நவீன ஆயுதத் தளபாட கொள்வனவிற்கு செலவு செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் மொத்த இராணுவச் செலவு அதிகரித்தபோதும் நடைமுறைச் செலவினங்களின் பங்கு வீழ்ச்சியடைந்தது

கீழேயுள்ள அட்டவணை கடந்த இரண்டு தசாப்தங்களாக மீண்டுவரும் இராணுவச் செலவினத்தின் போக்கினை எடுத்துக் காட்டுகிறது.

அட்டவணை – 3

**இலங்கையின் மீண்டுவரும் இராணுவச் செலவினம் 1970 – 1990 (மில்லியன் ரூபாய்களில்)**

| காலம் | நடைமுறைச் செலவு (மில். ரூபா) | காலம் | நடைமுறைச் செலவு (மில். ரூபா) |
|---|---|---|---|
| 1970/71 | 175.6 | 1981 | 479.2 |
| 1971/72 | 162.5 ❋ | 1982 | 486.0 |
| 1973 | 144.9 | 1983 | 979.1 |
| 1974 | 169.9 | 1984 | 1274.6 |
| 1975 | 192.1 | 1985 | 4613.9 |
| 1976 | 178.6 | 1986 | 4350.7 |
| 1977 | 223.9 | 1987 | 6001.0 |
| 1978 | 308.7 | 1988 | 4732.0 |
| 1979 | 393.4 | 1989 | 4073.0 |
| 1980 | 457.8 | 1990 | 6736.0 |

மூலம் — இலங்கை மத்திய வங்கி அறிக்கை (❋ 15 மாதங்களுக்குரிய தகவல் விகிதாசாரமாக 12 மாதங்களுக்கு மாற்றப்பட்டது.)

1970 — 90 இற்கிடையிலான இரண்டு தசாப்தங்களில் இலங்கையில் பாதுகாப்புச் செலவினங்களின் மீண்டுவரும் செலவானது 38 மடங்காக பெயரளவில் அதிகரித்துள்ளது. வருடச் சராசரி வளர்ச்சியானது 20 சதவீதமாகவே காணப்படுகின்றது. இந்த நீண்டகால இடைவெளியை நான்கு உபகால பிரிவுகளாகப் பிரித்து நோக்கும்போது, 1970 — 75 இற்கு இடையில் மீண்டுவரும் செலவுகள் சராசரியாக வருடமொன்றிற்கு 2.2 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்துள்ளது. ஆனால் 1976 80 இற்கிடையிலான காலப்பகுதியில் வருடச் சராசரி வளர்ச்சி 26 சதவீதமாக அதிகரித்தது. 1981 – 85 காலத்திற்கான வருடச் சராசரி வளர்ச்சி 76 சதவீதமான மிக உயர்ந்த வளர்ச்சி வீதத்தினை எடுத்துக் காட்டுகின்றது அடுத்தகாலப் பகுதியான 1986 — 90 இல் வருடமொன்றிற்கு சராசரியாக 11 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து சென்றுள்ளது. பெயரளவிலான அதிகரிப்பு பன்மடங்காக இருப்பினும் மெய்ரீதியான அதிகரிப்பு இதனைவிடக் குறைவாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலே உள்ள அட்டவணையில் 1983 இற்குப் பிற்பட்ட காலப்பகுதியிலேயே நடைமுறைச் செலவினம் பெயரளவில் வேகமாக அதிகரிக்கின்ற போக்கு காணப்படுகின்றது. இக்காலப்பகுதியில் இருந்துதான் நாட்டின் உள்நாட்டு யுத்தம் கூர்மையடைந்து சென்றதும் இராணுவம் ஆளணியை வேகமாகப் பெருக்கத் தொடங்கியதும் நாம் அனைவரும் அறிந்ததொன்றாகும் 1983 முதல் வருடமொன்றிற்கு சராசரியாக 37.6% அதிகரித்த மீண்டுவரும் செலவு 1988 இலும் 1989 இலும் வீழ்ச்சியடைந்துள்ளது. வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு இந்திய இராணுவம் வந்திறங்கியதும் இலங்கை இராணுவத்தின் செயற்பாடுகள் 1986 ஆம் ஆண்டு மட்டத்திலேயே பேணப்பட்டது ஆட்சேர்ப்பு இடம் பெறவில்லை. வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டவையாக இருந்தன. ஆனால் தெற்கில் கிளர்ச்சியாளர்களை அடக்குவதில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்றன. இந்திய இராணுவம் 1990 இல் மீளப்பெற்றதும் மூன்றாம் ஈழப் போர் ஆரம்பமானதும் மீண்டெழும் செலவினம் ஒரு

போதும் இல்லாத அளவு ரூபா 6700 மில்லியனாக உயர்ந்தது.

முன்னர் குறிப்பிட்டதுபோன்று, மூலதனச் செலவினம்பற்றிய சரியான தகவல் பெறமுடியவில்லை. மத்தியவங்கியின் அறிக்கையில் மூலதனச்செலவுகளின் பகுப்பாய்வில் சிவில் நிர்வாகம், பொது ஒழுங்குப் பாதுகாப்பு என்னும் இரண்டு பிரிவுகளிலும் எண்பதுகளின் இறுதியில் திடீரென ஒரு அதிகரிப்புக் காணப்படுகிறது. இராணுவச் செலவினங்களை இவற்றுள் மறைத்துக் காட்ட முயற்சி செய்யப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுகின்றது எனினும் முதல் பக்கத்தில் குறிப்பிட்டது போல் மொத்தச் செலவினம் அதிகரித்தபோது 1970களில் இருந்த நிலைமாறி மூலதனச்செலவினங்களின் பங்கு அதிகரித்துச் சென்றிருக்கும். இராணுவத் தளபாடங்கள் காலத்திற்குக் காலம் கொள்வனவு செய்யப்பட்டதனாலும், இராணுவத்தினர் எண்ணிக்கை அதிகரிக்க அவர்களுக்கான தங்குமிடவசதிகள், முகாம்கள் போன்றவை அமைக்கப்பட்டதனாலும், இராணுவத்தினரது செயற்பாடுகளின் வினைத்திறமையை அதிகரிக்க, தேவையான போக்குவரத்துச் சாதனங்களை கொள்வனவு செய்ததினாலும் மூலதனச்செலவினங்கள் அதிகரித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சில ஆண்டுகளில் மூலதனச் செலவு மொத்தச் செலவில் 30 — 40 சதவீதமாகக்கூட இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

## இராணுவச் செலவினமும் பொருளாதாரத் தாக்கமும்

பாதுகாப்புச் செலவினங்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தும் தன்மை கொண்டதுஎன ஒரு சாராரும்; பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாகவே இருந்துள்ளது என்று மற்றொரு சாராரும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் புள்ளிவிபரங்களை ஆதாரமாகக்கொண்டு தாம் செய்த ஆய்வுகளின் அடிப்படையில் முடிவுக்கு வந்துள்ளனர். பெனோயிற் (Benoit 1978) என்பவர் 44 அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் புள்ளிவிபரங்களை மையமாகக் கொண்ட ஆய்வில் இருந்து உயர்ந்த இராணுவச் சுமையைக்கொண்ட நாடுகள், விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டிருந்தன எனவும் குறைந்த சுமையுடைய நாடுகள் குறைந்த பொருளாதார வளர்ச்சியைக் கொண்டிருந்தன எனவும் 1960 — 65 காலப் பகுதியில் இராணுவச் சுமையானது 1950 – 60 காலப் பகுதியைவிட பொருளாதார வளர்ச்சிக்கு கூடிய முக்கியத்துவம் கொண்டிருந்தது என்ற முடிவுக்கும் வந்தார் இவரது ஆய்வு பலரினதும் கண்டனத்திற்கு உட்பட்டதாகவும் இருந்தது.

டெஜெர் (Deger 1986) என்பவர் 50 அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் புள்ளிவிபரங்களை ஆதாரமாகக்கொண்டு மேற்கொண்ட ஆய்வில் இருந்து பொருளாதார அபிவிருத்திக்கும் இராணுவச்சுமைக்கும் எதிர்க்கணிய தொடர்பு இருப்பது தெளிவாக்கப்பட்டது உள்நாட்டுச் சேமிப்பு, வெளிநாட்டு மூலதனம் என்பவற்றிலும்கூட, எதிரான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எடுத்துக்காட்டினார்

டெஜெர் உம் சென்னும் (Deger and Sen 1991) மேற்கொண்ட ஆய்வில் இருந்தும் இராணுவச் சுமை ஒட்டுமொத்தமாக மூன்று விதத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்று அறியக் கூடியதாக இருக்கிறது. இராணுவச் செலவினம் அதிகரிக்கும்போது, வளங்கள் ஏனைய துறையில் இருந்து இராணுவத்துறைக்கு மாற்றப்படும்போது ஏனைய துறைகளில் முதலீடு வீழ்ச்சியடைய பொருளாதார வளர்சி பாதிக்கப்படும் எனவும் இதனை இராணுவச் சுமையின் ஒதுக்கீட்டு விளைவு (Allocation effect) என்று குறிப்பிட்டனர். மற்றொரு பாதிப்பாக தேசிய சேமிப்பு வீதம் வீழ்ச்சியடையலாம் எனவும் குறிப்பிட்டனர். இராணுவச் செலவினம் அதிகரிக்க இதனை ஈடுசெய்வதற்காக அரசாங்கம் சேவைகளைக் குறைக்க தனியார் செலவு அதிகரித்து சேமிப்பு வீதம் வீழ்ச்சியடையும். அத்துடன் அரசின் செலவும் உயர்வதனாலும் அதிகரித்த செலவினத்தை ஈடு செய்ய வரி வருமானத்தினால் இயலாது போனால் அரசாங்கச் சேமிப்பு வீதமும் வீழ்ச்சியடையும். இராணுவத் தளபாட இறக்குமதிக்கு வெளிநாட்டு சேமிப்பு பயன்படுத்தப்பட்டால் அதுவும் வீழ்ச்சியடையும் ஒட்டுமொத்தமாக தேசிய சேமிப்பு வீதம் வீழ்ச்சியடையும் இதனை சாதன திரட்டல் விளைவு (Resource mobilization effect) என்றும் குறிப்பிட்டனர். மனித வளம் பற்றாக்குறையான நாடுகளில் இராணுவச் செலவு அதிகரிப்பு ஆட்பலத்தினைக் கூட்டும்போது கைத்தொழில் துறையில் ஆளணி குறைய இத்துறை உறிஞ்சக்கூடிய வளம் குறைய இயலளவு பாதிக்கப்படும் என்றும் இந்த விளைவினை மனிதவள தடையெனவும் (Human Capital Constrain) எனவும் குறிப்பிட்டனர். இந்தப் பாதகமான விளைவுகளைவிட ஒருசில சாதகமான விளைவுகளும் ஏற்படலாம் என்றும் இவ் விளைவுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள்

பொறுத்து, பெருமளவு நன்மைகளைக் கொண்டு வராது என்றும் குறிப்பிட்டார்கள்.

மக்னமாரா (Mcnamara 1991) இராணுவச்செலவினம் ஏனைய உற்பத்தி மூலதனங்களுக்கு நெருக்கு தலை ஏற்படுத்தும் எனவும் வெளிநாட்டு ஏற்றுமதி இயலளவைக் கூட்டுவதைவிட வெளிநாட்டுக் கடனுக்கே வழிகோலும் எனவும் மொத்த வளர்ச்சி வீதத்தினைக் குறைத்து, துறை ரீதியான முதலீட்டுக் கோலத்தினை குழப்பி வருமான வேறுபாட்டினை உயர்த்தும் எனவும் குறிப்பிட்டுள்ளார், உலகளாவிய ரீதியில் இந்த தொடர்புகள் நலிவுற்றதாகவே காணப்படுகிறது என்றும் சில சமயங்களில் பொருளாதாரத்தில் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழிவகுக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிஸ்வாஸ் உம் ராமும் (Biswas and Ram 1986) தமது ஆய்வில் அதிக எண்ணிக்கையான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை உள்ளடக்கியதாகவும் இரண்டு காலப்பகுதிக்குரியதாகவும் மேற்கொண்டனர். இவர்களது ஆய்வு இராணுவச் செலவினம் பொருளாதார அபிவிருத்திக்கு தூண்டுகோலாகவோ அல்லது தடையாகவோ இல்லை என்ற முடிவிற்கு இட்டுச் சென்றது.

மேற்கூறிய ஆய்வு முடிவுகளில் இருந்து அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை ஒரு கூட்டமாகக் கருதி நோக்கும்போது இராணுவச் செலவினம் எத்தகைய பொருளாதார தாக்கத்தினை ஏற்படுத்தும் என்று தீர்க்கமான முடிவிற்கு வரமுடியாது இருப்பது தெளிவாகின்றது. எனவே குறித்த ஒரு நாட்டிற்கு இத்தகைய ஆய்வினைச் செய்வதற்கு போதிய அளவில் புள்ளி விபரங்கள் இல்லாது இருப்பதும் குறைபாடாகும். எனினும் மேற்கூறிய ஆய்வுகளின் அடிப்படையில் தர ரீதியான ஆய்வினை மேற்கொள்வது சாத்தியமாகும்.

இலங்கையின் இராணுவத் துறையின் செலவின அதிகரிப்பானது முன்னர் குறிப்பிட்டதுபோல ஆளணி அதிகரித்து இவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் அதிகரித்ததினால் ஏற்பட்டது என்பதை மறுக்க முடியாது. எனவே இராணுவச் செலவின அதிகரிப்பானது வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளதென்பது தெளிவாகின்றது. 1980 களில் இருந்து முப்படைகளிலும் படையினரது எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. முப்படைகள் தவிர்ந்த துணைப் படைகள், ஊர்காவல் படைகளிலும், பொலிஸ் படைகளிலும்கூட எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆண்டு ரீதியாக இராணுவத்தினது படைவலிமை பற்றிய தகவல்கள் இல்லாத காரணத்தினால் உண்மையாக என்ன தொகையினர் வேலைவாய்ப்பினைப் பெற்றார்கள் என்று சொல்ல முடியவில்லை மொத்த வேலைப்படையில் 1 மில்லியனுக்கு மேலானவர்கள் வேலையின்றி இருக்கும் (Koyale 1990) பொருளாதாரத்தில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியது நல்ல விடயமாகும். எனினும் இராணுவத்துறையில் ஏற்படும் வேலைவாய்ப்பு பொருளாதாரத்திற்கு எத்தகைய நன்மையை ஏற்படுத்தும் என்று நோக்குவது அவசியமாகும். இராணுவத் துறையில் வேலை வாய்ப்பினைப் பெறும் ஒருவர் வேறு துறையில் ஈடுபட முடியாமல் போவது அவனைப் பொறுத்த சந்தர்ப்பச் செலவாகும். அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாமல் குறைந்த தலா வருமானத்தில் உள்ள ஒரு நாட்டில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய உற்பத்திகளை மேற்கொள்ளக் கூடிய துறைகளில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதே பொருத்தமானதாக இருக்கும். இலங்கையின் வேலையற்றவர்களது வயது பரம்பல், குடும்ப வருமான பரம்பல் என்பனவற்றில் இருந்து நோக்கும்போது குறைந்த வருமானமுடைய 15 - 30 வயதிற்குட்பட்டவர்கள் மத்தியிலேயே வேலையின்மை உயர்வாகக் காணப்படுகிறது (Koyale 1990) எனவே இத்தகைய இளைஞர்களுக்கு இராணுவத்துறையில் வேலை வாய்ப்புக் கிடைக்குமானால் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வருமானம் கிடைக்கக் கூடிய வாய்ப்பும் ஏற்படுகிறது. ஆனால் இராணுவத்துறையில் ஒரு வேலை வாய்ப்பை ஏற்படுத்தச் செலவு செய்த தொகையை வேறு துறைகளில் முதலீடு செய்திருந்தால் சில சமயங்களில் மேலும் கூடிய தொகையினருக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்கலாம். உயிர் ஆபத்தினை எதிர் கொள்ளாமலே வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும்.

சாதன ஒதுக்கீட்டில் இராணுவச் செலவு அதிகரிப்பு ஏற்படும் தாக்கம் பற்றி நோக்கும்போது முன்னர் குறிப்பிட்டதுபோல் அரசாங்கம், ஏனைய செலவுகளைக் குறைத்துக் கொண்டால் அந்தச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தனியார் செலவினங்கள் அதிகரிக்க தனியார் சேமிப்பு வீழ்ச்சி அடையும். அரசாங்கம் ஏனைய சேவைகளுக்கான செலவுகளைக் குறைத்து இராணுவச் செலவினத்தை அதிகரிக்கும்போது அரசாங்க சேமிப்பும் வீழ்ச்சியடையும். இலங்கையில் அரசாங்க செலவினங்களுக்கும் இராணுவச்

செலவினங்களுக்குமிடையிலான தொடர்பு குறித்த ஆய்வு (Piyadasa 1987) இராணுவச் செலவு அதிகரிப்பு கல்வி, சுகாதார செலவினங்களில் வீழ்ச்சியை ஏற்படுத்தவில்லை எனவும், ஆனால் ஏனைய அரசாங்கச் செலவுகளில் வீழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக எடுத்துக் காட்டியுள்ளார்.

முதலீட்டுச் செலவினங்களில் 1980 களில் இருந்து ஏற்பட்ட அதிகரிப்பு அந்நியச் செலாவணியில் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கும். இலங்கை இராணுவத் தளபாடங்களை பிற நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. இறக்குமதிக்கு அந்நியச் செலாவணியாகவே கொடுப்பனவுகளையும் செய்ய வேண்டியிருந்தது. பொதுவாக இராணுவ தளபாடக் கொள்வனவுகளுக்காக வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதில்லை. உதவி வழங்கினாலும் அது நேரடியான உதவியாக இல்லாமல் மறைமுகமாக பயிற்சிகள், தொழில்நுட்ப உதவிகளாகவே வழங்குவது சாத்தியமாகும். எனவே தமது ஏற்றுமதி வருமானங்களில் இருந்தே ஆயுத தளபாட கொள்வனவுக்கான செலவுகளை செய்ய வேண்டும் இவ்வாறு செலவு செய்யும்போது மூலதன நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செலாவணி பற்றாக்குறை ஏற்படும் மூலதன நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குக் கடன் பெற்றால் அந்நாட்டின் கடன் பழு அதிகரிக்கும். இதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்படும். இலங்கை தனது ஆயுதக் கொள்வனவை எவ்வாறு நிதிப்படுத்தியது என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இராணுவச் செலவு அதிகரித்த காலப்பகுதியில் இலங்கையின் சென்மதி நிலுவை குறைநிலையில் இருந்ததும், அந்நிய கடன்கள், உதவிகள் அதிகரித்திருப்பதும், கடன் சுமை உயர்ந்திருப்பதும் அறியக் கூடியதாக இருக்கின்றது. இலங்கை போன்ற வளர்முக நாடுகள் அருமையான அந்நியச் செலாவணியை இராணுவத் தளபாட இறக்குமதிக்குச் செலவு செய்வது பாரிய பொருளாதாரத் தாக்கத்தினை ஏற்படுத்தும். வளர்ச்சியையும் பாதிக்கும்.

இராணுவச் செலவினம் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியதா அல்லது பொருளாதார வளர்ச்சி இராணுவ செலவினை அதிகரிப்பதற்கு வழிகோலியதா என்ற கேள்வி எழுகின்றது. பெனொயிற் அவர்களது ஆய்வில் இராணுவச் செலவில் ஏற்பட்ட வளர்ச்சியே பொருளாதார வளர்ச்சிக்கு காரணம் என்று தெளிவாக கூறப்படுகிறது. இலங்கையில் இராணுவச் செலவினம் அதிகரித்த காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சி முன்னைய காலப்பகுதியை விட குறைந்துள்ளது. 1978-80 காலப்பகுதியில் 6.6 சதவீதமாக இருந்த வருடாந்த வளர்ச்சி வீதம் 1981 - 83 காலப்பகுதியில் 5.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதும் 1983 - 90 காலப்பகுதியில் 5 சதவீதமாக மேலும் கீழ்நோக்கிச் சென்றிருப்பதே உண்மையாகும். எனவே பெனெயிற்றின் முடிவு இலங்கைக்கு பொருந்துவதாக இல்லை. இலங்கையின் இராணுவச் செலவு அதிகரிப்பு பொருளாதார வீழ்ச்சிக்கே வழிகோலியுள்ளது. இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு யுத்தமே இராணுவச் செலவு அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும். இந்த யுத்தம் வடக்குகிழக்கில் உற்பத்தி நடவடிக்கைகளை பெரிதும் பாதித்துள்ளது. மீன்பிடி தடைசெய்யப்பட்டுள்ளது. இலங்கையின் மீன் உற்பத்தியில் 40 சதவீதமான உற்பத்தியை மேற்கொண்ட வடகிழக்கு பிரதேசத்தில் மீன்பிடி வீழ்ச்சியடைந்துள்ளது. பொருளாதாரத் தடைகளினால் உள்ளீடுகள் போதிய அளவு கிடைக்கப் பெறாமையினாலும் ஏனைய உற்பத்திகளிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. போக்குவரத்துச் செயலிழந்து காணப்படுவதனால் வடக்குக் கிழக்கிற்கு வெளியே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வடக்கு கிழக்கு நுகர்வோரிடம் சேர்ப்பதில் ஏற்பட்டுள்ள செலவு அதிகரிப்பு தடையற்ற ஏனைய பகுதி உற்பத்திகளுக்கான கேள்வியிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவை அனைத்தும் பொருளாதார வீழ்ச்சிக்கு வழிகோலியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அத்துடன் யுத்தத்தின் விளைவாக உற்பத்தி மையங்கள், சேவை நிலையங்கள், உள்ளக கட்டுமானங்கள், குடியிருப்பு வசதிகள் போன்றவை அழிக்கப்பட்டுள்ளன. பெருமளவு உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இவை ஒரு பொருளாதாரத்தின் உற்பத்திக்கு உதவக் கூடிய பௌதீக மனிதவளங்களாகும். எனவே யுத்தச் செலவு அதிகரிப்பு உற்பத்திவளங்களையும் நலிவடையச் செய்து உற்பத்தி வீழ்ச்சிக்கு வழிகோலும்.

அதிகரித்த இராணுவச் செலவினங்களினால் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை உயர்வடைந்துள்ளது. இந்த பற்றாக்குறையை ஈடுசெய்ய என்ன வழிகளில் நிதி திரட்டுகின்றது என்பதைப் பொறுத்து பொருளாதார விளைவுகளும் வேறுபடும். உள்நாட்டில் வங்கித் துறையில் கடன் பெற்றால் பணநிரம்பல் அதிகரித்து பணவீக்கத்தினை தோற்றுவிக்கலாம். இவ்வாறு நிதிப்படுத்தியபின்னர் இதில் பெரும்பகுதி நடைமுறைச் செலவினமாக இராணுவத்துறையினருக்கு சம்பளமாக வழங்

கும்போது அது கேள்வியை அதிகரித்து மேலும் பணவீக்கத்தினை ஏற்படுத்தலாம். உள்நாட்டில் வங்கியல்லாத்துறையில் கடன்பெற்றால் பணவீக்கம் சற்றுக் குறைவாக ஏற்படலாம் வெளிநாட்டில் கடன் பெற்றால் கடன் சுமை ஏற்படலாம். பாதுகாப்புச் செலவின அதிகரிப்பிற்கும் விலை வீக்கத்திற்குமிடையிலான தொடர்பு மெய்ச்சான்று ரீதியாக நிரூபிக்கப்படவில்லை. விலை மட்ட அதிகரிப்பினைக் காட்டும் கொழும்பு நுகர்வோன் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பையும் இராணுவச் செலவினை அதிகரிப்பையும் ஒப்புநோக்கும்போது இவற்றிற்கிடையே தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

இராணுவச் செலவு அதிகரிப்பினால் பொருளாதாரத்திற்கு ஏற்படும் வெளிவாரி விளைவுகளை நாம் மறந்துவிடமுடியாது இராணுவச் செலவினம் வளரும்போது குறிப்பிட்ட பொருளாதார விளைவுகளை மட்டும் இங்கு நோக்குவோம். இராணுவம் நவீன தொழில்நுட்பங்களைக் கொள்வனவு செய்து பயன்படுத்தும்போது இத்தொழில்நுட்பம் ஏனைய துறைகளுக்குப் பரவலாம். இதனால் பொருளாதாரம் நன்மை பெறும். இத்தகைய பக்க விளைவுகளை அளவிடமுடியாது. ஆனால் நன்மை உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. இலங்கையிலும் இராணுவச் செலவினம் விரைவாக வளர்ச்சி அடைந்தபோது நவீன ஆயுத தளபாடங்கள் முப்படைகளிலும் புகுத்தப்பட்டிருக்கிறது. இதனால் இப்படைகளின் தொழில்நுட்பப் பிரிவினுள் உள்ளவர்களது தொழில்நுட்பம் வளர்ச்சிகண்டிருக்கும் என்பதில் சந்தேகமிலலை அத்துடன் இலங்கை ஆயுததளபாட உற்பத்தியெதுவும் செய்யவில்லை. இதனால் புதிய தொழில்நுட்பம் பொருளாதாரத்தில் புகுந்திருப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படவில்லை என்றுதான் கருதவேண்டும். மற்றுமொரு நன்மையான விளைவு இராணுவ தேவைகள் கருதி உருவாக்கப்படும் உள்ளகக் கட்டுமான வசதிகள் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுக்கும் பயன்தரக்கூடியதாக அமைவதாகும். விமானத்தளங்கள், வீதிகள், பாலங்கள், தொலைத்தொடர்பு அமைப்புக்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இவை நேரடியாக இராணுவ சிப்பாய் அல்லாத தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் அத்துடன் பொது மக்கள் பாவனைக்கும் கிடைக்கும்போது பொருளாதார நன்மையை ஏற்படுத்தும் இவ்வாறான உட்கட்டுமானங்கள் இலங்கையில் ஏற்பட்டுள்ளது. இதற்காக இராணுவம் பெருமளவு செலவு செய்திருப்பதும் உண்மை சிவிலியன்களுக்கு வேலைவாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கும் ஆனால் பொதுமக்களின் பாவனைக்கு இது பயன்படுத்தப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். எனவே வெளிவாரி விளைவுகள் இருப்பது மறுக்க முடியாத உண்மையெனினும் இலங்கையைப் பொறுத்து இவை ஏற்படவில்லை என்றே சொல்லலாம்.

## முடிவுரை

இலங்கையில் இராணுவச் செலவினம் அதிதீவிரமாக வளர்ந்து வந்துள்ளது. இதனால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது புலனாகிறது ஒட்டுமொத்தமான செலவு அதிகரித்திருப்பதும்இதில்நடைமுறைச் செலவு, மூலதனச் செலவு இரண்டும் மொத்த ரீதியில் அதிகரித்துக் காணப்பட்டாலும் இவற்றிற்கிடையான பங்கு மூலதனச்செலவிற்கு சாதகமாக அமைந்திருப்பதும் காணக்கூடியதாக உள்ளது. அந்நியச் செலாவணியில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் எனவும் நம்பக்கூடியதாக இருக்கிறது. அத்துடன் வரவு செலவுத்திட்டக் குறையின் வளர்ச்சிக்கு காரணமாகவும் அமைந்துள்ளது எனலாம். இராணுவத் துறையில் கணிசமான வேலைவாய்ப்பினை ஏற்படுத்தியிருப்பது உண்மையெனினும் இத்தகைய வேலை வாய்ப்பு இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு உசிதமானதா என்ற கேள்வியும் ஏற்படத்தான் செய்கிறது இராணுவத்துறையில் வளர்ச்சியினால் ஏற்படக்கூடிய சுழல் விளைவுகள் (Spin off Effects) அல்லது வெளிவாரி விளைவுகள் குறிப்பிடத்தக்களவு இலங்கையில் ஏற்படவில்லை என்பதும் தெளிவாகின்றது. எனவே ஒட்டு மொத்தமாக இலங்கைக்கு இராணுவச் செலவு அதிகரிப்பு பொருளாதார நன்மைகளை ஏற்படுத்தவில்லை என்றோ அல்லது ஏற்பட்ட சில நன்மைகளை விட தீமைகளே அதிகம் என்றோ கூறலாம். மிகக் கூடிய விரைவில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்திற்கு தீர்வுகாணத் தவறினால், இலங்கை அரசு எதிர் காலத்தில் பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அத்துடன் தீர்வு காணப்பட்டாலும் தொடர்ந்தும் இராணுவச்செலவு நீண்ட காலத்திற்கு உயர்வாகவே இருக்கும் என்று நம்பலாம். அதிகரித்த இராணுவத்தினருக்கான நடைமுறைச் செலவுகள் தொடர்ந்தும் இருக்கும். கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதத் தளபாடங்களையும் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களையும் பராமரிக்கும் செலவும் இருக்கும். புதிய ஆயுத கொள்வனவிற்கு செலவு செய்யவேண்டியதாக இருக்

காது எனவே இலங்கையின் இராணுவச் செலவில் (Peacock & wiseman) குறிப்பிட்ட இடம் பெயர் விளைவு (Displacement effect) ஏற்பட்டுவிட்டது. உயர்ந்த செலவுப்போக்கு தொடர்ந்தும் இருக்கும் உறுதியானதும், நிரந்தரமானதுமான தீர்வு ஏற்பட்டுப் படிப்படியாக இராணுவத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வளங்கள் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுக்கு திசை திருப்பப்படுமானால் மட்டுமே இலங்கை எதிர்கால பொருளாதார சுபீட்சத்தை அடைந்து கொள்ளலாம். இராணுவச் செலவு அதிகரிப்பு இராணுவத்தினது அதிகார வளர்ச்சி இவையெல்லாம் இராணுவ உயர்பீடத்தில் உள்ளவர்களது அதிகார சுவையை உயர்த்தியுள்ளது. ஒரு சிலரைக் குறித்து பொருளாதார நலனையும, சமூக அந்தஸ்தில் உயர்வையும் கூட ஏற்படுத்தியுள்ளது இவற்றையெல்லாம் விட்டுக் கொடுக்க இராணுவ உயர்பீடம் எந்தளவிற்குத் தயாராக இருக்கின்றது என்பதைப் பொறுத்தும், இதேபோன்று அரசியல் தீர்வுக்கு அரசியல் தலைமை எவ்வளவு தீவிரமாக இருக்கின்றது என்பதைப் பொறுத்துமே உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வருவதற்கான சாத்தியம் உண்டு. இராணுவச் செலவினை நீண்ட காலத்திலாவது குறைக்க வழி உண்டு. இராணுவச் செலவுகள் தொடர்ந்தும் எத்தகைய போக்கினை எடுக்கும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். குறுங்காலத்தில் வீழ்ச்சியடைவதற்கான சாத்தியங்கள் மிகக்குறைவேயாகும்.

## Bibliography


1. **Benoit. E (1978).**
   Growth and Defense in Developing Countries. Economic Development and Cultural Change Vol. 26, No. 2.

2. **Biswas B and Ram R *(1986)***
   Military Expenditure and Economic Growth in less Developed Countries: An Augmented Model and Further Evidence. Economic Development and Cultural Change, Vol. 34, No. 2.

3. **Deger. S *(1986)***
   Economic Development and Defense Expenditure. Economic Development and Cultural Change. Vol. 35, No. 1

4. **Deger. S and Sen. S *(1991)***
   Military Expenditure Aid and Economic Development. Proceedings of the World Bank Annual Conference on Development Economics 1991

5. **Hewit, P. David *(1991)***
   What Determines Military Expenditure Finance & Development, Vol 28, No. 4.

6. **Korale R. B M. *(1990)***
   Review of Trends in Employment and Unemployment in Sri Lanka. Institute of Policy Studies. DFCC Building, Colombo.

7. **Maizels, A and Nissanke M. K. *(1986)***
   The Determinats of Military Expenditure in Developing Countries, World Development Vol. 14, No. 9.

8. **Mcnamara R *(1991)***
   The Post Cold war World: Implications for Military Expenditure in the Developing Countries. The Proceeding of the World Bank Annual Conference on Development Economics, 1991.

9. **Piyadasa E P. *(1987)***
   Military Expenditure and Economic Growth The Case of Sri Lanka M. A. Dissertation University of New England.

Best Wishes For VANIKA JOTHY

From

**For All Your Photograpic Requirments Contact**

***GNANAMS STUDIO***

★ **National Identity Card (Government Approved)**

★ **Pass Port**

★ **Postal Identity Card**

★ **Indoor / Outdoor Sitting (Black and White / Colour)**

★ **Black and White / Colour Enlargements**

★ **Black and White / Colour Proccesing + Printing**

# GNANAMS STUDIO

***301, Clock Tower Road,*** ***Jaffna.***

தமிழ் அன்னையும் நாமும் மகிழ்ந்திடவே
ஒளி பரப்பட்டும் இவ் "வணிகஜோதி"

# LINGAM COOL *BAR*

*52, Clock Tower Road.* **Jaffna.**

☆ இலங்கை தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம் ''சுரதிர ஜீவிக்க" ''ரட்சய, ஆசிரிய ஜீவிக்க ரட்சய" எனும் புதிய ஆயுட் காப்புறுதி முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

# அண்மைக் காலத்தில் இலங்கையின் வரி அமைப்பில் நீக்கப்பட்ட வரிகளும் - அறிமுகப்படுத்தப்பட்ட வரிகளும் அவற்றிற்கான காரணங்களும்.

சி. திலீபா
ஆண்டு 13B
[1994 ஆம் வர்த்தகப் பிரிவு]

இலங்கையின் அரசிறையைப் பொறுத்தவரை வரி வருமானமே அண்மை ஆண்டுகளில் 89 % - 90 % ஆகக் காணப்படுகின்றது. இவ்வாறு பெறும் வரி வருமானம் 5 பெரும் பிரிவுக்குள் அடக்கப்படுகின்றன.

அவையாவன:

1. வருமானவரி
2. சொத்துக்கள் மீதான வரி
3. மத்திய வங்கியிடம் உள்ள திறைசேரி உண்டியல் மீதான வரி
4. பொருட்கள், பணிகள் மீதான உள்நாட்டு வரி
5. சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரி

## நீக்கப்பட்ட வரிகளும் அவற்றிற்கான காரணங்களும்

இவ் வரி அமைப்பில் சொத்துக்கள் மீதான வரி என்பதன் கீழ் பின்வருவன காணப்படுகின்றன.

1. நன் கொடை வரி.

2. ஆதன வரி or பூதல்வரி or மரணச் சொத்துவரி.

3. செல்வ வரி.

4. முத்திரைத் தீர்வை.

இவற்றில் 1985 November 13ஆம் திகதியோடு நன் கொடைவரி, ஆதனவரி. என்பன நீக்கப்பட்டுவிட்டன. இவை நீக்கப்பட்டதற்கு. காரணம் அவற்றின் மூலம் கிடைத்த வரி வருமானம் குறைவாகக் கிடைத்ததும் அவற்றைச் சேகரிப்பதற்கு ஏற்பட்ட செலவுகள் அதிகரித்தமையுமாகும். செல்வ வரி 1992 ஆம் ஆண்டிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. காரணம் செல்வ வரியின் மூலம் அரசு பெறுகின்ற மொத்த வருமானம் 0.2 % இலும் குறைவாகவே காணப்படுகிறது. மேலும் 1989 ஆம் ஆண்டு செல்வவரி செலுத்தியோரின் எண்ணிக்கை 4489 பேராக மட்டுமேயிருந்தது. இவ்வகையில் செல்வ வரியின் குறைந்த செயலாற்றம் காரணமாக 1992 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் செல்வ வரி நீக்கப்பட்டது.

இன்று நடைமுறையில் காணப்படும் சொத்துக்கள் மீதான வரி என்பதில், 1909ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டதும், 1983 ஆம் ஆண்டு திருத்தப்பட்டதுமான முத்திரைத் தீர்வைமட்டுமே உள்ளது. இது நாணயக் கடிதங்கள், காசோலைகள், மாற்றுண்டியல்கள் என்பவற்றின் மீது 2% ஆக விதிக்கப்படுகிறது.

II. ஒரு நாட்டின் சர்வதேச வர்த்தகத்தின் மீது விதிக்கப்படுகின்ற வரிகள் இருவகைப்படும்.

1. ஏற்றுமதி வரி

2 இறக்குமதி வரி

இலங்கையில் ஏற்றுமதி வரி விதிப்பிற்குள் உள்ளடங்கும் ஏற்றுமதிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. தேயிலை

2 இறப்பர்

3. தெங்கு

4. ஏனைய சிறு விவசாயப் பொருட்கள்

அண்மை ஆண்டுகளில் ஏற்றுமதி வரி வருமானம் சார்பளவில் அரசிறையில் மிகவும் குறைந்த பங்கினையே வகிக்கிறது. அதனை பின்வரும் அட்டவணை மூலம் அறியலாம்.

| ஆண்டு | ஏற்றுமதி வரி வருமானம் | மொத்த அரசிறையில் பங்கு. | மொத்த வரி அரசிறையில் பங்கு | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்கு |
|---|---|---|---|---|
| 1988 | 1830 | 4.4% | 5.1% | 0.8% |
| 1989 | 1572 | 2.9% | 3.3% | 0.6% |
| 1990 | 2549 | 3.7% | 4.2% | 0.8% |
| 1991 | 1137 | 1.5% | 1.7% | 0.3% |
| 1992 | 817 | 0.9% | 1.1% | 0.2% |

வரலாற்று ரீதியாக நோக்கும்போது இலங்கை அரசின் ஒரு பிரதான வருமான மூலமாக ஏற்றுமதி வரி இருந்து வந்துள்ளது. 1970 களின் பிற்பகுதியில் இலங்கை அரசாங்கத்தின் வருமானத்தில் ஏறத்தாள 33 % ஆக அதாவது ⅓ பங்கு ஏற்றுமதி வருமானத்தின் பங்காகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று, ஏற்றுமதி வருமானத்தின் பங்கு அரசிறையில் 1% இலும் குறைவானதாகவே காணப்படுகின்றது. இந்நிலைமைக்கு பின்வருவன காரணங்களாக உள்ளன.

1. பெருந்தோட்ட விவசாய ஏற்றுமதிகளினளவு குறைவடைந்தமை.

2. உலக சந்தையில் பெருந்தோட்ட விவசாய ஏற்றுமதிகளின் விலை வீழ்ச்சி, உள்நாட்டில் உற்பத்திச்

செலவு அதிகரிப்பு என்பவற்றின் விளைவாக பெருந்தோட்ட விவசாய ஏற்றுமதியாளர்களின் இலாபங்கள் பாதிக்கப்பட்டமை, எனவே இவர்களின் இலாபங்களை ஓரளவிற்கு உயர்த்துவதற்காக ஏற்றுமதித்தீர்வைகளை அரசாங்கம் காலத்திற்கு காலம் குறைத்து வந்துள்ளமை.

இவ்வாறு காலத்திற்குக் காலம் ஏற்றுமதித் தீர்வைகளை குறைத்து வந்த இலங்கை அரசாங்கம் 1992 ஆம் ஆண்டு டிசெம்பரிலிருந்து ஏற்றுமதி வரியை முற்றாகவே நீக்கியுள்ளது.

## அறிமுகப்படுத்தப்பட்ட வரிகளும் அவற்றிற்கான காரணங்களும்

I மத்திய வங்கியிடம் உள்ள திறைசேரி உண்டியல்களின் முகப்பெறுமதியில் 9% மீளளிக்கப்படாத பிடித்து வைத்தல் வரி விதிக்கப்படுகிறது இவ்வரி 1989 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் இலங்கை அரசாங்கம் பெற்ற வருமானம் வருமாறு:

| ஆண்டு | வருமானம் (மில்லியன் ரூபா) | மொத்த அரசிறையில் பங்கு | மொத்த வரி அரசிறையில் பங்கு | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்கு |
|---|---|---|---|---|
| 1989 | 2345 | 4.3% | 4.9% | 0.9% |
| 1990 | 2618 | 3.8% | 4.3% | 0.8% |
| 1991 | 3033 | 4.0% | 4.4% | 0.8% |
| 1992 | 1991 | 2.3% | 2.6% | 0.5% |

II பொருட்கள் பணிகள் மீதான உள்நாட்டு வரிகள் என்பதன் கீழ் பின்வரும் வரிகள் அடங்குகின்றன.

1 பொது விற்பனை or மொத்த விற்பனை வரி.

2 கலால் வரி

3 பாதுகாப்பு வரி

4 உரிமைச் சான்றிதழ் வரி

இதிலுள்ள மொத்த விற்பனை வரி என்பது ஒரு நிறுவனத்தின் மொத்த உற்பத்தி பெறுமதி or விற்பனை பெறுமதியினைக் குறிக்கிறது. இவ்வாறு மொத்த வியாபார புரள்வின் மீது வரி விதிக்கும்போது பணவீக்க விளைவுகள் ஏற்படுகிறது. அதாவது ஒரு பொருளின் உற்பத்தி or விற்பனையின் ஒவ்வொரு கட்டத்திலும் இவ்வரி விதிக்கப்படுவதனால் ஒரு பொருள் மீண்டும் மீண்டும் வரி விதிப்பிற்கு உள்ளாகின்றது இதன் விளைவாக இரட்டை எண்ணல் பிரச்சினைக்கு வழி வகுக்கிறது. இதன் விளைவாக வியாபார புரள்வு வரியானது, வரி வீதத்தின் 2½ மடங்கு கூடுதலான தாக்கத்தினைக் கொண்டுளது என மதிப்பிடப்பட்டுள்ளது.

உதாரணமாக 4% வரி விதிக்கப்படுமேயானால் 10% வரி விதிப்பிற்குரிய தாக்கத்தினை ஏற்படுத்துமெனக் கூறப்பட்டுள்ளது. எனவே இவ்வரிப் பொருட்கள் சேவைகளின் விலையினை திரண்டமுறையில் அதிகரிக்கச் செய்வதுடன் உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் விதிக்கப்படுவதனால் தொழிற் பிரிப்பு சிறப்புத்தேர்ச்சி என்பவற்றினை ஊக்குவிப்பதில்லை.

இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவே 1993 ஏப்ரல் 1 இல், இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட வரி கூட்டப்படும் பெறுமதிவரி இவ்வரி ஒரு நிறுவனத்தின் உற்பத்திப் பெறுமதிக்கு அல்லது விற்பனைப் பெறுமதிக்கு அந் நிறுவனத்தால் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு விற்கப்படுகிறது. அதாவது ஒரு நிறுவனத்தின் உற்பத்தி பெறுமதி அல்லது விற்பனை பெறுமதியிலிருந்து அதற்கான இடைக் கொடுப்பனவுகளைக் கழித்து வரும் தொகைக்கு விதிக்கப்படும் வரியாகும்.

இவ்வரி தொடர்பான பரிசீலனைகள் 1911 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவிலும் 1918 ஆம் ஆண்டு ஜேர்மனியிலும் மேற்கொள்ளப்பட்டது ஐக்கிய அமெரிக்காவின் மிச்சிக்கன் மாநிலத்தில் முதன் முதலில் இவ்வரி பரீட்சார்த்தமாக அறிமுகம் செய்யப்பட்டது எனி

னும் தேசியரீதியில் நாடு முழுவதற்கும் இவ்வரி 1955 ஆம் ஆண்டு பிரான்சில் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் வரியானது விலைகளை திரண்டமுறையில் அதிகரிக்கச் செய்யாததுடன் தொழிற்பிரிப்பு சிறப்புத் தேர்ச்சி போன்றன இதனால் ஊக்குவிக்கப்படுகிறது.

II பொருட்கள் பணிகளுக்கான வரிகளில் 1992 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வரியே பாதுகாப்பு வரியாகும். இது ஓர் விற்பனை வரியாகும் தயாரிப்பு தொழில், இறக்குமதிகள், வங்கித்தொழில, காப்புறுதி. மற்றும் பணிகள் என்பவற்றின் மீது பாதுகாப்பு வரி விதிக்கப்படுகிறது. 1992 ஜனவரி 1ஆம் திகதி பாதுகாப்பு வரியின் வீதம் 1% மாகவும் 1992 ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து பாதுகாப்பு வரி 2.3% மாக உயர்த்தப்பட்டது. 1992 ஆடி 1 ஆம் திகதியிலிருந்து பாதுகாப்பு வரி 3% மாக உயர்த்தப்பட்டது இவ் வரியின் மூலம் பெறப்பட்ட வருமானம்.

| ஆண்டு | வரி வருமானம் | மொத்த அரசிறையின் பங்கு | வரி அரசிறையின் பங்கு | உள்நாட்டு உற்பத்தியின் பங்கு |
|---|---|---|---|---|
| 1992 | 3744 ml = | 4.4% | 4.9% | 0.9% |

இவ்வாறு இலங்கையின் வரி அமைப்பானது காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்பட்டும் நீக்கப்பட்டும் அரசிறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

ஆதாரம் - 1992 மத்தியவங்கி அறிக்கை - பொருளியல் நோக்கு.

வர்த்தகத் துறையின் வளர்மிக்க ''ஜோதி'' யே!
வையகத்தில் உன்பணி எந்நாளும் தொடரட்டும்.

நவ நாகரீகத்துக்கேற்ப ஆடைகளைத் தைத்துப் பெற்றுக்கொள்ள

சிற்றி போய் ரெயிலர்ஸ்

181, சிவன் பண்ணை வீதி, ★ கொட்டடி, ★ யாழ்ப்பாணம்.

☆ தற்போது தங்க இறக்குமதிக்கான தீர்வை 10%தால் குறைக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு உதவியும் அதன் வகைகளும்

பே. மதிதரன்
வர்த்தகப் பிரிவு (13ஆம் ஆண்டு)
1994ஆம் ஆண்டு

வெளிநாட்டு உதவி வழங்கலின் ஆரம்பம் தொட்டு, உதவி பெற்ற நாடுகளின் அரசியல், பொருளாதாரத் துறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படவே செய்துள்ளன. இவ்வாறு பொருளாதாரத் துறையில் மாற்றங்களை ஏற்படுத்திய வெளிநாட்டு உதவி என்றால் என்ன? அவற்றின் தோற்றம், வகைகள் யாவை? என்பவை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பொருளாதாரத்துறையில் பின்தங்கியுள்ள வளர்முகநாடுகள் பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைந்த நாடுகளிடமிருந்து உதவி பெறுதல் இன்று தவிர்க்க முடியாததாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட நாட்டினது அபிவிருத்திக்கு, உள்நாட்டுப் பொருளாதார நிலைமைகள் போதிய தூண்டுதலை அளிக்க முடியாதுள்ள நிலையில், அல்லது குறிப்பிட்ட நாட்டின் அபிவிருத்திக்கு உள்நாட்டில் காணப்படும் மூலவளங்கள் பற்றாக் குறையாகவுள்ள நிலையில், வேறு நாடுகளிடமிருந்து உதவி பெறவேண்டிய நிலை உருவாகின்றது. இந்நிலையில் ஒரு நாடானது இன்னொரு நாட்டிலிருந்து பெறுகின்ற உதவியினையே வெளிநாட்டு உதவி அல்லது அந்நிய நாட்டு உதவி என்பர் இன்று வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்ச்சியடைந்து வரும்

''வணிகஜோதி'' ஈழமெங்கும் கலைமணம் கமழ்ந்து
கல்விதனை மேம்படுத்த வாழ்த்துகிறோம்.

உங்களுக்குத் தேவையான

கொப்பிகள்

பாடசாலை உபகரணங்கள்

மற்றும்

அலுவலக உபகரணங்களையும்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள,
யாழ் நகரின் முன்னணி ஸ்தாபனம்

ஆசீர்வாதம்
வர்த்தக நிலையம்

61, பெரியகடை, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

☆ ஊழியர் சேம இலாப நிதியத்திற்கு (E. P. F) ஊழியர்கள் 8 - 10%மும், தொழில் கொள்வோர் 12 - 15%மும் நிதி பங்களிப்புச் செய்கின்றனர்

நாடுகளுக்குப் பல்வேறு வழிகளில் உதவியிணைச் செய்து வருகின்றன. அதாவது உற்பத்திச்சாதனங்கள் வளர்ச்சி அடைந்த நாட்டிலிருந்து, வளர்ச்சி குறைந்த நாடுகளின் அபிவிருத்தி நோக்கம் குறித்து வளர்ச்சி யடையாத நாடுகளுக்கு வழங்கப்படுவதனையே வெளி நாட்டு உதவி என்போம்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்பே, வெளி நாட்டு உதவி வழங்கல் ஆரம்பமானது. ஐரோப்பிய நாடுகளான அபிவிருத்தியடைந்த நாடுகள், இரண்டாம் உலக மகாயுத்தத்தின் காரணமாகப் பெரும் பொருளா தார வீழ்ச்சிக்கு உள்ளாயின. இதனால் இந்த நாடு களின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக் குடன் ஐக்கிய அமெரிக்கா உதவி வழங்க முன் வந் தது. இக் காலகட்டத்தில் அமெரிக்காவின் ஜனாதிபதி யாக இருந்த ஜோர்ச் காட்லெட் மார்ஷல் என்பவரே இத் திட்டத்தினை 1947இல் வகுத்தார் இத் திட்டத்தை மார்ஷல் திட்டம் என்று வழங்குவது இதன் காரணத் தினாலேயே ஆகும். இது ஐரோப்பிய மீட்சித் திட்ட மாக அமைந்தது

இத் திட்டத்தில் சேர்ந்துகொண்ட 16 நாடுகளுக் கும் அளிக்கப்பட்ட நிவாரணங்களுக்காகச் செலவிட்ட தொகையில் 80 வீதத்தை இனாமாகவும் மிகுதியைக் கடனாகவும் கொடுத்து உதவியது. உலக நாடுகள் பல வற்றிற்கும் இத்தகைய பொருளாதார உதவியானது விஸ்தரிக்கப்பட வேண்டியது அவசியமாகியது. இன் றைய உலகில் சகல நாடுகளும் பொருளாதாரத் துறை யில் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்துள்ளன. அபி விருத்தியடைந்து வரும் நாடுகளில் நிலவிய பொருளா தாரச் சீர்கேடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குப் பெரும் பிரச்சினையாகிறது. அதனால் அபிவிருத்தி யடைந்த நாடுகள் தங்களது உற்பத்திகளுக்கு சந்தை வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் தமக்கு தேவை யான மூலப்பொருட்களைப் பெறவும் தங்கள் பணத் தினை முதலீடு செய்வதற்குமாக வளர்முக நாடுகளுக்கு உதவிவழங்க முன்வந்தன.

நன்கொடைகள், கடன்கள், தொழில்நுட்பங்கள் என் பன வெளிநாட்டு உதவிகளாகும். நன்கொடையினுள் மூலதனம், உபகரணங்கள், பண்டங்கள் போன்றன வும் அடங்குகின்றன. அதாவது ஒரு நாடு, இன்னொரு நாட்டிற்கு அந்நாட்டின் வளர்ச்சி கருதிப் பல்வேறு வகையான பொருட்களையும், உபகரணங்களையும் மூலதனத்தினையும் எவ்வித கட்டுப்பாடுமின்றி இலவச மாக வழங்கலாம். ஆனால் வெளிநாட்டுக்கடன் என்பது அபிவிருத்தியடைந்த ஒரு நாட்டிடமிருந்து அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகள் சர்வதேச நாணய ரீதியல் கடன் பெறுதலைக் குறிக்கும். இவ்வாறு கடன் வழங் கப்படும்போது, கடன்கள் வட்டியில்லாக் கடனாகவோ, வட்டியுள்ள கடனாகவோ வழங்கப்படும். இதே போன்று கைத்தொழில் ரீதியிலும் உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு வகையில் வெளிநாட்டுதவியானது இரண்டாம் உலக மகாயுத்தத்தின்பின் மேற்கு ஐரோப் பிய நாடுகளின் அபிவிருத்தி கருதி தோற்றம் பெற்ற போதிலும் இவ்வுதவி தோற்றம் பெற்றமைக்கான அடிப் படைக் காரணங்களைச் சற்று விரிவாக நோக்குவோம்.

நலன்புரி அரசுகளாகித் தொழிற்படல் முக்கிய ஒரு காரணமாகும். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் னர் வளர்ச்சி குறைந்த நாடுகள் அரசியல் சுதந்திரத்தைப் பெருமளவு பெற்றுக் கொண்டு வருகின்றன. எனினும் பொருளாதாரச் சுதந்திரம் அவற்றிற்குப் பூரணமாகக் கிடைக்கவில்லை. இவ்வளர்முக நாடுகளில் பெரும் பாலானவற்றை வளர்ச்சியடைந்த நாடுகள் பல நூற் றாண்டுகளாக தமது குடியேற்றங்களாக வைத்திருந்தன. இக்குடியேற்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் மைக்குத் தாமும் ஓரளவு பொறுப்பாக முற்காலத்தில் இருந்திருக்கின்றோமென்பதை உணர்ந்து அவற்றின் வளர்ச்சிக்குத் தாமும் உதவவேண்டும் என்ற எண்ணத் துடன் உதவிசெய்ய முன்வருகின்றன.

இந்த எண்ணத்துடன் வேறொரு நோக்கமும் சேர்ந்தே வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு உதவி வழங்க வேண்டும் என்றதோர் எண்ணத்தை வளர்ச்சியடைந்த நாடுகளுக்குக் கொடுத்ததெனலாம். வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசாங்கம் இன்று பெரும்பாலும் நலன்புரி அரசுகளாகவேயிருந்து வருகின்றன. அதாவது சமூகத் தின் பல முதலீடுகளைச் செய்வதன் மூலம் தமது மக்க ளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதையே பெரிதும் நோக்கமாகக் கொண்டுள்ளன. தமது மக்களின்வாழ்க் கைத்தரம் உயர்வது போல, வளர்முக நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரமும் உயரவேண்டும் என்ற அடிப்படையில் அந் நாடுகளுக்கு உதவியிணைச் செய்ய முன்வருகின் றன.

தண்போரும் எதிர்காலமும் இவ் வெளிநாட்டு உதவி தோற்றம் பெறக் காரணமாயின. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உலகளாவிய முறையில் யுத் தங்கள் ஏற்படாத போதிலும் நாடுகளுக்கிடையே கருத்து மோதல்களும் பூசல்களும் இருந்தே வருகின்றன. இத்த

கைய சூழ்நிலையினையே தண்போர் நிலை எனக் குறிப் பிடுவர் அதாவது இத்தண்போர் நிலையானது உண் மையான யுத்த வடிவத்தை எடுப்பின் பல பிரச்சினைகள் ஏற்படும். எனவே உண்மையான யுத்த வடிவம் எடுக் கும்போது, பல குறைவிருத்தி நாடுகளைத் தம்பக்கம் வைத்திருக்க வேண்டும் என்ற நோக்குடனும் வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ சோஷலிச நாடுகள் உதவியி னைச் செய்து வருகின்றன.

வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் என்பதும் வெளி நாட்டு உதவி தோற்றம் பெறக் காரணமாய் அமைந் தன. மனிதாபிமான காரணத்தின் அடிப்படையிலும் வெளி நாடடுதவி செய்யப்படுகின்றது. இன்று உலகின் மொத்த வருமானத்தில் 70% க்கு மேற்பட்ட பங்கினை மிகச்சில நாடுகளே அனுபவித்து வருகின்றன. அந்நாட்டு மக்க ளின் வாழ்க்கைத் தரத்தை வறியநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்துடன் ஒப்பிடும்போது பலமடங்கு மேலானதாகக் காணப்படுகின்றது. பெருமளவு எண் ணிக்கையுடைய வளர்முக நாட்டு மக்கள் மிகக்குறைந்த வாழ்க்கை வசதியை அனுபவிக்கின்றனர். அவர்களது வறிய நிலையிலிருந்து இவர்களை மீட்பதற்கு வளர்ச்சி யடைந்த நாடுகள் உதவியினைச் செய்து வருகின்றன. வெளிநாட்டிலிருந்து பணவடிவிலோ அல்லது தொழில் நுட்ப வடிவிலோ அல்லது உற்பத்திச்சாதன வடிவிலோ பெறப்படுகின்ற உதவியினைச் சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் வறியநாடுகள் தனது வருமா னத்தைப் பெருக்கி தமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலம் வளர்ச்சியடைந்த நாடுகளின் நிலையைப் பிடித்துக் கொள்ளலாம். எனவே வறிய நாட்டு மக்களும் தமது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தையடைய வேண்டும் என்ற நோக்குடனும் வளர்ச்சியடைந்த நாடுகளால் உதவி செய்யப்படுகின் றது.

அடுத்து சமூக விரோதச் செயல்களைத் தவிர்ப்பதும் இதன் தோற்றத்திற்கு காரணமாயின. பின் தங்கிய வாழ்க்கைத் தரத்தினைவிட கூடுதலான துன்பம் வறிய நாட்டு மக்களை தீயவழிக்கு இட்டுச்செல்லக்கூடும். இதனால் உலகில் சமூக விரோதச் செயல்கள் மலிவ டைந்து உலகின் அமைதியைக் கெடுத்துவிடும் இதனால் இதனைத் தவிர்க்கும் முகமாகவும் வளர்ச்சியடைந்த நாடுகள் வெளிநாட்டு உதவியினைச் செய்கின்றன.

சந்தை வசதிகளைப் பெருக்குதல் வெளிநாட்டு உதவியின் தோற்றத்திற்கு ஒரு காரணம் எனலாம் வளர்ச்சியடைந்த நாடுகள் பொருளாதார நோக்கிலும் வளர்முக நாடுகளுக்கு உதவியினைச் செய்து வருகின் றன.

வளர்ச்சியடைந்த நாடுகள் தனியே வளர்ச்சிய டைந்துசெல்லும்போது காலப்போக்கில் அவ்வளர்ச்சி யில் தடை ஏற்படலாம். அதாவது வறிய நாடுகள் ஏராள மாகக் காணப்படுகின்றன. அத்துடன் அந்நாட்டு மக்கள் தொகையும் கூடுதலாகவே காணப்படுகின்றது. இதனால் வளர்முக நாடுகளில் பெருமளவு சந்தை வசதிகளும் காணப்படுகின்றது. இச் சந்தைகளையே வளர்ச்சிய டைந்தநாடுகள் கணிசமான அளவு பயன்படுத்தி வருகின் றன. வறிய நாடுகளில் வருமானம் பெருகுகின்றபோது தான் தமது உற்பத்திப் பொருட்களுக்குமான சந்தை வச தியும்பெருக முடியும் என்ற அடிப்படையில் வறிய நாடு களின் வருமானத்தைப் பெருக்குவதற்காக வளர்ச்சிய டைந்த நாடுகள் உதவியினைச் செய்து வருகின்றன.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஜேர்மனி தரைமயமாக்கப்பட்டது. அதன் பொருளாதார வளம் குறைவிருத்தி நாட்டின் வளத்துக்குத் தள்ளப்பட்டுவிட் டது. ஜேர்மனியை மிக விரைவில் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் அமெரிக்கா பெருமளவு உதவியைச் செய்தது. இவ் உதவியின் காரணமாக மிகக்குறுகிய காலத்தில் ஜேர்மனி விரை வான வளர்ச்சியைப் பெற்றது இந்நடைமுறை உதார ணத்தை அடிப்படையாக வைத்து வெளிநாட்டு உதவி யின் மூலம் வளர்ச்சி குறைந்த நாடுகளை மிக விரை வில் வளர்ச்சியடையச் செய்யலாம் என்பதை பல நாடுகள் உணர்ந்தன. இதனடிப்படையிலேயே வெளி நாட்டு உதவியும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்கூறப்பட்ட காரணங்களாலேயே வளர்ச்சி யடைந்த நாடுகளால் உதவியானது வழங்கப்பட்டு வருகின்றபோதும் இது பற்றிப் பலவித கருத்து வேறு பாடுகளும் கூறப்பட்டு வருகின்றன. சிலர் வெளிநாட்டு உதவியானது வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கே அதிக நன்மை அளிக்கின்றதென்றும் வளர்முகநாடுக ளுக்கு அதிக நன்மை வழங்கவில்லையென்றும் கூறுகின் றனர். சிலர் நவ குடியேற்றவாதத்திற்கு வழிவகுக்கிற தென்று கூறுகின்றனர் சிலர் இவ்வுதவியானது வறிய நாடுகளை அடிமையாக வைத்திருக்க உதவுகின்றதென் றும் கூறுகின்றனர்.

இக்கூற்றுக்களில் ஓரளவு உண்மை காணப்படுகின்ற போதிலும் இவை பெரிதும் அரசியல் சார்பான கருத்துக்களாகவே காணப்படுகின்றன.

வெளிநாட்டு உதவி என்ற விடயத்தினுள் உதவியின் அளவு, உதவியின் வகைகள், உதவியினைப் பயன்படுத்துதல் போன்ற அம்சங்கள் முக்கியமானவையாக அமைகின்றன. உதவியின் அளவு பற்றி நோக்கும் போது ஒரு நாட்டுக்கு எவ்வளவு உதவி தேவை என்பதை அந்நாட்டின் சேமிப்பு, முதலீட்டு இடைவெளியும் அந்நியச் செலாவணி இடைவெளியும் தீர்மானிக்கின்றன. ஒரு நாடானது தனது வளர்ச்சி கருதி பல்வேறு திட்டங்களை வகுத்திருக்கும். அத்திட்டங்களைப் பொறுத்து அவற்றிற்குத் தேவைப்படும் முதலீட்டினளவு வேறுபடும் தேவைப்படுகின்ற முதலீட்டை உள்நாட்டிலிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ பெற்றுக் கொள்ள அந்த நாடானது முயலும்.

இங்கு சேமிப்பு முதலீட்டு இடைவெளியெனபது ஒரு நாட்டுக்குத் தேவைப்படும் முதலீட்டு அளவுக்கும் உள்நாட்டில் கிடைக்கக்கூடிய சேமிப்பின் அளவுக்குமிடையே உள்ள வித்தியாசமாகும். அந்நியச் செலாவணி இடைவெளி என்பது, ஏற்றுமதி வருமானத்துக்கும் இறக்குமதிக் கொடுப்பனவுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைக் குறிக்கும். அந்நியச்செலாவணி இடைவெளியினை நிரப்புவதற்குள்ள வழிவகைகளில் வெளிநாட்டு உதவி என்பதும் ஒரு வகையாக அமைகின்றது எனவே அந்நியச்செலாவணி இடைவெளியும் சேமிப்பு முதலீட்டு இடைவெளியும் சேர்ந்தே எவ்வளவு உதவி தேவை என்பதை நிர்ணயிக்கின்றன. எவ்வளவு உதவி ஒரு நாட்டிற்குத் தேவை என்பதை இதன்மூலம் கணிப்பிட்டாலும் கூட தேவையான உதவி முழுவதும் கிடைத்துவிடும் என்று கூறுவதற்கில்லை.

உதவியின் வகையை நோக்கின் இருபக்க உதவி குறிப்பிடத்தக்க ஒன்றாகும் இருபக்க உதவியென்றால் குறிப்பிட்ட ஒரு நாடானது நேரடியாக இன்னொரு நாட்டிலிருந்து பெறுகின்ற உதவி எனலாம். இவ்வுதவியின் அளவைத் தீர்மானிப்பதில் இரு நாடுகளுக்குமிடையே பழங்காலந்தொட்டு இருந்துவரும் உறவுகள். வெளிநாட்டுக் கொள்கைகள், அரசியல் நிலைமைகள் போன்றவை பங்கு கொள்ளும். இருபக்க உதவியானது, சில நாடுகளுக்குக் கூடுதலான அளவு உதவியையும் சில நாடுகளுக்கு குறைந்தளவு உதவியினையும் பெறுவதற்கு வழிவகுக்கின்றது. அதாவது சில சமயம் இருபக்க உதவியானது இறுக்கமான உதவியாக இருக்கலாம்.

இறுக்கமான உதவி என்பது, கூடுதலான நிபந்தனைகளைக் கொண்டதாகவும் கூடியவட்டி கொண்டதாகவும் குறுகிய காலத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டியதாகவும் இருக்கும். சில சமயம் இறுக்கமற்ற உதவியாகவும் இருக்கலாம். அதாவது மென்மையான உதவிகளென்பது அதிகளவு சலுகை நிறைந்ததாகவும் குறைந்தளவு வட்டி கொண்டதாகவும் திருப்பிக் கொடுக்கும் காலம் கூடியதாகவும் இருக்கும்.

நாடுகள் நேரடியாக உதவி செய்வதைவிட பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் ஊடாகவும் உதவி செய்கின்றன. இம் முறையில் உதவிவழங்கும் நாடானது சர்வதேச நிறுவனங்களிடம் அதற்கான தொகையைக் கொடுக்கும். சர்வதேச நிறுவனங்கள் உதவி தேவையான நாட்டிற்கு அவற்றை வழங்கும். இவ்வகையாக வழங்கப்படும் உதவியானது ஓரளவு இறுக்கமற்றதாகக் காணப்படும். அத்துடன் உதவிபெறும் நாடு உதவியினைச் செய்த நாட்டிற்குப் பயப்படவேண்டியதில்லை. இவ்வகை உதவியால் கூடியளவு சுதந்திரம், உதவி பெறும் நாட்டிற்குக் காணப்படும்.

நன்கொடை பெறுவது உதவி பெறும் நாட்டிற்கும் பெருமளவு நன்மை பயப்பதாகும். ஏனெனில் இதனைத் திருப்பிக்கொடுக்க வேண்டிய அவசியம் உதவி பெறும் நாட்டிற்கில்லை. நன்கொடையாக வரும் தொகை முழுவதும் உதவி பெறும் நாட்டின் சாதன வளத்தை அதிகரிப்பதாக இருக்கும். பிற்காலத்தில் இது சாதனக் குறைவையோ மிகைச் சுமையையோ ஏற்படுத்தமாட்டாது.

திட்ட உதவியினைப் பெறும் நாடு, தன்மனம் போனபடி பயன்படுத்த முடியும். நாட்டின் பொருளாதார நிலைமைக்கேற்ப இவ்வுதவியை முக்கியமான துறைகளில் பயன்படுத்தலாம் எனவே இது உதவிபெறும் நாட்டினைப் பொறுத்து நெகிழ்ச்சி கூடியதாக ஓரளவு சுதந்திரமுடையதாகக் காணப்படுகின்றது. இவ்வகையான உதவிகளை வழங்குவதன் மூலம் அதிகாரமான நிபந்தனைகளை விதிக்க முடியாதிருப்பதனால் இவ்வகையான உதவிகளை வழங்குவதில் உதவி வழங்கும் நாடுகள் அதிக விருப்பம் காட்டுவதில்லை

செயற்திட்ட உதவியினை நோக்கும்போது, இதன் கீழ்ப் பெறப்படும் உதவி குறிப்பிட்ட திட்டத்திற்கே பயன்படுத்த முடியும். இச்செயற்திட்ட உதவியைப்

பெறுவது, உதவிபெறும் நாட்டிற்குப் பெருமளவு சாதகமானதாக இருக்க மாட்டாது. ஏனெனில் செயற்றிட்ட உதவியின் அளவினை பொருளாதார நிலைமைக்கேற்ப உதவி பெறும் நாட்டினால் பயன்படுத்த முடியாத நிலை காணப்படும். எனவே இவ்வுதவியினால் பொருளாதார நிலைமைக் கேற்ப உதவியினைப் பயன்படுத்த முடியாத சுதந்திரமான அல்லது நெகிழ்ச்சியற்ற நிலை காணப்படுகின்றது.

இணைப்புதவியானது பெருமளவு நிபந்தனை கொண்டதாக அமைகின்றது இணைப்புதவியின் கீழ் பெறப்படும் உதவியினை உதவி பெறும் நாடானது உதவி வழங்குகின்ற நாட்டிலிருந்து பொருட்களை வாங்குவதற்கே பயன்படுத்த வேண்டும். இது சில சந்தர்ப்பங்களில் உதவி பெறும் நாட்டிற்கு செலவு கூடிய நிலைமையை ஏற்படுத்தலாம். அதாவது இங்கு வாங்கப்படும் பொருள் வேறு நாடுகளில் மலிவானதாக இருக்கலாம். இதேவேளை உதவி வழங்கும் நாடானது இத்தகைய உதவியினை தனது சென்மதி நிலுவையில் சாதக நிலைமை ஏற்படுத்த பயன்படுத்திக் கொள்ளலாம். அதாவது இவ்வுதவியின் கீழ் வெளிநாடுகளுக்கு கூடிய ஏற்றுமதியைச் செய்யலாம்.

இணைப்புதவி, செயற்திட்ட உதவி என்பவற்றின் கீழ் வழங்கப்படுகின்ற உதவியானது, மிகவும் இறுக்கமானதாக அமைகின்றது. அதாவது இவ்வகையான உதவியின் கீழ் பெறப்படும் உதவி குறிப்பிட்ட திட்டத்திற்கும் பயன்படுத்தப்படுவதோடு குறிப்பிட்ட திட்டத்திற்கு தேவையான சாதனங்களையும் குறிப்பிட்ட உதவியினை வழங்குகின்ற நாட்டிடமிருந்தே பெறப்பட வேண்டிய நிலையும் காணப்படும். இது உதவியைப் பெறும் நாட்டிற்கு சுதந்திரமின்மையும் சாதக செலவையும் ஏற்படுத்தலாம்.

**உசாத்துணை:**

13th June - 1981 வீரகேசரி

"வணிகஜோதி"

வளர்மதி போல்

வளர



★ எமது நல்லாசிகள் ★

**தங்க, வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்**

# சீதா நகை மாளிகை

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

27/A. அர்ச்சுணா வீதி, (ஸ்ரான்லி வீதி) யாழ்ப்பாணம்.

☆ கடன் அட்டை மூலம் பொருட்களை தெரிவு செய்ய, வங்கியால் யாழ்ப்பாணத்தில் சில ஸ்தாபனங்களை தெரிவு செய்துள்ளது. அவை:

* ரவிராஜ் அன் புடவை மாளிகை

* குகன் ஸ்ரோர்ஸ்

# வறுமையை ஒழிப்பதற்கு இலங்கையில் ஏற்படுத்திய திட்டங்களின் பரிணாமவளர்ச்சி

கு. க. கௌரிசன்
95ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு (12^B)

பொருட்கள், சேவைகள், சொத்துக்கள், வருமானங்கள் என்பவற்றில் குறைந்த அளவுத் தொகுதியை ஏழைமக்கள் பெற்றுக் கொள்வதற்காக இலங்கையில் அன்று தொட்டு இன்று வரை பல்வேறுவகையான செயற்திட்டங்களை அரசு அமுல்படுத்தி வருகிறது.

இவ்வாறு அரசினால் அமுல்படுத்தப்பட்டவற்றில்,

1. காணிச் சீர்திருத்தங்கள்
2. ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
3. உணவு மானியமுறை.
4. உணவு முத்திரைத் திட்டம்.
5. ஜனசக்தித் திட்டம் என்பனவாகும்.

## 1. காணிச் சீர்திருத்தங்கள்:

1958ஆம் ஆண்டில் நெற்காணிச் சட்டம் முதன் முதலாக அரசினால் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த நட

வடிக்கையாகும். இச்சட்டம் நில உடமையாளர், அதிக அளவு வாடகையைப் பெறுவதைக் குறைக்கும் வகையிலும் குத்தகைக்குப் பயிர் செய்வோர் தொடர்ந்து தம் முயற்சியை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் இச்சட்டம் உருவாக்கப்பட்டது. இச்சட்டம் அமுல் செய்யப்பட்டபோதும் அதிகளவு வெற்றியைப் பெறவில்லை.

இதனைத் தொடர்ந்து:

1. 1970இல் காணிச் சீர்திருத்தச் சட்டம்.
2. 1975இல் மேற்கொண்ட சீர்திருத்தத்தின் கீழ் பொதுக்கம்பனிகளுக்கு சொந்தமாக இருந்த பெருந்தோட்டங்கள் யாவும் அரசினால் சுவீகரிக்கப்பட்டமை போன்ற சீர்திருத்தங்களை மேற்கொண்டு ஓரளவு ஏழை மக்களின் நலன்களைப் பாதுகாக்க முடிந்தது. இதன்படி ஏழைகளும், தோட்டத்தொழிலாளர்களும் பல நன்மைகளைப் பெற்றுக்கொண்டனர்.

## 2. ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்:

இந் நிகழ்ச்சித் திட்டம் 1970ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்டம் பன்முகப்படுத்தப்பட்ட திட்டமிடலின் கீழ் செயற்படுகிறது. இது கிராமிய மக்களின் வருமானம், தொழில் வாய்ப்புக்கள், வாழ்க்கைத்தரம் என்பவற்றை உயர்த்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்திற்குத் தேவையான நிதியை வழங்குவது:

1. உலகவங்கி.
2. சுவிடிஸ் சர்வதேச அபிவிருத்திக்கழகம்
3. நோர்வேஜியன் அபிவிருத்திக் கழகம் போன்ற பிறநாட்டு நிறுவனங்களாகும்.

இவ் அபிவிருத்தி நடவடிக்கை மாவட்ட மட்டத்திலேயே வகுக்கப்படுகிறது. கிராமிய மக்களினதும் உள்ளூர் நிறுவனங்களதும் பங்களிப்பும் பெறப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்தின் ஒ. கி. அ. நிகழ்ச்சித்திட்டமும் ஐந்தாண்டுத் திட்டத்தின் வடிவத்தைப் பெறுகிறது. ஒ. கி. அ. நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்திட்டத்தில் குறைவான செலவு, விரைவான விளைவு, ஊழியச் செறிவு, உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

## 3. உணவு மானியமுறை:

இது 1940இல் முதற்கொண்டு இலங்கையில் முழுமையான நலன்புரி வசதிகள் வழங்கப்பட்டு வந்துள்ளது. குறைந்த பட்ச நுகர்வு மட்டங்களை உத்தரவாதம் செய்வதற்காக அரச தலையீடு இடம் பெற்றமை இவற்றில் குறிப்பிடத்தக்க பண்பாகும்.

## 4. உணவு முத்திரைத் திட்டம்:

1979ஆம் ஆண்டு செப்ரெம்பரில் உணவு மானியத் திட்டம் அகற்றப்பட்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. நாட்டின் குடிமக்களுக்கு குறைந்த பட்ச நுகர்வுத்தேவையான பொருட்களை அரச தலையீடு தொடர்பான கொள்கையில் ஏற்படுத்திய அடிப்படை மாற்றம் இதுவாகும்.

தமது உணவுத்தேவையைத் தாமே உற்பத்திசெய்துகொடுக்கும் நிலையை உருவாக்கி அதன் மூலம் வருமானத்தையும் வெளியீட்டையும் அதிகரிக்க இக் கொள்கை வழிவகுக்கிறது. உணவு முத்திரைகளூடாக நேரடி வருமான மாற்றம் செய்யப்பட்டதன் மூலம் எளிதிற் பாதிப்புறக்கூடிய மக்கள் பாதுகாக்கப்பட்டமை. உணவு முத்திரைத் திட்டத்தின் செலவை மொத்த செலவினத்தில் 7% ஆகக் குறைப்பதில் அரசாங்கம் வெற்றிகண்டது.

## 5. ஜனசக்தித் திட்டம்:

இது 1989 ஆம் ஆண்டு 4ஆம் இலக்க ஜனசக்தித் திட்டம் என்ற பெயருடன் கொண்டுவரப்பட்டது. இத் திட்டத்தில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதாந்தம் 2500/= வழங்கப்படும். இதில் 1452/= நுகர்ச்சிக்காகவும் மிகுதிப்பணம் அவரவர் கணக்கில் சேமிக்கப்படும். இச்சேமிப்பு 2வருடத்தின் பின் 25000/= வளர்ச்சியடையும். இதனைக் கொண்டு சிறிய முதலீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

மேற்கூறியவற்றைவிட அரசானது ஏழை மக்களின் வறுமையை ஒழித்து வாழ்க்கைத்தரத்தினை உயர்த்த மேலும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதாவது இலங்கையில் ஏழைமக்களின் பெரும்

பங்கினை கிராம விவசாய மீனவக் குடும்பங்கள் உள்ளடக்கப்படுகின்றன. இவர்களிற்கு:

1. கிராமிய விவசாயிகளிற்கு நிலம், நீர் மற்றும் நல்லின விதை இனங்கள், உரவகைகளை குறைந்த விலையில் மானிய அடிப்படையில் வழங்குதல்.
2. மீன்பிடி மக்களிற்கு வேண்டிய அடிப்படை வசதிகளை செய்து, மீன்பிடி உபகரணங்களையும் நவீன மீன்பிடிக் கருவிகளையும் வழங்குதல்.
3. சுய தொழில் புரியும் ஏழைகளுக்கு அதிகளவு கருவிகளையும் சாதனங்களையும் பெற்றுக்கொடுத்தல்.
4. பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சேமிப்புக்களை சிறு கைத்தொழிலாளருக்கும், விவசாயிகள், மீனவர்களிற்கு கடன்களை வழங்குவதிலும் பெருமளவிற்கு உதவி புரிதல்.
5. ஏழைகளின் உற்பத்தியினை அதிகரித்துக்கொள்வதற்காக அரசியற் கொள்கை மற்றும் சுகாதார, கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்குதல்.

எனவே மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதன் மூலம் இந்நாட்டில் உள்ள ஏழை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதே வறுமை ஒழிப்புத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

உசாத்துணை நூல்:

பொருளியல் நோக்கு — 1989

''வணிகஜோதி''யே வருக, வருக.

★ கவர்ச்சி மிகு கலர் வண்ணப் புடவைகளும்
★ தரமான பிளவுஸ் துணிகள்

ஆடவர்க்கு அழகு செய்ய
★ சேட்டிங் சூட்டிங்

மற்றும் சகலவித
★ றெடிமேட் உடைகளுக்கும்

புகழ் பூத்த தாயகமாய் பூரித்து நிற்கிறது

கஜனாஸ் புடவை மாளிகை

169, நவீன சந்தை () யாழ்ப்பாணம்.

☆ 1994ஆம் ஆண்டு காப்புறுதி ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

**Best Compliments From:**

*For All Your Optical Requirements*

**Just Step Into**

# S. M. FERNANDO



**S·M·FERNANDO**

Specialists in Handling the Latest
Technology in Optical Work.

***580, Hospital Road,***
***JAFFNA.***
**(Near Bank of Ceylon)**

☆ *1992 ஆண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் குடித்தொகை 17.4 மில்லியன் ஆகும். குடித்தொகைவளர்ச்சி வீதம் 1.0% ஆகும்.*

# இலங்கையின் உல்லாசப் பிரயாணத்துறை

ரு. சுரேஸ்கரன்
94ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு

உல்லாசப் பிரயாணம் என்பது அந்நியநாடுகளிலிருந்து ஒரு நாட்டிற்கு விடுமுறையையோ அல்லது ஓய்வான நேரத்தையோ உல்லாசமாகக் கழிப்பதற்காகவும் உல்லாசமாக பிறிதொரு நாட்டிலுள்ள இயற்கை வளங்களையும், பிறநாட்டின் கலை, கலாச்சாரங்கள் தொடர்பான முக்கியமான இடங்களையும் பார்வையிடுவதுடன், தம்மினத்தவரைவிட வேறு இனத்தவரையும் நன்கு அறிந்து பழகுவதற்காகவும் மேற்கொள்ளுகின்ற பயணங்களே, உல்லாசப்பயணம் ஆகும். இவ்வாறு உல்லாசப்பயணத்தை மேற்கொள்கின்றவர்கள், தமது நோக்கத்துக்காகப் பெருந்தொகையான பணத்தினைச் செலவு செய்கின்றார்கள்.

இந்த வகையில் இலங்கையானது இயற்கை வளங்கள் நிரம்பப்பெற்றிருப்பதும், இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனவும் அழைக்கப்படுவது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இவ்வாறான இயற்கை வளம் பொருந்திய இலங்கைக்கு உல்லாசப்பயணிகள் வருகையானது இலங்கைக்கு ஒரு கட்புலனாகா ஏற்றுமதியாகையால் இவற்றின் மூலம் பெறப்படுகின்ற வருமானமானது அந்நிய நாணயப் பற்றாக்குறையினை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் எனலாம்.

இவ் உல்லாசப் பிரயாணத்துறையினால் இலங்கைக்கு பின்வரும் நன்மைகள் ஏற்படுகின்றன.

### A. அந்நியச் செலாவணியை உழைக்கலாம்

வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் நாடுகளுக்கு அந்நியச் செலாவணியை உழைப்பதென்பது, மிகக் கடினமானதாகும். உல்லாசப் பிரயாணம் என்பது, அந்நியச் செலாவணியைக் கொடுக்கும் ஒருகைத்தொழிலாகும். அந்நியர்கள் நம்நாட்டிற்கு வரும்பொழுது, தம் நாட்டுப் பணத்தை அதிகமாக நம் நாட்டிற்குள் செலவு செய்கின்றார்கள். எனவே, அப்படியானவர்களை கூடுதலான அளவு வரவழைத்து அந்நியச் செலாவணியை உழைக்கலாம்.

### B. வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

உல்லாசப் பிரயாணிகளை உபசரிப்பதற்காக நாம் பல்வேறு சேவைகளைப் புரியவேண்டும். தகுந்த வாடி வீடுகள், தங்குமிடவசதிகள் என்பனவற்றை அளிப்பதுடன் சேவைகளையும் இவர்களுக்கு வழங்க வேண்டும். இத்துடன் இவர்களுக்குப் போக்குவரத்துக்கு வேண்டிய ஆடம்பர வாகனங்களையும் ஏனைய வசதிகளையும் அளித்தல் வேண்டும். இவையெல்லாம் நம் நாட்டில் உள்ளவர்கட்கு வருமானத்தை ஈட்டுவதுடன் பலபேருக்கும் தொழில் வாய்ப்பையும் வழங்கும்.

இந்தவகையில் 1992ஆம் ஆண்டு சுற்றுலாத்துறையினால் இலங்கையருக்கு 67200 தொழில் நிலைகள் வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் நேரடி தொழில் வாய்ப்புக்கள் 28000. மறைமுக தொழில் வாய்ப்புக்கள் 39200 உம் கிடைத்துள்ளது. நேரடித் தொழில் நிலை என்பது பின்வருவனவற்றினைக் குறிக்கும் முகாமைத்துவம், தொழில்நுட்ப எழுதுவினைஞர், மேற்பார்வையாளர், பொறிகள் இயக்குனர் என்பன அடங்கும்

### C. நாடுகளுக்கிடையே உறவை வளர்க்கலாம்.

தற்காலத்தில் நாடுகளுக்கிடையில் உறவு இருப்பது மிகவும் அவசியமானதாகும். இது வியாபாரத்தை வளர்க்கும். நமக்கு கஷ்டமான நேரங்களில் கடன் உதவிகளைப் பெறலாம். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான தொழில்நுட்ப அறிவு, உபகரணங்கள், இயந்திரங்கள் போன்றவற்றை எமக்கு அளிப்பர். இது வெளிநாட்டில் இருந்துவரும் உல்லாசப்பயணிகளை ஆதரித்து அனுப்புவதன்மூலம் அடையலாம்.

### D. உள்நாட்டுப் பொருட்களைப் பிரபல்யம் ஆக்கலாம்.

உல்லாசப்பயணிகள் நம்நாட்டில் இருக்கும் உற்பத்திப் பொருட்களைப் பார்வையிடுவர். எனவே எமது நாட்டுப் பொருட்கள் வெளிநாடுகளில் பிரபல்யம் அடையும்.

இவ்வாறான பல நன்மைகளைப் பெற்றுத்தருகின்ற உல்லாசப் பிரயாணத் துறையினை மேலும் இலாபம் தரும் கைத்தொழிலாக மாற்றுவதற்காக நாட்டில் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் டம்புள்ள தீவானது, உல்லாசப்பயணத் தீவாக மாற்றப்பட்டு இங்கு உல்லாசப்பயணப் படகு சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் டம்புள்ள தீவு வருமானமானது உல்லாசக் கைத்தொழில் துறையின் வருமானத்தில் கணிசமானதோர் பங்கினை வகிக்கின்றது.

மேலும் இலங்கையின் உல்லாசப்பயணக் கைத்தொழில் தொடர்பான விபரங்களைப் பின்வரும் சிறு தலைப்புக்கள் மூலம் விளக்கலாம்.

**பயணிகள் விடுதிகள்:-**

இலங்கையில் அமைக்கப்பட்ட முதல் ஐந்து நட்சத்திரப் பயணிகள் விடுதி ''ஹோட்டல் சிலோன் இன்ரர் கொன்ரினென்ரல்'' (Hotel Ceylon Inter - Continental) ஆகும். இதில் 250 விருந்தினர் சாலைகள் உண்டு. இலங்கையிலுள்ள மிகப்பெரிய பயணிகள் விடுதி ''லங்கா ஒபரோய்'' (Lanka Oberoi) ஆகும். இது 520 விருந்தினர் அறைகளைக் கொண்டதாகும். இலங்கையில் மிகப் பழமை வாய்ந்த உல்லாசப்பயணிகள் விடுதி ''ஹோட்டல் தப்ரபேன்'' (Hotel Taprabane) ஆகும்

இலங்கையில் காணப்படுகின்ற தாபிடப்பட்ட நிறுவனங்களின் உல்லாசப்பயணிகள் தங்குவதற்கான அறைகளின் எண்ணிக்கை தற்பொழுது 10214 ஆகும். இது 1991 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.5% அதி

கரிப்பாகும். இங்கு காணப்படும் படுக்கைகளின் எண்ணிக்கை 19907 ஆகும். சுற்றுலாவிடுதிக் கூறுகளின் எண்ணிக்கை தற்பொழுது 127 ற்கு விரிவடைந்துள்ளது.

### பிரயாண வியாபாரம் :-

இலங்கையிலுள்ள பிரயாணப் பிரதிகர்த்தாக்களைத் தாபிப்பதற்கும் அரசாங்கம் உதவிபுரிந்து வருகின்றது. இவர்கள் இத்தொழிலில் ஈடுபடுவதாயின் உல்லாசப் பிரயாணச்சபையிடம் பதிவு செய்யவேண்டும். இவர்கள் தம் வியாபாரத்தை விளம்பரம் செய்யவும் முன்னேற்றம் அடையச் செய்யவும் வேண்டிய நிதியை அரசு கொடுக்கிறது.

### கேளிக்கைகள் :-

பயணிகள் உல்லாசமாகப் பொழுது போக்குவதற்காகப் பல்வேறு கேளிக்கைகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. நட்சத்திர விடுதிகளிலும் தனியாராலும் ''கசினோ'' (Kasino) என அழைக்கப்படும் சூதாட்ட நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. மாலைப் பொழுதை இனிதே கழிக்க ''இரவில் கொழும்பு'' (Colombo by Night) என்ற நிகழ்ச்சி நடாத்தப்படுகின்றது. இலங்கை பற்றிய அறிவினைப் பரப்பும் ''துண்டுப்படக் காட்சி'' (Slide Presentation) கலாச்சார நிகழ்ச்சிகள், டிஸ்கோ நடனம் (Disco Dancing) ஆகியவற்றுடன் இரவு உணவையும் ஒரு தொகுதியாக வரையறுத்த கட்டணத்துக்கு வழங்கி வருகின்றன. ''எக்ஸ்பிளோர் ஸ்ரீலங்கா'' சஞ்சிகை நடாத்தும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்குப் 10 அமெரிக்க டொலர் கட்டணமாக விதிக்கப்படுகின்றது. இவ்வாறு கலந்து கொள்பவர்களுக்கு 20 டொலர் பெறுமானமுள்ள ''கசினோ'' கூப்பன்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது

1992 ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில் மொத்த உல்லாசப்பயணிகளின் வருகையில் கேளிக்கைகளுக்கான நோக்கத்துடன் வந்தவர்களின் எண்ணிக்கை 373215 பேர் ஆகும். இவற்றுடன் வியாபார நோக்கத்துக்காகவும் பிரயாணிகள் வருகின்றனர். 1992 ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில் சுற்றுலா இரவுகளின் எண்ணிக்கை 4,000,000 ஆகவுள்ளது.

### விளம்பரம் :-

உல்லாசப்பிரயாணம் தொடர்பாக பலநாடுகளில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இவ் விளம்பரமானது இலங்கை உல்லாசப்பயண சபையாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இது விளம்பரச் செலவைக் குறைப்பதற்காக அந்நியநாடுகளிலிருக்கும் இலங்கைப் பிரதிகர்த்தாக்களினூடாகப் பொதுத்தொடர்பினை நடாத்தி வருகின்றது. அத்துடன் விளம்பரத்துக்காகச் சஞ்சிகைகள் வரைபடங்கள் போன்றவற்றையும் பயன்படுத்துகின்றனர்.

இந்த வகையில் உல்லாச பயணிகட்குத் தேவையான தகவல்கள் தற்போது சர்வதேச தரத்திலமைந்த ஒரு சஞ்சிகை ஒன்றின் மூலம் வெளியிடப்பட்டு வருகின்றன. ''எக்ஸ்பிளோரர் ஸ்ரீலங்கா'' (Explore SriLanka) என்ற இச்சஞ்சிகை ஹொங்கொங்கிலுள்ள ''கொண்டினன்டல் ரிசோர்ட்ஸ் லெற்'' (Continental Resorts Let) என்ற நிறுவனத்தால் வெளியிடப்பட்டு வருகின்றது உல்லாசப் பயணிகட்குத் தேவையான பலவிதமான தகவல்களை உள்ளடக்கிய இச்சஞ்சிகை 86 இலிருந்து வெளியிடப்பட்டுவருகின்றது.

### புள்ளிவிபரங்கள்:-

உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக வேண்டிய புள்ளி விபரங்களை சேகரிப்பதற்கு உல்லாசப் பிரயாணசபை ஒரு புள்ளி விபரப்பகுதியை தாபித்துள்ளனர் இது உல்லாசப்பிரயாணிகள் தொடர்பாகவும், தேவைகள் தொடர்பாகவும் புள்ளிவிபரத்தை சேகரிக்கும். அதனடிப்படையில் சேகரிக்கப்பட்ட தரவுகள் ஆவன:

- ★ 1992 இல் சுற்றுலா வருகைகளானது 393669 ஆக விளங்கியது இது 1984 இன் பின்னரான அதிகூடிய மட்டமாகும்.
- ★ பயணிகள் செலவிட்ட இரவுகளின் எண்ணிக்கை 4000,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது இது 1991 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 20% அதிகரிப்பாகும்
- ★ கிழக்கு ஐரோப்பா மற்றும் பொதுநலவாய சுதந்திர சோவியத் நாடுகள் தவிர்ந்த எல்லாப்பிரதேசங்களிலும் இருந்து வருகைகள் அண்மைய 1992 இல் அதிகரிப்புக்களை பதிவு செய்தன இவற்றுள் மேற்கு ஐரோப்பா முன்னணிச் சந்தையென்ற, அதன் முன்னணி நிலையினைத் தொடர்ந்து பேணியதுடன் 1991 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 1992 இல் அதன் சந்தைப் பங்கு 63% ஆக அதிகரித்துள்ளது.

★ இரண்டாவது பெரிய சந்தையான ஆசியாவின் வருகைகள் 1992 இல் 30% இல் இருந்து 29% ஆக குறைவடைந்தன. இங்கு வந்தோரில் 310714 பேர் களியாட்ட நோக்கத்துக்காகவும் வந்திருந்தனர். இவை தொடர்பான தரவுகள் பிரதேச அடிப்படையில் வருமாறு:

| நாடுகள் | வருகைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1 – 0 ஐரோப்பா | 250035 |
| 1 - 1 பிரான்ஸ் | 40227 |
| 1 - 2 ஜேர்மனி | 85443 |
| 1 - 3 இத்தாலி | 25575 |
| 1 - 4 ஐக்கியராச்சியம் | 34602 |
| 1 - 5 ஏனையவை | 64188 |
| 2 – 0 வட அமெரிக்கா | 12615 |
| 2 - 1 கனடா | 4104 |
| 2 - 2 ஐக்கிய அமெரிக்க நாடுகள் | 8511 |
| 3 – 0 ஆசியா | 114162 |
| 3 - 1 யப்பான் | 28797 |
| 3 - 2 இந்தியா | 25944 |
| 3 - 3 பாகிஸ்தான் | 11481 |
| 3 - 4 கொங்கொங் | 8370 |
| 3 - 5 ஏனையவை | 39570 |
| 4 – 0 அவுஸ்திரேலியா | 126363 |
| 4 - 1 அவுஸ்திரேலியா | 10995 |
| 4 - 2 நியூசிலாந் | 1161 |
| 4 - 3 ஏனையவை | 207 |

பிரயாணம் தொடர்பான அரச அமைப்பு "உல்லாசப் பிரயாண சபை" ஆகும். இது 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது இது சுற்றுலாத் தொழில் தொடர்பான வல்லுநர்களின் உதவியைப் பெற, பாடசாலைகளை தாபித்து வெளிநாட்டு வல்லுநர்களின் உதவியுடன் பயிற்சியும் அளிக்கின்றது. அத்துடன் ஹோட்டல் பணியாளர்களுக்கான வகுப்புக்களையும் நடாத்துகிறது.

இலங்கையின் உல்லாசப் பிரயாணத்துறையானது, அண்மைய ஆண்டுகளில் இனப்பிரச்சினை காரணமாக ஒரு வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளது. இந்நிலையானது பிரேமதாசா கொல்லப்பட்டவுடன் மேலும் தீவிரமடைந்துள்ளது.

எனவே சுற்றுலாத்துறையானது பெருமளவு வருமானத்தை ஈட்டித் தருவதுடன் இலங்கைக்கேயுரிய தனித்துவமான கலாச்சாரங்களைப் பாதிப்பதுடன் அரசியல் தாக்கங்களையும் ஏற்படுத்தாமலில்லை.

உசாத்துணைகள்:-

1. வணிக மஞ்சரி 1988 June - August
2. மத்திய வங்கி ஆண்டறிக்கை 1992
3. நம்நாட்டு வணிகமும் நிதியும்

(ந. ஞானேந்திரன் B. Com.)

---

இலங்கையின் யுனெஸ்கோ கலாச்சார முக்கோண வலயத்தில் உள்ள "டம்புளு" எனும் திவானது, உல்லாச பயணத்தீவு என அழைக்கப்படுகின்றது. இத் தீவிற்கு உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் செல்கின்றனர், உல்லாசப் பயணப் படகு சேவை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# கணக்கீட்டு நியமம் 08இல் பெறுமானத் தேய்வு ஒரு கண்ணோட்டம்

டபிள்யு. யே. துசைரத்தினம்
B. Com. (Hons) Dip. in Ed. Dip. in Com.
MAAT. வணிகதுறைத் தலைவர்
யாழ். தொழில்நுட்பக் கல்லூரி.

கட்புலனாகும் நிலையான சொத்துக்களின் பெறுமதியில் ஏற்படும் குறைவு பெறுமானத் தேய்வு எனப்படும். இது சொத்துக்களின் பாவனை மற்றும் காலக் கழிவு, உற்பத்திச் செய்முறை மாற்றம், வழக்கொழிதல், பழமையாதல் போன்றவற்றால் ஏற்படுகின்றது.

பெறுமானத் தேய்வு என்பது, நிலையான சொத்துக்களின் கிரயத்திலிருந்து அதன் பயன்தரு பொருளியல் பாவணைக்கால முடிவிலுள்ள (சக்கைப்) பெறுமதியினைக் கழித்து வரும் தொகையினை, அச் சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் ஏதேனும் ஒரு ஒழுங்கான முறையில் வருமானங்களுக்கு எதிராகச் சாட்டுதல் செய்யப்படுவதற்காகப் பகிர்ந்தளிக்கப்படும் ஒரு செய்முறை எனலாம். வருவாய் உழைப்பது தொடர்பில் இச் சொத்துக்கள் உபயோகிக்கப்படுவதாலும் காலக்கழிவு போன்ற ஏனைய காரணிகளாலும் சொத்துக்களின் தேய்வு, நுகர்வு என்பவற்றின் பெறுமானம் கணிப்பீடு செய்யப்படவேண்டி ஏற்படுகின்றது.

## நியமம் 8 பெறுமானத்தேய்வு பற்றிக் கூறுவது என்ன?

பந்தி 19:- பெறுமானத்தில் குறைவடையத்தக்க அனைத்து நிலையான சொத்துக்களுக்கும் பெறுமானத் தேய்வு தாக்கல் செய்யப்படவேண்டும்.

பந்தி 20:- ஒரு சொத்தானது உபயோகிக்கப்படும் போது எமக்கு அதனால் அனுகூலம் ஏற்படுகிறது. எனவே அச்சொத்தின் கிரயமானது (சக்கைப் பெறுமதி கழித்த தொகை) அச்சொத்தின் பொருளியல் ஆயுட்காலம் முழுவதற்கும் பகிரப்படுவதற்காகப் பெறுமானத் தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

பந்தி 21: சொத்தின் முன்கொண்டு செல்லும் மீதியில் பெறுமானத் தேய்வுக்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்படவேண்டியதுடன் முழுப்பெறுமானத் தேய்வும் இலாபநட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்படவும் வேண்டும்.

பந்தி 22:- மிகவும் பொருத்தமான பெறுமானத் தேய்வுக் கணிப்பு முறை தெரிவு செய்யப்படவேண்டியதுடன் அது தொடர்ச்சியாகவும் கடைப்பிடிக்கப்படவும் வேண்டும்.

பந்தி 23:- சொத்தின் பயன்தரு ஆயுட்காலமானது ஒழுங்காக மீளாய்வு செய்யப்படவேண்டியதுடன் தேவைப்படின் அது மீளமைக்கப்படவும் வேண்டும்.

பந்தி 24:- சொத்துக்களில் ஏதேனும் நிரந்தரப் பெறுமதிக் குறைவுகள் ஏற்படின் அது உடனடியாகப் பதிவழிக்கப்படவும் வேண்டும்.

பந்தி 25:- பதிவழிக்கப்பட்ட தொகைகள் சொத்தில் மீண்டும் சேர்க்கப்படுவதில்லை.

பந்தி 26.- இறையில் காணிக்குப் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை எனினும் ஒழிந்து போதலுக்கு அல்லது பாரிய பாதிப்புக்கு காணியின் பெறுமதி உட்பட்டால் இறையில் காணியின் மீதும் பெறுமானத்தேய்வு செய்யலாம்.

பந்தி 27:- பெறுமானத் தேய்வுத் தொடர்பில் எல்லா முக்கிய தகவல்களும் வெளிப்படுத்தப்படவேண்டும்.

## நியமம் 8இல் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமானத் தேய்விடத்தக்க சொத்துக்கள் [பந்தி - 3]

1. (அ) உற்பத்தித் தேவைக்கு என வைத்திருக்கப்படும் சொத்துக்கள்.

   (ஆ) பொருட்கள் சேவைகளின் விநியோகத்திற்கு என வைத்திருக்கப்படும் சொத்துக்கள்.

   (இ) ஏனையோருக்கு வாடகைக்கு விடுவதற்காக வைத்திருக்கப்படும் சொத்துக்கள்.

   (ஈ) நிர்வாக நோக்கில் பேணப்படும் சொத்துக்கள்.

   (உ) மேற்படி (அ) — (ஈ) வரைக்கான நோக்கில் வைத்திருக்கப்படும் சொத்துக்கள்.

2. நுகர்வுத் தேவைக்காகவோ அன்றேல் மீள் விற்பனை நோக்கிலோ அன்றி நிரந்தரப் பாவனைக்காக வைத்திருக்கப்படும் சொத்துக்கள்.

3. ஒரு ஆண்டுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு உபயோகப்படுத்தவென நிர்மாணிக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட சொத்துக்கள்.

4. பயன்தரு ஆயுட்காலத்தை உடைய சொத்துக்கள்.

## இந்நியமத்தில் உள்ளடக்கப்படாத சொத்துக்கள் (பந்தி - 4)

1. காடுகளும் மீளப்பிறப்பிக்கத்தக்க இயற்கை வளங்களும்.

2. கனிவள உரிமை தொடர்பான செலவினம் - கனிவளம், எண்ணெய், இயற்கை வாயு போன்ற மீளப்பிறப்பிக்கப்பட இயலாத வளங்கள்.

3. நன் மதிப்பும் மற்றும் கட்புலனாகாச் சொத்துக்களும்

4. ஆராய்ச்சி அபிவிருத்திச் செலவுகள்.

## பெறுமானத் தேய்விற்கு ஏற்பாடு செய்வதன் நோக்கம்.

1. இலாப நட்டலுக்கு நிலையான சொத்துக்கள் பயன்படுத்தப்படும்போது சொத்தின் பெறுமதி குறைவடைகின்றது. எனவே இலாபத்துக்கு எதிராகப் பெறுமதிக் குறைவு தாக்கல் செய்யப்பட்டாலேயே உண்மை இலாபம் கணிக்கப்பட முடியும்.

2. குறித்த திகதியில் நிறுவனம் ஒன்றின் நிதி நிலைமையைக் காட்டும் கூற்றே ஐந்தொகை என்பதால் குறித்த நிதியாண்டு முடிவில் சொத்தின் பெறுமதியில் ஏற்பட்ட குறைவினைக் கழித்தபின் உள்ள பெறுமதி வெளிப்படுத்தப்படும்போதே சொத்தின் உண்மைப் பெறுமதி புலப்படும்.

3. பெறுமானத்தேய்வு கருத்தில் கொள்ளப்படாது கணிக்கப்பட்ட இலாபத்தை முழுமையாக உரிமையாளர் எடுத்துக் கொள்ளும்போது வியாபார இலாபத்தை மாத்திரமன்றி தான் வியாபாரத்தில் இட்ட முதலின் ஒரு பகுதியையும் எடுத்துக் கொள்கிறார்.

4. நிலையான சொத்துக்கள் அவற்றின் பயன்தரு ஆயுட்காலமுடிவில் பிரதியீடு செய்யப்படவேண்டிய நிலையில் பெறுமானத்தேய்வு செய்யப்படாவிடின் சொத்தினை மீளமைக்க நிதி இல்லாதிருக்கும்.

பின்வரும் உதாரணம் பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு செய்யப்படுவதன் மூலம் மேற்படி நோக்கங்கள் அடையப்படும் விதத்தைத் தெளிவுபடுத்தும்.

அருண் கம்பனி 1. 1. 90 இல் 250, 000 ரூபா மூலதனத்துடன் வியாபாரம் ஆரம்பித்தது. ரூபா 150, 000 பெறுமதியான பொறி ஒன்றைக் கொள்வனவு செய்ததுடன் மிகுதிப் பணத்தைத் தொழிற்படு மூலதனத் தேவைக்கும் பயன்படுத்தினர். இச் சொத்தின் பாவனைக்காலம் 3 வருடம் ஆகும்.

கடந்த 3 வருட விற்பனை, ஆண்டு தோறும் ரூபா 180, 000 ஆக இருந்தது எனவும். இலாபம் முழுவதும் பங்கிலாபமாகப் பகிரப்படுகிறது எனவும் கொண்டால்.

### இலாப நட்டக் கணக்கு

| விபரம் | 1 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு |
|---|---|---|---|
| விற்பனை | 180 000 | 180 000 | 180 000 |
| விற்ற சரக்கின் கொள்விலை | | | |
| - மற்றும் செலவுகள் | (100 000) | (100 000) | (100 000) |
| தேறிய இலாபம் | 80 000 | 80 000 | 80 000 |
| பங்குஇலாபம் | (80 000) | (80 000) | (80 000) |
| இலாப மீதி | இல்லை | இல்லை | இல்லை |

இதனடிப்படையில் இவர்களது காசுப் பாய்சல் வருமாறு

## காசேடு.

| | | | |
|---|---|---|---|
| **1ஆம் வருடம்** | | | |
| மூலதனம் | 250 000 | பொறி | 150 000 |
| விற்பனை | 180 000 | கொள்வனவும் செலவுகளும் | 100 000 |
| | | பங்கு இலாபம் | 80 000 |
| | | மீதி கீ / செ | 100 000 |
| | 430 000 | | 430 000 |
| **2 ஆம் வருடம்** | | | |
| மீ / கீ / வ | 100 000 | கொள்வனவும் செலவுகளும் | 100 000 |
| விற்பனை | 180 000 | பங்கு இலாபம் | 80 000 |
| | | மீதி கீ / செ | 100 000 |
| | 280 000 | | 280 000 |
| **3 ஆம் வருடம்** | | | |
| மீ / கீ / வ | 100 000 | கொள்வனவும் செலவுகளும் | 100 000 |
| விற்பனை | 180 000 | பங்கு இலாபம் | 80 000 |
| | | மீ / கீ / செ | 100 000 |
| | 280 000 | | 280 000 |
| **4 ஆம் வருடம்** | | | |
| மீ / கீ / வ | 100 000 | | |

*3 ஆம் வருட இறுதியில்மூலதனத்தில் தொழிற்படு மூலதனத்திற்கான நிதி மட்டுமே மீதியாக உள்ளது. நிலையான சொத்து மீளமைப்பதற்கான நிதிவளம் அற்றுப் போயிருப்பது புலனாகின்றது. பெறுமானத் தேய்வு செய்யாத காரணத்தால் தமது மூலதனத்தையே இலாபமாக இவர்கள் எடுத்துக்கொண்டமை புலப்படுகிறது. வியாபார முயற்சியைத் தொடர்ந்தும் கொண்டு நடத்த முடியாத நிலை தோன்றியுள்ளது. அதாவது தொடர்ந்து செல்லும் கோட்பாடு பின்பற்றப்பட முடியாத நிலை தோன்றியுள்ளது. மாறாகப் பெறுமானத் தேய்வுக்கு ஏற்பாடு செய்திருப்பின் நிலைமை எவ்வாறு தோன்றும் எனப் பார்ப்போம்.*

### இலாப நட்டக் கணக்கு

| | 1 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு |
|---|---|---|---|
| விற்பனை | 180 000 | 180 000 | 180 000 |
| விற்ற சரக்கின் கொள்விலை மற்றும் செலவுகள் | (100 000) | (100 000) | (100 000) |
| | 80 000 | 80 000 | 80 000 |
| பெறுமானத் தேய்வு ஏற்பாடு | (50 000) | (50 000) | (50 000) |
| தேறிய இலாபம் | 30 000 | 30 000 | 30 000 |
| பங்கு இலாபம் | (30 000) | (30 000) | (30 000 |
| இலாப மிகுதி | இல்லை | இல்லை | இல்லை |

### காசுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1 ஆம் வருடம் முலதனம் | 250 000 | பொறி | 150 000 |
| விற்பனை | 180 000 | கொள்வனவு மற்றும் செலவுகள் | 100 000 |
| | | பங்கு இலாபம் | 30 000 |
| | | மிகுதி / கீ / செ | 150 000 |
| | 430 000 | | 430 000 |
| 2 ஆம் வருடம் | | கொள்வனவும் மற்றும் செலவுகளும் | 100 000 |
| மீ / கீ / வ | 150 000 | பங்கு இலாபம் | 30 000 |
| விற்பனை | 180 000 | மிகுதி / கீ / செ | 200 000 |
| | 330 000 | | 330 000 |
| 3 ஆம் வருடம் | | கொள்வனவும் மற்றும் செலவும் | 100 000 |
| மீ / கீ / வ | 200 000 | பங்கு இலாபம் | 30 000 |
| விற்பனை | 180 000 | மீ / கீ / செ | 250 000 |
| | 380 000 | | 380 000 |
| 4 ஆம் வருடம் | | | |
| மிகுதி கீ / வ | 250 000 | | |

3ஆம் வருட முடிவில் நிலையான சொத்துப் பதிவழிந்து போகும் போது அதனை மீளமைக்கவேண்டிய நிதி 150, 000ரூபாவும் வியாபாரத்தை தொடர்ந்து நடத்த தேவையான 100, 000ரூபாவும் அதாவது ஆரம்ப முல தனத்தொகை முழுவதும் மீண்டும் பெட்டியில் இருப்பதால் வியாபாரம் தடையின்றித் தொடர்ந்து இயங்க வல்லமை பெறுகின்றது.

## சொத்துக்களின் பெறுமதியில் மாற்றம் செய்தலும் மீளாய்வு செய்தலும்

நிலையான சொத்துக்கள் ஒழுங்காக மீளாய்வு செய்யப்பட வேண்டியிருப்பதால் அவற்றின் பெறுமதியும், பயன்தரு ஆயுட்காலமும் கருதிற் கொள்ளப்பட வேண்டும்.

பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படும் முறையில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டுமாயின் அது கொள்கை மாற்றம் என்பதால், இங்கு கொள்கை மாறாமை என்ற கோட்பாடு பாதிக்கப்படுகின்றது.

சொத்தின் பெறுமதி மீளாய்வு செய்யப்படுமாயின் அதன் பயன்தரு ஆயுட்காலத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும். இது ஒப்பீட்டுக் கோட்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எவ்வாறாயினும் பெறுமானத் தேய்வு முறையில் அல்லது சொத்தின் பெறுமதியில் மாற்றம் அல்லது மீளாய்வு செய்யப்படும்போது தொழிற்பாட்டு இலாபத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படுத்தப்படுமாயின் இது உடனடியாக அமுற்படுத்தப்பட்டு சொத்தின் பெறுமதி மீளக் குறிப்பிடப்பட்டு மாற்றம் செய்யப்பட்ட பொருளியல் பயன்தரு காலத்திற்கு இது பதிவழிக்கப்பட வேண்டும்.

பின்வரும் உதாரணம் இதனைத் தெளிவுபடுத்தும்.

உ+ம் (அ)

1. 1. 91இல் பொறி ஒன்று ரூபா 140000 ரூபாவுக் கொள்வனவு செய்யப்பட்டது. இதன் பயன்தரு ஆயுட் காலமானது 8 வருடங்கள் எனவும் இக்கால முடிவில் பொறியின் சக்கைப் பெறுமதி ரூபா 20000 எனவும் மதிப்பிடப்பட்டது. 3 ஆம் வருட ஆரம்பத்தில் இச்சொத்தினது பயன்தரு ஆயுட்காலமானது இன்னும் 4 வருடங்கள் மட்டுமே என அறியப்பட்டது. இம்மீளாய்வினை ஏடுகளில் இடம்பெறச்செய்ய இயக்குநர்கள் தீர்மானித்துள்ளார்கள். (சொத்து நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்விற்கு உட்படுத்தப்படுகிறது எனக் கொள்க)

3ஆம் வருட ஆரம்பத்தில் பேரேட்டுக் கணக்குகளில் இதன் பதிவுகள் பின்வருமாறு தோன்றும்.

**பொறி இயந்திரக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீதி | 180 000 | | |

**பொறி இயந்திர பெறுமானத் தேய்வு ஒதுக்கற் க/கு**

| | | | |
|---|---|---|---|
| | | மீதி | 30 000 |

இப்பொழுது சொத்தின் எஞ்சிய பெறுமதியின் மீதான பெறுமானத் தேய்வு பின்வரும் அடிப்படையில் கணிப்புச் செய்யப்படும்.

| | |
|---|---|
| சொத்தின் கொள்விலை | 140000 |
| பயன்தருகால இறுதி (சக்கை) பெறுமதி | ( 20000) |
| | 120000 |
| இன்றுவரை பதிவழித்த பெறுமான தேய்வு | ( 30000) |
| சொத்தின் எஞ்சிய பெறுமதி | 90000 |

இங்கு சொத்தின் எஞ்சிய பெறுமதி ரூபா 90000/= புதிய பயன்தரு ஆயுட்காலம் 4 வருடங்களில் பதிவழிக்கப்படவேண்டும். அடுத்த 4வருடங்களில் ஆண்டுக்கான பெறுமானத் தேய்வுத்தாக்கல் 90000 ÷ 4 = ரூபா 22500 ஆகும்.

மேற்படி ஆயுட்கால மாற்றம் போன்று சொத்தின் பெறுமதி மீளாய்வு செய்யப்படுவதாகக் கொண்டால் பதிவுகள் எவ்வாறு இருக்கும் எனப்பார்ப்போம்.

உ+ம் (ஆ)

தரவுகள் மேற்படி எனக்கொண்டு 3 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சொத்தின் பெறுமதி ரூபா 74000 என மதிப்பிடப்பட்டதாகவும் இதன் பொருளியல் பயன்தரு ஆயுட்காலத்தில் மாற்றம் ஏற்படவில்லை எனவும் கொண்டு, பெறுமானத் தேய்வுப் பதிவுகளைத் தந்தால்

சொத்தின் கொள்விலை 140000
இரண்டு வருட திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கம் 30000
புத்தகப் பெறுமதி 110000
புதிய மதிப்பீட்டின்படி சொத்துப் பெறுமதி ரூபா74000

மதிப்பீட்டின் போது பெறுமதிக் குறைவு = 110000—74000
= ரூபா 36000

இப் பொறுமதிக் குறைவானது ஏட்டில் பதிவழிக்கப்பட வேண்டும். இதற்கான பதிவுகள்.

| | | |
|---|---|---|
| பெறுமானத் தேய்வுக் கணக்கு (இலாபநட்டக்கணக்கு) வரவு | 36 000 | |
| பெறுமானத் தேய்வு ஒதுக்கற் கணக்கு செலவு | | 36 000 |

**பெறுமானத் தேய்வு கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| பெ. தே. ஒ | 36 000 | | |

**பெறுமானத் தேய்வு ஒதுக்கற் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீ / கீ / செ | 66 000 | 1. 1. ×3 மீ/கீ/வ | 30 000 |
| | | பெ. தே | 36 000 |
| | 66 000 | | 66 000 |
| | | மீ/கீ/வ | 66 000 |

[இதனால் சொத்தின் புதிய புத்தகப் பெறுமதி ( 140000—66000)=74000 ஆகும்.]

சொத்தின் புதிய புத்தகப் பெறுமதியானது சொத்தின் எஞ்சிய பொருளியல்பயன்தரு ஆயுட்காலம் 6 வருடங்களில் பதிவழிக்கப்படின் ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு வருமாறு

மீளமதிப்பீட்டின்படி சொத்தின் பெறுமதி 74000
பொருளியல் பயன்தரு ஆயுட்கால இறுதி (சக்கைப் ) பெறுமதி 20000
பெறுமானத் தேய்வுக்குள்ளாகும் சொத்துப் பாகம் 54000

∴ ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு $54000 \div 4 =$ ரூ9000/=

இங்கு புதிய பெறுமானத் தேய்வு வீதம் $= \frac{100\%}{6} = 16\ 2/3\%$

∴ சதவீதமாக ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு $= \frac{54000 \times 16\ 2/3}{100} =$ ரூ9000

ஆகவே 3ஆம் ஆண்டு முடிவில் இவர்களது பேரேட்டுக் கணக்குகள் பின்வருமாறு தோன்றும்.

**பொறி இயந்திரக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/கீ/வ | 140 000 | | |

**பொறி பெ. தே. ஒதுக்கற் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/கீ/செ | 75 000 | 1.1. ×3 மீ/கீ/வ | 30 000 |
| | | பெ. தே | 36 000 |
| | | 31.12.×3 பெ. தே | 9 000 |
| | 75 000 | | 75 000 |
| | | மீ/கீ/வ | 75 000 |

**பொறி பெறுமானத் தேய்வுக் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| பெ. தே. ஒ | 36 000 | இலாப ந/க/கு | 45 000 |
| பெ. தே. ஒ | 9 000 | | |
| | 45 000 | | 45 000 |

**ஐந்தொகை**

| | | | |
|---|---|---|---|
| | பொறி இயந்திரம் | 140000 | |
| | கழி பெ. தே. ஒ | 75000 | 65000 |

நிலையான சொத்துக்களை அவற்றின் வரலாற்றுக் கிரயத்திலேயே ஏடுகளில் பேணப்படுவது வழக்கம். குறித்த சொத்தை மீளமைக்கும் நோக்கில் பெறுமானத் தேய்வுக்கு ஏற்பாடுசெய்வோமாயின் அச்சொத்தின் பயன்தரு பொருளியல் காலமுடிவில் திரண்டிருக்கும் தொகை பணவீக்க நிலைமை காரணமாக அதனை ஒத்த புதிய சொத்து ஒன்றை மீளமைக்கப்போதாததாக இருக்கலாம். மேற்படி உதாரணத்தில் 140000 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டபொறி அதன் 8 வருட ஆயுள்முடிவில் பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கில் ரூபா 140000 திரண்ட மீதியைக் கொண்டிருந்த போதும் 8 வருட முடிவில் பணவீக்க நிலைமையில் குறித்த 140000 ரூபாவுக்கு முன்னர் வாங்கிய சொத்தை இப்போது வாங்க இயலாதிருக்கும். எனவே முகாமையினர் மீளமைத்தல் கிரயத்தின் அதிகரிப்பை ஈடு செய்வதற்கதாக ஒரு மேலதிக தொகையை ஒதுக்க விரும்புவர்.

## எதிர்கால பணவீக்க (விலை ஏற்ற) நிலைமையைச் சமாளித்துச் சொத்தை மீளமைக்க மேலதிக தொகை ஏற்பாடு செய்யின்:-

உ+ம் (இ)

மேற்படி பொறி தொடர்பில் இதன் பயன்தரு ஆயுட்கால முடிவில் இதனை மீளமைக்க ரூபா 140000 போதாதுஎன முகாமையினர் கருதுவதால் எதிர்கால விலை அதிகரிப்பை ஈடுசெய்வதற்கதாக 5 ஆம் வருட ஆரம்பத்தில் மேலதிகமாக ரூபா 60000 ஒதுக்கம் செய்யத் தீர்மானித்தனர் என எடுப்போம்.

இதற்கான பதிவு ரூபா 60000 ஒரு இலாபப்பகிர்வாகக் கருதப்பட்டு சொத்து மீளமைத்தல் ஒதுக்கற் கணக்கில் செலவு வைக்கப்படவேண்டும். அதேவேளையில் 5 ஆம் வருட இறுதியில் வழமைபோல் சொத்தின் மீதான குறித்த பெறுமானத் தேய்வுத் தொகையும் இலாப நட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டு பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கில் செலவு வைக்கபடவேண்டும்.

## முடிவுக் கணக்குகளில் வெளிப்படுத்துதல் தேவைப்பாடுகள்.

பெறுமானத் தேய்வுக்குட்படும் சொத்துக்கள் தொடர்பில் பின்வருவன வெளிப்படுத்தப்பட வேண்டும்.

(அ) பயன்படுத்தப்பட்ட பெறுமானத் தேய்வுமுறை.

ஆ) சொத்தின் பொருளியல் பயன்தரு ஆயுட்காலம் அல்லது பெறுமானத் தேய்வு வீதம்.

(இ) ஆண்டு காலத்தில் தாக்கல் செய்த மொத்தப் பெறுமானத் தேய்வு.

(ஈ) திரண்ட பெறுமானத் தேய்வின் அசைவு.

[ நியமம் "8" தொடர்பிலான இக்கட்டுரை பரீட்சை நோக்கின் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. ]

''வணிகஜோதி''யின் 16வது மலரிற்கு எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

# RADIANT INSTITUTE

**Punkankulam,** **ARIYALAI.**

☆ இலங்கை வெளிநாட்டு பணியகம் வெளிநாட்டிற்கு தொழில் வாய்ப்பு தேடி செல்வோருக்கு தகவல் அளிப்பதற்காக ''அக்கரைச் சீமை'' எனும் வானொலி நிகழ்ச்சியை வழங்குகிறது.

---

**Best Wishes For VANIKA JOTHY**

**From**

*Specialists in*

**Readymade Garments**

★ Sarees
★ Shirtings
★ Suitings
★ Blouse Materials
★ Children Wear
ETC

# LINGAM *SILK* HOUSE

**DEALERS IN TEXTILES**

18, Power House Road,
JAFFNA.

Upstair
Model Market,
JAFFNA.

---

☆ ஏற்றுமதி உற்பத்தி கிராமிய கம்பனிகள் 1983. 11. 17ஆம் திகதிக்கு பின் உருவாக்கப்பட்டிருந்தாலே அவைக்கு வரிச்சலுகை, வரிவிடுமுறைகள் உண்டு.

''வணிக ஜோதி'' வளமுடன் வளர எமது நல்லாசிகள்.

அழகிற்கு அழகு செய்யும் அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு

★ சோபனா ★

நகை மாளிகை

116 V கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இலங்கையில் அப்புறப்படுத்தும் முகவர் நிலையமாக ''எம்சோ லிமிடெட்'' (Emso Ltd.) நிறுவனம் காணப்படுகிறது.

''வணிக ஜோதி'' வளர்க வளர்க என வாழ்த்துகிறோம்.

சுரேகா

புத்தகக் களஞ்சியம்

பாடசாலை, அலுவலக உபகரணங்கள் விற்பனையாளர்.

No.25 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

☆ 1994ஆம் ஆண்டு காப்புறுதி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

''வணிகஜோதிக்கு'' எமது நல்லாசிகள்.

''நிதான விலை'' ''சிறந்த ரகம்''
திருமணம் மற்றும் வைபவங்களுக்கேற்ற

காஞ்சிபுரம், தஞ்சூர், மணிப்புரி, மற்றும் நைலெக்ஸ், பெனாரிஸ், மைசூர் சில்க், வூலி சாறி வகைகள், பட்டு வேட்டிகள், சேட்டிங், சூட்டிங் மற்றும் ஏனைய புடவைத் துணுசுகளை தெரிவு செய்ய சிறந்த ஸ்தாபனம்

ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.

13, 14, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

கொக்கல முதலீட்டு வலயத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் 20% மானவற்றை உள்நாட்டில் விற்பனை செய்யலாம்.

''வணிகஜோதி'' வருக, வருக

★ DAYAMOND ★
VIDEO MOVIE

For - Quality Video Filming
Audio Recording & Photography
MAIN ROAD, NELLIADY.

★ டைமன் வீடியோ மூவி ★

சிறந்த வீடியோ, புகைப்படப் பிடிப்பாளரும், ஒலிப்பதிவு செய்பவர்களும்

உரிமையாளர்: கே. கே. சிறீதரன்

பிரதான வீதி, நெல்லியடி.

Times of Ceylon Ltd. ஐ அரசு சுவீகரித்து பின்னர் அதனை கலைத்துள்ளது.

# கணக்கீட்டின் இயல்புகள்
# NATURE OF ACCOUNTING

**வ. செந்தில்ராஜா**

B. Com. (Hons), HN. Dip - in - Com. (Adm.), FIAB (Lond)

*ஆசிரியர் யா / கனகரத்தினம் ம. ம. வி*

*(கல்லூரி பழைய மாணவன்)*

*பகுதிநேர விரிவுரையாளர் - தொழில்நுட்பக் கல்லூரி.*

*இக்கட்டுரையானது "கணக்கீட்டின் இயல்புகள்" பற்றிய அடிப்படை விடயங்களை அறிந்து கொள்ளும்பொருட்டு பின்வரும் தலையங்கங்களில் மட்டும் எழுதப்பட்டுள்ளது.*

1. 1 நிதிக்கூற்றுக்களின் நோக்கம்
1. 2 நிதிக் கூற்று பற்றிய தவறான எண்ணக்கரு
1. 3 கணக்கீட்டின் வரைவிலக்கணம்
1. 4 கணக்கீட்டின் சுற்றோட்டம்
1. 5 கணக்கீட்டின் வரையறைகள்
1. 6 கணக்கீட்டுத் தகவல்களில் அக்கறையுள்ளவர்கள்
1. 7 கணக்கீட்டின் அவசியத்தேவை

**வி**யாபார உலகில் எல்லோராலும் அடிக்கடி உச்சரிக்கப்படும் ஓர் பொதுவான சொற்பதமே கணக்கீடாகும் (Accounting). குறிக்கப்பட்ட ஒரு காலப் பகுதியில் நடைபெற்ற கொடுக்கல் - வாங்கல்களைப் பதிவு செய்து நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. கணக்கீட்டின் முதன்மையான நோக்கம் "வியாபார இலாபத்தை அளவிடுதல்" (To -Measure the Profit of the Business) என்பதாகும். இலாப நட்ட கணக்கினை அல்லது வருமான செலவுக் கூற்றினை தயாரிப்பதன்மூலம் இலாபம் அளவிடப்படுகின்றது. கணக்கீட்டின் இரண்டாவது நோக்கம் யாதெனில் "வியா

பாரத்தின் நிதி நிலைமையைக் கண்டறிதல்'' (To-Ascertain the Financial Possition of the Business) ஆகும். ஐந்தொகையினை தயாரிப்பதன்மூலம் நிதி நிலைமை கண்டறியப்படுகின்றது. சுருக்கமாகக் கூறுவதாயின் வியாபார இலாப - நட்ட கணக்கினூடாக இலாபத்தை அளவிடுதல் என்ற முதலாவது நோக்கமும், ஐந்தொகையைத் தயாரிப்பதனூடாக நிதிநிலைமையைக் கண்டறிதல் என்ற இரண்டாவது நோக்கமும் நிறைவு செய்யப்படுகின்றது.

வியாபார இலாப - நட்ட, மேற்குறித்த நிதிக் கூற்றுக்கள் ஐந்தொகை குறித்த ஒரு காலப்பகுதிக்கே தயாரிக்கப்படுகின்றது. எனினும் வழமையாக இக் காலப்பகுதி ஒரு வருடத்தைக் கொண்டிருக்கும். நிறுவனத்துடன் தொடர்புடைய, அக்கறைகொண்ட குழுவினரான உரிமையாளர், கடன் கொடுத்தோர், நிறுவன ஊழியர்கள், ஆய்வாளர்கள் (Researchers) பொருளியலாளர்கள் (Economists) நிதிப்பகுப்பாய்வாளர்கள் (Financiyal Analysts) ஆகியோருக்கு இன்றியமையாத பயனுள்ள பல தகவல்களை நிதிக்கூற்றுக்கள் வழங்குகின்றன.

மேற்குறித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படை நோக்கம் யாதெனில், மேற்குறித்த அக்கறை கொண்ட குழுவினருக்குத் தொகைரீதியான தகவல்களை வழங்குவதும்; பொதுமையான கணக்கீட்டுச் செய்முறைகளை வெளிப்படுத்துவதுமே ஆகும். ஏனெனில் வேறுபட்ட நோக்கங்களைக் கொண்ட மேற்குறித்த அக்கறை கொண்ட குழுவினர் ஒவ்வொருவரும் தமக்குப் பொருத்தமான பொருளாதாரத் தீர்மானங்களை (Economic Decisions) மேற்கொள்வதற்கே நிதிக்கூற்றுக்கள் வடிவமைக்கப்படுகின்றன.

காலத்திற்குக் காலம் நிறுவனத்தின் செயற்பாடுகள் மாற்றமடையும். நிறுவனத்தின் செயற்பாட்டில் ஏற்படும் மாற்றம் நிதிநிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும். நிதிநிலைமையில் ஏற்படும் மாற்றத்தை அக்கறை கொண்ட இக்குழுவினர் மிக உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருப்பர். நிறுவனம்பற்றி எந்தக் குழுவினர் அக்கறை கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு அதி உச்சளவான தகவல்களை வழங்குவதற்காகவே ஐந்தொகை வடிவமைக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக உரிமையாளர்கள் எப்போதும் தமது முலதனத்தில் அதிக அக்கறையுடையவர்களாகவே இருப்பார்கள். ஏனெனில் தமது முலதனத்துக்கு உழைக்கப்பட்ட இலாபம் எவ்வளவென்பதனை அறிவதிலேயே அவர்கள் அதிக கவனஞ் செலுத்துவர்.

## 1. 1 நிதிக் கூற்றுக்களின் நோக்கம்.

குறித்த காலப்பகுதியில் நிறுவனத்திற்குக் கிடைத்த வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதை நிதிக் கூற்றுக்கள் மூலம் அக்கறை கொண்ட குழுவுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதாவது நிதிக் கூற்றுக்கள் முழு அளவான பயனுள்ள பல தகவல்களை வெளிப்படுத்த வேண்டுமென்பதுடன் குறிப்பாக உரிமையாளர், கடன்கொடுத்தோர் தமது பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய இன்றியமையாத தகவல்களை வெளிப்படுத்த வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவை மாத்திரமன்றி பின்வரும் நோக்கங்களுக்காகவும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

அ. வெளிவாரிக் குழுக்கள் (External Groups) நிறுவனத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை அறிந்து கொள்வதற்கு.

ஆ. கடன் கொடுத்தோர் நிறுவனத்திற்கு கடனை வழங்குவதற்கான தீர்மானங்களை எடுப்பதற்கு.

இ. முதலீட்டாளர்கள் எதிர்காலத்தில் முதலீடுகளை நிறுவனத்தில் மேற்கொள்வதா, மேற்கொள்வதில்லையா என்ற முதலீட்டுத் தீர்மானத்தை எடுப்பதற்கு.

ஈ. நிறுவனத்தின் வளங்கள் உச்சமுறையில் பயன்படுத்தப்பட்டதா? முகாமை திறமையாகச் செயற்பட்டு எத்தகைய சாதனைகளை நிலைநாட்டின என்பன போன்ற இன்னோரன்ன தகவல்களை உரிமையாளர்கள் அறிந்து கொள்வதற்கு.

உ. நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றை அறிந்து கொள்வதுடன் நிறுவனத்தின் உழைக்குந் திறனை மதிப்பீடு செய்வதற்கு (Evaluating the Earning Power)

## 1.2 நிதிக்கூற்று பற்றிய தவறான எண்ணக்கரு:-

வியாபார நிறுவனத்தினால் உழைக்கப்பட்ட சரியான இலாபத்தையும் அல்லது ஏற்பட்ட நட்டத்தையும் தெரியப்படுத்துவதே வருமானக் கூற்றுக்கள் எனவும்; நிறுவனத்தின் நிதிநிலைமைகளினைச் சரியாகப் படம் பிடித்து வர்ணிப்பதே ஐந்தொகை எனவும் பொதுமகன் கருதுகிறான். அதாவது நிதிக் கூற்றுக்கள் ஒரு போதும் தவறில்லாத, பொய்யென்று காட்ட முடியாத, உண்மைகளை மட்டும் மிகத்துல்லியமாக படம்பிடித்து நிறுவனத்தின் மதிப்பினையும் உரிமையையும் வர்ணிக்கிறது என்பதை எல்லோருமே ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் கணக்கீட்டுத் தகவல்கள் பல்வேறுபட்ட கோட்பாடுகளையும் — மரபுகளையும் பின்பற்றியே நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன இவ்வாறான கணக்கீட்டுக்கலை முற்றிலுஞ் சரியானது என்று கூறுவதற்கில்லை. நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பின் வரும் அம்சங்களை நாம் அவதானிக்கலாம்.

☆ வியாபாரத்தின் உண்மைப் பெறுமதியினை (Real Worth) மதிப்பிட விரும்பும் ஒருவருக்குத் தேவையான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் இடம் பெறுவதில்லை. ஏனெனில் பண அலகில் ஏற்படும் மாற்றங்களையோ அன்றி சந்தைப் பெறுமானங்களையோ நிதிக்கூற்றுக்கள் கவனத்திற் கொள்வதில்லை.

☆ மேலும் பணரீதியான கொடுக்கல் — வாங்கல்களை மட்டுமே கணக்கீட்டில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நிறுவனத்தின் செயற்திறன் வாய்ந்த முகாமையாளர்களையோ, திறமைமிக்க ஊழியர்களையோ, அவர்களின் சிறந்த செயற்பாடுகளையோ அன்றேல் முகாமைத் தீர்மானங்களையோ நிதிக்கூற்றுக்கள் ஒரு போதும் வெளிப்படுத்துவதில்லை. சுருக்கமாகக் கூறினால் திறமைமிக்க மனிதவளங்களை பண அலகில் பெறுமதியிட்டு நிதிக்கூற்றுக்கள் காட்டுவதில்லை. இலாபங்களை ஈட்டுவதில் மனிதவளங்களின் செயற்பாடு நிறுவனங்களில் முக்கியத்துவம் பெற்ற போலும் நிதிக்கூற்றுக்களில் இடம் பெறுவதில்லல.

☆ நிறுவனத்தின் வருமானத்தைக் கணிப்பீடு செய்யும் கணக்காளர் ஒரு சில வற்புறுத்தல்கள் மத்தியில் கடமையாற்றுகின்றார்.

உ + ம்:- குறித்த ஆண்டுக்கான இலாபத்தைக் கணிப்பீடு செய்ய, சொத்துக்களின் கொள்விலையின் மீது தேய்மானம் ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஆனால் பணத்தின் கொள்வனவு வலுவில் ஏற்படும் மாற்றங்களை கணக்காளர் கவனத்தில் கொள்ளாது நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க வேண்டியவராக இருக்கின்றார்.

☆ நிதிக் கூற்றுக்களில் இடம்பெறும் சொத்துக்கள் கொள்விலையிலேயே காட்டப்படுகின்றன. ஆனால் பணத்தின் கொள்வனவு வலு காலத்திற்குக் காலம் வேறுபடுகின்றது. பணத்தின் பெறுமானத்திலேற்படும் மாற்றங்களை அது சுட்டிக்காட்டுவதில்லை.

உ + ம்:- ஒரு சொத்து 1970 ஆம் ஆண்டிலும் பின்னர் 1980 ஆம் ஆண்டிலும், பின்னர் 1990 ஆம் ஆண்டிலும் கொள்வனவு செய்யப்படுகின்றது. என்ன விலைக்கு சொத்து கொள்வனவு செய்யப்பட்டதோ அந்த விலை மட்டுமே கணக்கீட்டில் இடம்பெறும். ஆனால் 1970 1980, 1990 ஆகிய ஆண்டுகளில் பணத்தின் கொள்வனவு வலுவில் ஏற்பட்ட மாற்றங்களை கணக்கீட்டில் ஒப்பிடப்படுவதுமில்லை. அக்கறை செலுத்தப்படுவதில்லை.

இதன் பொருட்டு நிறுவனங்கள் "பணவீக்கக் கணக்கீடு" (Inflation Accounting) தயாரிக்க வேண்டிய நிலையில் உள்ளன. இருப்பினுங்கூட எல்லா நிறுவனங்களும் பணவீக்க கணக்கீட்டைத் தயாரிப்பதில் அதிக அக்கறை செலுத்துவதில்லை.

☆ பல கணக்கீட்டுப் பெறுபேறுகள் கணக்காளரின் தனிப்பட்ட தீர்மானங்களால் நிர்ணயிக்கப்படுகின்றன.

(அ) அறவிட முடியாக்கடன் ஒதுக்கத்திற்கு என ஏற்பாடு செய்யவேண்டிய தொகையை நிர்ணயித்தல்.

(ஆ) குறித்த நிதியாண்டில் பெறுமானத்தேய்வையும், அகற்றப்படவேண்டிய தொகைகளையும் பதிவழிப்பதற்கு பல்வேறுபட்ட முறைகளைத் தெரிவு செய்தல்.

உ + ம்:- பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்வதற்கு பல்வேறுபட்ட முறைகளில் தான் விரும்பிய ஒன்றைத் தெரிவு செய்தல்.

(இ) அபிவிருத்திச்செலவுகள், அருவச்சொத்துக்கள் என்பவற்றை தனது தனிப்பட்ட தீர்மானத்திற்கமைய நீண்ட காலத்தில் அல்லது குறுங்காலத்தில் பதிவழித்தல் (ஈ) பல்வேறுபட்ட இருப்பு வழங்கல் முறையில் தான் விரும்பிய ஒன்றை பின்பற்றல்.

உ + ம்:- முதல் வந்து முதல் வெளியே (FIFO) பின் வந்து முதல் வெளியே (LIFO) சராசரி முறை போன்ற பல்வேறு முறைகளில் தான் விரும்பிய ஒரு முறையைக் கையாளு தல்.

(உ) நிறுவனத்திற்கு ஏற்பட்ட ஒரு செலவை வருமானச் செலவாகவா அல்லது மூலதனச் செலவாகவா கருது வது என்பதனை கணக்காளரே தீர்மானிக்கிறார். ஒரு கணக்காளர் வருமானச் செலவை மூலதனச் செலவா காட்டலாம். அல்லது மூலதனச் செலவை வருமானச் செலவாக காட்டலாம். எது எவ்வாறாயினும் அதனையே நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கை என பிரகட னஞ் செய்வார்.

இதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் கவனஞ் செலுத்துபவர் முதலில் நிறுவன கணக்கீட்டுக் கொள் கைகளை அறிந்த பின்னரே நிதிக்கூற்றுக்களை ஆய் வுக்குட்படுத்தலாம். அவ்வாறில்லாவிடின் மேற்கூறிய காரணத்தால் நிதிக்கூற்று பற்றிய தவறான எண்ணங் களையே ஆய்வாளர் கொண்டிருப்பர்.

## 1. 3 கணக்கீட்டின் வரைவிலக்கணம்

"கணக்கீடு என்பது பண அலகு சார்ந்த நடவ டிக்கைகளையும் நிகழ்வுகளையும் குறித்தவோர் ஒழுங் கின்படி பதிவு செய்தல், வகைப்படுத்தல், பொழிப்பாக் குதல், என்பதுடன் அவை பற்றிய பெறுபேறுகளை விளக்கிக்கூறும் ஓர் செய்முறைக் கலையே" என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வரைவிலக் கணத்தை பின்வருமாறு பகுத்து நோக்குவோம்.

### (அ) கணக்கீடு ஒரு கலையே......

அறிவின் ஒரு பகுதியே கலை. நோக்கங்களை நாம் அடைந்து கொள்வதற்கு கலை உதவுகின்றது. நமது நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான வழிவகைகளை கலை காட்டுகின்றது. நிதிநிலைமை தொடர்பான பெறுபேறுகளை அறிவ தனை நோக்கமாகக் கொண்டோருக்கு கணக்கீடு பெரி தும் உதவுகின்றது. வியாபார நடவடிக்கைகளை பதிவு செய்தல், வகுத்தீடு செய்தல், பொழிப்பாக்குதல் ஆகிய வழிமுறைகளைக் காட்டுவதன்மூலம் கணக்கீட்டுக்கு கலை உதவுகின்றது. இந்த வகையில் கணக்கீடு ஒரு கலையே.

### (ஆ) பதிவு செய்தல், வகுத்தீடு செய்தல், பொழிப்பாக்கல் ஆகிய செய் முறையே......

நிறுவன — கொடுக்கல் — வாங்கல்களை பதிவு செய்யும் ஓர் கலையே கணக்கீடாகும். ஏனெனில் இலகுவான முறையில் நடவடிக்கைகள் பதியப்படுவ தில்லை. பதிவு செய்யும் முறையானது வியாபாரத் தின் தன்மை, நடவடிக்கையின் அளவு, நடவடிக்கை யின் வகைகள் என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

உ + ம்:-

(i) காசு நடவடிக்கைகள்.
காசு விற்பனை, காசுக் கொள்வனவு, செலவினங்களுக்கான காசுக் கொடுப் பனவு, வருமானங்களுக்கான காசு பெறு வனவு

(ii) கடன் நடவடிக்கைகள்.
கடன் கொள்வனவு, கடன் விற்பனை.

(iii) அடிக்கடி நடைபெறுகின்ற நடவடிக்கை கள்.
காசுக்கொள்வனவும் கடன் கொள்வ னவும்,
காசு விற்பனவும் — கடன் விற்பனவும்.

(iv) அடிக்கடி நடைபெறாத நடவடிக்கைகள்.
நிலையான சொத்து கொள்வனவும் — விற்பனவும்.

நிறுவன நடவடிக்கைகளை வகுத்தீடு செய்யும் ஓர் கலையே கணக்கீடாகும் வகுத்தீடு என்பது வியா பார நடவடிக்கைகளை தொகுதியாக்குதல் அல்லது ஒத்த தன்மையுள்ளதும் ஓரிடத்தில் பதியக்கூடிய நடவ டிக்கைகளை ஒன்றாக்குவதாகும்

முகாமைக்கும், அக்கறை கொண்ட குழுவினருக்கும் வகுத்திடு செய்யப்பட்ட பேரேடுகளையும். நிறுவனச் செயற்பாடுகளையும் விளங்கக் கூடியதாகவும், பயனுள்ள தகவலாகவும் வழங்குஞ் செய்முறையே பொழிப்பாக்குதல் என்பதாகும். ஆகக் குறைந்தது இரண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மூலம் பொழிப்பாக்குதல் செய்முறை இடம்பெறுகின்றது. அவையாவன:

(அ) வியாபார இலாபநட்ட க/கு

(ஆ) ஐந்தொகை

### (இ) பண அலகாகச் செயற்படுவதே......

நிறுவன நடவடிக்கைகள் யாவும் பணப் பெறுமதியில் அளவிடப்பட்டே பதிவு செய்யப்படுகின்றன. நடவடிக்கையின் பண அலகாகச் செயற்படுவதே கணக்கீடாகும்.

உ + ம்:- ஒரு நிறுவனத்திடம், 5 ஏக்கர் காணி, 20 அறைகளைக் கொண்ட ஓர் கட்டடம், 40 மேசைகள், 50 கதிரைகள், 04 இயந்திரங்கள் ஒரு மெட்ரிக் தொன் கையிருப்பு என்பவற்றைக் கொண்டுள்ளது. இச் சொத்துக்கள் பணப்பெறுமதியில் இல்லாதபடியால் நிதிக்கூற்றுக்களிலோ அன்றி வேறு ஏடுகளிலோ பதிவு செய்ய முடியாது. இவற்றைப் பணப்பெறுமானத்தில் அளக்கப்படுவதன்மூலம் கணக்கேட்டில் சுலபமாகப் பதிவு செய்யப்படுவதுடன், எல்லோராலும் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும் காணி 500, 000/= தளபாடம் 20, 000/- கட்டடம் 100, 000/= இயந்திரம் 80, 000/= கையிருப்பு 65, 000/= என பணப்பெறுமானமுடையவையாக இருப்பதனால் மட்டுமே கணக்கீட்டில் பதிவு செய்யப்படுகின்றது.

### (ஈ) நடவடிக்கைகளினதும் நிகழ்வுகளினதும் நிதிபற்றிய நடத்தையே ....

நிதி நடவடிக்கைகளை பதிவு செய்தலே கணக்கீடாகும். இதன்படி நடவடிக்கைகள் பணப் பெறுமானத்தில் அளவீடு செய்யப்பட்டவையே கணக்கீட்டில் இடம்பெறுகின்றது. அவ்வாறு பணப் பெறுமானத்தில் அளவீடு செய்யப்பட முடியாத விடயங்கள் கணக்கீட்டில் இடம்பெறுவதில்லை. இதன் காரணமாக நிறுவனம் பற்றிய முழுத்தகவல்களையும் நிதிக்கூற்றுக்கள் வழங்குவதில்லை.

உ + ம்:- ஒரு நிறுவனத்தின் முகாமையாளரது சிறந்த தேகாரோக்கிய நிலையையோ, ஊழியர் அனுபவிக்கும், சூழல் கஷ்டங்களையோ எடுத்துக் காட்டுவதில்லை. எனினும் நிறுவனத்தின் இலக்கினை அடைந்து கொள்வதில் முக்கியம் பெற்றிருந்தாலுங்கூட இத்தகவல்களை கணக்கீடு வெளிப்படுத்தவில்லை. எனவே கணக்கீடானது பல முக்கிய வரையறைக் கொண்டிருப்பதனால் நிறுவனம் தொடர்பான முழுத்தகவல்களையும் அது ஒருபோதும் வெளிப்படுத்துவதில்லை.

### (உ) அவை பற்றிய பெறுபேறுகளை விளக்கிக் கூறுவதே......

கணக்கீடானது பதிவு செய்தல், வகைப்படுத்தல், பொழிப்பாக்குதல் என்ற செய்முறையினூடாக தரவுகளை உருவாக்குவது மட்டுமல்ல, அதனைப்பயன்படுத்துவோருக்கு நல்ல முறையில் தெளிவாக விளக்கிக் கூறுவதுமாகும். ஒரு சிறந்த கணக்காளன் கணக்கீட்டுத் தொகைகளை உருவாக்குவதற்கே கூடுதலான முக்கியத்துவம் அளிப்பான்.

உ + ம்:- கணக்காளன் நிறுவனத்தால் விளம்பரத்துக்கெனச் செலவிடப்பட்ட தொகையானது; எந்தளவுக்கு விற்பனையை உயர்த்த உதவியிருக்கிறது என்பதிலேயே, கவனஞ் செலுத்துவான். அது மாத்திரமன்றி ஈடுபடுத்திய மூலதனத்திற்கேற்ப இலாப வீதம் எவ்வளவு உழைக்கப்பட்டுள்ளது என்பதையும். இலாப வீதம் தொடர்ந்து பேணப்பட்டுவருகின்றதா என்பதையும், அதனை மென்மேலும் அதிகரிக்க முடியுமா என்பதிலும் கவனஞ் செலுத்துவான். மேலும் எதிர்காலத்தில் நிறுவனம் நன்நிலை அடையவேண்டும் என்ற காரணத்தினால் பல்வேறு மாற்று வழிகள். மற்றும் ஆராய்ச்சிகள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து; எதிர்

காலத்தில் நிறுவனம் எந்நிலையில் இருக்கும் என்பதை எதிர்வு கூறுவான்.

## 1. 4 கணக்கீட்டின் சுற்றோட்டம்.

நிறுவன கணக்கீட்டு நடைமுறைகளைத் தொடராக முடிவு செய்வதும் அவற்றை மீண்டும், ஒவ்வொரு கணக்கீட்டு காலப்பகுதியிலும் பின்பற்றிக்கொள்வதே கணக்கீட்டுச் சுற்றோட்டமாகும். இச்சுற்றோட்டம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கும்.

(அ) நடவடிக்கைகளை துணையேடுகளில் பதிவு செய்தல்.

(ஆ) துணையேடுகளில் பதிவு செய்யப்பட்ட தகவல்களை வகைப்படுத்தி, அவற்றைப் பொருத்தமான பேரேட்டு கணக்குகளில் தாக்கல் செய்தல்.

(இ) ஏடுகளை முடிவு செய்து முடிவுக் கணக்குகளை தயார் செய்தல்.

மேற்கூறப்பட்டவாறு படிமுறை முடிவுற்றதும் அடுத்த ஆண்டுக்கான கணக்கீட்டுச் சுற்றோட்டம் இதே படிமுறையில் ஆரம்பிக்கும்.

## 1. 5 கணக்கீட்டின் வரையறைகள்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பல்வேறு விதமான கோட்பாடுகளும், மரபுகளும் நடைமுறையில் பின்பற்றப்படுகின்றன. இவற்றை ஏற்றுக்கொள்வதிலும் பின்பற்றுவதிலும் சிக்கல் தன்மைகள் காணப்படுவதால் கணக்கீட்டில் சில வரையறைகள் காணப்படுகின்றன.

(அ) நிறுவனத்தில் நடைபெறும் கொடுக்கல் — வாங்கல்களை பண அலகினால் அளவிடப்பட்டு பெறுமதிகள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. பண அலகினால் அளவிட முடியாத நடவடிக்கைகளும் நிறுவனத்தில் இடம்பெற்றபோதிலும் அவை பதிவு செய்யப்படுவதில்லை. குறிப்பாக முகாமைத் தீர்மானங்களினூடாக நிறுவனங்கள் இயங்குகின்றன. முகாமைத் தீர்மானங்கள் பண அலகினால் அளவிடப்பட்டு பெறுமதி மதிப்பிடப்படுவதில்லை

(ஆ) நடவடிக்கைகளைப் பதிவதற்கு ஆதாரமாக விளங்குவது பண அலகாகும். பண அலகின் கொள்வனவு வலு காலத்திற்குக் காலம் மாற்றமடைவதனால், பணத்தின் பெறுமதி நிலையானதாக இருப்பதில்லை. ஆகவே நிலையற்ற பணப்பெறுமதியைக் கொண்டு வடிவமைக்கப்படும். நிதிக்கூற்றுக்கள் ஆய்வாளனுக்குப் போதுமான ஒன்றல்ல.

உ+ம்:- சொத்துக்கள் கிரயத்திலேயே பதியப்படுகின்றது. ஆனால் பண அலகில் ஏற்படும் மாற்றம், சந்தைக் காரணிகளினால் சொத்துக்கு ஏற்படும் மாற்றம் என்பனவற்றை ஐந்தொகை வெளிப்படுத்துவதில்லை. சொத்தினை மதிப்பீடு செய்யவிரும்பும் ஒருவர், ஐந்தொகைத் தகவல்களை மட்டுமல்லாது வேறு தகவல்களையும் நாடிநிற்க வேண்டியுள்ளது.

(இ) கோட்பாடுகளை பின்பற்றியே நிதிக்கூற்றுக்கள் வடிவமைக்கப்படுகின்றன கோட்பாடுகளுக்கிடையில் காணப்படும் சிக்கல் தன்மைகள் காரணமாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது என்பது ஓர் கடினமான காரியமாகவே அமைகின்றது.

உ+ம்:- நிதிக் கூற்றில் இடம்பெறும் இருப்பானது கிரயத்திலோ அன்றி சந்தை விலையிலோ இதில் எது குறைவோ அதனையே நிதிக்கூற்றில் காட்டவேண்டும் என, பழமை பேணும் கோட்பாடு கூறுகின்றது. குறித்த ஓராண்டில் கிரயப் பெறுமதியும் இன்னொரு நிதியாண்டில் சந்தைப் பெறுமதியும் நிதிக்கூற்றில் இடம்பெறலாம் சுருக்கமாகக் கூறினால் ஒருவருடம் ஒரு விதமான கொள்கையும், இன்னொரு நிதியாண்டில் வேறு ஓர் கொள்கையும் பின்பற்றப்படுகின்றன. ஆனால் முதல் ஆண்டில் எத்தகைய கொள்கை பின்பற்றப்பட்டதோ அதே கொள்கை தொடர்ந்துவரும் ஆண்டுகளில் பின்பற்றப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கும் கோட்பாடே, கொள்கை மாறாமை (Consistancy) என்பதாகும். எனவே பழமை பேணும் கோட்பாட்டைப் பின்பற்றி நிதிக்கூற்றினை தயாரிப்பதா அன்றேல் கொள்கை மாறாமை கோட்பாட்டைப் பின்பற்றி நிதிக்கூற்றினை தயாரிப்பதா என்ற கடினத்தன்மையினை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

(ஈ) நிதிக்கூற்றுக்கள் பெரும்பாலும் தனிப்பட்டவர்களின் தீர்மானங்களினடிப்படையிலேயே வடிவமைக்கப்படுகின்றன. நிதிக்கூற்றுக்களை வடிவமைப்பதில் கணக்காளரின் தீர்மானமே செல்வாக்குச் செலுத்துகின்றது. நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளைத் தீர்மானிப்பவர் கணக்காளரே இதன் காரணமாக கணக்குகள் தன்னிச்சையாக எழுகின்ற காரணிகளினால் பாதிப்புக்குள்ளாவதுடன் உண்மைக் காரணிகள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்படாது போகலாம்.

உ+ம்:- ஐயக்கடன் ஏற்பாடு உண்மையாகவே தேவைப்படாது இருக்கலாம். ஆனால் கணக்காளன் தன்னிச்சையாக எழுகின்ற காரணிகளினால் ஐயக்கடன் ஏற்பாட்டை நிதிக்கூற்றில் இடம்பெறச் செய்யலாம்.

## 1.6 கணக்கீட்டுத் தகவல்களில் அக்கறையுள்ளவர்கள்

### (அ) உரிமையாளர்கள்:-

தம்மிடம் உள்ள வளங்களை இலாபமீட்டும் நோக்குடன் ஏதாவது ஒரு தொழில் முயற்சியில் ஈடுபடுத்துவோரை உரிமையாளர்கள் எனலாம். நிறுவனச் செயற்பாட்டால் எவ்வளவு இலாபம் உழைக்கப்பட்டதென்பதை அறிவதில் அதிக அக்கறை செலுத்துவார். நிறுவனம் கொண்டிருக்கின்ற சொத்துக்கள் பொறுப்புக்கள் என்ற படிவ அமைப்பு மூலதனத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். எனவே உரிமையாளன் நிறுவன சொத்துக்கள் மீதும், பொறுப்புக்கள் மீதும் கவனத்தைக் கொண்டிருப்பான். இது மட்டுமன்றி கணக்கீட்டின் அவசியத் தேவை என்பதிலும் அக்கறை கொண்டிருப்பான்.

### (ஆ) முகாமை:-

வியாபார நிலையங்களை நிர்வகிப்போர் முகாமையாளராவர். சிலவேளைகளில் உரிமையாளர்களே முகாமையாளராகவும் பணியாற்றலாம். நிறுவனச் செயற்பாடுகளைத் திட்டமிடவும் சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் கணக்கீட்டுத் தகவல்கள் முகாமைக்குத் தேவைப்படுகின்றன.

### (இ) முதலீட்டாளர்கள்:-

தாங்கள் முதலீடு செய்த வளங்களுக்கு போதியளவு வருமானத்தையும் அதேவேளை பாதுகாப்பையும், மீளப்பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மையையும் நிறுவனம் கொண்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்வதற்கு கணக்கீட்டுத் தகவல்கள் உதவுகின்றன.

### (ஈ) கடன் கொடுத்தோர்:-

தம்மால் வழங்கப்பட்ட கடன்களை நிறுவனம் திருப்பிச் செலுத்தக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கிறதா? எதிர்காலத்தில் மென்மேலும் கடன்களை வழங்குவது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு கணக்கீட்டுத் தகவல்கள் தேவைப்படுகின்றன.

### (உ) ஊழியர்கள்:-

தம்மாற் செய்யப்பட்ட கடமைகள் சிறந்த பெறு பேறுகளைத் தந்துள்ளனவா? நிறுவனம் உழைக்கும் இலாபத்தில் எவ்வளவு தொகையை உபகாரமாக (Bonus) வழங்கப்படும்? என்பன போன்ற தகவல்களை அறிய முற்படுவர்.

### (ஊ) அரசாங்கம்:-

நிறுவனத்தின் செயற்பாட்டால் எவ்வளவு இலாபம் உழைக்கப்பட்டது? உழைக்கப்பட்ட இலாபத்தில் தனக்கு எவ்வளவு தொகை வரிவருமானமாக கிடைக்கும்? சட்டத்தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதா என்பதுடன் வேறு பொருளாதாரத் தேவைக்கான மதிப்பீடுகளையும், புள்ளிவிபரங்களையும் திரட்டிக்கொள்வதற்கும் கணக்கீட்டுத் தகவல்கள் தேவைப்படுகின்றன.

### (எ) ஆய்வாளர்:-

நிறுவன செயற்பாடுகளையும், நிதி நிலைமையையும் ஆய்வாளர் விமர்சிப்பதற்கு கணக்கீட்டுத் தகவல்கள் தேவைப்படுகின்றன.

## 1.7 கணக்கீட்டின் அவசியத்தேவை

இலாபம் உழைக்கும் நோக்குடனேயே முயற்சியாளர் வியாபார நிறுவனங்களில் முதலீடு செய்கின்

றனர். தமது நோக்கினை அடைந்து கொள்வதற்காகப் பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்துவர்.

(அ) வருமானங்களின் வகைகளும் உழைத்த வருமானத் தொகையும்.

(ஆ) செலவு செய்யப்பட்ட இனங்களும் செலவுகளின் தொகையும்.

(இ) குறித்த காலத்தில் உழைக்கப்பட்ட இலாபத் தொகை அல்லது அடையப்பெற்ற நட்டத்தொகை,

(ஈ) மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு.

(உ) நிறுவனம் வைத்திருக்கின்ற சொத்துக்களின் தன்மையும், அவற்றின் பெறுமதிகளும்.

(ஊ) வியாபார நிறுவனங்கொண்டுள்ள கடன்களின் தன்மையும், கடன்கள் தொடர்பில் செலுத்த வேண்டிய தொகையும்

(எ) வியாபார நிறுவனத்தின் வாடிக்கையாளர்களும், அவர்கள் ஒவ்வொருவரும் நிறுவனத்துக்குச் செலுத்தவேண்டிய தொகைகளும்.

(ஏ) வியாபார நிறுவனத்தின் வழங்குனர்களும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் செலுத்த வேண்டிய தொகைகளும்.

(ஐ) வெளிவாரியாக நிறுவனத்துக்குக் கிடைக்கக் கூடிய மீள் தொகைகள்.

''வாழ்க வணிகஜோதி தொடர்க அதன் பணிகள்''

Best Wishes For VANIKA JOTHY From.

Prawn: Hi You!

Have you been to NEW YARL CHINESE?

Chicken: No Why?

Prawn: You better have a Chinese Food and tell me about the Taste.

NEW YARL

CHINESE RESTAURANT

124, Ist Cross Street, JAFFNA.

# ஒப்படைக் கணக்கு

செ. ராஜ்குமார்
1994ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு (13B)

*உற்பத்தி வியாபார நிறுவனங்கள் தமது பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு பல வழிமுறைகளை கையாண்டே பொருட்கள் சேவைகளை விற்பனை செய்கின்றன. அவ்வழி முறைகள் ஆவன,*

1. *பார்வையிடல் மூலம் விற்பனை செய்தல்*
2. *ஏல விற்பனை*
3. *மாதிரி மூலம் விற்பனை*
4. *பிற்போட்ட கொடுப்பனவு முறை விற்பனை*
5. *வாடகை கொள்வனவு முறை விற்பனை*
6. *விற்பனை இன்றேல் திருப்புக என்ற அடிப்படையிலான விற்பனை*
7. *ஒப்படை விற்பனை*

*மேற் கூறப்பட்டவகை விற்பனைகளில் முதல்5 முறையான விற்பனைகளிலும் பொருட்களை விற்பனை செய்பவர் தமது சொந்தமாக்கிய பின்பே விற்பனை*

செய்கின்றனர். ஏனைய 6, 7 இல் கூறப்பட்டவையில் பொருட்கள் ஒரே தன்மையாக இருப்பினும் விற்பனையில் வேறுபட்ட தன்மையாகும். உதாரணமாக விற்பனை இன்றேல் திருப்புக என்ற அடிப்படையில் பொருட்கள் அனுப்பும்போது அது விற்பனை எனக் கருத்பதிவு செய்தே பொருட்கள் அனுப்பப்படும். ஆனால் ஒப்படை விற்பனையில் பொருட்களை அனுப்பும்போது அது பொருட்கள் விற்ற பின்னே விற்பனையாக கருதப்படும்.

எனவே ஒப்படை வியாபாரம் என்பதை பின்வருமாறு கூறலாம் ''உற்பத்தி வியாபார நிறுவனங்கள் தமது பொருட்களை தம் சார்பான முகவர்களை நியமித்து அம்முகவர்களுக்கு அனுப்பி அவர்களுக்கு தரகு வழங்குவதன் மூலம் பொருட்களை விற்பனை செய்கின்றனர்'' இவ்வாறான செயற்பாடே ஒப்படை என அழைக்கப்படும்.

## ஒப்படை வியாபாரத்தில் கலந்து கொள்ளும் பகுதியினர்

1. ஒப்படைப்போன் (முதல்வர் / கையடைப்போர்)
2. ஒப்படைக்கொள்வோன் (முகவர் / கையடைவிணி)

## ஒப்படைப்போன் Consignar

பொருட்கள் மீதான உரிமையுடையவர் (Owner Ship) வேறு ஒருவரிடம் பொருட்களை விற்றுத் தரும்படி செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் கொடை முனைபவர் ஒப்படைக் கொள்வோன் ஆவார்.

## ஒப்படைக் கொள்வோன் Consignee

ஒப்படைக்கப்பட்ட பொருட்கள் மீது உரிமை இல்லாத போதும் அதனைப்பெற்று களஞ்சியப்படுத்தி விற்றுத்தருவதாக கொடை முனைபவருக்கு ஏற்புடையவர் ஒப்படைக் கொள்வோன் ஆவார்.

## ஒப்படை வியாபாரத்தில் சம்பந்தப்பட்ட கணக்குகள்

1. ஒப்படைக் கணக்கு (வெளியனுப் பொறைப்புக் கணக்கு)
2. ஒப்படைக் கொள்வோன் கணக்கு
3. ஒப்படைக்கு அனுப்பிய சரக்கு கணக்கு

## ஒப்படைக் கணக்கு

ஒப்படை நடவடிக்கையால் தமக்கு உண்டாகும் இலாப நட்டங்களை அறிந்து கொள்வதற்காக ஒப்படைப்போனால் பராமரிக்கப்படுகின்ற கணக்கு ஒப்படைக்கணக்கு ஆகும் இக்கணக்கில் ஒப்படை சார்பான செலவீனங்கள் வரவு வைக்கப்படுகின்றன. அதே போன்று ஒப்படை வருமானங்கள் செலவு வைக்கப்படுகின்றன. இக்கணக்கு பொதுவாக நிதியாண்டு முடிவில் செய்யப்படுகிற லாப நட்டக்கணக்கை போன்று மொத்தலாபம், தேறிய லாபம் என பிரித்துக்காட்டுவதில்லை. குறித்த விற்பனையில் உண்டாகும் இலாப நட்டத்தை மட்டும் வெளிப்படுத்தும். பின் இவ் ஒப்படை கணக்கினால் உண்டாகும் இலாபமோ அல்லது நட்டமோ பொது லாபநட்டக் கணக்குக்கு மாற்றப்படும்.

## ஒப்படைக் கொள்வோன் கணக்கு

ஒப்படைக் கொள்வோனிடம் இருந்து தமக்கு வருமதியாக உள்ள தொகையை அறிந்து கொள்வதற்காக ஒப்படைப்போனால் பராமரிக்கப்படுகின்ற கணக்கே ஒப்படைக் கொள்வோன் கணக்கு ஆகும், இக்கணக்கில் ஒப்படைக் கொள்வோனிடம் இருந்து தமக்கு வருமதியாகிய விற்பனை பெறுமானங்கள் போன்றன வரவு வைக்கப்படுவதுடன் ஒப்படைக் கொள்வோனுக்கு தான் செலுத்தவேண்டிய முற்பணங்கள், செலவீனங்கள், தரகுகள் போன்றவை செலவு வைக்கப்படுகின்றன. பின்னர் ஒப்படைக் கொள்வோன் கணக்கு மீதி ஏதும் ஏற்படின் அம்மீதியானது ஐந்தொகைக்கு கொண்டு செல்லப்படும்.

## ஒப்படைக்கு அனுப்பிய சரக்குக்கணக்கு

ஒப்படைக்கு அனுப்பப்பட்ட பொருட்களின் கொள்விலை அல்லது உற்பத்திச் செலவுப் பெறுமானத்தை அறிந்து கொள்வதற்காக தயாரிக்கபபடுகின்ற கணக்கு ஒப்படைக்கு அனுப்பிய சரக்கு கணக்கு எனப்படும். இது உண்மையில் பொருட்கள் ஒப்படை கொள்வோனை சென்று அடைந்து அவர் பொறுப்பேற்கும்

வரை ஓர் ஐயக்கடனாகும்(Suspence in Consigment). ஒப்படைக் கொள்வோன் பொருட்களை பொறுப்பேற்ற பின்தான் ஒப்படையில் அனுப்பிய சரக்குக் கணக்காக கருதப்படும். வருட முடிவில் இக்கணக்கு பொது வியாபாரக் கணக்குக்கு மாற்றப்படும்.

## ஒப்படை வியாபாரத்தில் பயன்படுத்தப் படும் தரகுகள்

1. சாதாரணதரகு (ஒப்படைத்தரகு / விற்பனைத்தரகு)

2. டெல்கிறேட்தரகு (பொறுப்புத்தரகு)

3. மேலதிகதரகு

### சாதாரணதரகு

ஒப்படைக் கொள்வோனால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற போது அப்பொருட்களின் விற்பனையின் அடிப்படையில் ஒப்படைப்போனால் ஒப்படைக்கொள்வோனுக்கு வழங்கப்படுகின்ற தரகு ஒப்படைத்தரகு ஆகும். இவ் ஒப்படைத்தரகு ஆனது கடன் விற்பனைக்கும், காசுவிற்பனைக்கும் என உள்ளடக்கப்பட்ட மொத்த விற்பனைக்கும் வழங்கப்படுகின்றது.

## டெல்கிறேட் தரகு (Delcredere Commission)

டெல்கிறேட் என்பது இத்தாலிய பதமாகும். இப் பதத்தின் கருத்து 'மெய்' என்பதாகும். இப் பதம் மேலதிக தரகை வேண்டி நிற்கிறது. ஒப்படைக்கொள்வோன் கடனுக்கு பொருட்களை விற்கும் போது உண்டாக்கக் கூடிய கொடுத்த கழிவு, அறவிடமுடியாக் கடன் என் பவற்றை பொறுப்பேற்றுக் கொள்ளும் உத்தரவாத முகவர்களுக்கு வழங்கப்படும் தரகு பொறுப்புத் தரகு ஆகும். இப்பொறுப்புத் தரகு மொத்த விற்பனைக்கு வழங்கப்படுகின்றது எனினும் கடன் விற்பனைக்கு என குறிப்பிட்டு சொன்னால் மாத்திரம் கடன் விற்பனைக்கு வழங்கவேண்டும்.

### மேலதிக தரகு

முகவர்களின் விற்பனை ஆற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு இம் மேலதிக தரகு வழங்கப்படுகின்றது.

இது கடன் விற்பனை அல்லது காசு விற்பனை என்று விற்பனை செய்யும் மொத்தத்தில் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் விற்பனை செய்யும் போது இத்தரகு கணிப்பிடப்படுகின்றது.

## மாதிரி விற்பனைப்பட்டியல் (Profoma Invoice)

சாதாரண விற்பனையாளர்களினால் கொள்வனவாளருக்கு பொருட்களை விற்பனை செய்யும் போது அனுப்பப்படும் பத்திரம் பட்டியல் எனப்படும். ஆனால் ஒப்படை விற்பனையின் போது பொருட்கள் விற்பனையாக ஒப்படைக்கப்படுவதில்லை என்பதினாலும் ஒப்படைப்போனின் இலாபத்தன்மையை ஒப்படைக் கொள்வோனுக்கு வெளிப்படுத்த விரும்பாததாலும் ஒப்படைக் கொள்வோன் சரக்குவிலையை அறிந்து விற்பதற்கும் (எவ்விலையில் விற்பனை செய்தல்) சரக்குடன் அனுப்பும் பத்திரம் மாதிரிப்பட்டியல் ஆகும். இதுபொருட்களை வாங்க விரும்புவோருக்கு பொருள் அனுப்ப முன் வாங்க விரும்புவோர் மாதிரிப்பட்டியலை பார்த்து அதற்குரிய பணத்தினை அனுப்ப வேண்டும். இதன்பின்பே பொருட்கள் அனுப்பப்படும். இதில் பின்வரும் அம்சங்கள் இடம்பெறும்.

1. அனுப்பப்படுகின்ற பொருட்களின் தரம்

2. அனுப்பப்படுகின்ற பொருட்களின் பொதிகட்டும் முறை

3. அனுப்பப்படுகின்ற பொருட்களின் நிறை

4. அனுப்பப்படுகின்ற பொருட்களின் எண்ணிக்கை

5. அனுப்பப்படுகின்ற பொருட்களின் விற்க வேண்டிய விலை

## விற்பனைக் கூற்று / கணக்கு (Accounts Sales)

ஒப்படைக் கொள்வோனால் ஒப்படை சார்பாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கி ஒப்படைப்போனுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற ஓர் பத்திரம் விற்பனைக் கூற்றாகும். இவ்விற்பனைக் கூற்றானது ஒப்படைப்போனின் குறித்த நிதியாண்டுத்

தேவைக்கு அனுப்பப்படும். இவ் விற்பனைக் கூற்றானது பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியது.

1. பொருட்களின் விபரம்
2. ஒப்படைக்கொள்வோனால் அனுப்பப்பட்ட முற்பணம்
3. ஒப்படைக்கொள்வோனால் செய்யப்பட்ட செலவு
4. ஒப்படைக்கொள்வோனுக்கு உரித்தான தரகு

இவ்விற்பனைக் கூற்றுடன் ஒப்படைக்கொள்வோன் தான் தரவேண்டிய மீதித்தொகைக்கு ஒரு வங்கியாணையை அல்லது காசோலையை இணைத்து ஒப்படைக் கொள்வோன் ஒப்படைப்போனுக்கு அனுப்பி வைப்பார்

## உத்தரவாத முகவர்கள்

ஒப்படையில் கடன் விற்பனையில் உண்டாகக் கூடிய அறவிடமுடியாக்கடன், கொடுத்த கழிவு போன்ற செலவுகளை தாமே பொறுப்பேற்றுக் கொள்ளும் முகவர்கள் உத்தரவாத முகவர்கள் ஆவர். இம் முகவர்களுக்கு மேலதிகமாக வழங்கப்படும் விசேட தரகே பொறுப்புத் தரகு ஆகும்.

மாதிரி விற்பனைக் கூற்று

| | | |
|---|---|---|
| விற்பனை காசு (அலகு × விலை) | **** | |
| விற்பனை கடன் (அலகு × விலை) | *** | **** |
| கழி | | |
| அனுப்பப்பட்ட முற்பணம் | *** | |
| செய்த செலவினங்கள் | *** | |
| விற்பனைத்தரகு $\frac{\text{தரகு\%}}{100}$ × மொ. விற் | *** | |
| பொறுப்புத்தரகு $\frac{\text{தரகு\%}}{100}$ × மொ. விற் | *** | *** |
| மீதி (இணைக்கப்பட்ட காசோலை / வங்கியாணை) | | *** |

## ஒப்படைப்போனின் ஏட்டில் பதிவுகள்

☆ ஒப்படையில் அனுப்பப்பட்ட பொருட்களின் கொள் விலைக்கு
ஒப்படைக் கணக்கு　　வரவு
ஒப்படைக்கு அனுப்பிய சரக்கு கணக்கு செலவு

☆ ஒப்படைப்போனால் ஒப்படைக்காக செய்யப்படும் செலவினங்களுக்கு
ஒப்படைக் கணக்கு　　வரவு
காசு/வங்கிக் கணக்கு　　செலவு

☆ ஒப்படைக் கொள்வோனிடம் இருந்து முற்பணம் (உண்டியல்) பெறப்படும்போது
வருமதி உண்டியல் கணக்கு　　வரவு
ஒப்படைக் கொள்வோன் கணக்கு　　செலவு

குறிப்பு:- இவ்வாறாக உண்டியல் கழிவோடு மாற்றப்படும்போது ஏற்படும் உண்டியல் கழிவானது ஒப்படைக்கான செலவினமாக கருதப்படலாகாது எனினும் உண்டியல் கழிவானது ஒப்படைக்கான செலவினமாக கருதப்படல் வேண்டும் என குறிப்பிட்டு சொல்லப்படின் உண்டியல் கழிவானது அவ் ஒப்படைக்கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும்.

☆ ஒப்படைக் கொள்வோனால் ஒப்படைக்கான செலவினங்கள் செய்யப்படும் போது
ஒப்படைக் கணக்கு　　வரவு
ஒப்படைக் கொள்வோன் கணக்கு　　செலவு

☆ ஒப்படைக் கொள்வோனால் பொருட்கள் விற்பனை செய்யப்படும் போது
ஒப்படைக் கொள்வோன்கணக்கு　　வரவு
ஒப்படைக் கணக்கு　　செலவு

☆ ஒப்படைக் கொள்வோனுக்கு அனுமதிக்கப்பட்ட தரகுத் தொகைக்கு
ஒப்படைக் கணக்கு　　வரவு
ஒப்படைக் கொள்வோன் கணக்கு　　செலவு

☆ ஒப்படைக் கணக்கில் இருந்து பெறப்படுகின்ற இலாபத் தொகைக்கு
ஒப்படைக் கணக்கு　　வரவு
பொது லாப நட்டக் கணக்கு　　செலவு

☆ ஒப்படைக்கு அனுப்பிய சரக்கு கணக்கு மீதியை வியாபார கணக்குக்கு மாற்றும்போது
ஒப்படைக்கு அனுப்பிய சரக்குக் கணக்கு வரவு
வியாபாரக் கணக்கு செலவு

☆ ஒப்படைக் கொள்வோனிடம் இருந்து வருமதியாக உள்ள தொகைக்கு
காசு/வங்கிக் கணக்கு வரவு
ஒப்படைக் கொள்வோன்கணக்கு செலவு

குறிப்பு: ஒப்படைக் கொள்வோன் கணக்கில் மீதி காணப்படுமாயின் அக்கணக்கில் உள்ள வரவு மீதியானது ஐந்தொகைக்கு ஒரு நடப்புச் சொத்தாக கொண்டு செல்லப்படும்.

## பொருட்கள் இடைப்போக்கில் இழக்கப்படுதலும், ஒப்படைக்கொள்வோனால் பொறுப்பேற்கப்படாமல் திருப்பி அனுப்புதலும்.

ஒப்படைக்கு அனுப்புகின்ற பொருட்கள் ஒப்படைக் கொள்வோனால் பொறுப்பேற்கப்பட்ட பின்னரே ஒப்படை என்ற ஒப்பந்தம் நிறைவேற்றப்படுகின்றது எனவே ஒப்படைக் கொள்வோனை பொருட்கள் போய்ச் சேரும்முன் இடையில் இழக்கப்படுகின்றபோதும்,ஒப்படைக்கொள்வோனால் பொருட்கள் பொறுப்பேற்கப்படாது திருப்பி அனுப்பப்படுகின்றபோதும், உண்டாகும் செலவினங்கள், நட்டங்கள் ஒப்படைக்கான செலவினங்களாக கருதப்படலாகாது. இவ்வாறான நட்டங்களும், செலவினங்களும் ஒப்படைக்கணக்கில் இருந்து வெளியேற்றப்பட்டு பொது லாபநட்டகணக்கில் நட்டமாக காட்டப்படல் வேண்டும்.

## ஒப்படைக் கொள்வோன் பொறுப்பேற்க முன் திருப்பியனுப்பல்.

ஒப்படைப்போனால் ஒப்படைக் கொள்வோனிற்கு அனுப்பப்படும் பொருட்கள் ஒப்படைக்கொள்வோனால் பொறுப்பேற்கப்படமுன் பின்வரும் சந்தர்ப்பங்களில் திருப்பி அனுப்பப்படலாம்.

1. நல்லநிலையில் அல்லது மாதிரிக்கு ஒவ்வாதநிலையில் திருப்பியனுப்பப்படுதல்.

2. பழுதடைந்தநிலையில் திருப்பி அனுப்பப்படல்

ஒப்படைக் கொள்வோனால் மாதிரிக்கு ஒவ்வாத நிலையில் பொருட்கள் திருப்பி அனுப்பப்படும் போது அப்பொருட்களின் கொள்விலையும் அது சம்பந்தப்பட்ட செலவுகளும் ஒப்படைக்கணக்கில் இருந்து வெளியேற்றப்படல் வேண்டும். இவ்வாறு கொள்விலையை வெளியேற்றும்போது

☆ ஒப்படைக்கு அனுப்பிய சரக்கு கணக்கு வரவு
ஒப்படைக்கணக்கு செலவு

இப்பொருட்கள் சார்பான செலவீனங்கள் வெளியேற்றப்படும்போது

☆ பொது இலாப நட்டக் கணக்கு வரவு
ஒப்படைக் கணக்கு செலவு

பொருட்கள் இடைப்போக்கில் இழக்கப்படுகின்ற போதும் ஒப்படைக் கொள்வோன் பழுதடைந்த நிலையில் திருப்பி அனுப்பப்படும்போதும் அப்பொருட்களின் கொள்விலையுடன் அப்பொருட்கள் சம்பந்தப்பட்ட செலவீனங்களை கூட்டிய மொத்தத் தொகையில் இருந்து அப்பொருட்கள் சார்பாக வரக்கூடிய தொகை அதாவது நட்டஈட்டுக் கம்பனி தருவதாக உறுதியளித்த தொகையும் மீளவிற்கமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்ற தொகையும் கழித்து பெறப்பட்ட தேறிய தொகையே நட்டமாகும் இதன் போது பதிவு:-

☆ நட்டஈட்டு கம்பனி கணக்கு வரவு
மீள்விற்பனை பெறுமான தொகை வரவு
பொதுலாபநட்ட கணக்கு வரவு
ஒப்படைக் கணக்கு செலவு

## ஒப்படைக் கையிருப்பு.

ஒப்படைப்போனால் ஒப்படைக்காக அனுப்பப்பட்ட பொருட்கள் ஒப்படைக் கொள்வோனின் குறிப்பிட்ட நிதியாண்டுவரை விற்பனை செய்யப்படாமல் இருந்த தொகையே ஒப்படைக் கையிருப்பாகும். இக் கையிருப்புப் பெறுமதியை கணிப்பிட கொள்விலையும், ஒப்படைப்போன் செலவு, ஒப்படைக்கொள்வோன் செலவு என்பவற்றையும் கணிப்பிட்டு ஒப்படைக் கணக்கில் செலவு வைத்து பின் மீதி கீழ் கொண்டு சென்றது என வரவுப்பக்கத்தில் காட்டப்படல் வேண்டும்.

இறுதி இருப்பை ஒப்படைப்போன் குறித்த நிதியாண்டின் இறுதி இருப்புடன் கூட்டி ஐந்தொகையில் நடைமுறைச் சொத்தாக காட்டப்பட வேண்டும்.

## விளம்பரத்திற்கு பொருட்களை இலவசமாக கொடுத்தல்.

ஒப்படை வியாபாரத்தின் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கு அனுப்பிய பொருட்களில் சிலவற்றை ஒப்படைப்போனின் சம்மதத்துடன் விளம்பரத்திற்காக இலவசமாக கொடுக்கப்படும். அவ்வாறு விளம்பரத்திற்கு ஏற்பட்ட செலவினங்களை கணிப்பிடுவதற்கு விளம்பரத்திற்காக கொடுக்கப்பட்டபொருட்களின் கொள்விலையுடன் ஒப்படைப்போன் செய்த செலவினங்களையும் ஒப்படைக்கொள்வோன் செய்த செலவினங்களையும் கூட்டி விளம்பரச் செலவினைக் கணிப்பிடலாம். இவ்வாறு கணிப்பிடும் போது பதிவு:-

☆ ஒப்படைக் கணக்கு வரவு
    ஒப்படைக் கணக்கு செலவு

அப்பொருட்களை தமது இ த்தில்இருந்து (விற்பனை நிலயத்தில் இருந்து) ஏனைய இடத்துக்கு அனுப்புவதால் நமது பொதுவான வியாபாரத்தை அதிகரிக்கலாம் எனக்கருதி விளம்பரச் செலவை பதியும் போது:-

☆ விளம்பரக் கணக்கு வரவு
    ஒப்படைக் கணக்கு செலவு

## குறிப்புக்கள்.

1. ஒப்படை கூடியவனாயின் அவ் ஒப்படைக் கணக்குகள் முதலில் ஓர் ஒப்படை நாளேட்டில் (முதற் பதிவுஏட்டில்) பதியப்படவேண்டும். ஒப்படை நாளேட்டு பதிவுகள் யாவும் குறித்த ஒப்படைக்கணக்குகளில் வரவுவைக்கப்படும். ஒப்படை நாளேட்டின் கூட்டுத்தொகை ஒப்படைக்கணக்கில் செலவு வைக்கப்படும்

2. கடனாக பொருட்களை விற்பனை செய்ய அனுமதி பெற்ற ஒப்படைக்கொள்வோன் பொறுப்புத்தரகுக்கு உரித்தானவனாகின் கடனுக்கு விற்கும் சரக்குகளுக்கு பணம்வசூல் செய்யும்வரை அவன் கணக்கில் கடன் விற்பனைத் தொகையாக பதியப்படல் ஆகாது. ஆனால் பொறுப்புத்தரகு உரித்தில்லாதவனாகில் கடனுக்கு விற்கும் சரக்குக்கு பணம் வசூல் செய்யும் வரை அக் கணக்கில் பதிந்து காட்டலாம்.

உசாத்துணை நூல்கள்:-

(1) கணக்கியல் சுருக்கம் பகுதி II
வே. அழகேசன்

(2) உயர்தர கணக்கியல்
கே.ரி. ராஜகுல சிங்கம் B. A (Hons)

(3) கணக்கியல் கொள்கைகளும்
கணக்கீட்டு நியமங்களும்
பா. பாலசந்திரன்

(4) உயர்தர கணக்கியல்
வீ சுந்தரேஸ்வரன் B.Com M.A.A.T(S.L)

1993 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் இலங்கையின் இரத்தினக்கல் ஏற்றுமதி வருமானம் 270 கோடி ரூபாவாகவும், ஆபரண ஏற்றுமதி வருவாய் 43 கோடி 20 லட்சமாகவும் உள்ளது.

# நியாயத்தொடை அனுமானத்தில் உருவும் - பிரகாரமும்

வே. புசுபாலசிங்கம் B.A (Hons)
Dip in Edu.
*யாழ்ப்பாணக்கல்லூரி வெளிவாரி மெய்யியல் விரிவுரையாளர்.*

அளவையியல் என்ற கற்கை நெறியில் அனுமானம் ஓர் முக்கிய அலகு அறிவினைப் பெறும் வாயில்கள் பல. அனுமானம் அதில் ஒன்று. அளவையியல் அவ்வாயிலின் ஏற்புடைமை பற்றி ஆராய்கிறது. அரிஸ்டோட்டலின் முயற்சிகளில் இதுவே மிக முக்கியமான கண்டுபிடிப்பு. அவர் அனுமானத்தின் இயல்பை நன்கு ஆராய்ந்தார். அதனைப் பல நியம வடிவங்களாகப் பிரித்து விளக்கினார். இந்திய அளவை நெறியிலும் இதனை அவதானிக்கலாம். அரிஸ்டோட்டலுக்கு முன்பே இந்தியத் தத்துவ ஞானிகளும் இதனை அறிந்திருந்தனர். ஆனால் அரிஸ்டோட்டலிடம் தெளிவான திட்டம் இருந்துளது. அவர் ஆழஅகல அனுமானத்தினை ஆராய்ந்துள்ளார். அனுமானத்தினைப் பகுத்தறிதல் என்றும் வழங்குவர். அனுமானம் தொடர்பான இவரின் முயற்சிகள் இதனை உணர்த்துகின்றன.

அனுமானத்தினை. உடன் அனுமானம், ஊடக அனுமானம் என இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். ஊடக அனுமானத்தின் ஒருநியமவடிவமே நியாயத்தொடை அனுமானம் இந்நியாயத்தொடை அனுமானத்தின் வாய்ப்பு, அல்லதுவலிமை அதன்விதிகளில் தங்கியுள்ளது. அவ்வாறே அதன் வடிவமும் முக்கியமானது. நியாயத்தொடைவாதவடிவத்தை நிச்சயிப்பதில் நடுப்பதம் முக்கியபங்கினை வகிக்கின்றது.

"உருவும், பிரகாரமும் நடுப்பதத்தின் தத்துவத்திலேயே தங்கியுள்ளது நவீன மெய்யியற் காலத்தில், நடுப்பதத்தின் முக்கியத்துவத்தினை விட்டு எடுகூற்றுக்களின் அளவு, பண்பையும், அவற்றின் நிலையையும் முக்கியத்துவப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம் முயற்சிகள் குறியீட்டு அளவை முறையின் பிரயோகத்தைத் தொடர்ந்து முக்கியத்துவத்தை இழந்துவிட்டன.

உருவென்பது, நியாயத்தொடை வடிவத்தில் மத்திய பதம் இயங்குமாற்றால் எழும் வடிவமாகும். மத்தியபதம் இரண்டு எடுகூற்றுக்களிலும், எழுவாயாகவோ, பயனிலையாகவோ அமைந்து தொழிற்படும். நியாயத்தொடை வடிவத்தில் முடிபுக்கூற்றைக் கருத்தில் கொண்டு, நான்கு உருக்களைப் பெறலாம். முடிபுக்கூற்றை தவிர்த்து நோக்கும்போது மூன்று உருக்கள் பெறப்படலாம்.

உ + ம்.

| (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|
| M—P | P—M | M—P | P—M |
| S—M | S M | M S | S—M |
| S P | S P | S P | S—P |

ஒவ்வோர் உருவின் எடுகூற்றுக்களிலும் பதங்கள் இடம்பெறும் அமைவிற்கேற்ப அவற்றின் அளவு, பண்பு என்பவற்றைப் பற்றிச் சில கட்டுப்பாடுகள் எழுகின்றன. இதனடிப்படையில் ஒவ்வொரு உருவிற்கும் உரிய விதிகளை வகுத்துத் தருவர். உதாரணமாக.

1 ஆம் உருவில்:-
- i. பேரெடு கூற்று நிறை எடுப்பாய் இருத்தல்வேண்டும்.
- ii. சிற்றெடு கூற்று விதி எடுப்பாய் இருத்தல் வேண்டும்.

2 ஆம் உருவில்:-
- i. பேரெடு கூற்று நிறை எடுப்பாய் இருத்தல் வேண்டும்.
- ii. ஒரு எடுகூற்று மறையாய் இருத்தல் வேண்டும்.

3 ஆம் உருவில்:-
- i. சிற்றெடு கூற்று விதி எடுப்பாய் இருத்தல் வேண்டும்.
- ii. முடிபு குறையாய் இருத்தல் வேண்டும்.

4 ஆம் உருவில்:-
- i. எடுகூற்றுக்களில் ஒன்று மறையாய் இருந்தல், பேரெடுகூற்று நிறையாயிருத்தல் வேண்டும்.
- ii பேரெடுகூற்று விதியாயிருந்தால் சிற்றெடுகூற்று நிறையாயிருத்தல் வேண்டும்.
- iii. சிற்றெடு கூற்று விதியாயிருந்தால் முடிபு குறையாயிருத்தல் வேண்டும்.

இவ்வாறு, நான்கு உருக்களினதும் விஷேட விதிகளைக்கருத்தில்கொண்டு நியாயத் தொடை வடிவங்களைப்பெறலாம்.

இதேபோல் பிரகாரம் என்பது நியாயத் தொடை வடிவத்தில் உள்ள மூன்று எடுப்புக்களின் அளவுத் தொடர்பு, பண்புத்தொடர்பு என்பவற்றால் அமையும் வடிவமாகும். வலிமையான நியாயத்தொடைப் பிரகாரங்கள் எடுகூற்றுக்களின் அளவு, பண்பு என்பவற்றால் அமையும் வடிவமாக அமையும் என்பது பாரம்பரிய அளவையியலாளர்களின் கருத்தாகும். உதாரணமாக AAA, EAE, என அமைந்து வரும் வடிவங்களையே பிரகாரங்கள் என்பர்.

எல்லாப் பிரகாரங்களும் ஒவ்வோர் உருவிற்கும் வலிமையானவை அல்ல. உருவும் பிரகாரமும் கொண்ட வடிவத்தில்தான் அதனை நிச்சயிக்கலாம். இதனடிப்படையில், நியாயத் தொடைப்பிரகாரம் எனக் கொள்ளக்கூடிய தனித்துவமான வடிவங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

உதாரணமாக

எந்த மேதையும் ஞானி அன்று
குழந்தைகள் அனைவரும் மேதைகளாவர்
ஆகவே குழந்தைகள் எவரும் ஞானிகளன்று

என அமையும் வடிவம் எல்லா நிலைகளிலும் பொருந்தக்கூடிய பிரகாரமாக அமைகிறது. இதனை EAE இப் பிரகாரம் எனக்கொள்வர். இது வேறுபட்ட உருக்களிலுள்ள வேறுபட்ட சிறப்புப் பிரகாரங்களை அடக்குவதாக அமைகிறது.

நான்கு உருக்களிலும் பிரயோகித்துப் பெறக்கூடிய பிரகாரவடிவங்கள் பல உள்ளன. அவற்றில் 19 வடிவங்களே வாய்ப்பானவை எனக் கொள்வர். நவீன அளவையியலாளர்களிடையே இதில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. நிறை எடுப்புக்களில் குறையெடுப்புக்கள் உள்ளடங்குவதாலும், முழுமையின் விதிமறைகள் பகுதிக்குச் செல்வதாலும் பாரம்பரிய அளவையியலாளர்களின் கருத்துக்களை விமர்சிப்பர்எனினும் பொதுவாக 1 ஆம் உருவிற்கு 4ன்கும், 2 ஆம் உருவிற்கு 4ன்கும், 3 ஆம் உருவிற்கு 6உம் 4ன்காம் உருவிற்கு 5 உம் வலிதான பிரகாரங்களாக அளவையியலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக:-

| (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|
| AAA | EAE | AAI | AAI |
| EAE | AEE | IAI | AEE |
| AII | EIO | AII | IAI |
| EIO | AOO | EAO | EAO |
| | | OAO | AAE |
| | | EIO | |

ஒவ்வொரு உருவிற்குமுரிய எடுப்பு வடிவங்களை ஞாபகத்தில் வைத்திருப்பதற்காக பெயர்கள் இடப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் வரும் இப் பெயர்களில் உள்ள மெய்யெழுத்துக்கள் இவ் எடுப்புக்களை உணர்த்தும். உதாரணமாக முதலுருவை அவதானித்தால், Barbara என்பது 1 ஆம் உருவின் பெயர் அதில் உள்ள aaa என்ற எழுத்துக்கள், அவ்வுருவுக்குரிய எடுப்பு வடிவத்தை உணர்த்துகின்றது. இதேபோல் 2 ஆம் உருவில் Cesare என்பது முதல் வடிவத்தின் பெயர்; இதில் eae எடுப்பு வடிவம்.

3 ஆம் உருவில் Darapti – aai

4 ஆம் உருவில் Bramantip – aai என இனங்காணலாம், இவ்வாறு 19 வடிவங்களுக்கும் பெயர்கள் ஆங்கிலத்தில் உள்ளன.

இங்கு,பிரகாரங்களில் இடம்பெறும் AEIO எடுப்பு வடிவங்களின் சேர்க்கை நியாயத் தொடை விதிகளுக்கு அமைவாக அமைதல் வேண்டும். வலிமையான முடிபுகளைத் தரக்கூடிய பிரகாரங்கள் எவை என, ஒவ்வொரு எடுப்பையும் பிரயோகித்து அவதானிக்கலாம். உதாரணமாக A எடுப்பு, AAA எனும் பொதுப் பிரகாரத்தில் மட்டுமே வாய்ப்பாக அமைகிறது. E எடுப்பில், EAE, EAE, AEE, AEE, என நான்கு சிறப்புப் பிரகாரங்களைப் பெறலாம். I அது பிரகாரங்களில் இரண்டாவது உருவைத் தவிர்த்து ஏனைய உருக்களில் வரும் O எடுப்பு எட்டுப் பிரகாரங்களில் எல்லா உருக்களிலும் நிறுவப்படலாம்.

இதன் அடிப்படையில் A எடுப்பு மிகக் குறைந்தளவு பிரகாரங்களிலும் O எடுப்பு மிகக் கூடிய எண்ணிக்கையுடைய பிரகாரங்களிலும் பிரயோகிக்கப் படலாம். இதில் A எடுப்பே நிறுவுவதற்கு மிக அரிதானதும் மறுத்தற்கு மிக எளிதானதுமாகும்.

பாரம்பரிய அளவையியலில் முக்கியத்துவம் பெறும் உருவும் பிரகாரமும் என்ற அம்சம், நவீன அளவைமுறையின் பிரயோகத்தினால் முககியத்துவம் குறைந்துள்ளது. அறுமானத்தின் பல்வேறு நியமவடிவங்களை இனங்காண்பதற்கும், இவ்வாயிலில் தர்க்கரீதியான இனங்காணப்பட்ட விருத்திகளையும் அறிய இது உதவுகின்றது இவ்விடயத்தைக் கற்கும் மாணவர்களின் சிந்தனைத் திறனை ஊக்குவிக்கும் மறைமுகமான பயன்பாடும் இதில் உளது.

வணிகக்கலைக்கு வளமூட்டும் வணிக ஜோதிக்கு எமது நல்லாசிகள்

**சகல விதமான புடவைத் தினுசுகளை**
**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள**
**நீங்கள் இன்றே நாடுங்கள்**



# சோதி எக்ஸ்

★★★★★★★★★

119/4, மைலன்ஸ் கட்டடம், K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

---

★ இலங்கையில் தற்போது 13 ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்டம் உண்டு

# விஞ்ஞானக் கொள்கைகள் பற்றிய காள்பொப்பரின் பொய்ப்பித்தற் கோட்பாடு

## KARL R. POPPER'S FALSIFIABILITY PRINCIPLE

தி. திருவருட்செல்வன்
1994ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு (13B)

ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னா(Vienna) வில் 1902இல் பிறந்த காள் பொப்பர் வியன்னா பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றார். பின் 1945இல் லண்டன் பொருளியல் கல்விக்கூடத்தில் (School of Economics) தத்துவம், அளவையியல், விஞ்ஞானமுறை எனும் துறைகளுக்கும் பேராசிரியராக நியமனமானார். அத்துடன் விஞ்ஞான் முறையியல், விஞ்ஞானத் தத்துவம் ஆகிய துறைகளிலே ஆர்வமுடைய இவர் அரசியல் தத்துவம் தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொண்டார் காள் பொப்பரின் விஞ்ஞான மெய்யியல்; விஞ்ஞான முறையியல் பற்றிய கொள்கை என்பவற்றை அணுகும் முறையின் பெரும் சிறப்பு இவரது பொய்ப்பித்தற் கோட்பாடாகும்

விஞ்ஞான முறையியலாளரான பொப்பர் விஞ்ஞான ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி விஞ்ஞான அறிவு தொடர்பாக முன்வைக்கப் பட்ட கோட்பாடே பொய்ப்பித்தல் காட்பா

டாகும். இவரது கோட்பாடு யாதெனில் ''அனுபவச் சோதனைகளால் பொய்யாக்கக்கூடிய அறிவு விஞ்ஞானம் என்றும் அனுபவச்சோதனையால் பொய்யாக்க முடியாத அறிவு விஞ்ஞானம் அல்லாதன'' என்றும் எடுத்துரைத்தார். இங்கு அனுபவச் சோதனை என்பதன் கருத்து யாதெனில் ஐம்புலன் முறைகளான அவதான பரிசோதனை முறையில் ஓர் கோட்பாடு பொய்யாக்கக் கூடிய தன்மையை கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். இதன்படி அவர் விஞ்ஞானக் கொள்கைகள் பொய்ப்பிக்கப் படலாம். என்பதை வலியுறுத்துகின்றார்.

பொப்பரின் கோட்பாட்டின் விளக்கத்தை நோக்கும்போது யாதேனும் ஒரு கருதுகோளினால் குறித்த விளைவு நிகழும் எனக் கூறப் பட்டிருக்கும்போது அனுபவச் சோதயைில் (அவதானமுறை பரிசோதனை முறை) ஆராய்கின்ற போது அவ்விளைவு நிகழவில்லை எனின் அத்தகைய கருதுகோள் தவறானது என நிரூபிக்கப்பட விஞ்ஞான அறிவு சுத்திகரிக்கப்பட்டு அதற்கென புதிய கண்டுபிடிப்பு பெறப்படுகின்றது. ஆகவே விலக்குவதன் மூலம் விஞ்ஞானம் முன்னேற்றமடைகின்றது என, இக் கோட்பாடு பெறப்படுகின்றது.

உதாரணமாக ஜேர்மன் தேசத்தைச் சேர்ந்த பெக்கர் எனும் அறிஞரால் கூறப் பட்ட எரிதலுக்கு ''புளோஜிஸ்டோன்'' காரணம் என்ற புளோஜிஸ்டோன் கொள்கை (Phlogiston Theory) பொய்ப்பித்தலும் இலவோசியரால் (Lavoisier) ஒட்சிசன் கண்டுபிடிப்பு (Disco Very of Oxygen) பெறப் பட்டதைக் கூறலாம்.

## கோட்பாட்டின் குறியீட்டு வடிவம்

கார்ள் பொப்பரின் கோட்பாடானது பின் வரும் உய்த்தறிவு வடிவில் விளக்கப்படுவதுண்டு.

$$\begin{array}{l} H \rightarrow I \\ \underline{\sim I} \\ \therefore \sim H \end{array}$$

இங்கு H என்ற கருதுகோளினால் I என்ற விளைவு நிகழ்வதாகக் கூறப்பட்டு அனுபவச் சோதனையில் ஆராய்கின்றபோது I என்ற விளைவு நிகழாவிடின் H என்ற கருதுகோள் பொய்யாக்கப்படுகின்றது. இதன்மூலம் I என்ற வினாவிற்கு H காரணம் அல்ல என்பதால் அதற்குரிய உண்மைக்காரணம் ஆராயப்பட்டு அது விஞ்ஞானக் கண்டுபிடிப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு பொப்பரின் கருத்துப் படி NH எனக் காட்ட முயலும் போதெல்லாம் எவ்வளவு தூரத்திற்கு அது தப்பி நிற்கின்றதோ அவ்வளவுக்கு அது விஞ்ஞானத்தன்மை வாய்ந்தது என்பது இவருடைய கருத்து. மேலும் இங்கு பயன்படுத்தி இருக்கும் உய்த்தறி (Deau ctive) வடிவம் வலிதாக அமைந்திருப்பது இதன் ஒரு சிறப்பியல்பாகும்.

## கோட்பாட்டின் சிறப்பியல்புகள்

பொப்பரின் கோட்பாடு விஞ்ஞானக்கொள்கைகளை, விஞ்ஞான முறையில் அமையாத கொள்கைகளினின்றும் வேறுபடுத்திக் காட்டக் கூடிய தவறமுடியாத ''கட்டளைக்கல்'' என பிரபல்யப்படுத்திய நாள்முதல் அது விஞ்ஞான மெய்யியலாளர்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளது. பொப்பரின் கோட்பாடு விஞ்ஞானக் கொள்கைகள் தொகுத்தறி முறை (Inductive Method) யிலும் உய்த்தறிமுறை (Deductive Method) யிலும் அமைக்கப்படுவதாகக் பேகன், ஹெம்பல் முதலிய விஞ்ஞான மெய்யியலாளர்கள் தெரிவித்து கருத்துக்களை விமர்சிப்பதாக இவருடைய கருத்துக்கள் அமைந்தன. ஒரு கொள்கையைப் பிழையென்று நிரூபிக்கும் பொழுது பிறிதொன்றாகக் காண்கின்றோம். இங்கே முந்திய கொள்கையைப் பிழை

யென நிரூபிப்பது முக்கியமானதாகும். அவை எம்மால் உண்டாக்கப்பட்டவை. அவற்றில் குறை பாடுகள் இருக்கத்தான் செய்யும் ஆகவே நாம் இங்கே இறுதி விளக்கக் கொள்கையை (Essentialisim) மட்டுப்படுத்தி ஏற்கவேண்டும் எனப் பொப்பர் கூறுகின்றார். போலி விஞ்ஞான வகைகளை விஞ்ஞான வகைகளிலிருந்து பிரித்துக் காட்டுவதற்காக குறிப்பாக பௌதீக அதீதத்திலிருந்து (Metaphysic) வேறுபடுத்திக் காட்ட பொப்பர் பிரமாணமாய் இப் பொய்ப் பித்தற் கோட்பாட்டைத் தந்தார். மாக்ஸிசக் கோட்பாடு போன்றவற்றை மறுத்து அவை விஞ்ஞான இயல்பற்றன என்று கூறுவதில் காள்பொப்பரின் பொய்ப்பித்தற் கோட்பாடு ஓரளவு வெற்றி பெற்றுள்ளது என்பது ஆய் வாளர்களது முடிவாகும்.

காள்பொப்பரின் கோட்பாட்டில் "பொய்ப் பித்தல்" (Falsifiability) என்ற அம்சம் முக் கியத்துவம் பெறுகின்றது. இங்கு பொய்ப்பித் தல் என்பது விஞ்ஞானக் கோட்பாடுகளின் உறுதித்தன்மையை அதிகரிக்கச் செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சியாகும். இவ்வாறு ஒரு விஞ்ஞானக் கொள்கையை பொய்ப்பித்தலுக்கு முயற்சி எடுக்கும்போது அப் பொய்யாக்கற் பரிசோதனைக்கு தாக்குப் பிடிக்காது நின்றால் அல்லது பொய்ப்பித்தல் செயற்பாட்டுக்குள் அக் கொள்கை உட்பட்டிருந்தால் அவ் விஞ் ஞானக் கொள்கை நிராகரிக்கப்பட்டு அதற் கெனப் புதிய உண்மை முன் வைக்கப்படுகின் றன. இதன் மூலம் விஞ்ஞான அறிவு விருத்தி யடைகின்றன. பொய்ப்பித்தல் முயற்சிகளின் போது பொய்ப்பிக்கப்படாமல் தப்புமாயின் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு நிகழின் கருது கோள் உண்மையெனத் தற்காலிகமாக ஏற்ப படக்கூடும். ஆனால் முடிவாக இதுதான் எனத் தீர்மானிக்க முடியாது. இவ்வாறு தொடர்ச்சி யாக பொய்ப்பித்தல் முயற்சி நடைபெற்று ஒரு கொள்கை உறுதிப்படுத்தப்பட்டு, நிலை யான இடமொன்றைப் பெறுகின்றது. பொப் பரின் கருத்துப்படி ஒரு கொள்கையின் பொய்ப் பிக்கக்கூடிய தரம் அல்லது வேகம் (Degree) கூடக்கூட அதனது உறுதித்தன்மை அதிகரிக் கின்றது என்பதை வலியுறுத்துகிறார்.

## பொப்பரின் கருத்துப்படி விஞ்ஞானம் பெற்றிருக்கவேண்டிய இலட்சணங்கள்

★ அனுபவச் சோதனையால் பொய்யாக்கக் கூடியதாக அமைய வேண்டும்.

★ கவர்பாடு அற்ற எளிய மொழியில் அமைந்திருக்க வேண்டும்.

★ மாறுபடாத பொருளைக் கொண்டிருக்க வேண்டும்.

★ நேர்வுகளுக்கு காரணமான நிலைகள் எதிர்வு கூறப்பட்டிருக்க வேண்டும்.

★ விலகுவதன் மூலம் புதிய உண்மை கண் டறியப்பட வேண்டும்.

காள்பொப்பரின் கோட்பாட்டினை நோக் கும் போது தூயகணிதம் (Pure Maths) அளவையியல் (Logic) போன்ற நியம விஞ் ஞானங்களுக்கு இவரது கோட்பாடு பொருத்த மற்றதாகின்றது ஏனெனில் இத்தகைய விஞ் ஞானங்கள் பொருள் உண்மையை நோக்காது சில விதிகளை அல்லது செய்கைகளைக் கொண்ட சிந்தனை அறிவை அடிப்படையா கக் கொண்டவையே அன்றி அனுபவச் சோத னையால் பொய்யாக்கக் கூடியன அன்று.

நவீன விஞ்ஞானங்களில் அனுபவச் சோதனை (Empirical test) முறையை அதா வது ஐம்புலன் முறைகளான அவதானம் (Cobsevation) பரிசோதனை முறை (Experimental Method) களை அடிப்படையிலமைந்த விஞ்ஞானங்களில்கூட எல்லாவற்றிற்கும்

இவரது கோட்பாடு பொருந்தும் என்றில்லை. அதாவது புவியீர்ப்புவிதி நெப்ரியூன் கண்டுபிடிப்பு (The Discovery of Neptune) போன்ற விஞ்ஞான அறிவுகளை நோக்கும்போது இவை பொய்ப்பிக்காமல் அல்லது விலக்கப்படாமல் பெறப்பட்ட கண்டுபிடிப்புக்குச் சான்றாகும்.

சமூக விஞ்ஞானங்களில் பொப்பரின் கோட்பாட்டை நோக்கும்போது மனித நடத்தை பற்றிய கோட்பாடுகள் எல்லாம் பொய்யாக்கியே பெறப்படுவதொன்றில்லை. இங்கு புள்ளி விபரவியல் முறை (Statistics Method) யியல் போன்றவற்றில் பழைய புள்ளி விபரங்களை விலக்கி புதிய புள்ளி விபரங்கள் பெறுவதுண்டு எனினும் தற்காலத்திய போலி விஞ்ஞானங்களாகிய வரலாறு (History) தொடர்பான மாக்ஸிசம் (Marxism) கோட்பாடு சிக்மண்ட் ஃப்றெய்டின் உளப்பகுப்பாய்வுக் கோட்பாடு போன்ற சமூக விஞ்ஞானங்களுக்கு பொப்பரின் தத்துவம் பொருந்தாதது எனலாம். ஏனெனில் இவை அதிகளவு கவர்பாடு, உடையன ஆகவும் அதேவேளை தெளிவான மொழியை கொண்டவையும் அல்ல.

பலர் இவரது விஞ்ஞானத்தைப் பற்றிய இவ் வாதத்தை திருப்திகரமானது என ஏற்றுக் கொண்டாலும் நுணுகி ஆராயும்போது பொப்பர் பொய்ப்பிக்கப்படும் தன்மையென்னும் ஒரு தனிக் கட்டளைக்கல்லை முன் வைக்கும்போது விஞ்ஞானக் கொள்கைகள் பெறும் உருவங்களையும் அவற்றைப் பரீட்சிப்பதற்கு விஞ்ஞானம் பயன்படுத்தும் முறைகளையும் "மிக எளிமைப்படுத்தி விடுதல்" என்னும் குற்றத்திற்கு ஆளாகின்றனர்.

பொப்பரின் விளக்கம் விஞ்ஞானக் கொள்கைகளுக்கு பொருந்தாது என்பதற்குச் சான்றாக முக்கிய விஞ்ஞானக் கொள்கைகள் எழுந்த முறையை உதாரணமாகக் காட்டலாம். உண்மையில் விஞ்ஞான முறையைப்பற்றி எழுதிய பலர் சமீப காலத்தில் இதனைச் சுட்டிக் காட்டியும் உள்ளனர். உதாரணமாக சார்புப் பொதுக் கொள்கை, வெப்ப இயக்கவியல் இயற்கைத் தேர்வுச் சார்புக் கொள்கை என்பவை இக்கால விஞ்ஞானத்தில் அடிப்படையான நன்கு வலியுறுத்தப்பட்ட விஞ்ஞானக் கொள்கைகள் எனினும் பொப்பரின் "பொய்ப்பித்தற் கோட்பாடு" என்றும் பெரிய கட்டளைக் கல்லில் இலகுவாக உரைத்துப் பார்க்கத்தக்கவையாக இல்லை

**உசாத்துணை நூல்கள்**

விஞ்ஞானமும் விஞ்ஞான முறைகளும்
ஆ. க. ஆனந்தநாதன் B. A. (Hons) M. A.
விரிவுரையாளர், மெய்யியற்றுறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Logic and Scientific Method
K. M. Rajesh

---

"தேயிலை கலப்பு பத்திரம்" என்பது இலங்கை தேயிலைச் சபைக்கு (SRI LANKA TEA BOARD) ஏற்றுமதியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஏற்றுமதிகள் மீதான விபரமான தகவல்களைக் கொண்ட பத்திரமாகும்.

# அளவையியலின் விஞ்ஞான முறைகள்

செ. சுபாஜினி

1994ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு (13B)

அளவையியலில் விஞ்ஞானமானது பல முறைகளைப் பிரயோகித்து பலதரப்பட்ட உண்மைகளைப் பெறுகின்றது. இவ்வாறு விஞ்ஞானம் பிரயோகிக்கின்ற முறைகளே, விஞ்ஞான முறைகள் எனப்படுகின்றன. ஆகவே எத் துறைகள் விஞ்ஞான முறைகளைப் பிரயோகிக்கின்றனவோ, அவற்றையே விஞ்ஞானம் என்று கருதுகிற போக்கை இங்கு காணலாம்

எனவே இவ் அளவையியலின் விஞ்ஞானத்தில் பயன்படுத்தும் விஞ்ஞான முறைகளை ஆராய்வோம். அதில் ஆரம்பகால அறிவியல் முறையாக அரிஸ்ரோட்டிலின் உய்த்தறிமுறை அமைகின்றது. அக்கால அறிவியல் முடிவுகளை நன்கு அவதானித்தால் அவை உய்த்தறி இயல்பினதாக அமைந்திருப்பதனைக் காணலாம். அதாவது உய்த்தறி முறை எனும் "பொது எடுகோள் ஒன்றை ஏற்றுக்கொண்டு அதன் வழியாகத் தனிப்பட்ட முடிவுக்கு வருவதே உய்த்தறிமுறையாகும்' இதனையே ஜெவோனிஸ் என்ற அறிஞரும் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகின்றார் "உய்த்தறி முறை என்பது பொதுவரைவிலக்கணம் ஒன்றிலிருந்து குறிப்பிட்ட தீர்வுகளைப் பெறுதல் ஆகும்.

இவ் உய்த்தறி முறை முடிவுகளாவன பின்வரும் பண்புகளைக் கொண்டிருந்தன.

1. உய்த்தறி முடிவுகள் பொது எடுகோள்களிலிருந்து தனிப்பட்ட முடிவுக்கு வருதலாகும்.

2. உய்த்தறி முறை அனுபவ முதலானது.

3. உய்த்தறி முடிவுகள் விதிகளைச் சார்ந்தவை.

4. உய்த்தறி முடிவுகள் நிச்சயத்தன்மை வாய்ந்தவை.

5. உய்த்தறி முறை வகுமுறையை அடிப்படையாகக் கொண்டது.

இப் பண்புகளைக்கொண்ட உய்த்தறி முறையின் ஆரம்பகால முடிவுகளான உயிரின் தோற்றம் பற்றிய கருத்துக்கள், ஒலி, ஒளி பற்றிய கருத்துக்கள், கோள்களின் தோற்றம் பற்றிய முடிவுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் இவ் விஞ்ஞான முடிவுகள் பற்றி பல முரண்பாடுகள் அவ்வப்போது எழுந்தன. அதாவது குறித்த ஓர் விடயம்பற்றி ஒன்றிற்கு மேற்பட்ட முடிவுகளும், பகுத்தறிவிற்கு பொருந்தாதவையுமாகக் காணப்பட்டன.

உதாரணமாக:- தொலமியின் சூரியமையக் கொள்கை பற்றிய விளக்கத்திற்கு கொப்பனிக்கரின் புவிமையக் கொள்கை தோற்றம் பெற்றது.

எனவே உய்த்தறி முறையில் மேற்சொன்ன குறைபாடுகள் காணப்பட்டன. இதனால் நீண்டகால அறிவியல் முறை ஒன்று அவசியம் என்ற கருத்து நிலவி வந்தது.

மேற் குறிப்பிட்ட கருத்தையொட்டி கி.பி 14 ஆம் நூற்றாண்டளவில் எண்ணீட்டு முறை முன்வைக்கப்பட்டது. விஞ்ஞான முறைகளில் ஒன்றான எண்ணீட்டு முறையானது இரு வகைப்படுத்தி நோக்கப்பட்டன.

அவையாவன:

1. பூரண எண்ணீட்டு முறை

2. அபூரண எண்ணீட்டு முறை

இவற்றில் பூரண எண்ணீட்டு முறை என்பது ஒரு வகுப்பில் அல்லது தொகுதியிலுள்ள தனியன்கள் யாவற்றையும் எண்ணியதன் பின்பும் நோக்கியதன் பின்பும் அவதானிக்கப்பட்ட பொது உண்மையை அவ் வகுப்பு பொதுமையாக்கம் செய்வதே இம் முறையாகும்.

உ + ம்:- ஒரு கிழமையிலுள்ள நாட்கள் அனைத்தும் 24 மணித்தியாலங்களைக் கொண்டன என்ற ஒரு பொதுமையாக்கம் நிகழ்வதற்கு பூரண எண்ணீட்டு முறை பின்வருமாறு பிரயோகிக்கப்படுகின்றது. எனவே கிழமையில் உள்ள எல்லா நாட்களும் 24 மணித்தியாலங்கள் கொண்டவையாகும்.

அபூரண எண்ணீட்டு முறை எனும்போது ஒரு வகுப்பிலுள்ள அல்லது ஒரு தொகுதியிலுள்ள ஒருசில தனியன்களை எண்ணியதன் பின்பும் நோக்கியதன் பின்பும் அச் சில தனியங்களில் காணப்பட்ட பொது அம்சத்தை அவ்வகுப்பு முழுவதற்கும் பொதுமையாக்கம் செய்யும் முறையாகும்.

உ + ம்:- மல்லிகை அழகானது
ரோஜா அழகானது
செவ்வந்தி அழகானது
∴ மலர்கள் யாவும் அழகானவை ஆகும்.

உய்த்தறி முறையைப் போன்றே எண்ணிக்கை அடிப்படையில் பெறப்படும் எண்ணீட்டு முறையும் சிறந்த அறிவியல் முறை அல்ல என்ற கருத்து அக் காலத்திலேயே பலரால் முன்வைக்கப்பட்டது. ஆதலால் இவற்றிலும் பார்க்க சிறந்த ஒரு முறை அவசியம் என்ற கருத்து நிலவியது.

இதன் பயனாகவே 16 ஆம் நூற்றாண்டளவில் தொகுத்தறி முறை முன்வைக்கப்பட்டது. இதுவே இன்றைய விஞ்ஞான முறையின் ஆரம்பமாகும். தொகுத்தறி முறையின் வருகையினூடே நவீன விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தது. இதனை 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்ஸிஸ் பேக்கன் என்ற தத்துவ ஞானியே அறிமுகம் செய்தவர். தொகுத்தறி அளவையியல் ஆனது இவ் நூற்றாண்டில் ஒரு விருத்தி செய்யப்பட்ட துறையாகக் காணப்பட்டது. ஏனெனில் தொகுத்தறி முறையானது விஞ்ஞானங்களும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளமையால் இந் நூற்றாண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றன. நாம் வாழுகின்ற இவ்வுலகமானது ஒரு விஞ்ஞானயுகம் எனப்படுகின்றது விஞ்ஞானமானது உண்மைகளை எடுத்துக் கூறுகின்றன இவ்வுண்மைகளாவன எந்தளவிற்கு சிறந்த உண்மைகளாக அல்லது பூரண உண்மைகளாக

அமையக் கூடும் என மதிப்பிடும் ஒருமுறையே பிரான்ஸிஸ் பேக்கனால் அறிமுகப்படுத்தப்பட்ட தொகுத்தறி முறையாகும்.

தொகுத்தறி முறையினை வரைவிலக்கணப்படுத்துவதாயின் '' இயற்கையிலுள்ள ஒவ்வொரு தனியன்களை அவதானித்து பொது முடிவினைப் பெறுதல் ஆகும்'' இவ் முடிவு உறுதியானது ஆகையால் அனுபவரீதியானதும் பகுத்தறிவிற்குப் பொருந்தக் கூடியதுமான அறிவியல் முறையாக இது அமைந்துள்ளது.

தொகுத்தறி முறையில் பெறப்படும் முடிவுகள் பின்வரும் பண்புகளைக் கொண்டு விளங்குகின்றன.

1. தொகுத்தறி முறை தனி முடிவுகளிலிருந்து பொது முடிவுக்கு வரும்.
2. இம் முறையின் முடிவு அனுபவ வழியானது.
3. இவை நெகிழ்திறன் வாய்ந்தவை.
4. தொகுத்தறி முறை முடிவானது வகுமுறையும் தொகுமுறையையும் அடிப்படையாகக் கொண்டது.

இப் பண்புகளைக் கொண்ட தொகுத்தறி முறை முடிவுகள் மூலம் பெறப்பட்ட முடிவுகள் தொகுத்தறி தாவுதலைக் கொண்டுள்ளது. அதாவது ஒரு சில அம்சங்களை ஒரு வர்க்கத்திற்குரிய சில தனியங்களை அவதானித்து அவ் வர்க்கம் முழுவதற்கும் தாவிச் செல்லும் முறையாகும்.

உதாரணமாக இயற்கையை ஆராய்கின்ற விஞ்ஞானி தனது காலத்தில் தன்னால் இயன்றளவு நிகழ்த்திய பரிசோதனையைக் கொண்டு அவ்வியற்கை பற்றிய ஓர் பொது முடிவினை முன்வைக்கின்றான். இங்கு தொகுத்தறித் தாவுதல் இடம் பெறுவதைக் காணலாம்.

இவ்வாறு தொகுத்தறி முடிவுகள் ஒவ்வொன்றும் தொகுத்தறி தாவுதலைக் கொண்டிருந்தாலும் அவற்றை உறுதியாக ஏற்றுக் கொள்வதற்கு இயறகை பற்றிய நம்பிக்கை உதவுகின்றன. எனவே இவ் இயற்கை பற்றிய நம்பிக்கையினூடே உருவாகிய இயற்கையின் ஆதார விதிகள் தொகுத்தறி முறையின் ஆய்வுக்கும் முடிவுக்கும் ஆதாரமாக அமைகின்றன.

பாரம்பரிய அளவையியலின் இரு வேறு அனுமான முறைகள் எனப்படும் உய்த்தறி அளவையியலும் தொகுத்தறி முறையிலும் அடிப்படைத்தன்மையில் வேறுபடுகின்றன. இவ் வேறுபாடுகள் பின்வருமாறு

1. இவ்விரண்டும் இரு வேறு அனுமான முறைகளைக் கொண்டுள்ளன. உய்த்தறி முறை பொது உண்மைக்குள் அடங்கிய ஒரு தனி உண்மையை அனுமானிக்கின்றது.

உ + ம்:- மனிதர்கள் யாவரும் பகுத்தறிவுடையவர்கள்
காந்தி ஒரு மனிதன்
∴ காந்தி பகுத்தறிவுடையவன்

தொகுத்தறி முறையானது சில தனி உண்மைகளிலிருந்து ஒரு பொது உண்மையை அனுமானிக்கின்றது.

உ + ம் X என்ற காகம் கரியது
Y என்ற காகம் கரியது
∴ காகங்கள் அனைத்தும் கரியனவாகும்.

2. உய்த்தறி முறையில் வாதங்கள் அனுபவரீதியாக வாய்ப்புப் பார்க்கப்படுவதில்லை. அதாவது உண்மை பொய் நிரூபிக்கப்படுவதுமில்லை

உ + ம்:- எல்லாப் பிராணிகளும் வேகமாக ஓடும்
ஆமை ஓர் பிராணி
∴ ஆமையும் வேகமாக ஓடும்.

ஆனால் தொகுத்தறி முறையின் வாதங்கள் அனுபவரீதியாக உண்மை அல்லது பொய் என நிரூபிக்க வேண்டியவை ஆகும். ஏனெனில் ஒரு சில தாவுகளிலிருந்து பொதுமையாக்கம் நிகழ்கின்றபோது ஒரு நிகழ்வு உண்மையாகும் ஆகவே பொய்ப்பிக்க இடமுண்டு.

4. உய்த்தறி வாத அனுமான உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு முன்னர் ஏதுவான அறிவும் தொகுத்தறிவான அனுமானங்களை வெளிப்படுத்துவதற்கு பின்னர் ஏதுவான அறிவும் பயன்படுகின்றது.

5. உய்த்தறி முறையின் வாத உண்மைகளை வடிவமமைப்பே தீர்மானிக்கிறது. ஆனால் தொகுத்தறி முறையில் பொருள் உண்மை அவதானிக்கப்படுகிறது.

இவ்வாறு உய்த்தறியும் தொகுத்தறியும் பல அடிப்படை வேற்றுமைகளை கொண்டபோதும் உய்த்தறி

முறை தொகுத்தறி முறைக்கும் தொகுத்தறி முறை உய்த்தறி முறைக்கும் உதவுகின்றது. ஆரம்பத்தில் உய்த்தறி முறை மூலம் ஆய்வு ஆரம்பிக்கப்பட்டு பின்பு தொகுத்தறி மூலம் நிறுவப்பட்டது. அடுத்து உய்த்தறி முறையின் தலைகீழ் வடிவமே தொகுத்தறி முறை எனக் கூறுவர் அதாவது

பொது முடிவு —— உய்த்தறி ——> தனிமுடிவு

<—— தொகுத்தறி ——

அத்தோடு உய்த்தறி முறை விதிகளைச் சார்ந்தவை ஆகையால் தொகுத்தறி முறை முடிவுகளைப் பெற உதவுகின்றது.

எனவே இவையிரண்டும் தொடர்புற்று அமைந்திருப்பதால் அளவையியலில் இருவேறு கண்கள் என இவ்விரு முறைகள் அழைக்கப்படுகின்றன.

இதுவரை விஞ்ஞான முறைகளான உய்த்தறிமுறை தொகுத்தறி முறை எண்ணீட்டு முறை பற்றி சுருக்கமாக ஆராய்ந்தோம். இதைத் தவிர ஒப்புவமை அனுமானம், புள்ளிவிபரமுறை, சான்றுகள், ஆய்வுகூட பரிசோதனை முறை போன்றவையும் விஞ்ஞான முறைகளாகக் கொள்ளப்படுகின்றன.

''ஜோதியே'' நீ பொலிவுற எமது வாழ்த்துக்கள்.

"உங்களின் எண்ணங்கள் எங்களின் கைவண்ணங்கள்" இலங்கையில் தலைசிறந்த ஆலயங்களிலும் மற்றும் "மலேசியா"வின் பல ஆலயங்களிலும் சிற்ப வேலைகளில் தமது கைவண்ணத்தைக் காட்டி புகழ்பூத்து நிற்பது

ஆறுமுகம் சிற்பாலயம்

சிற்ப சாஸ்திர முறைப்படியும், ஆலயங்களின் அமைப்புக்கேற்பவும் தேர், மஞ்சம், மற்றும் வாகனங்களை சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர்:- ஸ்தபதி ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரியார்

"ஆறுமுகம் சிற்பாலயம்"

காளிகோவிலடி — திருநெல்வேலி மேற்கு — யாழ்ப்பாணம்

☆ J. வோல்டர் தோம்சன் எனும் நிறுவனம் ஆசியாவில் சிறந்த விளம்பர முகவர் நிலையமாகும்.

# விஞ்ஞானத் தரவுகளைச் சேகரிக்கும் முறைகள்

ஐ. உதயசந்திரிகை
1994ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு (13B)

விஞ்ஞானத்தில் ஒரு கண்டுபிடிப்பானது, பிரச்சினையோடு ஆரம்பிக்கிறது என்றும் கருதுகோள் ஏற்றுக்கொண்டதும் முடிவடைகின்றது என்றும் பொதுவாகக் கூறப்படுவதுண்டு. எனினும் விஞ்ஞான ஆய்வினை நாம் பின்வரும் படிமுறைகளில் காட்டிக் கொள்ளலாம்.

அவையாவன:

1. அவதானம் அல்லது நோக்கல்.
2. பிரச்சினை உருவாதல்.
3. தரவுகளைச் சேகரித்தல்.
4. கருதுகோள் அமைத்தல்.
5. கருதுகோளைச் சோதித்தல்.
6 கருதுகோளை உறுதிப்படுத்தல்.
7. கண்டுபிடிப்பைப் பெறல்.

இப்படிமுறைகளினூடாக கண்டுபிடிப்புக்கள் உருவாகும்போது ஒரு கண்டுபிடிப்புக்கான தரவுகளைச் சேகரிக்கும் முறையாக நாம் பின்வருவனவற்றைக் கூறலாம்.

அவையாவன :

1. அவதானம் அல்லது நோக்கல்.
2. பரிசோதனை.
3. சான்றுகள்.

இங்கு அவதானம் அல்லது நோக்கல் என்பது விஞ்ஞானத்தில் பொருள் சார்ந்த தரவுகளைச் சேகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் முறைகளில் ஒன்றாகும். கிரேக்க காலத்தில் அவதானத்தினை அடிப்படையாகக்கொண்டு இன்றுவரை ஏற்றுக்கொள்ளக்கூடிய பல பொதுவான முடிவுகளை அனுமானித்துள்ளன. இயற்கையிலுள்ள தோற்றப்பாடு ஒன்றினை எவ்வகையான மாற்றத்திற்கும் உட்படுத்தாது உள்ளதை உள்ளவாறே மனமும் புலனும் இணைந்த வகையில் மேற்கொள்ளப்படுகின்ற புலன்காட்சிகளனைத்தும் விஞ்ஞான நோக்கலாகக் கொள்ளப்படும் சமூக விஞ்ஞானங்களில் அவதானத்தினை அடிப்படையாகக் கொண்டே பல்வேறு பொது முடிவுகள் பெறப்படுகின்றன. இவ்விஞ்ஞான நோக்கலானது சிறப்பாக காணப்பட வேண்டுமிடத்து அது சில பண்புகளை உடையனவாகவும் காணப்படல் வேண்டும்.

## நல்ல விஞ்ஞான நோக்கலுக்கு இருக்க வேண்டிய பண்புகள்.

1. இயற்கையில் நிகழ்கின்ற தோற்றப்பாட்டினை, அத்தோற்றப்பாடு நிகழ்கின்றவாறே அவதானிக்கும்போது, அடிப்படையில் ஓர் குறிக்கோள் அல்லது இலக்கினை மையமாகக் கொண்டு அவதானம் இடம்பெறவேண்டும். இவ்வாறு இடம் பெறுகின்றபோதே விஞ்ஞானப் பொதுமையாக்கம் ஒன்றினை அமைக்க முடியும்.
2. புலன்கள் ஓர் தோற்றப்பாட்டினை அவதானிக்கும்போது, மனம் அப்புலன்களினூடாகச் சேகரிக்கப்பட்ட தரவுகளை வகைப்படுத்தி விஞ்ஞானக் கருதுகோளை உருவாக்கவேண்டும். இதற்கு மனமும் புலனும் இணைந்த வகையில் நோக்கல் இடம்பெறவேண்டும்.
3. அவதானத்தினை மேற்கொள்பவர் புலன்களில் கோளாறு அற்றவராகக் காணப்படவேண்டும்.

   உதாரணமாக நிறக்குருட்டுத்தன்மையுடைய ஒருவர் நிறமாலையை அவதானிப்பாராயின் அவரால் திரட்டப்படுகின்ற தரவுகள் செம்மையற்றதாய் அமையும்.
4. அவதானிக்கும்போது கருவிகள் பிரயோகிக்க வேண்டிய நிலையில் அவற்றைச் செம்மையாகவும் நுட்பமாகவும் கையாண்டு தரவுகளைச் சேகரிக்கவேண்டும்.
5. அவதானிக்கின்ற நேர்வு தொடர்பான துறையில் பூரணமான அறிவினைக் கொண்டிருக்கவேண்டும்.
6. அவதானிக்கின்ற நிகழ்வுக்குரிய விஞ்ஞானக் காரணத்தைக் கண்டறியக் கூடிய அகக்காட்சித்திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இவ்வகையில் அமைந்த ஒரு விஞ்ஞான நோக்கலானது சிறப்பாகக் காணப்படும்.

இவ் மனமும் புலனும் இணைந்த நோக்கலுடன் நாம் கருவிகளையும் ஈடுபடுத்துவதன்

மூலம் உறுதியானதும் சரியானதுமான தரவு களையும் பெறவாய்ப்புண்டு.

விஞ்ஞானத்தில் தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாகப், பல நுட்ப மான கருவிகள் கண்டறியப்பட்டு அவற்றைப் புலன்களுடன் இணைப்பதனூடாகப் பெறுகின்ற அவதானமாகும். இவ் நோக்கலின்மூலம் உறுதி யான தரவுகளைச் சேகரிப்பதுடன் கருவி களைப் புலன்களுடன் பயன்படுத்துவதால் புலன் கட்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்ப் பதுடன் சாதாரண புலனினால் அவதானிக்க முடியாத நிகழ்ச்சிகளையும் அவதானிப்பதுடன் செம்மையான தரவுகளையும் பெறலாம்.

இவ்வாறு அவதானத்தின் மூலம் தரவு களைப் பெறும்போது சில வேளைகளில் பிழை யான வகையில் அவதானம் இடம்பெறின் நோக்கல் போலிகள் ஏற்படும். இவ் நோக்கல் போலியானது இரு வகையில் ஏற்படலாம்.

1. அல்நோக்கல் அல்லது முற்றும் பாராமைப் போலி.

2. வழுநோக்கல் அல்லது திரிபுக்காட்சி.

## I. அல்நோக்கல்:-

அவதானிக்கப்படவேண்டிய நிகழ்வு ஒன்று தற்செயலாக கவனியாது விடுவதோ அல்லது அவதானிக்க மறுப்பதோ அல்நோக்கலாகும். இப் போலியானது பின்வரும் காரணங்களால் எழுகின்றன.

1. குறிப்பிட்ட ஓர் நிகழ்வு தொடர்பான உதாரணங்களைக் கவனிக்கும்போது ஏற்படலாம்.

அதாவது:

A) விதி உதாரணங்களும் மறை உதா ரணங்களும் செயற்படும் போது விதி மட்டும் உதாரணங்களை கவனித்து முடிவுகளை மேற்கொள்ளல்.

உதாரணம்:- பூனை குறுக்கே போனால் தீங்கு விளையும் என்பது வீதி. உதார ணத்தின் அடிப்படையில் எடுக்கப் பட்டமுடிவாகும்.

B) ஒருகொள்கைக்குச் சார்பானவர்அதற்கு சார்பான உதாரணங்களைக் கவனித்துப் பாதகமான உதாரணங்களைக் கவனியாது விடல்.

C) இதுவரை ஓர் நிகழ்வினை அவதானிக்க வில்லை என்பதால் அவை சார்பான உதார ணங்களைக் கவனிக்க மறுத்தல்.

உதாரணம்:- ஆகன் வாயு கண்டுபிடிக்கப்பட்ட போது பல விஞ்ஞானிகள் அவ் வாறு ஒரு வாயு இல்லை என அவதானிக்க மறுத்தல்.

2. ஓர் நிகழ்வு தொடர்பான முடிவினை மேற்கொள்ள முற்படுகின்றபோது முக்கியமான நிபந்தனைகளும் முக்கியமற்ற நிபந்தனைகளும் செயலாற்றும்போது முக்கியமற்ற நிபந்தனை களின் அடிப்படையில் முடிவுகளை மேற் கொள்ளல்

உதாரணமாக இரு ஆண்டுகளை ஒப்பிடு கின்றபோது ஓர் ஆண்டினைவிட இன்னோர் ஆண்டு குற்றவாளிகள் அதிகரித்துள்ளனர் என்பதால் குற்றச்செயல்கள் கூடுதலாக இடம் பெற்றுள்ளது எனக் குறிப்பிடுவாராயின் இம் முடிவு தவறாக அமையலாம்.

ஏனெனில் நாட்டில் இடம்பெற்ற பாதுகாப்பு நடவடிக்கைகளினால் கூடுதலான குற்றவாளி களை இனம்காண முடிந்திருக்கும்.

## II. வழநோக்கல் அல்லது திரிபுக்காட்சி:-

விஞ்ஞானத்தில் குறிப்பிட்ட ஓர் நேர்வினை அவதானிக்கின்றபோது, ஓர் நிகழ்வு இன்னோர் நிகழ்வாகத் திரிபுபடுத்தி நோக்கப்படுமாயின் அதனைக் வழநோக்கல் என்பர் இது:-

1. இருள், பனி, மந்தாரம் போன்ற இயற்கைச் சூழ்நிலைகள் ஒன்றினை இன்னொன்றாக அவதானித்தல்.

2. அவதானிப்பவரின் மனதில் ஏற்படும் மாற்றங்களை [அவசரம், பயம், கோபம், மகிழ்ச்சி] ஒன்றினை இன்னொன்றாக அவதானிக்க வழி வகுத்தல்.

3. அவதானிக்கப்படுகின்ற இரு பொருட்கள் ஒரேவகையான இயல்புடையதாகக் காணப்படல் போன்ற வழநோக்கல் போலிகள் ஏற்படக் காரணமாகின்றது.

அவதானத்தை அடுத்து விஞ்ஞானத் தரவுகளைச் சேகரிக்கும் முறையாகப் பரிசோதனை அமையும். இது ஆராயப்படுகின்ற நேர்வுகளில் சில மாற்றங்களையோ அல்லது கட்டுப்பாடுகளையோ ஏற்படுத்தி நோக்குகின்ற முறை எனப்படும்.

உதாரணமாக ஒட்சிசனே எரிதலுக்கு அவசியம் என்ற பரிசோதனையைக் கூறலாம்.

இப் பரிசோதனையானது குறிப்பிட்ட நேர்வுக்கு இன்றியமையாத நிபந்தனைகளை நோக்கலின் மூலம் பெற முடியாதபோது முக்கியம் பெறுகிறது. மேலும் பரிசோதனை என்பது நேர்வுகளுக்கு காரணம் இல்லாததெனக் கூறப்படுகின்ற நிபந்தனைகளை விளக்கிக் காட்டுகின்ற குறிக்கோளைக் கொண்டதாகும். அத்துடன் ஒரு குறிப்பிட்ட நேர்வை ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகள் ஏற்படுத்தக்கூடும். அவற்றில் எவை அந்நேர்வில் கூடச் சார்ந்துள்ளது என்பதையும் பரிசோதனைகள் மூலமே பெறமுடியும்.

அடுத்துச் சான்றுகளை நோக்கின் விஞ்ஞான ஆய்வுக்குத் தேவையான இன்றியமையாத தரவுகள் யாவற்றையும் ஆய்வாளன் நேரடியாகப் பெற்றுக்கொள்வது இயலாத ஒன்றாகும். இதனால் சான்றுகள் முக்கியத்துவம் பெறுகின்றது. அதே வேளை இயற்கை நேர்வுகள் எல்லாம் மீண்டும் ஏற்படக்கூடியன என்றில்லை. ஆகவே ஒருவர், தான் பெற்ற தரவுகளைப் பிறிதொரு ஆய்வாளனுக்குப் பயன்படச் செய்யவோ, பிறிதொரு ஆய்வாளனிடமிருந்து தரவுகளைப் பெறவோ சான்று முக்கியம் பெறுகிறது. விஞ்ஞான ஆய்வுக்கு சான்று பயன்படினும் அவை அப்படியே ஏற்கக்கூடியவை என்றில்லை. சில சான்றுகளை ஆய்வாளன் ஏற்பதுமுண்டு உடன் நிராகரிப்பதுமுண்டு. ஆனால் பெரும்பாலான சான்றுகள் நன்கு ஆராயப்பட்டே ஏற்கப்படுகின்றன.

இவ்வாறாக அவதானம், பரிசோதனை, சான்றுகள் மூலம் விஞ்ஞானத்தரவுகள் சேகரிக்கப்பட்டு அவை செம்மையாக வாய்ப்பு பார்த்தலின் மூலம் கண்டுபிடிப்புக்கள் உருவாகின்றன எனலாம்.

# பரணிப் பிரபந்த வழியில் நாம்

ஜொ. மோகன்ராஜ்
கலைப்பிரிவு - 94 (13D)

தமிழ் இலக்கிய வரலாற்றிலே சோழர்காலம் என்பது ஓர் பொற்காலம். புதுமை நிறைந்த புனித காலம். காலத்தின் கோலம் கரை கடந்து, பல தரை புரண்டு எம்மை நோக்கி வருகின்ற கோலம்தான் இலக்கிய வடிவம்.

சோழர் கால இலக்கியங்கள் இரு பெரும் கிளைகளாகப் பிரிந்து பெருக்கெடுக்க ஆரம்பித்தன. அதாவது பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என்பனவாகும். சிற்றிலக்கியத்திலும் ஒரு வகையை நோக்கின் அதுவே பரணி இலக்கியமாகும். ''ஆயிரம் யானை அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி'' என இவ்விலக்கியத்திற்குப் பன்னிரு பாட்டியல் எனும் நூல் வரைவிலக்கணம் கூறும்.

சங்க காலத்தின் புறநானூற்றில் பரணி பிரபந்தத்தின் தோற்றம் காணப்பட்டாலும் அது ஓர் சிற்றிலக்கிய வகையாகப் பாடப்பட்ட காலம் சோழர் காலமேயாகும். அக்காலம் தொட்டுப் பரணி இலக்கியமானது எம்மை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்துப் பற்பல நூற்றாண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. சோழர் காலம் கலிங்கத்துப்பரணி இலக்கியத்தின் ஆசிரியரான சயங்கொண்டாரது ஆளுமை, சிந்தனை ஓட்டம், கற்பனைத் திறன் வியக்கத்தக்கது. காரணம், கருத்துக்கள் யாவும், சொற்கள் யாவும் பற்பல அற்

புதத் திறன் வாய்ந்தவை. புதுப்புது புத்துணர்ச்சிகளை எமக்கு வெளிப்படுத்துகின்றவை மாத்திரமல்ல, அளவு கடந்த கற்பனைகள், நகைச்சுவைகள் கொண்டவை.

இப் பண்புகளுக்கு எவ்வகையிலும் குறைவில்லா தவை. இக்காலத் தமிழீழப் பாடல்கள் மேலும் பற்பல தனிச் சிறப்புக்களையும் பெற்றுள்ளன. இதற்குத் தக்க சான்றாக புதுவை இரத்தினதுரையின் ''எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்'' எனும் பாடலைக் குறிப்பிடலாம் இதில் ''கை வலிக்கும் கால் வலிக்கும் ஓயப்போவதில்லை எம் கனவு நனவாகுமட்டும் சோரப் போவதில்லை'' என மிகுதியான போர் வேட்கையுடன் பாடப்படுவதனை அவதானிக்க முடிகிறது. அதாவது எங்கெங்கு எம் எதிரிகள் பாசறை அமைத்து இருக் கின்றார்களோ அவ்விடங்கள் அனைத்தும் கலிங்க நாடுகளாகும். எனவே எம் தமிழ் ஆட்சியை நிலை நிறுத்த அந்தக் கலிங்க நாடுகளை அழிக்க வேண்டும். இதனை இப்பாடல் தெளிவாக எமக்கு வெளிப்படுத் துகின்றது.

கலிங்கத்துப் பரணி இலக்கியமானது குலோத்துங்க சோழனுடைய போர் வெற்றி முதலியவற்றைப் புனைந்து கூறும் ஓர் இலக்கியமாகும் காவியங்களிலே தலைவ னுடைய நாட்டுவளம். நகர வளம் முதலியன வர்ணிக் கப்படுவதைப் போல இப்பரணியிற் கொற்றவைக்குரிய காடு, கோவில் முதலியனவும் அத் தெய்வத்திற்கு ஏவல் செய்யும் பேய்களும் மிகமிக அழகுணர்ச்சியு டன் நகைச் சுவை நிறைந்த கற்பனை நயத்துடன் சித்தரிக்கப்பட்டுள்ளன. இந் நூலாசிரியரின் வருண னைகளிலே ஓர் தனிச் சிறப்புண்டு அவர் பேய்களை வருணித்துள்ள தாழிசைகளில் நகைச்சுவையும், வியப் புச் சுவையும் கலந்து வருதல் கண்டு இன்புறற்பாலது பல வகை அணிகளும் ஒன்பான் சுவையும் பொருந் தப்பெற்ற இச் சிறுபிரபந்தம் பரணிப் பிரபந்தங்க ளுள்ளே சாலச் சிறந்தது மட்டுமன்றி, தமிழில் உள்ள செய்யுள் இலக்கியங்களுள்ளே சிறந்ததொன்றாக வும் விளங்குகின்றது. இதன் பெருமையை உணர்ந்தே ஒட்டக் கூத்தர் ''தென்தமிழ் தெய்வப்பரணி'' எனக் கூறிப் பாராட்டியுள்ளார். தாம் கருதிய பொருளைப் புலப்படுத்துவதற்கு ஏற்ற ஓசை, சந்தம், உவமை முத லியவற்றை அமைத்துப் பாடுவதில் சயங்கொண்டார் வல்லுனர் என்பதற்கு பேய்களின் இயல்பு கூறும் கீழ் வரும் தாழிசைகள் தக்க சான்றாகும்.

''பெரு நெடும் பசி பேய்கல மாவன
ற்றை நாளின்முன் னாளின் மெலிவன
கரு நெடு டும்பனங் காடுமு முமையுங்
காலுங் கையுமு டையன போல்வன

வன்பி லத்தோடு வாதுசெய் வாயின
வாயி னால்நிறை யாதவ யிற்றின
முன்பி ருக்கிமு கத்தினு மேற்கலை
மும்மு ழம்படும் அம்முழந் தாளின.

வற்றலாகஉ லர்ந்தமு துகுகள்
மரக்க லத்தினை நிமுற மொப்பன
ஒற்றை வான் தொளைப் புற்றெனப் பாம்புடன்
உடும்பு முற்புக் குறங்கிடும் உந்திய''

அதாவது தீராத பெரிய பசிக்குக் கொள்கலமாக இருக்கும் வயிற்றை பேய்கள் எவ்வளவு உண்டாலும் முன்னரிலும் பார்க்க உடல் மெலிந்து காணப்படும். கரிய உயர்ந்த பனை மரங்களைப் போன்ற கால்களை யும் கைகளையும் உடையன. வலிய குகைகள் போன்ற வாயை உடையன. எனவே தத்தம் வாய்கள் பெரிய னவா அல்லது குகைகள் பெரியனவா எனத் தமக் கிடையே போட்டிகளைப் போட்டுக் கொள்கின்றன என்கிறார் புலவர். இவ்வளவு பெரிய வாயால் உண வினை உண்டாலும் தம் வயிறு நிரம்பாமல் அவதிப் படுகின்றன. இவைகள் நிலத்தில் அமர்ந்திருந்தால் தம் முகத்திலும் பார்க்க மூன்று முழம் மேலே உயர்ந்தி ருக்கும் கால்களை உடையன என அழகாக வருணித் துள்ளார். இவைகளின் முதுகுகள் காய்ந்த வற்ற லைப் போன்றவை. மரத்திலான மரப்படகினைக் கவிழ்த்து விட்டது போன்ற முதுகுகளை உடையவை. இவற்றின் வயிற்றுத் துளைகளில் பெரிய பாம்பும் உடும்பும் படுத்துறங்குகின்றன. இவ்வாறாகப் பேய்க ளின் சிறப்பினை மிகச் சிறப்பாகச் சயங் கொண்டார் வருணித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

இவ்விலக்கியத்தின் மூலம் தமிழரசு செய்த போரைப் பற்றி அறிந்து புரிந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இந்நூலும் கோச் செங்கனான் காலத்தில் வாழ்ந்த பொய்கையார் பாடிய களவழியும் சங்க காலம், வீரயுகம் என்பதற்குச் சான்று பகரும் புற நானூறுமே போரைப் பற்றி எமக்குச் சிறப்பாக எடுத்துக் காட்டுவதுடன் போரைப் பற்றி நாம் அறிந்து கொள்ள எமக்குக் கிடைத்த அரிய இலக்கி யங்களுமாகும்.

நாம் வாழும் இந்தக் கால கட்டத்தில் இந்தப் பர ணிப் பிரபந்தம் போன்ற பல நூல்கள் உருவாக

வேண்டிய கட்டாய சூழ்நிலை ஒன்று தோன்றி இருப்பதனை எமது தமிழ்த் தேசிய சமுதாயத்தின் ஊடாகக் காணக் கிடைக்கிறது. அதாவது எமது மண்ணின் மைந்தர்களாற் பாடப்படும் பாடல்கள் கூட எமக்கு இதைத்தான் தெளிவாக எமது செவிகளில் ஒலிக்கப் பண்ணிக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக ''பரணி பாடுவோம் பரணி பாடுவோம்'' எம் மண்ணின் கவிஞரான புதுவை இரத்தினதுரை அவர்களின் எழுச்சிப் பாடல்களை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும்,அதாவது இப்பாடலில் எம் வீரர்களின் போர், வீரம், ஆவேசம் என்பன மிகவும் எளிமையான நடையில் புனைந்து பாடப்பட்டிருப்பதனை போற்றாமலிருக்க முடியுமா? எனவே சங்ககாலத்தில் கருப்பெற்று சோழர் காலத்தில் உருவெடுத்த பரணியின் தொடர்ச்சியாக இன்றைய எம் தமிழீழத்தின் நெய்தல் நிலத்திற்குரிய பெருமையைப் பாடுவதாக, இன்றைய எம் பரணிப் பிரபந்தம் வளர்ந்திருப்பதனை அவதானிக்கலாம். இதற்குத் தக்க சான்றாக கவிஞர் யோகியின் எழுச்சிப் பாடல்களான '' ஆழக்கடலெங்கும் சோழ மகராஜன் ஆட்சி புரிந்தானே அன்று'', ''கடலலையே கொஞ்சம் நில்லு'' போன்ற பல பாடல்களும் அமைந்திருப்பதனை காணக் கிடைக்கிறது.

இராஜராஜன், இராஜேந்திரன் ஆகிய சோழமன்னர்கள் அசுரர்களை அழித்துத் தமிழ் ஆட்சியை நிலை நிறுத்தினார்கள் அன்று. ஆனால் இன்று எம் தலைவனுக்குப் பின்னால் ஆயிரமாயிரம் சிறார்கள் படையணியிற் சென்று எதிரியான அசுரர்களின் பாசறைகள் பலவற்றை அழித்துத் தம் உயிரையே மாய்த்துக் கல்லறையில் படுத்து தமிழ் மண்ணுக்காய், வீரகாவியங்கள், வீர இலக்கியங்கள் உருவாகுவதற்கு வேண்டிய வீரத்தின் வித்துக்களை தமிழ் மண்ணில் விதைத்துவிட்டுச் சென்றிருப்பதை இன்று எம் கண்களுக்கூடாக காணக் கிடைக்கிறது. உதாரணமாக;- பூநகரி வரலாற்றுச் சமர் எதிர்காலத்தில் ஓர் பரணிப் பிரபந்தம் உருவாகுவதற்கு அடி நாதமாக அமைந்து பயனளிக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அத்தோடு ஜனகபுரப் [மண்கிண்டிமலை] பரணி இலக்கியமொன்று உருவாகுவதற்கான அத்திவாரம், அடிநாத ஒலி பல அறிஞர்களின் உள்ளத்தில் கட்டாயமாக தோன்றி இருக்கும் என்பதில் நாம் சந்தேகப்படத் தேவையில்லை.

சோழப் பெருமன்னர் காலத்தில் ஓர் பரணிப்பிரபந்தம் உருவாகி வளர்வதற்கு அக்கால அரசியல் சமூக காரணிகள் வீரர்களின் போர்த்திறன், அரசனின் நற்பண்பு, நாட்டுப்பற்று என்பன அடிநாதமாக அமைந்தன. இதேபோல் - குலோத்துங்கனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி - இன்று எம் மண்ணில் பரணிப்பிரபந்தம் தளிர்விடுவதை நாம் காண்கின்றோம். எனவே இந்தத் தளிர் வளர்ந்து பெரு விருட்சமாக வளர எம் தலைவனின் புகழ் வளர எம் வீரரின் திறன் வளர எம் மண்ணின் புகழ் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பறைசாற்றப்பட நாமும் ஓர் பரணி பாடக் கடமைப்பட்டுள்ளோம். எனவே நாமும் ஓர் பரணிபாடி தமிழ் வளத்தை, தமிழ் இலக்கிய வளத்தை வளர்த்தெடுப்போமாக.

வாழ்க தமிழீழ இலக்கிய புத்துணர்ச்சி
தமிழனின் புகழை
புயலாக உலகெங்கும் பறைசாற்றி வளர்க.

''வணிக ஜோதிக்கு''
எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

★ பலசரக்கு,
★ சார்புச் சாமான்கள்,
மற்றும்
ஆடம்பர பொருட்களை பெற்றுக் கொள்ள!
தனித்துவம் வாய்ந்த நிறுவனம்

**நியூ லீலாவதி**

**வர்த்தகக் களஞ்சியம்**

உரிமை:- த. புஸ்பராசா
கண்டி வீதி, கைதடிச் சந்தி,
கைதடி.

★ உலகின் மிகப் பெரிய கடன் அட்டை ''விசா'' (Visa) ஆகும்.

''வணிக ஜோதியே''
வருக! வாழ்க!!

# குறிஞ்சி மருந்தகம்

3, நவீன சந்தை,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

★ குறிப்பு:- எமது ஸ்தாபனத்திற்கு வேறு கிளைகள் எவையும் இல்லை.

★ லங்கா மில்க் பூட் நிறுவனத்தை 1983 ஆம் ஆண்டு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் காப்புறுதி கூட்டுத்தாபனம், தொழிலாளர் நம்பிக்கை நிதியம், பொதுமக்கள் என்பவற்றின் மூலதனத்துடன் உருவாக்கப்பட்டது.

ஜோதியே ஒளிர்க! ஒளிர்க!!

உங்களின் எண்ணங்கள்
எங்களின் கை வண்ணங்கள்

## கயல்விழி நகைப் பூங்கா

உங்களின் விருப்பத்திற்கேற்ற நவீன டிசைன்களில் நகை செய்து கொடுக்கப்படும்.

18, 20 கரட் நகைகளை உடன் பெற்றுக் கொள்ளலாம்.

22 கரட் நகைகள் ஓடருக்கு மட்டும் உடன் செய்து கொடுக்கப்படும்.

மங்கையர், சிறுமியர்களுக்கு நவீன டிசைன்களில் வெள்ளிக் கால் சலங்கைகள் றெடிமெற்றாக உடன் பெற்றுக் கொள்ளலாம்.

224/B கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



''ஜோதி''
வளம் பெற
வாழ்த்துகின்றோம்.

உங்கள் மழலைச் செல்வங்களின்
உயிரோவியமான படங்களுக்கு

## ★ பேபி போட்டோ ★

படப்பிடிப்பாளர்

பலாலி வீதி, திருநெல்வேலி.

★ கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக் குழுவின் கீழ் தொழில் முயற்சிகளில் 1991 டிசெம்பரில் காணப்பட்ட 85457 தொழில் நிலையங்களில் 78 வீதமானோர் பெண்களாவர்.

''வணிக ஜோதியே''

நீ பொலிவுற எமது நல்லாசிகள்.

## ''பாட்டா ஏஜென்சி''

## யாழ் றேட் சென்ரர்

11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

★ ''தோமஸ் குக்'' என்ற நிறுவனமே உல்லாசப்பயணத்துறையில் மிகப் பிரபல்யமானது. இது 160 நாடுகளில் 1600 கிளைகளைக் கொண்டுள்ளது.

# தமிழ் நாடகக் கலை

செல்வன். கோ. பிரதீபன்
1994ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு (13B)

உயர் தனிச் செம்மைகளில் ஒன்றான தமிழின் பண்பை உணர்ந்த பெரியோர் அதனை நாடகத்தமிழ், இசைத்தமிழ், இயற்றமிழ் என மூவகைப்படுத்தினர்.

இசைத்தமிழ் தாளமும், பண்ணும் ஒருங்கிணைய பாட்டுக்களால் ஒரு பொருளைக் கூறுந் தன்மையானது. இயற்றமிழானது பொருளை செய்யுள் வடிவிலோ, வசன வடிவிலோ கூறும் பண்பு பொருந்தியதாகும்.

நாடகத் தமிழானது இயல், இசை என்பவற்றோடு மன உணர்வுகளைப் பிரதிபலிக்கும் அபிநயங்களோடு கூடியதொன்றாகும்.

இயல் இசையானது கேள்வியின்பம் மாத்திரம் கூற, நாடகம் கேள்வியின்பத்தோடு காட்சியின்பமும் கொடுப்பது மட்டுமன்றி படிப்பு வாசனை அற்ற பாமரர்களுக்கும் நல்லறிவு புகட்டி தத்ரூபமாக வெளிக்காட்டுகின்

றன. இவை போன்ற சிறப்பு இயல்புகளினால் நாடகக்கலை மற்ற இரண்டையும் விட அதிகளவு அபிமானம் பெற்ற ஓர் கலையாக விளங்குகிறது.

நாடகக்கலை பண்டைத்தமிழ் நாட்டில் சிறப்பும் பேராதரவும் பெற்ற ஒரு நுண்கலையாகவும் இருந்தது தமிழ் இலக்கணத்தின் பெரு நூலான தொல்காப்பியம் ''நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலநெறி வழக்கம்'' என நாடக வழக்கை உலக வழக்கோடு வைத்தெண்ணிச் சிறப்புச் செய்துள்ளது.

மக்கள் தமது எண்ணங்களை மெய்ப்பாடுகள் மூலமாகவும், அபிநயங்கள் மூலமாகவும் வெளிப்படுத்தினர். இது கூத்து என அழைக்கப்பட்டது.

நாடகங்கள் சிறப்புற அமைய வேண்டுமானால் சில பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். சிலப்பதிகாரமானது நாடக வழக்கின் நீளம், அகலம், உயரம், பற்றியும், திரைச்சீலை, அமைப்புப் பற்றியும், அரங்கில் நிழல் விழா வகையில் ஒளியமைப்புப் பற்றியும், பின்னணி இசையாக அமையும் வாத்தியங்கள் பற்றியும் விரிவாகக் கூறுகின்றது.

கூத்துக்கள் காலப்போக்கில் அண்ணாவி மரபு நாடகம் என்ற உருவம் பெற்றது. பின்னர் பொருத்தமான பாடல்களையும், வசனங்களையும் கொண்டதாக இன்றைய மேடை நாடகமாக மாற்றம் அடைந்தது.

இன்றுள்ள நிலையைவிட அக்காலத்தில் நாடகக் கலையானது உன்னத வளர்ச்சி பெற்றிருந்தது. நாடகப் பண்புகளிற்கு இலக்கணம் கூறுகின்ற அளவிற்கு சிறப்புப் பெற்றதாக இருந்தது இதனால் பரதம், சயந்தம், மதிவாணர் போன்ற நாடக நூல்கள் உருவாகின.

இப்படிப்பட்ட சிறப்புப்பெற்ற நாடகக்கலையானது. இடைக்காலத்தில் வீழ்ச்சி அடைந்தது. தமிழ் நாட்டில் பரவி வந்த சமணம், பௌத்தம் போன்ற மதங்களும், ஆரியர்களது கொள்கைகளும் பழந்தமிழர் பயின்றுவந்த தமிழரின் ஒழுக்கத்திற்கு மாசுகற்பிக்க புகுந்தன.

நாடகம் ஒழுக்கத்தைப் பாதிக்கும் என்ற ஒரு போலிக்கொள்கை கொண்ட ஆரியர்கள் தாம் ஆக்கிய நூல்களில் நாடகக்கலையை இழித்துரைத்தனர்.

அது மட்டுமல்லாமலும் அரசரின் உதவியுடன் நாடகத்துறையை அழித்து ஒழிக்க முற்பட்டனர். இதனால் நடிகர்கள் இழித்துரைக்கப் பட்டனர்.

பல வருடமாக உயர்நிலை பெற்றிருந்த நாடகக்கலை வீழ்ச்சி அடைந்தது அது மட்டுமன்றி நாடக நூல்களும் அழிக்கப்பட்டன.

இவ்வழிவில் இருந்து தப்பிய முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரமே இன்றும் வழங்கி வருகிறது. இதன்மூலமே பழந்தமிழ் நாட்டின் நாடகங்களைப் பற்றிய செய்திகளை ஓரளவு தானும் அறிய முடிகிறது.

நாடகத்தின் உயிராகவும், முழுமையாகவும் விளங்குவோர் பாத்திரங்களை ஏற்று நடிக்கும் நடிகர்களே, நடிகன் ஒருவன் வீரனாக நடிக்கப் பாத்திரம் ஏற்றுவிட்டால் அவன் கதைகளுக்கு ஏற்றவாறு உதட்டைப் பிதுக்கி, பல்லைக் கடித்து, மீசை துடிக்க வேண்டும். பேசுகின்ற வசனங்கள் தெளிவாகவும், நெஞ்சில் பதியக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இதனால் பார்ப்போருள்ளத்தில் இயற்கையாகவே வீரச்சுவை தோன்றும் இன்று நாடகங்கள் திரைப் படங்களுடன் போட்டி போட்டு முன்னேற வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

திரைப்படங்களின் நுணுக்க முறைகளை நாடகங்களில் கையாளலாம். தமிழ்நாட்டு அறிஞர்களான சாஸ்திரியார், சம்பந்தமுதலியார், கி. இலக்குமணப்பிள்ளை, சுந்தரதாஸ் சுவாமிகள் என்பவர்களும், ஈழத்தைச் சேர்ந்த சொர்ணலிங்கம், வி. வைரமுத்து, நாட்டுக் கூத்தினை நெறிப்படுத்தும் அண்ணாவிமாரும் நாடக வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தவர்களாவர்.

இன்றைய நாடகக்கலை வளர்வதற்குப் பல வகையான முயற்சிகள் தேவைப்படுகின்றன. மக்கள் நெரிசல் கூடிய இடங்களில் நிரந்தரமான நாடக அரங்குகள் நிறுவப்படவேண்டும். இம் முயற்சிகளிற்கு அரசின் கலை, கலாச்சாரத் துறை மானியம் போன்ற உதவி புரிதல் வேண்டும்

ஆர்வமும், ஊக்கமும் கொண்ட இளம் சமுதாயத்தைத் தேர்ந்தெடுத்து சிறந்த நாடக இயக்குநர்களைக் கொண்டு பயிற்சி அளித்தல் அவசியமானது. நாடகக் கல்லூரிகள் தலை நகர்களில் உருவாவது வரவேற்கக்கூடியது.

நம் நாட்டுக்கு ஏற்றமுறையில் சமுக, சரித்திர நாடகங்கள் புதியன உருவாக வேண்டும். இம்முயற்சிகளில் நாடக எழுத்தாளர்களிடையே ஆர்வம், போட்டி உண்டாகக்கூடிய ஓர் அமைப்பு உருவாக வேண்டும். அதுமட்டுமல்லாமல் பிறநாட்டு நல்ல கதை கொண்ட நாடகங்களை மொழிபெயர்த்து வழங்குவதும் நன்று. இந்நிலையில், 1911 ஆம் ஆண்டு பம்மல் சம்பந்த முதலியாரின் சுகுணவிலாச சபை கொழும்புக்கு வந்து மண்டபங்களின் ஒருபக்க மேடையில் நாடகம் நடாத்தும் முறையினை அறிமுகம் செய்தது. இதைத் தொடர்ந்து இலங்கையில் நாடகக் கலையை வளர்க்க, 1913 இல் கொழும்பில் இலங்கா சுபோத விலாச சபையும், 1914 இல் யாழ்நகரில் சரஸ்வதி விலாச சபையும், 1920 இல் மட்டக்களப்பில் சுகிர்த விலாச சபையும் ஆரம்பிக்கப்பட்டன.

20 ஆம் நூற்றாண்டின் முதல் நாற்பதுகள் ஈழத்தின் தமிழ் நாடக வரலாற்றில் குறிப்பிடத்தக்க காலமாகும். இக் காலத்தில் இலங்கை பல்கலைக்கழக கல்லூரியின் தமிழ் விரிவுரையாளரான "கிங்ஸ்பரி" என்ற தமிழறிஞர் மனோண்மணி, சந்திரகாசம் ஆகிய நாடகங்களை எழுதி வெளியிட்டார். இவை இதிகாசங்களின் தழுவலாக இருந்தபோதும் சமுக விழிப்பையும், பெண் சமத்துவத்தையும் வற்புறுத்தின.

1950 களில் மந்தகதியில் இயங்கிய தமிழ் நாடகக் குழு, 1957 ற்குப் பின் உயிர்த்துடிப்புடன் துரிதகதியில் இயங்கத் தொடங்கியது. இதற்கு அதன் தலைவர் கலாநிதி. சு. வித்தியானந்தனே காரணர் இவரின் தலைமையிலாக தமிழ் நாடகக்குழு தமிழ் நாடக வளர்ச்சிக்கு பல பணிகளை ஆற்றியுள்ளது.

உதாரணமாக:- அன்றுவரை புறக்கணிக்கப்பட்டிருந்த நாட்டுக்கூத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து பல்கலைக்கழக மாணவரால் மேடையேற்றப்பட்டமை.

1960 ற்குப் பின்பு முன்பிருந்த நாடக உத்திகளை மாற்றி புதிய வடிவில் நாடகங்களை மேடையேற்றும் முனைப்பு இளங்கலைஞர்களிடையே ஏற்பட்டது

உதாரணமாக:- 1969 இல் மஹாகவியின் "கோடை" நாடகம், முருகையனது "குற்றம் குற்றமே" நாடகம்

1971 இல் முருகையனின் "கடூழியம்" நாடகம்,

மஹாகவியின்' புதியதொரு வீடு" நாடகம்,

மௌனகுருவின் "சங்காரம்" எனும் நாடகம் என்பன குறிப்பிடத்தக்கன

பேட்டல் பிறெஸ்ட் போன்ற மேலைத்தேய நாடக நிபுணர்களின் நாடகங்கள், ஈழத்திலே 'பாலேந்திரா' போன்ற பெரியார்களினால் சிறந்த முறையில் தமிழுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்த வகையில் நாடகக் கலை வளர்ந்து செல்லுமேயானால் அதன் எதிர்காலம் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை.

அன்பான வேண்டுகோள்:-

வணிகக் கல்வியின் அபிவிருத்தியில் ஆர்வமும், அக்கறையும் கொண்டுள்ள பழைய மாணவர்களே, ஆசிரியர்களே, வாசகர்களே "வணிக ஜோதி" தொடர்பான உங்களது அன்பான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் அனுப்பி உதவுங்கள்.

இதழாசிரியர்கள்

ஜோதிக்கு நல்லாசிகள்.

# நலன்புரிச் சங்கம்

யா/கனகரட்ணம் ம/ம/வி.

சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் புதிய உடன்படிக்கையின் நோக்கம் இரசாயன பொருட்களின் பாவனையில் இருந்து தொழிலாளரைப் பாதுகாப்பது.

# திருவள்ளுவர் குறளில் கணிதமும் கணக்கியலும்

த. குந்தவி
95 ம் ஆண்டு கலைப்பிரிவு
( ஆண்டு 12 )

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் மாற்றலரிது"

தான் யாதொரு உதவியும் முன்னொருவனுக்குச் செய்யாது இருக்குங்கால் அவன் தனக்குச் சிறியதோர் உதவி செய்யினும் அச்சிறிய உதவிக்கு கைமாறாகத் தான் மண்ணுலகையும் விண்ணுலகையும் அவனுக்கொருங்கே சேர்த்துக் கொடுப்பினும் அவ்வுலகங்கள் அச்சிற்றுதவிக்கு நேராகாது எனத் திருவள்ளுவர் இக்குறளிற் கூறுங்கால் இவ்வுரை புனைந்துரையேயன்று மெய்யுரை, இரண்டும், இரண்டும் சேரின் நான்கு எனக் கூறுவது கணித முறையில் எவ்வளவு மெய்யுரையோ அவ்வளவு மெய்யுரை. அவ்வுரையைச் சிறிது ஆய்வோம்.

சாத்தன் கொற்றனுக்கு உதவி ஒன்றும் செய்யாதிருக்கும் கால் சாத்தனது கடும் பசியைத் தீர்க்கக் கொற்றன் நாலணாக்கள் பெறும் உணவளிக்கின்றான். பசிப்பிணி தீரப் பெற்ற சாத்தன் பிறிதொரு காலத்தில் நூறாயிரம் வெள்ளிக் காசுகள் கொற்றனுக்குக் கொடுக்கின்றான். நூறாயிரம் வெள்ளிக்காசு

களும் நான்கணாக்களுக்கு நிகராகாது. நிகராகாமை எங்ஙனமெனக் காட்டின்,

கொற்றன் நான்கணா உதவி செய்தக் கால் சாத்தன் செய்த உதவி ஒன்றுமில்லை. சாத்தன் செய்த உதவியோடு கொற்றன் உதவியை ஒப்பு நோக்கிக் கணித வாய்ப்பாட்டிற் கூறின்

சாத்தன் உதவி = O
கொற்றன் உதவி = $\frac{1}{4}$ ரூபா

அதாவது = O : $\frac{1}{4}$

அங்ஙனமே கொற்றன் உதவியோடு சாத்தன் உதவியை ஒப்பு நோக்கிக் கணித வாய்ப்பாட்டிற் காணின்

$\frac{1}{4}$ ரு : 100, 000 ரு

அதாவது $\frac{1}{4}$ : 100 000

எனவே O : $\frac{1}{4}$ = ∝ = எண்ணிலி = INFINITY

$\frac{1}{4}$ : 100 000 = 400, 000

நான்கு நூறாயிரம் எண்ணிலிக்குச் சற்றும் நேர் நிலாதென்பது புகழோ? புகழன்று. உண்மை, கணித உண்மை.

"தக்கார் தகவிலர் என்பது

அவர்தம் எச்சத்தாற் காணப்படும்"

என்பதை நிறுவனங்களின் நிலவரம் பற்றிய குறள் எனலாம். ஒரு ஸ்தாபனமோ, வியாபார ஸ்தலமோ அதன் நிதிநிலை எப்படியென ஆராய்ந்திட அதன் "பலன்ஸ்ஷீற்" (ஐந்தொகைக் கணக்கு) உதவியை நாடுவர். எச்சங்களின் தொகுப்பு அது. (எச்சம் என்றால் பலன்ஸ்) ஆம்! அந்த நிறுவனம் தக்கார் தகவிலர் என்பது அவர்தம் எச்சத்தாற் காணப்படும்! அதாவது ஐந்தொகைக் கணக்கின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

வள்ளுவப் பெருந்தகையின் பொய்யா மொழியில் கணிதமும், கணக்கியலும் இடம்பெற்றதை மேற்கூறிய ஆய்விலிருந்து அறிந்து கொள்ளலாம்.

**ஆதாரம்:-** திருவாரூர் T S கந்தசாமி முதலியார் (B. A) அவர்கள் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு வழங்கிய திருக்குறள் பற்றிய ஓர் ஆய்வுரையிலிருந்து எடுக்கப்பட்டது.

2. நல்லையா குமரகுருபரன்
முகாமைத்துவ விரிவுரையாளர்
கொழும்பு 11 13 09. 1992 அன்று தினகரன் பத்திரிகையில் வெளியான தகவல்.

"வணிக ஜோதியே"
வருக! வருக!!

★ தரமான பாண்,
★ பணிஸ்,
★ இனிப்பு,
★ நல்லெண்ணை வகைகளுக்கும் சகல தினசரிகளுக்கும் பிரபல்யம் பெற்றவர்கள்.

கனகா ரேடர்ஸ்

06, நவீன சந்தை,
திருநெல்வேலிச் சந்தி.

# ஜோதிக்கு நிதியுதவி வழங்கி ஒளியூட்டிய கரங்களிற்கு எமது நன்றிகள்

| | | | |
|---|---|---|---|
| பாடசாலை அபிவிருத்தி சங்கம் | 5000 00 | 12 B வர்த்தகப் பிரிவு மாணவர்கள் | 2500 00 |
| பழைய மாணவர் சங்கம் | 7500 00 | 12 C வர்த்தகப் பிரிவு மாணவர்கள் | 1800 00 |
| 13 வர்த்தகப் பிரிவு மாணவர்கள் | 1400 00 | 12 D கலைப் பிரிவு மாணவர்கள் | 2200 00 |

## கல்லூரி ஆசிரியர்களின் வரிசையில்

| | |
|---|---|
| திரு. V. கருணாகரன் | 250 00 |
| திரு. V. செந்தில்ராஜா | 250 00 |
| செல்வி. சா. சச்சினானந்தம் | 250 00 |
| திருமதி. P கனகரத்தினம் | 250 00 |
| செல்வி. யே. யூலிஆன் | 250 00 |
| செல்வி. ஞா. கில்டா | 250 00 |
| திரு. அ. உபயசேகரம் | 250 00 |
| செல்வி. S. மகாதேவி | 200 00 |
| திரு. மு. இராமலிங்கம் | 150 00 |
| திருமதி P. ரட்ணவேல் | 150 00 |
| திரு. சு. சிவதாஸ் | 150 00 |
| திருமதி. M. L. F. விக்டோரியா | 150 00 |
| திருமதி. A. கோடீஸ்வரன் | 100 00 |
| திரு N. S. சண்முகநாதன் | 104 00 |
| திருமதி. P. நற்குணசிங்கம் | 101 00 |
| திரு. பூ. குகதாசன் | 101 00 |
| திரு. P. நடராஜா | 100 00 |
| திரு. M. தனபாலசிங்கம் | 100 00 |
| திரு. இ. தவபாலன் | 100 00 |
| திரு. இ. அரசகுலசூரியன் | 100 00 |
| திரு. இ. பாலகுமார் | 100 00 |
| திருமதி. S சாந்தராஜா | 100 00 |
| திரு. த. பாலச்சந்திரன் | 100 00 |
| செல்வி. இ. மயில்வாகனம் | 100 00 |
| திருமதி. கோ. ஜெகானந்தராஜா | 100 00 |
| திரு. M. S. A. ஒஸ்வேல்ட் | 100 00 |
| திரு. M. உதயதாஸ் | 100 00 |
| திரு. S சண்முகலிங்கம் | 100 00 |
| திருமதி. அ துரைசிங்கம் | 100 00 |
| திருமதி. C. பரமேஸ்வரன் | 100 00 |
| செல்வி. P. சின்னத்தம்பி | 100 00 |
| செல்வி. A. லீலாவதி | 75 00 |
| திரு. சு. கணேசலிங்கம் | 75 00 |
| திருமதி. P. கனகலிங்கம் | 50 00 |
| திருமதி. H. V இம்மனுவல் | 50 00 |
| திரு. ச. ராஜேஸ்வரன் | 50 00 |
| திருமதி. ம. கதிர்காமநாதன் | 50 00 |
| செல்வி. வி. கமலா | 50 00 |
| திரு. ஏ. ஜெயக்குமார் | 50 00 |
| திரு. மு. விஸ்வநாதன் | 50 00 |
| திரு. J. A. பிலிப் | 50 00 |
| திருமதி ப. சாதனந்தன் | 50 00 |
| திருமதி. S. செல்வராஜா | 50 00 |
| திரு. A. ரவீந்திரன் | 50 00 |
| திரு. வை. நடராஜா | 50 00 |
| திருமதி. ச. சேதுராஜா | 50 00 |
| திரு. ச. பரமேஸ்வரன் | 50 00 |
| செல்வி. K. சுந்தரலிங்கம் | 50 00 |
| செல்வி. S. சந்திரசேகரம் | 50 00 |
| திரு. E. கந்தசாமி | 50 00 |
| திருமதி. பொ. அருளானந்தம் | 50 00 |

## பழைய மாணவர்கள் வரிசையில்

| | |
|---|---|
| 85 கழக மாணவர்கள் | 500 00 |
| 92 கழக மாணவர்கள் | 500 00 |
| 93 கழக மாணவர்கள் | 1000 00 |

## தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் வரிசையில்

| | |
|---|---|
| திரு. S. வரதராஜன் | 200 00 |

## வர்த்தகர்கள் வரிசையினிலே

| | | |
|---|---|---|
| 1. | நியூ ஆனந்தா ஜிவலர்ஸ் | 200 00 |
| 2. | முருகன் களஞ்சியம் | 200 00 |
| 3. | ஜெயா அழகுசாதன மாளிகை | 200 00 |
| 4. | இராசையா அன் சன்ஸ் | 100 00 |
| 5. | R. G. ஸ்ரோர்ஸ் | 100 00 |
| 6. | பிரபா போட்டோ | 100 00 |
| 7. | இந்திரன் நகைமாளிகை | 100 00 |
| 8. | நாகராஜா வர்த்தக களஞ்சியம் | 100 00 |
| 9. | வேல்முருகன் கபே | 100 00 |
| 10. | சிவம் செயல் | 75 00 |
| 11. | நித்திய கல்யாணி ஜிவலர்ஸ் | 50 00 |
| 12. | சந்திர சேகரம் | 50 00 |
| 13. | K. S. கணபதிபிள்ளை | 50 00 |
| 14. | சிவசக்தி சைக்கிள் சென்ரர் | 50 00 |
| 15. | மிட்லண்ட் வீடியோ | 50 00 |
| 16. | ஆறுமுகன் கூல் பார் | 50 00 |
| 17. | மணி ஜிவலர்ஸ் | 50 00 |
| 18. | சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் | 50 00 |
| 19. | ஜோகநாதன் | 50 00 |
| 20. | கௌரி | 30 00 |
| 21. | சங்கர் | 25 00 |
| 22. | கணேசன் ஸ்ரோர்ஸ் | 25 00 |
| 23. | பதா நகை மாளிகை | 20 00 |
| 24. | சொருபன் | 15 00 |

- பொருளாளர் -

பொருளாதார தடை மற்றும், இக்கட்டான சூழ்நிலைகளிலும் "ஜோதிக்கு" தொடர்ந்து விளம்பரங்களை மனமுவந்து வழங்கி வரும் எமது,

**"விளம்பரதாரர்களை தயவு செய்து ஆதரியுங்கள்"**

# இவர்களுக்கு எமது நன்றிகள்

மலரிற்கு ஆசிகளை வழங்கிச் சிறப்பித்த பெரியோர்கட்கும்,

- மலர் பல்துறைசார் அறிவினை வெளிக்கொணரும் வகையில் பல்வேறு கோணங்களிலும் இருந்து விடயதானங்களை சேகரித்து ஆக்கங்களைத் தந்துதவிய விரிவுரையாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும்,
- கல்லூரி வளர்ச்சியில் தன்னலம் பாராது உழைத்து வருவதோடு, இம்மலர் வெளியீட்டிற்கு பல்வேறு வழிகளிலும் ஒத்தாசையும், ஊக்கமும் வழங்கிய எமது கல்லூரியின் மதிப்புக்குரிய அதிபர் திரு. மு. இராமலிங்கம் அவர்கட்கும்,
- மன்றத்தின் வளர்ச்சியில் அயராது உழைப்பதுடன் ஜோதியின் வெளியீட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய மதிப்புக்குரிய மன்றப் பொறுப்பாசிரியர் திரு. வே. கருணாகரன் அவர்கட்கும்,
- பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்த திரு. சி. புலந்திரன் [ பிரதி கல்விப் பணிப்பாளர் நல்லூர் ] அவர்கட்கும்,
- விசேட அதிதியாக விழாவில் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்த திரு. வே. பாலகுமார் [ தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை - துணைப் பொறுப்பாளர் ] அவர்கட்கும்,
- நூலின் அறிமுகவுரையினை நிகழ்த்தி விழாவைச் சிறப்பித்த திரு. க. தேவராஜா [ விரிவுரையாளர், முகாமையியற்றுறை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ] அவர்கட்கும்,
- முதற் பிரதியைப் பெற்று ஊக்குவித்த திரு. செ. பத்மநாதன் [ திட்டப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் ] அவர்கட்கும்,
- மன்றத்தின் உப - காப்பாளர்களாகப் பணியாற்றி எமை நெறிப்படுத்தி உதவும் திரு வி. செந்தில்ராஜா திருமதி. பி. கனகரட்ணம், திருமதி. பி. இரட்ணவேல், செல்வி. எஸ். மகாதேவி, செல்வி. யே. யூலி ஆன், செல்வி. ஜி. கில்டா, திரு. ஏ. ரவீந்திரன் ஆகியோர்க்கும்,

* நூல் வெளியீட்டு விழா தொடர்பான ஒத்தாசைகளை நல்கிய மன்றத்தின் உப - காப்பாளரும் சிரேஷ்ட பகுதித் தலைவருமான திரு. ஏ. உபயசேகரம், கல்லூரியின் பிரதி அதிபர் திரு. பொ. நடராஜா அவர்கட்கும்,

* ஜோதியின் அட்டைப் படத்தை அழகுற வரைந்து உதவிய திரு. சண்முகராஜா

* தேவையானபோது எமக்கு பலவகையிலும் உதவி புரிந்த எமது கல்லூரி ஆசிரியர் திரு ரி. பாலச்சந்திரன் அவர்கட்கும்,

* வேண்டியபோது இன்முகத்துடன் தாமாகவே முன் வந்து எமக்கு ஆலோசனைகளை வழங்கி எம்மை வழிப்படுத்திய 92 ஆம் ஆண்டு மன்றத் தலைவரான செல்வன். பா. வாசன், 93 ஆம் ஆண்டு மன்றத்தின் உறுப்பினர்களுக்கும் நூல் வெளியீடு தொடர்பான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்கி எமக்கு உதவி புரிந்த ஆசிரியர். திரு பி. எஸ். பசில்ஜனதாஸ் [ கல்லூரி பழைய மாணவர் ] அவர்கட்கும்,

* மலரை வனப்புடன் அச்சேற்றி தந்துதவிய மாறன் பதிப்பகத்தினர்க்கும் மற்றும் புளொக்குகளை இக்கட்டான காலகட்டத்திலும் விரைவாகச் செய்து எமக்கு உதவிய '' அழகன் புளொக் '' தயாரிப்பாளர்களுக்கும்,

* மலர் வெளியீட்டில் எமக்கு தோளுடன் தோள் நின்று உதவி புரிந்த எமது விஞ்ஞான மன்ற உறுப்பினர்களுக்கும்,

* ஆண்டுதோறும் '' ஜோதிக்கு '' விளம்பரங்களை மனமுவந்து வழங்கும் விளம்பரதாரர்கட்கும்,

* அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களை இலவசமாக அச்சிட்டு வழங்கிய '' மேகாஸ் வீடியோ '' உரிமையாளர் திரு. ரவீந்திரன் அவர்கட்கும்,

* நூலின் முன்னட்டை புளொக் தயாரிப்பாளர் '' பூங்கொடில் தயாரிப்பாளருக்கும்,

* அதிர்ஷடலாப சீட்டுக்களை விற்று எமக்கு உதவிபுரிந்த மன்ற அங்கத்தவர்கள், விஞ்ஞான மன்ற உறுப்பினர்கள், கல்லூரி மாணவர்கள், ஆகியோருக்கும்,

* நன்கொடைகளை வழங்கி நிதி ரீதியாக எமக்கு ஊக்குவிப்பு நல்கிய பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், வியாபார நிறுவன உடமையாளர்கள் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் ஆகியோருக்கும் எம் அழைப்பை ஏற்று மலர் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த சகோதர பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவ, மாணவியர்களுக்கும்,

* இறுதியில் எம் அழைப்பை ஏற்று விழாவை மேம்படுத்திய எம் வித்தியாலய ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள், கல்வி இலாகா உத்தியோகஸ்தர்கள், நலன் விரும்பிகள், ஆர்வலர்கள்' அனைவருக்கும்,

"எமது உள்ளம் கனிந்த நன்றிகள் பல"

'' பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது ''
— குறள்

- செயலர் -

மாறன் பதிப்பகம் யாழ்ப்பாணம்.

''வணிக ஜோதி'' வரவால்
தேசத்து அறிவியல்
வளம் பெற்று வாழி! வாழி!!

உங்கள்
அறிவுத் தேவையின் நிறைவிடம்
ஆம்
பாலர் முதல் பல்கலைக்கழகம் வரையிலான
எல்லா நூல்களினதும் உறைவிடம்

★ அரசியல்
★ வரலாறு
★ சமூகவியல்
★ இலக்கியம்
★ விஞ்ஞானம்
★ ஆய்வியல்

அனைத்து துறை நூல்களையும்
பாடசாலை உபகரணங்களையும்
குறைந்த விலையில் நிறைந்த திருப்தியில்

நீங்கள் பெற்றுக் கொள்ள
யாழ் நகரில் ஒரே இடம்

# தமிழ்த்தாய் புத்தகசாலை

191, மின்சார நிலையவீதி,
[பழைய பஸ் நிலையம் முன்பாக]
யாழ்ப்பாணம்.

இலங்கையின் கல்லூரி மட்டத்தில் தொடர்ந்து
வெளிவரும் வணிகஜோதிக்கு எமது நல்லாசிகள்



## தரம் நாடுவோர் தவறாது நாடுமிடம்

# கயல்விழி நகைப் பூங்கா

# KAYALVILI NAKAI POONGA

தங்கப்பவுண் நகை வியாபாரம்

ஆடர் நகைகள் 22 கரட் தங்கத்தில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

224/B, Kasthuriar Road,
JAFFNA.

224/B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

"ஜோதிக்கு" எமது நல்லாசிகள்

தரமான சைவ, அசைவ உணவு வகைகளையும் மற்றும்
சிற்றுண்டி வகைகளையும் இன்றே இனிதுடன் சுவைத்து மகிழ்ந்திட

## இன்றே விரைந்திருங்கள்

# சாந்தி விலாஸ்

309; கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

COVER: MARAN